254

1

T.N.L.C. Debates

Official Report

1985

Vol: 215 No 1, 2

D
V211,32'N85
N85. 215. 1-2
143953

10/86 (254)

தமிழ்நாடு
சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

## செயலக வெளியீடு
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஜூன் 7, 1985—தொகுதி 215 - எண் 1
Friday June 7th 1985—Volume 215 - No. 1

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2-75]

254

# பொருளடக்கம்.


பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் i—vi

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. vii

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல் .. ix—xii

1. இரங்கற் குறிப்பு—

மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. வி. எஸ். பாலசுந்தரம் இயற்கை எய்தியது குறித்து. 1

2. வினாக்கள் விடைகள்— 2—16

3. அறிவிப்புகள்—

(1) பேரவையிலிருந்து செய்தி .. .. 16

(2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு .. .. 17—18

4. கவன ஈர்ப்பு—

திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டம் பகுதியில் கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதால் நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து. 18—20

5. தகவல் கோரல்—

(1) சட்டமன்றக் கட்சிகள் சிலவற்றிற்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட சட்டமன்ற விடுதிகளில் உள்ள சட்டமன்றக் கட்சி அலுவலக அறைகள் காலி செய்யப்பட்டது குறித்து .. .. 20—33

(2) ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை பற்றி பிரதமருக்கும் முதலமைச்சருக்குமிடையே நடந்த தொலைபேசி தொடர்பு குறித்து .. .. 33

பக்கங்கள்


6. அரசின் சட்ட முன்வடிவுகள்—

(1) 1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1985) .. .. .. .. 33—41

(2) 1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1985) 41—42

(3) 1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/1985) 43—44

7 அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 45—50


143953

D

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU.

## THIRU SUNDAR LAL KHURANA

### Members of the Council of Ministers.

1. THE HON. Dr. M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaelogy, Prohibition excluding grant of Liquor Permits, Excise and Passports.

2. THE HON. Dr. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-Servicemen.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. THE HON. THIRU K. A. KRISHNASWAMY, Minister for Labour, in charge of Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THE HON. THIRU RM. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona and Grant of Liquor Permits.

6. THE HON. THIRU K. RAJARAM, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. THE HON. THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education, Official Language, Tamil Development and Culture.

9. THE HON. Dr. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering, Agro Service Co-operative Societies, Water Supply and Drainage Boards.

10. THE HON. THIRU C. PONNAIYAN, Minister for Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

11. THE HON. Dr. H. V. HANDE, Minister for Health, in-charge of Health and Environmental Pollution Control.

12. THE HON. THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Acts, Ports and Highways.

13. THE HON. THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Food, in charge of Food, Price Control and Census.

14. THE HON. THIRU V. V. SWAMINATHAN, Minister for Handlooms and Textiles, in charge of Handlooms and Textiles.

15. THE HON. THIRU R. SOUNDARARAJAN, Minister for Nutritious Meals, in charge of Nutritious Meals.

16. THE HON. THIRU T. VEERASAMY, Minister for Commercial Taxes, in charge of Commercial Taxes.

17. THE HON. THIRU N. NALLUSAMY, Minister for Housing, in charge of Housing and Slum Clearance Boards, Town Planning and Accommodation Control.

18. THE HON. THIRU ANOOR P. G. JAGADEESAN, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries.

19. THE HON. THIRU T. RAMASAMY, Minister for Rehabilitation and Employment, in-charge of Rehabilitation, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

20. THE HON. THIRU A. ARUNACHALAM, Minister for Adi Dravidar Welfare, in-charge of Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. THE HON. THIRU M. R. GOVENDHAN, Minister for Backward Classes, in charge of Backward Classes and Fisheries.

22. THE HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare in charge of Social Welfare including Women and Children and Children Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration.

23. THE HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY, Minister for Khadi, in charge of Khadi, Bhoodan and Gramdhan.

24. THE HON. THIRU Y. S. M. YUSUF, Minister for Public Works, in charge of Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. THE HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN, Minister for Co-operation, in charge of Co-operation.



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்

### திரு. சுந்தர் லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் இதர அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல், ஆயத்துறை, மதுவிலக்கு, மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மற்றும் கடவுச்சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, வருவாய், சட்ட மன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம் மற்றும் இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு, செய்திக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (தொழிலாளர் நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர் நலம், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பெருந் தொழில்கள், சுரங்கமும், கனிவளமும், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி மற்றும் கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

கல்வி, ஆட்சி மொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண்-பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றிய சட்டம், குழுமங்கள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம்.

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கேடு தடுப்புத்துறை.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகை கணக்கு

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் (கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் (சத்துணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி (வணிகவரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. என். நல்லுசாமி (வீட்டுவசதித் துறை கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியங்கள், நகர் அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜி. ஜகதீசன் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. டி. இராமசாமி (மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மறுவாழ்வு, வேலைவாய்ப்பும், பயிற்சியும், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் நலன்.

20. மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், இரவலர் இல்லம், அனாதை இல்லம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

கதர், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொதுப்பணித் துறை, சிறுபாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசனம் மற்றும் வஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம. பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

திரு. ஜி. சுவாமிநாதன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. சி. இராமலிங்கம்
2. திருமதி வி. ஜெயலட்சுமி
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
4. திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன்

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

சார்புச் செயலாளர்கள்

திரு. ரெ. கு. இராமச்சந்திரன், பி.ஏ., பி.எல்.
திரு. இரா. சந்திரசேகரன், பி.ஏ.

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன், எம்.ஏ.

மேலவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கே. சந்திரசேகரன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| டர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| அங்கமுத்து, திரு. பா. | நியமனம் |
| அருணாசலம், திரு. க. | நியமனம் |
| ஆனந்தம், திரு. வி. வி. வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| இராகவானந்தம், திரு. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| இராஜேந்திரன், திரு. மானாமதுரை, ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| கண்ணப்பன், திரு. காடுவெட்டி | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| கணேசன், திரு. ஆர். என்கிற மிசா ஆர். கணேசன் | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி |
| கருணாநிதி, டாக்டர் மு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| கலைமணி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| கோலப்பா, திரு. சி. ஆர். | நியமனம் |
| சங்கரலிங்கம், திரு. மு. செ. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் |
| சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் |
| சிவஞானம், டாக்டர் ம. பொ. | நியமனம் |
| சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு மேலவைத் தலைவர்) | நியமனம் |
| சிவராமன், திரு. அ. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| சுப்பிரமணியம், திரு. எம். பி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| சுவாமிநாதன், திரு. ஜி. (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்) | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் |

| | |
|---|---|
| 21. தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்க |
| 22. தாரா செரியன், திருமதி. | நியமனம் |
| 23. தால், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 24. பழனிவேல்ராஜன், திரு. பி. டி. ஆர். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் |
| 25. பாலாஜி, திரு. நெல்லை | நியமனம் |
| 26. மதுசூதனன், திரு. இ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 27. மயில்சாமி, திரு. அ. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி |
| 28. மாசிலாமணி, திரு. மு. | நியமனம் |
| 29. மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 30. மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக் கோட்டை ஆசிரியர்கள் தொகுதி |
| 31. முத்துலிங்கம், கவிஞர் | நியமனம் |
| 32. முனுசாமி, திரு. பி. | நியமனம் |
| 33. யூசுப், திரு. யா. சை. மு. (பொதுப்பணித் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 34. லெட்சுமிகாந்தன், திரு. பி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி |
| 35. லீலாவதி, செல்வி ஆ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்க |
| 36. வள்ளிமுத்து, திரு. ஈ. வே. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 37. வீரப்பன், திரு. இராம. (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 38. ஜெயச்சந்திரன், திரு. எல். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் |
| 39. ஜெயலட்சுமி, திருமதி வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 40. ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 41. ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் |
| 42. வெற்றிடம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 43. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 44. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 45. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 46. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 47. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 48. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 49. வெற்றிடம் | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 50. வெற்றிடம் | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 51. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 52. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 53. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 54. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 55. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 56. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 57. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 58. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 59. வெற்றிடம் | தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |

| | |
|---|---|
| 60. வெற்றிடம் | தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 61. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 62. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி |
| 63. வெற்றிடம் | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி |

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் அறுபத்தியேழாவது கூட்டத் தொடர்.

வெள்ளிக்கிழமை, 1985 ஜூன் 7.

(வைகாசி 25, குரோதன—திருவள்ளுவராண்டு 2016.)

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-00 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. இரங்கற் குறிப்பு.

மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. எஸ். பாலசுந்தரம் இயற்கை எய்தியது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர் திரு. வி. எஸ். பாலசுந்தரம் அவர்கள் சென்னையில் 12—4—1985 அன்று இயற்கை எய்தினார்.

அவர் 1956 முதல் 1962 வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் உறுப்பினராக இருந்தார். 1952 முதல் அவர் செங்கற்பட்டு மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தார்.

செங்கற்பட்டு மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். இவர் செங்கற்பட்டு மாவட்டத்தில் தாம்பரத்தில் அனாதைக் குழந்தைகள் காப்பகம் மற்றும் பள்ளி ஒன்றினை 1949-ல் நிறுவுவதற்குக் காரணமாகவும் அப்பள்ளிக்குச் செயலாளர் மற்றும் நிறுவனப் பேராளராகவும் இருந்தார்.

அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்னாரது மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(அவ்வாறே அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மின்சாரத் தட்டுப்பாடு.

* 26. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மின்துறை
அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்
கிறேன் :

(அ) தமிழகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மின்சாரத் தட்டுப்பாட்டை
சமாளிக்க, பிற மாநிலங்களிலிருந்து மின்சாரம் பெறுவது குறித்து, அர
ஏதும் முயன்று வருகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) 13—8—1984 முதல் ஜனவரி 1985 முடிய, 166 மில்லிய
யூனிட்டுகள் கேரளத்திலிருந்து பெறப்பட்டது. தேசிய அனல் மின்ச
கழகத்தைச் சார்ந்த இராமகுண்டம் அனல்மின்சார நிலையத்திலிருந்து
நாளைக்கு சராசரியாக 35 மெகாவாட்/0.7 மில்லியன் யூனிட்டுகள் தமி
நாட்டுக்கு அதன் பங்காக பெறப்படுகிறது. ஆந்திரத்திலிருந்து
கர்நாடகத்திலிருந்தும் மின்சாரம் பெறுவதற்கான வாய்ப்பு இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலை
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விவரங்களைத் தவி
மற்றும் அவர் குறிப்பிட்டிருக்கிற மாநிலங்களைத் தவிர, வேறு மாநில
களிலிருந்து மின்சாரம் பெற்று இங்குள்ள மின்தட்டுப்பாட்டைச் சமாளிக்
எண்ணம் அரசுக்கு இப்போது உண்டா ? நாம் பருவ மழையையே நம்
இருப்பதால் கடந்த இரண்டு மாதங்களில் நமக்கு ஏற்பட்டிருக்கிற மிக
பெரிய நெருக்கடி மீண்டும் வராமலிருப்பதற்கு நிரந்தரமான ஒ
ஏற்பாட்டைச் செய்யும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே
நம்மைச் சுற்றி வேறு மாநிலங்கள் இல்லை. சாதாரணமாக, கேரள
திலிருந்துதான் நமக்கு மின்சாரம் கிடைக்க வேண்டும். ஆனால் அங்கேயு
பருவ மழை பொய்த்துவிட்டதால், அவர்களாலே தர முடியவில்லை. ஆந்
ரத்தில் தண்ணிறைவை எட்டியிருக்கிறார்கள். கர்நாடகத்தில் பற்றாக்குறை
இருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, வேறு மாநிலங்
களிலிருந்து மின்சாரத்தைப் பெற்று நம்முடைய தேவையைச் சமாளிக்க
முடியாது என்ற நிலை தற்போது இருப்பதால், புதிதாக மின் உற்பத்தித்
திட்டங்களில் அரசு கவனம் செலுத்துமா ? தற்போது சில திட்டங்களைப்
பற்றி பேசப்பட்டு வருகிறது. குறிப்பாக ஒகேனக்கல் நீர்மின் திட்டம்
குறித்து கருநாடக மாநிலமும் தமிழகமும் இணைந்து பேசி மத்திய அரசின்
உதவியோடு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த—விரைவுபடுத்த—அரசு
முயற்சி எடுத்து வருகிறதா ? அதைப் போலவே நெய்வேலியில் மீண்டும்
அதிகமான அளவுக்கு மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டம்
ஏதேனும் இருக்கிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஒகேனக்கல் மின்திட்டத்தைப்
பொறுத்த வரை, இரு மாநில முதல்வர்களும் காவிரி நீர்ப் பிரச்சினை சம்பந்த
மாகக் கூடிப் பேசுகிறபோது எடுக்க வேண்டிய முடிவு. நெய்வேலியைப்
பொறுத்த வரையில், மூன்றாவது சுரங்கம் வெட்டுதலை ஏழாவது
ஐந்தாண்டுத் திட்டத்திலேயே மேற்கொள்ள வேண்டும் என்று நாம் மத்திய
அரசிடம் வற்புறுத்தி வருகிறோம்.

திரு. அ. ப. சிவராமன் : தலைவர் அவர்களே, நெய்வேலியிலிருந்து
மின்சாரம் பெறுவதில் இடர்ப்பாடு இருக்கிறதா ? நெய்வேலி நிலக்கரி
நிறுவனத்திற்கு தமிழ்நாடு மின்வாரியம் தரவேண்டிய பாக்கி தொடர்பாக,
மின்வாரியத் தலைவரின் அறிக்கையும் நெய்வேலி நிறுவனத் தலைவரின்
அறிக்கையும் முரண்பாடாக இருக்கின்றன. இதன் காரணமாக பொது
மக்கள் அரசின் மீது தவறான எண்ணம் கொண்டிருக்கிறார்கள் என்பதை
அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நெய்வேலி
யிலிருந்து மின்சாரம் பெறுவதில் இடர்ப்பாடு எதுமில்லை. மின்சாரக்
கட்டணத்தை நிர்ணயிப்பதில்தான் இடர்ப்பாடு இருக்கிறது.

(முற்பகல் 10-05)

டாக்டர் இரா. சனார்த்தனம் : கேரளாவிலிருந்து மின்சாரத்தை நாம்
பெற்றுவந்தோம். அதனுடைய கட்டணத்தை உயர்த்திவிட்டார்களா ?
அல்லது மின்சாரத்தின் அளவைக் குறைத்திருக்கிறார்களா ? இதுபற்றி
மீண்டும் அமைச்சர்கள் அளவில் பேச்சுவார்த்தை நடத்தும் உத்தேசம் இருக்
கிறதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் மில்லியன் யூனிட்டுகள் மின்சாரத்தை கேரளாவிலிருந்து வாடிக்கையாக நாம் பெற்றுக் கொண்டிருந்தோம். பருவ மழை பொய்த்ததால், 166 மில்லியன் யூனிட்டுகள் கூட பெற முடியவில்லை. இருப்பினும் கட்டணம் அவ்வப்போது உயர்ந்து, தற்போது நாம் வாங்குகிற மின்சாரத்திற்கு யூனிட்டுக்கு 42 பைசா என ஆகியுள்ளது.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இராமகுண்டத்திலிருந்து மின்சாரத்தை வாங்குவது பற்றிக் குறிப்பிட்டார்கள். நேஷனல் தெர்மல் பவர் கார்ப்பரேஷன் மூலமாக அந்த மின்சாரம் விநியோகிக்கப்படுவதாக அறிகிறேன். நம்முடைய மாநிலத்திற்கு அதிலே என்ன பங்கு? இப்போது இராமகுண்டத்திலிருந்து நமக்குரிய பங்கு வருகிறதா என்று அறிய விரும்புகிறேன். மேலும் தமிழ்நாட்டிலுள்ள கல்பாக்கம் அணு மின் நிலையத்தின் மூலமாக எவ்வளவு மின்சாரம் உற்பத்தியாகின்றது? அந்த மின்சாரம் முழுவதும் நமக்கே கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தென்னகம் முழுவதற்குமாக இந்திய அரசால் நிறுவப்பட்டதுதான். இராமகுண்டம் அனல் மின் உற்பத்தித் திட்டம். அதிலே மூன்று யூனிட்டுகள் ஏற்கெனவே உற்பத்தியைத் துவங்க ஆரம்பித்துவிட்டன. அதிலே நமது பங்கு 132 மெகாவாட். ஆனால் அது ஆந்திர அரசின் மூலமாக நமக்கு வர வேண்டியிருப்பதால், 35 மெகா வாட்கூட வரவில்லை. 100 மெகாவாட் அளவிற்கு நாம் தொடர்ந்து இழப்பிற்கு ஆளாகி வருகிறோம். 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை' என்ற நிலையில்தான் இராமகுண்டம் மின்சாரத்தைப் பொறுத்த வரையில் தமிழகத்தின் நிலைமை இருந்து வருகிறது.

கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் உற்பத்தியாகின்ற மின்சாரம் முழுவதையும் தமிழகம் பெற்று வருகிறது.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** இராமகுண்டத்திலிருந்து மின்சாரம் உற்பத்தியாகியும்கூட அதைப் பயன்படுத்த முடியாமல் போவதற்குக் காரணம் முன்கூட்டியே திட்டமிட்டு தமிழ் நாடு அரசாங்கம் வழிவகை செய்யத் தவறியதுதான் என்று குறிப்பிடுகிறார்கள். அதிலே உண்மை உண்டா? அதற்காக என்ன வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அதிலே தமிழக அரசுக்கு சம்பந்தம் இல்லை. அங்கே உற்பத்தியாகக் கூடிய மின்சாரத்தை தமிழ் நாட்டிற்குக் கொண்டுவருவதற்காக நேஷனல் கிரிடைப் போட வேண்டியது இந்திய அரசு. அதற்கிடையிலே ஆந்திரா கிரிட் மூலமாக அனுப்ப வேண்டுமென்று கேட்டு வருகிறோம். ஆந்திராவைப் பொறுத்த வரையில், அனுப்ப முடியாது என்று அவ்வப்போது சொல்லி, நாம் வேண்டும் என்று கேட்கும் போது கொஞ்சம் கொஞ்சமாக அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதனாலே தான் 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை' என்று சொன்னேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** நீலகிரி மாவட்டத்தில் மோர்க்காரா மின் திட்டம் இருக்கிறது. அங்கே வேறு ஸ்தலத்தில் அதாவது 'ஜெர்மென் பாயிண்ட்' என்ற இடத்தில் ஆரம்பிக்கலாம் என்று நிபுணர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்? அதை எந்த நிலையிலே அரசு பரிசீலித்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தனிக் கேள்வி போட்டால், மாண்புமிகு உறுப்பினர் மன நிறைவு பெறத்தக்க அளவிற்கு விவரங்கள் தர இயலும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தமிழகத்திலே தற்போது ஏற்பட்டுள்ள மின்சாரத் தட்டுப்பாட்டை, பிற மாநிலங்களிலிருந்து மின்சாரம் பெற்று நீக்குவதற்கான வாய்ப்பு இல்லாத இந்தச் சூழ்நிலையில், நம்முடைய அவசரத் தேவையைக் கருதி புதிதாக அனல் மின் நிலையங்களை உருவாக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இதே மன்றத்திலே இது சம்பந்தமாக 'புதிய அனல் மின் திட்டங்கள்' பற்றி விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தற்போது தமிழகத்திற்கு பெரும்பான்மையாக நெய்வேலியிலிருந்து மின்சாரம் கிடைக்கிறது. இப்போது நெய்வேலியிலிருந்து தனியாக ஆந்திர மாநிலத்திற்கும், கர்நாடக மாநிலத்திற்கும், புதுவை மாநிலத்திற்கும் 'கிரிட்' போடுகிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். அது போல் இருந்தால், மேற்கொண்டு தமிழகத்திலே தட்டுப்பாடு வர இருக்கிறதா, இதுபற்றி அரசு அறியுமா, அதுபற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையெல்லாம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தில் உற்பத்தியாகின்ற மின்சாரம் தென்னக மாநிலங்கள் அனைத்திற்கும் பொதுவானது என்பது மத்திய அரசின் கொள்கை. நம்மைப் பொறுத்த வரையில், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து வற்புறுத்தி வருவதால் அந்த மின்சாரம் முழுவதும் நமக்குத் தேவை என்று கூறி வருகிறோம். இருப்பினும் இதை இந்திய அரசு ஏற்றுக்கொள்ளாமல், '1977 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் இந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்ற காரணத்தால், தென்னக மாநிலங்கள் முழுவதற்கும் பங்கு அளிக்க வேண்டும் என்று அவாகள் கூறியுள்ளார்கள்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தமிழ் நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை நிரம்தரமாக இருப்பதால், சூரிய வெப்பத்தாலும், கடல் அலையின் வேகத்தாலும் மின்சார உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்லுகிறார்களே, அதுபற்றி நம்முடைய சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? அதை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தனிக்கேள்வி போடவும்.

(முற்பகல் 10-10)

**திரு. பா. ரா. தாமஸ் :.** தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே கூடங்குளத்திலே அணு மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. அது குறித்து மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறதா ; அந்த ஆக்கபூர்வமான வேலையை திட்டமிட்டு எப்போது ஆரம்பித்து நம்முடைய மாநிலத்தினுடைய மக்கள் பயன்பெற, பெருமளவுக்கு மின் உறபத்தியைப் பெருக்க, வழிவகுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அது இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, இராமகுண்டத்திலேயிருந்து மின்சாரத்தைக் கொண்டுவாமுடியாததற்குக் காரணம் மத்திய அரசாங்கம் 'கிரிட்' போடவில்லை என்று சொன்னார்கள். தமிழ்நாட்டிலேயிருந்து அணு மின் நிலையத்திலிருந்தும், நெய்வேலியிலிருந்தும் ஆந்திராவிற்குக் கொடுக்கக்கூடிய மின்சாரத்திற்குப் பதிலாக, நாம் இங்கே உற்பத்தியாகும் மின்சாரத்தை நேரடியாக எடுத்துக்கொண்டு, இராமகுண்டத்திலே



யிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை அவர்களே எடுத்துக் கொள்ளலாமே, இந்த மாற்றுத் திட்டத்தைப்பற்றி எப்போதாவது விவாதிக்கப்பட்டதா? அதுபற்றி முடிவு சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, கடைசியிலே அந்த நிலைமைதான் வந்து சேரும்.

## ஏற்காடு பேருந்து நிலையம்.

* 27. வினா—**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) ஏற்காடு பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தவும், பயணிகளுக்கு நல்ல வசதிகள் செய்து தரவும், செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) மற்றும் (இ) ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 8.5 இலட்சம் மதிப்பீட்டில், ஏற்காடு பேருந்து நிலையம் விரிவு செய்யப்படவும், பயணிகளுக்கு வசதிகள் செய்து தரவும் வேலை துவங்கப்பட்டு, நடைபெற்று வருகிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, ஏற்காடு நகரமானது நம்முடைய சேலம் நகரத்திலிருந்து 28 கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருக்கின்றது. நம்முடைய மக்கள், தமிழக மக்களும் பிற மாநிலங்களிலுள்ள மக்களும், ஆண்டு முழுவதும் தொடர்ந்து ஒரு சீசன் உள்ள பகுதியாகத்தான் அந்தப் பகுதியைக் கருதுகின்றார்கள். முழுமையாக அங்கு சென்று நல்ல முறையிலே அந்தப் பகுதியில் உள்ள குளுமையை அனுபவித்து அங்கே உல்லாசமாகப் பொழுதுபோக்க வேண்டும் ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஒதுக்கீடு செய்வதுபற்றி கூறும்போது, அந்தத் திட்டம் எவ்வளவு விரைவில் அமுல்படுத்தப்படும் என்றும் அந்தப் பேருந்து நிலையத்தைக் கட்டி முடிக்க திட்டமிட்டு காலவரையறை நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றதா என்றும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே. 34-4-1985-ல் முதல் கட்ட வேலை அநேகமாக முடிவடைந்திருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாவது கட்ட காரியங்கள் விரைவிலே தொடங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்,

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, ஏற்காட்டி அப்படி பேருந்து நிலையம் அமைக்கின்றபோது, பயணிகள் தங்குவதற் என்று மேலே அறைகள் ஏதும் கட்டுகின்ற உத்தேசம் உண்டா ? அதற்கா முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அங்கே பயணிகள் தங்குவதற் அறைகள் எதுவும் கட்டுவதாக இப்போது உத்தேசம் இல்லை.

ஏற்காடு நகரில் உள்ள சாலைகள்.

* 28. வினா—திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்

(அ) ஏற்காடு நகரில் உள்ள பெரும்பாலான சாலைகள் பழுதடைந் நிலையில் உள்ளன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக, அச்சாலை களைப் பழுது பார்த்து சீரமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(உ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) மற்றும் (உ) சுற்றுலாப் பயணிகளுக்கு சிரமங்கள் ஏதுமில்லை என அறியப்படுகிறது.

திரு. பா. ரா. தாமஸ்: தலைவர் அவர்களே, ஏற்காடு மலைக்குச் செல்லும் பாதைகள் பரவலாக இல்லை. நீண்ட ஒற்றையடிப் பாதையாக இருக்கிறது. அதனால் பெரிய பேருந்துகள் செல்ல முடியவில்லை. ஏராள மான பயணிகள் சிறிய பேருந்துகளில் அடைந்துகொண்டு சாமான்களும் ஏற்றப்பட்டு, பயணம் செய்கின்றார்கள். மேலும் எதிரிலே வருகின்ற வண்டிகள் விலகிச் செல்லக்கூட வழியில்லாமல் இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி, அதற்கான ஒரு நல்ல திட்டத்தை வகுத்து, அந்தச் சாலைகளை விரிவுபடுத்த வழிவகுக்க வேண்டும். ஆகவே பேருந்துகள் ஒன்றுக்கொன்று விலகிச் செல்லக்கூடிய அளவிலே பாதையை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உறுப்பினர் அவர்கள் பாதையை விரிவுபடுத்துவதற்கான யோசனையைக் கேட்கின்றார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்,



டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அதிக நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்ற காரணத்தினால் அப்படிப்பட்ட பாதைகளை அகலப்படுத்தினால், ஏற்காட்டிற்குள் உள்ள அந்தப் பகுதிகளில் உள்ள சிறப்பான காட்சிகளைப் பார்க்கலாம். உள்பகுதி களில் உள்ள பாதைகளும் மிகுந்த பழுதடைந்திருக்கின்ற காரணத்தினாலே, அவைகளையும் செம்மைப்படுத்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின் நிதிநிலை நன்றாக இல்லை. 4 பாதைகள் சரியாக இல்லாமல் இருக்கின்றன என்றும் 11 சாலைகள் ஒழுங்காக இருப்பதாகவும் தகவல் வந்திருக்கின்றது. இருந்தாலும், பாதைகளைச் செப்பனிடுவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Employment in Government Services for Blind Persons.*

* 29. Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state :

(*a*) whether there is any proposal to reserve a certain percentage of posts to persons who are blind, for employment in Government Services ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (இ) நடைமுறையிலுள்ள அரசாணையின்படி உடல் ஊனமுற்றோர்க்கு அனைத்து அரசுப் பணிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் ஒதுக்கப்பட்ட 3 சதவீதத்தில் பார்வையிழந்தோர், காது கேளாதோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோர் ஆகிய ஒவ்வொரு வகையினருக்கும் தலா 1 விழுக்காடு என்ற வகையில் உட்பாகுபாடு செய்ய வேண்டுமென அரசுக்கு முறையீடுகள் வந்தன. அம்முறையீடுகளைப் பரிசீலித்த பின்பு அரசு தற்போதுள்ள செயல் முறையே நீடிக்கலாமென முடிவு செய்துள்ளது.

(முற்பகல் 10-15)

திரு. பா. ரா. தாமஸ்: தலைவரவர்களே, கண் பார்வை இழந்த பலர் நல்ல முறையில் பயிற்சியும், கல்வியும் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு முழுமையான பணி கிடைக்காததால், 6, 7 மாதங்களுக்கு முன்பு சென்னையிலே அவர்கள் ஊர்வலமாக வந்து, கடைசியில் செயலகத்திற்குப் போய்

மாண்புமிகு அமைச்சரவர்களைச் சந்தித்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். கண் பார்வையற்ற குருடர்கள் தகுந்த கல்வி பெற்ற பிறகு, அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். அரசுப் பணியில் மட்டுமல்ல, தனியார் நிறுவனங்களிலும் அவர்களுக்குக் கட்டாயமாக, திட்டவட்டமாக ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டை ஒதுக்கி, பணி கொடுத்தால், அவர்கள் வாழ்வு பெற முடியும். அதனால் குறைந்தது 2 சதவிகிதம் இட ஒதுக்கீடு எல்லாத் துறைகளிலும் அவர்களுக்கு ஒதுக்கித் தர அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு 3 விழுக்காடு என்று ஒதுக்கீடு செய்து, அந்த அடிப்படையில் அரசு அலுவலகங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் இன்றைக்கு அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிற சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு, தகுதி அடிப்படையில் தான் பணி கொடுக்கப்படுகிறதென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவரவர்களே, என்னுடைய நினைவில் இருப்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்களுடைய துறையிலே 22 கல்விக் கூடங்கள் பார்வை இழந்தவர்களுக்காக நடத்தப்படுவதாக நினைக்கிறேன். அந்தப் பள்ளிகளில் எத்தகைய கல்வி கொடுக்கப்படுகிறது ? அவர்கள் வேலைக்குச் செல்லும் அளவுக்கு அங்கே தொழிற் கல்வி அளிக்கப்படுகிறதா ? அந்த வகையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் மாற்றி அமைத்தால், அவர்களுக்குப் பணி கிடைக்கும் நிலை உருவாகுமே. அதைப்பற்றி ஏதேனும் சொல்லுவார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, பார்வை இழந்தவர்களுக்கான கல்விக் கூடங்களை அரசின் மூலமாக ஆரம்பித்து, அங்கே அவர்கள் பயிலும் கல்வியின் மூலமாக ஓரளவுக்கு அவர்கள் வேலை வாய்ப்பைப் பெற வேண்டுமென்றுதான் அரசு நடவடிக்கை எடுத்து, இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தொழிற் கல்விபற்றிக் குறிப்பிட்டார்கள். பார்வை இழந்தவர்கள் ஓரிடத்தில் அமர்ந்து தொழில் செய்யக்கூடிய வகையில் நாம் தொழிற் கல்வி கொடுக்க வேண்டும். 'மெகானிகல்' சம்பந்தமான வேலைகளை அவர்களுக்குக் கொடுத்தால், அந்தத் தொழில் செய்வது அவர்களுக்குச் சிரமமாக இருக்கும். அந்த அடிப்படையில், அவர்கள் ஓரிடத்தில் அமர்ந்து வேலை செய்யுமளவுக்கு தொழிற் கல்வி கொடுக்க வேண்டுமென்பது பற்றியும் அரசு ஆலோசித்துக் கொண்டுவருகிறது.



திரு. அ. ப. சிவராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், உடல் ஊனமுற்றவர்களுக்கு மொத்தமாக 3 விழுக்காடு ஒதுக்கப்படுகிறதென்று சொன்னார்கள். கை கால் இழந்தவர்கள் ஊனம் என்பது வேறு, பார்வையற்றவர்களின் ஊனம் என்பது வேறு. எனவே இதனை அமைச்சரவர்கள் கருத்தில் கொண்டு, கண்ணற்ற குருடர்களுக்கு தனியாக ஒரு விழுக்காட்டை ஒதுக்கி, அவர்கள் தங்கள் வாழ்விலே வளம் பெற ஏற்பாடுகளைச் செய்வார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, ஊனமுற்றவர்களுக்கு 3 விழுக்காடு என்று ஒதுக்கீடு செய்து, சாதி அடிப்படையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்படும் 18 விழுக்காட்டில், ஒவ்வொரு நூற்றுக்கும் 3 என்ற வகையில் வேலைவாய்ப்பு கொடுக்கப்படுகிறது. அதைப்போல, பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு 50 விழுக்காடு என்ற பங்கில், ஒவ்வொரு நூற்றுக்கும் 3 என்று இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதைப்போல ஓப்பன் காம்படிஷனில் உள்ளவர்களுக்கான 32 விழுக்காடு பங்கில், ஒவ்வொரு நூற்றுக்கும் 3 என்ற வகையில் ஒதுக்கப்படுகிறது. ஆகவே பார்வையற்றவர்களும், கைகால் ஊனமுற்றவர்களும், காது கேளாதவர்களும் எந்த வகையிலும் ஒதுக்கப்பட மாட்டார்கள். அவர்களுடைய கல்வித் தகுதி அடிப்படையிலும், சாதி அடிப்படையிலும் அவர்களுக்கு நிச்சயமாக வேலைவாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. எல். ஜெயச்சந்திரன் : தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள கள்ளக்குறிச்சி தாலுக்காவைச் சார்ந்த, எம்.ஏ., படித்த விழி இழந்த திரு. கோபாலன் என்பவர் தந்தனம் வேலைவாய்ப்பகத்தில் தன் பெயரைப் பதிவு செய்ய வந்துள்ளார். அவரை, நீங்கள் தி. நகரில்தான் உங்கள் பெயரைப் பதிவு செய்ய வேண்டும் என்று சொல்லி திருப்பி அனுப்பி விட்டார்கள். அவர் பட்டமேற்படிப்பு படித்து 7, 8 ஆண்டுகள் ஆகியும் இன்னும் வேலை கிடைக்கவில்லை. விழி இழந்தோர்க்கான பள்ளியிலிருந்து இன்டர்வியூ ஏதாவது வந்தாலும், இவர் அதிகமாகப் படித்திருப்பதால், வேலைவாய்ப்பு இல்லையென்று சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் இவருக்கு அச்சர் பதவி கொடுக்கலாம்

(முற்பகல் 10-25)

இன்றைக்கு எம்.ஏ., பி.ஏ. படித்தவர்கள் என்று சொன்னார்கள். அதாவ நடுநிலைப் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்கள்தான் பணிபுரிய முடியு என்கிற நிலை இருக்கிறபோது, உயர் கல்வி அதாவது எம்.ஏ., பி.ஏ. படித்தவ களை எப்படி அமர்த்த முடியும் என்பதை நான் அறிந்துகொள்ள விரும் கிறேன்.

Thirumathi TARA CHERIAN: Sir, a very senior blind man a Professor of English in a private College. Therefore, when suc people are qualified, they will be able to take any place. The Ho Minister has said that 3 per cent of posts in Government Service hav been reserved for the blind, deaf and other physically handicapp people. Will the Hon. Minister be able to place on the table of th House a list of such persons who have been appointed to posts Government Service, since the time an assurance was given by th Hon. the Chief Minister in this House? In that case, we may kno exactly how many of the physically handicapped people have bee absorbed in Government Service and we will also be able to furnis to the Government the number of people who have been absorbed posts in private institutions.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** தலைவர் அவர்கள எத்தனை பேர் வேலையில் அமர்ந்திருக்கின்றார்கள் என்கிற புள்ளிவிவர தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால், பதில் கொடுக்கப்படு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, நடுநிலைப் பள் களிலே இடைநிலை ஆசிரியர்கள் மட்டும்தான் பணிபுரிய முடியும் என் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் உண்மையிலே பட்டதாரிகள், பட்டதாரி தரம் உடைய புலவர்கள், பி.லிட். படித்தவர்க எல்லாம்கூட தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்ற வாய்ப்பு இருக்கிற ஆகவே அவர்கள் பணியாற்றுவதற்கே வாய்ப்பு இல்லை என்பதுபோல மாண் மிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்களே, ஆகவே அந்த வாய்ப்பை போல, இவர்களுக்கும் அந்த வாய்ப்பைத் தர அரசு முன்வருமா என்று அறி விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, நடுநிலை பள்ளியில், உயர்கல்வித் தகுதி வாய்ந்தவர்கள் பணி செய்யலாம். ஆனா நடுநிலைப் பள்ளிக்கு எத்தப் பாடம் தேவையோ அந்தப் பாடத்தில் தகு பெற்றிருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



**திரு. எல். ஜெயச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நான் கூறிய வினாவினை ாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள் என்று நினைக்கின்றேன். நான் கூறியது, உடல் ஊனமுற்றோருக்கென்று தனியாக ந்தனத்தில் வேலைவாய்ப்புப் பதிவு செய்யும் அலுவலகம் இருக்கிறது. அங்கு ான் நான் குறிப்பிட்ட திரு. கோபாலன் என்கிற எம்.ஏ., பி.எட்., படித்தவர் பதிவு செய்யச் சென்றார். அவரை "அங்கே பதிவு செய்யக்கூடாது. அனைவரும் பதிவு செய்யக்கூடிய தி. நகரிலே பதிவு செய்ய வேண்டும்" என்று அனுப்பிவிட்டார்கள். அதைத்தான் நான் கூறினேன். அவர் விழி இழந்தவர். எனவே உடல் ஊனமுற்றவர். அவரை ஏன் அங்கு அனுப்ப வேண்டும் என்று கேட்கிறேன். இதை அரசு அறியுமா என்றுதான் கேட்கிறேன்.

மேலும் அவருக்கு விழி இழந்தோர் பள்ளியிலேயே வேலைவாய்ப்புக்காக ஓர் "இன்டர்வியூ" வந்தும், இன்டர்வியூவுக்கு அவர் சென்றிருந்தபோது, "நீங்கள் அதிகம் படித்திருக்கிறீர்கள். உங்களுக்கு வேலை இல்லை" என்று கூறிவிட்டார்கள். ஆகவே அவர் அதிகம் படித்தது அவர் தவறா? அவர் மேற்படிப்பு படிக்கக்கூடாதா? இனிமேலாவது இவர் போன்றவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று கோருகிறேன். இனிமேலாவது இந்தக் கோரிக்கையினை அரசு பரிசீலனை செய்து, அவர்களுக்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து எழுதிக் கொடுத்தால், நிச்சயமாக கவனத்தில் கொண்டு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பணியாற்றும் பெண்களுக்கென விடுதி கட்டுதல்

* 30. வினா—**திரு. எல். ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கடலூரில், பணியாற்றும் பெண்களுக்கென தனி விடுதி ஒன்றைக் கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** (அ) கடலூரில் பணிபுரியும் பெண்களுக்கென தனி விடுதி ஒன்று அமைக்க திட்டம் ஏதுமில்லை.

**(இ) கேள்விக்கு இடமில்லை.**

திரு. எல். ஜெயச்சந்திரன் : தலைவர் அவர்களே, தென்னாற்க மாவட்டத்தின் தலைநகரமான கடலூரிலே அலுவலகங்களிலே பணியாற்று பெண்களுக்கு என ஒரு தனி விடுதி இல்லாததால், பணியாற்றும் பெண்க அங்கேயுள்ள மற்ற பள்ளி மாணவிகளின் விடுதிகளிலே மாணவிகளுடன் தங் யிருக்கிறார்கள். சென்னையிலே இருப்பதுபோல ஏன் ஒன்று தனியாக அவ களுக்கு என்று கட்டக் கூடாது? வரும் ஆண்டுகளிலாவது அவ்வாறு கட்டு எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, இப்போ திட்டம் ஏதும் இல்லை. வருங்காலத்தில் கட்டலாம் என்கிற கருத்தினை அர பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (* அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-30)

### 3. அறிவிப்புகள்.

#### (1) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறை வேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவை தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :

(1) 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1985).

(2) 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1985).

(3) 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1985).



#### (2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விபரம் முடிவு செய்யப்பட்டது :—

| | | |
|---|---|---|
| ஜூன் 7 (வெள்ளி) | — | அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல். |
| ஜூன் 8 (சனி)<br>ஜூன் 9 (ஞாயிறு) | — | விடுமுறை. |
| ஜூன் 10 (திங்கள்)<br>ஜூன் 11 (செவ்வாய்) | — | கல்விபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். |
| ஜூன் 12 (புதன்) | — | அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல். |
| ஜூன் 13 (வியாழன்) முதல் ஜூன் 23 (ஞாயிறு) வரை | — | கூட்டம் இல்லை. |
| ஜூன் 24 (திங்கள்) | — | வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம். |
| ஜூன் 25 (செவ்வாய்) | — | மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம். |
| ஜூன் 26 (புதன்) | — | சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம். |
| ஜூன் 27 (வியாழன்) | — | நுகர்பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம். |
| ஜூன் 28 (வெள்ளி) | — | தொழிலாளர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம். |
| ஜூன் 29 (சனி) முதல் ஜூலை 10 (புதன்) வரை | — | கூட்டம் இல்லை. |

திரு. எல். ஜெயச்சந்திரன் : தலைவர் அவர்களே, தென்னார்க்கா மாவட்டத்தின் தலைநகரமான கடலூரிலே அலுவலகங்களிலே பணியாற்று பெண்களுக்கு என ஒரு தனி விடுதி இல்லாததால், பணியாற்றும் பெண்க அங்கேயுள்ள மற்ற பள்ளி மாணவிகளின் விடுதிகளிலே மாணவிகளுடன் தங் யிருக்கிறார்கள். சென்னையிலே இருப்பதுபோல ஏன் ஒன்று தனியாக அவ களுக்கு என்று கட்டக் கூடாது? வரும் ஆண்டுகளிலாவது அவ்வாறு கட்டு எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, இப்போது திட்டம் ஏதும் இல்லை. வருங்காலத்தில் கட்டலாம் என்கிற கருத்தினை அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-30)

## 3. அறிவிப்புகள்.

### (1) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறை வேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :

(1) 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1985).

(2) 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1985).

(3) 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1985).



### (2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விபரம் முடிவு செய்யப்பட்டது :—

| | |
|---|---|
| ஜூன் 7 (வெள்ளி) | — அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல். |
| ஜூன் 8 (சனி)<br>ஜூன் 9 (ஞாயிறு) | — விடுமுறை. |
| ஜூன் 10 (திங்கள்)<br>ஜூன் 11 (செவ்வாய்) | — கல்விபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம். |
| ஜூன் 12 (புதன்) | — அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல். |
| ஜூன் 13 (வியாழன்) முதல் ஜூன் 23 (ஞாயிறு) வரை | — கூட்டம் இல்லை. |
| ஜூன் 24 (திங்கள்) | — வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம். |
| ஜூன் 25 (செவ்வாய்) | — மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம். |
| ஜூன் 26 (புதன்) | — சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம். |
| ஜூன் 27 (வியாழன்) | — நுகர்பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம். |
| ஜூன் 28 (வெள்ளி) | — தொழிலாளர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம். |
| ஜூன் 29 (சனி) முதல் ஜூலை 10 (புதன்) வரை | — கூட்டம் இல்லை. |

[1985 ஜூன்

மேலவை மீண்டும் 11—7—1985 அன்று கூடும். மேல்வை வழக்கம்பே
காலை 10 மணிக்குக் கூடும்.

அரசு அலுவலகங்கள் வாரத்தில் ஐந்து நாட்களே நடைபெறும் என்று
எல்லா ஞாயிற்றுக்கிழமைகளைப் போல எல்லா சனிக்கிழமைகளும் அ
அலுவலகங்களுக்கு விடுமுறை நாட்களாக இருக்கும் என்றும் அ
அறிவித்துள்ளதையொட்டி, மேலவைக் கூட்டமும் வாரத்தில் ஐந்து நாட்
மட்டுமே நடைபெறும். ஒவ்வொரு வாரமும் சனி, ஞாயிறு ஆகிய நாட்கள்
மேலவைக் கூட்டம் நடைபெறாது.

## 4. கவன ஈர்ப்பு.

**திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்டம் பகுதியில் கைத்தறித் துணிகள் தேங்கி
கிடப்பதால் நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்
அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமி
கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை
ஈர்க்கிறேன் :

" திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்டம் பகுதியில் ரூபாய் ஒரு கோடிக்
மேல் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதால், நெசவாளர்கள்
பாதிக்கப்பட்டுள்ளது குறித்து ".

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே
விவரமான அறிக்கை @ ஒன்று அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த
அறிக்கையிலே, அரசு விற்பனைக்குத் தள்ளுபடி சலுகைகளை வழங்கி
யுள்ளதால், துணித் தேக்கம் கணிசமாகக் குறையுமெனக் கூறப்பட்டுள்ளது
பொதுவாக கைத்தறித் துணி, கதர் துணிகளுக்குத் தள்ளுபடி தந்து அதை
ஊக்குவிக்கின்ற வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. இப்படி
இருந்து வந்தும்தான் இந்தத் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதிலே புதிதாகத்
தந்திருக்கின்ற இந்தக் காரணத்தாலே இந்தத் தேக்கம் நீக்கப்பட்டுவிடும்,
குறைந்துவிடும் என்று சொல்லக்கூடிய நிலை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக

---

@ 52: அச பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



85 ஜூன் 7] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

ல்லை என்று கருதுகிறேன் வெளிநாடுகளில் நம்முடைய துணிகளுக்குரிய
ர்க்கெட்டை அதிகமாக ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்
ாண்டிருக்க வேண்டும் அல்லது விசைத்தறிகளின் மூலம் தயாரிக்கப்பட்ட
ணிகள், கைத்தறித் துணிகளுடன் கலக்கின்ற சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு
ற்பாடு செய்தாலே கைத்தறித் துணிகளின் தேக்கத்தினுடைய தொகை
றையும். கூட்டுறவுச் சங்கங்களுக்கு உடனே தேர்தலை நடத்தினால், அவை
ந்த முறையிலே, கைத்தறித் துணிகளையெல்லாம் வெளியிலே கொண்டு
ாவதற்குரிய வாய்ப்புகள் ஏற்படும். இப்படியெல்லாம் இருக்கின்ற
ட்டங்களைப்பற்றி அரசு ஏதேனும் ஆராய்ச்சி செய்திருக்கிறதா, உரிய
வடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர்
வர்களே, புதிதாக இயற்றப்பட்ட கூட்டுறவுச் சட்டம் அமுலுக்கு வருகிற
ாது கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நிச்சயம் வரும்.
ற்றுமதி கைத்தறித் துணிகளை நெய்வதைப் பொறுத்தவரையில், அதிக
வனம் சர்க்கார் செலுத்துகிறது. ஆனால் கைத்தறி நெசவாளர்கள் துணியை
ற்பத்தி செய்வதில்தான் அக்கறை காட்டுகிறார்களே தவிர, சட்டப்படி,
கிகள்படி, கூட்டுறவுச் சங்க விதிகள்படி 50 சதவீத துணியைக் கூட அவர்கள்
ற்க முயலுவதில்லை. உதாரணத்திற்கு, ஜெயங்கொண்டம் பகுதியில்
சங்கங்களும் மாதம் ஒன்றுக்கு சராசரி 1 கோடி ரூபாய்க்கு மேல் துணிகளை
ற்பத்தி செய்கின்றன. அவர்கள் விற்கிற துணிகளின் மதிப்பு சுமார்
லட்சம் ரூபாய்தான் ஆகும். அவர்கள் துணிகளை ஏற்றுமதிக்கு லாயக்குள்ள
ாகத் தயாரிப்பார்களானால், நிச்சயம் ஏற்றுமதி செய்ய முடியும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த கவன
ர்ப்புத் தீர்மானம் 20—3—1985-லே தரப்பட்டது. 7—6—1985-லே விடை
ரப்படுகிறது. இதற்கு இடைப்பட்ட காலத்திலே அங்கே எவ்வளவோ
திருத்தங்களைச் செய்திருக்க முடியும்; அந்தத் தேக்கம் இல்லாமல்
ெய்திருக்க முடியும். மூன்று மாதத்திற்கு மேல் ஆகிறது. இதற்கிடையில்
ஜயங்கொண்டத்திலே மட்டும்தான் இப்படிப்பட்ட தேக்கம் இருக்கிறதா ?
டு எங்கும் இப்படி இருக்கிறதா என்ற ஒரு நிலையையும் அரசு கவனத்திற்குக்
காண்டு வந்திருக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கை எடுத்திருக்க
வண்டும். திருச்சியிலே கூட பெண் நெசவாளர்கள், பெட்ஷீட், டவல்
ணிகளைத் தயாரிக்க தங்களுக்கு வசதி செய்து தர வேண்டுமென்றும், உதவி

தர வேண்டுமென்றும், ரூ. 500 அளவுக்கு நிவாரணத் தொகை அளிக்க வேண் மென்றும் ஒரு போராட்டம் நடத்தி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தி

(முற்பகல் 10-35)

அந்த மகஜரைத் தந்திருக்கிறார்கள். ஆகவே, அத்தகைய பெட்ஷீட், டவல்க முதலியவைகளைத் தயாரிப்பதற்கு அனுமதி அளித்தால்—அதாவ வழக்கமாகத் தயாரிக்கப்படுகிற வேட்டி துண்டு போல் இல்லாமல் இவைகளை தயாரித்தால், இவற்றிற்கான மார்க்கெட்டை அதிகப்படுத்தி விற்பனைக்கா வாய்ப்பை ஏற்படுத்தக் கூடும். எனவே இதையெல்லாம் அரசு கவனத்தி கொண்டு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறே அதோடு நாடு முழுவதும் என்ன நிலை இருக்கிறது என்பதையும் அறி விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் ஜெயங்கொண்டத்தைப் பற்றியதாகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை கொடுத்த பிறகு, இரண்டாந்தடவையாக 40 லட்சம் ரூபாய் அளவுக்கு அதற்குப் பிறகு ரூ. 9,84,000 அளவுக்கும் கோ-ஆப்டெக்ஸ் கொள்முத செய்திருக்கிறது. அதற்குப் பிறகு அதே கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 61,55,2 அளவுக்கு அண்மையில் விலையில் 20 சதவீதம் கழிவு அளித்து விற்பனை செய்திருக்கின்றன. ஜெயங்கொண்டம் பெட்ஷீட், கைலி போன்றவற்றை தயாரித்தால், அவைகளை எடுத்துக்கொள்ள அரசு தயங்காது என் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. தகவல் கோரல்.

(1) சட்டமன்றக் கட்சிகள் சிலவற்றிற்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட சட் மன்ற விடுதிகளில் உள்ள சட்டமன்றக் கட்சி அலுவலக அறைகள் கா செய்யப்பட்டது குறித்து.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை ஒன்று ஏற்பட்டிருப்பதன் காரணமாகத் தங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். இந்த அவையின் உறுப்பினர்கள் சில கட்சிகளை சார்ந்தவர்களாக இருக்கிறார்கள்.





**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். அவையில் அறிவிப்புகள் முடிந்து கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்வதற்கு முன்பு, இப்படிப்பட்ட பிரச் சினைகள் வந்திருக்க வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. அதுதான் மரபாகவும் இருக்கிறது. ஆனால் தற்போது ஒரு விசேஷ நிலை ஏற்பட்டிருப்பதால், இதை இப்போது மட்டும் அனுமதிக்கிறேன். எனவே இதையே மரபாகக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** இது ஒரு விசேஷ நிலை என்று மட்டுமல்ல ஒரு விநோத நிலையில் நான் வைக்கப்பட்டிருக்கிறேன் என்கிற காரணத்தால், நானேகூட இதை ஒரு மரபாக ஆக்கிக் கொள்ள விரும்பவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

காரணம், இந்த அவையின் உறுப்பினராக நான் இருக்கிறேன். நான் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவன். எதிர்பாராமலும், யாரும் விரும்பாத நிலையிலும் சட்டமன்றப் பேரவை விதிகளின்படி அல்லது அதன் சில விதித் திருத்தங்கள் காரணமாக அவையில் கட்சிகள் அங்கீகரிக்கப்பட முடியாத நிலை ஏற்பட்டு இந்த மேலவை உறுப்பினனான நான் ஒரு கட்சியைச் சார்ந்தவன் என்ற நிலையை மாற்றி ஒரு சுயேச்சை என்ற நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கிறேன். இதை நான் விரும்பவில்லை. அதைப்போலவே இந்த அவையிலும் யாரும் விரும்பமாட்டார்கள் என்றே கருதுகிறேன். அதுமட்டு மல்ல. இதன் விளைவாக எங்களுக்கு ஏற்கெனவே இருந்த கட்சி அலுவலகங் களும் வலுக்கட்டாயமாகக் காலி செய்யப்பட்டிருக்கின்றன. எனவே இதை தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையாகும். பேரவையில் நடந்த விவாதத்தின் கருத்துக்களை இங்கே குறிப்பிடுவது முறையாகாது என்றாலும், இங்கே ஒரு விநோதமான நிலை ஏற்பட்டிருப்பதன் காரணமாக இந்தக் கருத்துக்களையெல்லாம் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். லெஜிஸ்லேச்சர் என்ற கண்ணோட்டத்தில் அல்லது ஒரு கான்செப்ட்டில் நிர்ணயிப்பதால், அதற்கு இந்த அவை உட்படாது என்ற கருத்தோட்டம் நிலவுகிறது என்பதை மட்டும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து இது குறித்து தங்களுடைய கருத்தைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1985 ஜூன்

**திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் பெயரிலும் என்னுடைய பெயரிலும் கொடுக்கப்பட்டிருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்தை, தாங்களே அறிவுறுத்தியபடி ஒரு ஸ்ரீவிலேஜாக இங்கே எழுப்புவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படியொரு ஒத்திவைப்புத் தீர்மானம் ஏதும் அங்கீகரிக்கப்படவில்லை. இந்தப் பிரச்சினைமீது இங்கே ஒத்தி வைப்புத் தீர்மானம் தருவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் தாங்களும் திரு. சாதிக் பாட்சா அவர்களும் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் அதுபற்றி இங்கே விளக்கம் கோர ஒப்புக்கொண்டிருக்கிறேன். அவ்வளவுதான்.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன் :** சென்ற வாரம் சட்டமன்ற திராவிட முன்னேற்றக் கழக அலுவலகம் கட்டாயமாகக் காலி செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் இருவர் கைது செய்யப் பட்டிருப்பது இந்த மாமன்றத்தின் உரிமையைப் பாதிக்கிற நிகழ்ச்சியாகும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பு வதற்கான சந்தர்ப்பம் இல்லை. நான் ஏற்கெனவே அறையில் அவரிடம் தெரிவித்திருக்கிறேன். சட்டமன்றக் கட்சி அலுவலகங்களைக் காலி செய்தது இங்கே ஒத்திவைப்புத் தீர்மானமாக வர முடியாது. வேண்டுமானால் அதுபற்றி விளக்கம் கோர அனுமதிக்கிறேன் என்று மட்டும்தான் தெரிவித்திருக்கிறேன். இந்த நிலையில் மறியல், கைது செய்வதுபற்றியெல்லாம் இங்கே தெரிவிப்பது நல்லதல்ல . . .

(முற்பகல் 10-40)

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் :** மறியல் அல்ல. அதையொட்டி உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்கிறேன். தலைவர் அவர் களுடைய விருப்பத்திற்கு விரோதமாக, மரபுக்கு விரோதமாக நடவடிக்கையில் ஈடுபடமாட்டோம் என்ற உறுதியை அளித்து விட்டுப் பேசுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களைக் கைது செய்வதற்கு முன் சட்டமன்றத் தலைவர் அவர் களுடைய அனுமதியைப் பெற வேண்டும் என்று விதி இருப்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அரசியல் அமைப்புச் சட்டப்படி 'லெஜிஸ்லேச்சர்' என்றால் மேலவை, பேரவை இரண்டையும் குறிக்கும். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல என்பதால், அவர்கள்



1985 ஜூன் 7] [திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்]

வெளியே கைது செய்யப்பட்டால், உங்களுக்குத் தகவல் கொடுத்தால் போதும். ஆனால் இந்த வளாகத்திற்குள் கைது செய்யப்பட வேண்டுமென்றால், முன்னால் அனுமதி பெற வேண்டும் என்று விதி இருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த வகையிலே திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற அலுவலகம் இந்த வளாகத்திற்குட்பட்டதாகக் கருதுகிறோம். அதைக் காலி செய்ய வேண்டும் என்று சட்டமன்றப் பேரவைத் தலைவர் சார்பில் உத்தரவு கொடுக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். அந்த வகையிலே அன்று நடந்த நிகழ்ச்சியில் மேலவை உறுப்பினரான டாக்டர் கலைஞர் அவர்களும், திரு. பிசா கணேசன் அவர்களும் கைது செய்யப்பட்டது என்பது இந்த அவையின் உரிமையை மீறிய ஒரு நிகழ்ச்சியாகும் என்பதை உங்களின் மேலான கவனத்திற்கு வைக்கிறேன். உங்கள் அனுமதி இல்லாமல் கைது செய்திருக்கக்கூடாது. சட்டமன்றப் பேரவைத் தலைவருடைய உத்தரவு எங்களைப் பாதிக்காது, கட்டுப்படுத்தாது, காரணம் அவர் எங்களுக்குத் தலைவர் அல்ல. எங்கள் உரிமையைப் பாதுகாக்கக் கடமைப்பட்டவர் அல்ல அவர். எங்கள் உரிமையைப் பாதுகாக்கக் கடமைப்பட்டவர் நீங்கள்தான். அந்த வகையிலே சட்டமன்ற வளாகத்திற்குள், சட்டமன்ற மேலவை உறுப்பினர்களை உங்கள் முன் அனுமதி இல்லாமல் கைது செய்திருப்பது என்பது இந்த அவையின் உரிமை மீறிய பிரச்சினை என்பதையும், எங்கள் உரிமையைப் பாதிக்கிறது என்பதையும் உங்கள் முன் வைக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இது சட்டமன்றப் பேரவைத் தலைவர் எடுத்த நடவடிக்கை, ஆகவே அதுபற்றி இங்கே பேசக்கூடாது என்று ஒருகால் அரசாங்கத்தின் சார்பில் சொல்லப்படுமானால், அங்கே நடந்த நிகழ்ச்சியின் அடிப்படையில் அதுகூட உண்மையல்ல. சட்டமன்றப் பேரவை அலுவல் ஆய்வுக் குழு கூடி எல்லாக் கட்சிகளும் ஒருமனதாக மீண்டும் அந்தந்தக் கட்சி யிடம் தற்காலிகமாக திருப்பிக் கொடுக்கலாம் என்று முடிவு எடுத்தது. அந்த முடிவு அரசாங்கத்தால் ஏற்கப்படவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். அது அரசாங்கத்தின் முடிவு என்பதால், மூத்த அமைச்சராக உள்ள அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடம், உங்கள் மூலமாக நான் தெரிந்து கொள்ள ஒன்றைக் கேட்கிறேன். இது நியாயமான முடிவுதானா? இது அறம்தானா? நாகரிகம்தானா? பேரறிஞர் அண்ணா காலத்தில், காங்கிரஸ் கட்சி பதவி இழந்த காலத்தில், அவர்கள் அப்போதிருந்த சட்டமன்ற அலுவலகத்திலேயே தொடர்ந்து இருக்க அனுமதியளித்தார்கள். கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த காலத்திலேகூட காங்கிரஸ் கட்சியில்

[திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்] [1985 ஜூன்

15 உறுப்பினர்கள் இருந்தபோது, அவர்களுக்கு அலுவலகம் கொடுக்கப்பட்ட அண்ணா பெயரால் நடக்கும் ஆட்சியில் இப்படிப்பட்ட அநாகரீகமான காரியங்களைச் செய்யலாமா என்று மரியாதையோடு உங்கள் மூலமா அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினருக்கு சொல்லுகிறேன். அந்த அவையில் நடந்ததை அநாகரீகமான செயல் என் சொல்லுவது சரியல்ல. அது இந்த இரு அவைகளுக்கும் உள்ள நல்ல உறவை பாதிக்கும். ஆகவே அப்படிப்பட்ட வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும்.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன் :** அந்த அவையில் நடந்ததை அநாகரீகம் என்று சொல்லவில்லை. காலி செய்ததுதான் அநாகரீகச் செயல் அது அன்பார்லிமென்டரி வார்த்தை இல்லை என்று கருதுகிறேன். அது சரியில்லை என்றால் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது அரசாங்கம் எடுத்த நடவடிக்கை அல்ல, பேரவைத் தலைவர் எடுத்த நடவடிக்கை.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன் :** எப்படி அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்று நான் சொன்னேன் ? அதை நீங்கள் கேட்கவில்லை. சட்ட மன்றப் பேரவை அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லாக் கட்சிகளும் ஒன்றாகக் கூடி ஒருமனதாகத் தீர்மானம் செய்து மீண்டும் அந்த அலுவலகத்தை தற்காலிகமாக அந்தந்தக் கட்சிகளுக்கே கொடுக்கலாம் என்று முடிவு எடுத்தது அரசாங்கத் தால் ஏற்கப்படவில்லை என்று சட்டமன்றப் பேரவைத் தலைவர் அறிவித்தது தங்களுக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. பழனிவேல்ராஜன் அவர்கள், ஒரு விளக்கம் தெரிவித்துக்கொள்கிறேன் என்ற அடிப்படையில், பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு சட்டமன்றப் பேரவைச் செயலகம் சட்டமன்றக் கட்சிகளுக்கு. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு. தேர்தலுக்குப் பிறகு எழுந்துள்ள புதிய சூழ்நிலையில் அக்கட்சிகள் பெற்ற இடங்களின் அடிப்படையில், குறைந்த எண்ணிக்கையுள்ள கட்சிகள் அல்லது குழுக்கள் அல்லது அணிகள் என்று அழைக்கப்படுகிற அடிப்படையில், தனித் தனியாக நிரந்தரமான அலுவலகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்கி



1985 ஜூன் 7] [திரு. இராம. வீரப்பன்]

கருத்துக்களை சட்டமன்றப் பேரவைத் தலைவர் தன்னுடைய அலுவலகத்தின் மூலம் அறிவித்ததையொட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கையைக் குறித்து இந்த அவையில் சில விளக்கங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவை சட்டமன்றப்

(முற்பகல் 10-45)

பேரவைத் தலைவர் அவர்களுடைய ஆளுகைக்கு, அதிகாரத்திற்குட்பட்டு நடைபெறுகின்ற நடவடிக்கைகள். இதிலே அரசுக்கும் அல்லது அரசினுடைய நிர்வாகத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதை முதலிலேயே நான் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

அவர்கள் இன்னொரு தகவலை, தவறான தகவலை இந்த அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். சட்டமன்றப் பேரவையினுடைய அலுவல் ஆய்வுக் குழு கூட, எல்லாக் கட்சிகளும் ஒருமனதாக எடுத்த ஒரு முடிவை, "அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை, அரசாங்கம் நிராகரித்துவிட்டது" என்ற ஒரு தவறான தகவலை உறுப்பினர் அவர்கள் இங்கே தந்துகொண்டிருக் கின்றார்கள். இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் தலையிடுவதற்கு அதிகாரமும் இல்லை, அவசியமும் கிடையாது. அரசு தலையிடவும் இல்லை. அங்கே நடைபெற்ற நிகழ்ச்சி என்ன என்பதை, எனக்குத் தெரிந்தவரை, நான் அரசின் தரப்பில் இல்லை, அவையினுடைய உறுப்பினர் அல்லது முன்னவர் என்கின்ற வகையில், தலைவர் அவர்கள் மூலம், இந்த அவைக்குத் தெரிவித்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கின்ற தவறான தகவலை அவர் திருத்திக்கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும் அல்லது ஒருவேளை தெரிந்தே அவர்கள் சொல்வார்களானால், அதை மாற்றிக்கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினாலே சொல்கிறேன். இந்தப் பிரச்சினை சட்ட மன்றப் பேரவையிலே கட்சிகளாலே எழுப்பப்பெற்று, அதற்குப் பிறகு அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசி ஒரு முடிவு எடுக்கலாம் என்று, அன்றைக்கு 11.30 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழு நடந்தபோது, அந்தக் கட்சிகளுடைய தலைவர்கள் எல்லாம் இடைக்காலமாக, ஒரு ஏற்பாட்டை நாம் செய்து கொள்ளலாம் என்கின்ற ஒரு முடிவு எடுத்ததற்குப் பிறகு, எல்லோருமே ஒத்துக்கொண்டு, முதல்வர் அவர்களைச் சந்தித்து, அவர்களுடைய கருத்தையும் பெற்றுக் கொள்ளலாம் என்று கருதினார்கள். அவர்கள் முதல்வர் என்கிற தகுதி மாத்திரம் பெற்றவர் அல்ல, அவர்கள் அந்த அலுவல் ஆய்வுக் குழுவிலே பேரவைத் தலைவருக்கு அடுத்தபடியாக இடம் பெற்றிருக்கின்ற உறுப்பினர். ஆகவே அந்த வகையிலே முதல்வர் அவர்களையும் கேட்டு இந்த முடிவை நாம் மேற்கொள்ளலாம் என்று முடிவெடுத்து, பேரவைத் தலைவர்

அவர்களும் மற்றவர்களும் முதல்வர் அவர்களிடத்திலே போய் அவர்களுடை கருத்தைக் கேட்டிருக்கின்றார்கள். அவர்கள் தம்முடைய கருத்தை தெரிவித்திருக்கின்றார்கள். அது அரசாங்கத்தினுடைய கருத்தும் அல்ல. அ முதலமைச்சர் என்கின்ற அதிகாரத்தின் அடிப்படையில் தெரிவித்த கருத் மல்ல. அலுவல் ஆய்வுக் குழுவிலே இடம் பெற்றிருக்கின்ற ஒரு முத உறுப்பினர் என்கிற வகையில், அவர்களுடைய கருத்தையும் சேர்த்து பரிசீலித்து இறுதியாக ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. பேரவை தலைவர் அவர்களுடைய அனுமதியோடு அந்தப் பேரவைக் காரியாலயம சட்டமன்றக் காரியாலயம் எடுத்த முடிவை மாற்றுவதில்லை என்கிற முடி எடுத்து அறிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர, இதிலே அரசாங்கம் தலையிடவு இல்லை அல்லது முதலமைச்சர் தலையிடவும் இல்லை. ஆகவே அரசாங்க திற்கு இதிலே எந்தவிதமான தொடர்புமில்லை. எந்தக் கட்சிக்கு எப்ப இடம் ஒதுக்குவது என்பது பேரவைத் தலைவர் அவர்களோ அல்ல பேரவைத் தலைவருடைய காரியாலயமோ, சட்டமன்றக் காரியாலயமே செய்யவேண்டிய முடிவு. அவர்களுடைய வசதிக்கு ஏற்ற முடிவு. ஆக அதற்குள்ளே அரசாங்கம் நுழையவில்லை.

இன்னொரு கருத்தை அவர்கள் தெரிவித்தார்கள். இந்த அவையினுடை உறுப்பினர்களைக் கைது செய்தபோது மாண்புமிகு மேலவைத் தலைவ அவர்களுடைய அனுமதியைப் பெற்று கைது செய்திருக்க வேண்டுமென் சொன்னார்கள். "சட்டமன்ற வளாகம்" என்று ஒரு இடம் குறிப்பிட பட்டிருக்கிறது. அந்த வளாகம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிற அதிகா எல்லை சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்திலேதான், சட் மன்ற மேலவை இன்றைக்குக் கூடி இருக்கிறது. இன்றைக்கு அந்த வளாக திற்குள்ளே யாராவது உறுப்பினர் கைது செய்யப்பட வேண்டுமானால் மேலவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று கைது செய்யப்ப வேண்டும். ஆகவே நான்கு நாட்கள், ஐந்து நாட்கள் முன்னாலே, சட்டமன் வளாகம் என்று அறிவிக்கப்படாத ஒரு இடத்திலே, கட்சிக் காரியாலயத்திற் குள்ளே நடக்கிற சூழ்நிலையை, சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்திலே நடைபெறுவதாகவும் கொள்ளவும் முடியாது, சட்டமன்ற வளாகத்திற்குள்ளே நடைபெற்றதாகக் கொள்ளவும் முடியாது என்ற விளக்கத்தை மாத்திரம் தெரிவித்து, இதற்கு மேலே அரசாங்கம் என்ற அளவில் இதற்குள்ளே எங்களுடைய கருத்தை, எங்களுடைய உணர்வுகளைத் தெரிவிக்க விரும்பவில்லை என்பதையும் தெரிவித்து அமைகிறேன்.



(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த விவாதத்தின் து மாண்புமிகு அன்புக்குரிய உறுப்பினர் திரு. பழனிவேல் ராஜன் அவர்கள், ஒரு கருத்தை வெளியிட்டதாக எங்களுக்குத் தகவல் அளித்தார்கள் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும், அவைக்கும் பொதுவாகச் சொல்கிறேன். இதை ஆரம்பத்திலேயே நான் சொல்லியிருக்க வேண்டும். அவர்கள் உணர்வுக்கு மதிப்பு கொடுத்து பிறகு சொல்லலாம் என்று நினைத்தேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்த அவையில் நடந்த விவாதம்பற்றி இங்கே ஒரு விவாதத்தை எழுப்புவது முறை யாகாது, முறையுமல்ல. இரண்டாவதாக, அங்கே கைது செய்யப்பட்டது பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். மேலவையின் வளாகம் என்பதற்கான வரம்பில், படிக்கட்டு உட்பட என்று விதியிலே ஒழுங்காகப் போட்டு, வளாகம் வரையறுக்கப்படுகிறது. அந்த வளாகத்தில்கூட அவை நடந்து கொண்டிருக்கும்போதுதான் அவைத் தலைவரின் அனுமதி தேவைப் படுகிறது. அப்படி இங்கே உறுப்பினர் திரு. இளம்பரிதி கைது செய்யப்பட்ட போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும், உறுதியாக நடவடிக்கை எடுத்து, உரிமைக் குழுவுக்கு நான் அனுப்பினேன். அந்த மாதிரி நிலைமை இருந்தால், தலைவரின் பாதுகாப்பு பூரணமாக இருக்கும். அதில் யாருக்கும் ஐயப்பாடு வேண்டாம். அறை ஒதுக்குவதுபற்றி பேரவைத் தலைவர் எடுத்த நடவடிக்கை பற்றி இங்கே விவாதிப்பதற்கு நான் அனுமதிப் பதற்கில்லை. இரண்டாவது பிரச்சினை, கைது செய்யப்பட்டது பற்றியது. அந்தப் பிரச்சினையும் என் வளாகத்திற்குள் அடங்கவில்லை. மேலும், அவை நடந்த நேரமும் அல்ல. ஆகவே அந்தப் பிரச்சினையையும் இங்கே எழுப்பக் கூடாது. மூன்றாவதாக இருப்பது, ஆசிரியர் கூட்டணி, அங்கே இடம் பெறாத கூட்டணி இங்கே இருக்கிறது. அந்த அணிக்கும் இடம் மறுக்கப்படுகிறது. அந்தப் பிரச்சினையைப் பற்றி வேண்டு அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மானால் தான் யோசித்து, பிறகு அதில் என்ன செய்வது என்பதைப்பற்றிச் சொல்கிறேன். எனவே இந்தப் பிரச்சினையிலே, அந்த அவையிலே நடந்தது பற்றி இங்கே எந்த விவாதத்தையும் அனுமதிப்பதற்கில்லை.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவரவர்களே, மேலவையிலே நாங்கள் நான்கு உறுப்பினர்கள் ஆசிரியர்கள்—பட்டதாரிகள் முற்போக்கு முன்னணி என்று சில ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறோம். மேலவைத் துறையும்,

[திரு. பா. ரா. தாமஸ்] [1985 ஜூலை 5 ஜூன் 7]

மாண்புமிகு முன்னவர் அவர்களும், மாண்புமிகு மேலவைத் தலைவ அவர்களும் ஏற்கெனவே இந்த அணிக்கு ஏற்பு வழங்கியிருக்கிறார்கள். அந் முறையிலே நாங்கள் ஒரு அலுவலகம் பெற்று, ஆசிரியர்கள் நலன்களுக்காக செயல்பட்டு வருகிறோம். ஆனால் அண்மையிலே பேரவைத் துறையினுடைய விதிக் குழுவானது ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதன் மூலமா அலுவலகங்கள் காலி செய்யப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கும்போது ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மேலவைக்குத் தனி யாக ஒரு விதிக் குழு இருக்கிறது. அந்த விதிக் குழு, நம்முடைய அவை முன்னவர், நம்முடைய தலைவர் ஆட்சியிலே இருக்கிறது. எனவே 'அந்த விதிக்குழுவின் விதிகள் எங்களைக் கட்டுப்படுத்துமா என்பது குறித்து ஐயப்பாடு . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 'அந்த' விதிக் குழு உங்களைக் கட்டுப்படுத்துமா என்று கேட்கிறீர்களா அல்லது 'இந்த' விதிக் குழு கட்டுப் படுத்துமா என்று சந்தேகம் வந்துவிட்டதா ?

திரு. பா. ரா. தாமஸ் : நம்முடைய விதிக் குழு விதி வகுத்தால்தான் அது எங்களைக் கட்டுப்படுத்த முடியும் என்ற கருத்து குறித்து நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மீண்டும் சொல்கிறேன். பேரவையில் நடந்தது பற்றியோ, பேரவை விதிக் குழு பற்றியோ, பேரவையின் அலுவல் ஆய்வுக் குழு பற்றியோ இங்கே சம்பந்தம் கிடையாது. ஒரேயொரு பிரச்சினை தான் இருக்கிறது. அங்கே இடம் பெறாத கட்சி இங்கே இருக்கிறது. அதற்கு அறை ஒதுக்குவதில் தகராறு இருப்பதால், அதில் அபிப்பிராயம் சொல்ல வேண்டுமென்ற விஷயத்தில் நானே கட்டுப்படுகிறேன். அதைப்பற்றி பின்னாலே சொல்கிறேன். ஆசிரியர்கள்—பட்டதாரி முற்போக்கு முன்னணிக்கு நோட்டீஸ் வந்திருக்கிறதா ?

திரு. பா. ரா. தாமஸ் : தலைவரவர்களே, பத்திரிக்கைச் செய்தியிலே, எங்களுடைய அணியும் அலுவலகத்தைக் காலி செய்ய வேண்டுமென்ற கருத்து தொனிக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பத்திரிக்கைச் செய்தியை வைத்துக் கொண்டு இங்கே விவாதிக்கக்கூடாது என்று நம்முடைய விதி முறையிலேயே இருக்கிறது. நீங்கள் ஒன்றும் பயப்படாதீர்கள். உங்கள் விஷயத்தை நான் கவனிக்கிறேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, சட்ட றப் பேரவையினுடைய அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினன் என்ற கையில் ஒரு தகவலை இந்தக் கண்ணியம் மிக்க சபைக்குத் தெரிவிக்க ரும்புகிறேன் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர் நக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். அந்த அவை பற்றிய பிரச்சினை ங்கே வரவே கூடாது. வேண்டாம். இதுபற்றி முதலிலேயே நான் தீர்ப்பு காடுத்தாகிவிட்டது. அதைப்பற்றி எந்த முறையிலும் எழுப்ப உரிமை ல்லை. அதை அப்படியே விட்டு விடுவது நல்லதென்று மாண்புமிகு மைச்சரவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன் . . அடுத்த நிகழ்ச்சி . . .

திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் : தலைவரவர்களே, சட்டமன்றமும், லவையும் நடக்கும்போதுதான் இந்த உரிமை உண்டு என்று தாங்களும் சான்னீர்கள், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் சொன்னார்கள். திகளில் பார்த்தால் அப்படியில்லை. "தலைவரின் முன் அனுமதியின்றி வரையும் அவையின் அமைப்பு எல்லைக்குள் கைது செய்யக்கூடாது" ன்றுதான் இருக்கிறது . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 'அமைப்பு எல்லைக்குள்'. உறுப்பினர் அவர்கள் சொல்லும் குறிப்பு அந்த அமைப்பு எல்லைக்குள் இல்லை.

(முற்பகல் 10-55)

திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் : தலைவர் அவர்களே, தாங்கள் தயவுசெய்து எனக்கு ஒரு விளக்கம் கொடுக்க வேண்டும். நாளை மேலவை நடக்கின்ற நேரத்தில், நான் இந்த அவையின் உறுப்பினர் என்ற முறையில் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் தங்கியிருக்கின்ற நேரத்திலே என்னைக் கைது செய்ய வேண்டுமென்று போலீசார் நினைத்தால் உங்கள் அனுமதியைப் பெற வேண்டுமா வேண்டாமா என்பதை தயவுசெய்து தலைவர் அவர்கள் விளக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது எந்த விஷயத்தைப் பற்றி நடந் திருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் அந்த வினா எழும். அப்பொழுது நான் யோசித்து அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுப்பேன். கைது செய்ய அனுமதிக்கக் கூட விதி இருக்கிறது.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் :** அனுமதிக்கலாம். தலைவ அவர்கள் அனுமதிக்கக்கூடாதென்று நான் சொல்லவில்லை. ஆனா தலைவர் அவர்களுடைய முன் அனுமதியைப் பெறுகின்ற சூழ்நிலை உண்ட இல்லையா என்பதை மட்டும்தான் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சபை நடவடிக்கைக்கு உறுப்பின வந்து கொண்டிருக்கும்போதோ, வந்துவிட்டுப் போகிறபோதோ அப்ப நிகழ்ந்தால் நான் அதில் தலையிடலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** சட்டமன்ற உறுப்பினர் விடுதி மேலவை வளாகத்திற்குள்ளாக வருகிறது. ஆனால் அங்கே வைத்திருக்கிற சட்டமன் காரியாலயம் வளாகத்திற்குள் வரவில்லை. ஆகவே சட்டமன்ற உறுப்பின விடுதியில் கைது செய்ய வேண்டுமென்று சொன்னால், தலைவர் அவர்களுடை அனுமதியைப் பெற வேண்டும். ஆனால் அங்கு இருக்கக்கூடிய சட்டமன்ற செயலகம் சட்டமன்ற வளாகத்திற்குள் வரவில்லை.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் :** ஆளும் கட்சித் தரப்பிலேயிருந்த சொல்லுகின்ற விளக்கம்போல் இருக்கிறது. துணைத் தலைவராக இருந்த கூறும் விளக்கம்போல் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதி வளாகத்திற்குள் வருகிறது என்று சொன்னால், மேலவை உறுப்பினராக இருக்கும் ஒருவர் அங்குள்ள அலுவலகத்தில் இருந்தால், அதுவும் வளாகத் திற்குள்தான் வருகிறது.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, ஒரு கட்சியின் உறுப்பினர் என்ற முறையில் இல்லாமல், இந்த அவையின் உறுப்பினர் என்ற முறையில் ஓர் அடிப்படைப் பிரச்சினை பற்றித் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். தமிழ்நாட்டிலே உள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இந்த அவையிலேயும் இன்னொரு அவையிலேயும் இடம் பெற்றிருக்கிறோம். அரசியல் கட்சிகள் என்ற பெயராலே அவைகளுக்கு என்று சில தகுதிகள் உண்டா என்று சொன்னால், நாடாளுமன்ற மரபுப்படி அப்படி ஒரு சட்ட விதி இல்லையென்று நான் அறிகிறேன். இங்கேயும் இல்லை. நம்முடைய அவையைப் பொறுத்தவரையில், அப்படி ஒரு விதி உருவாக்கப்படவும் இல்லை. அப்படி இருக்கும்போது பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்வது குறித்து இன்னொரு அவையின் முடிவுக்கு நாம் கட்டுப் பட வேண்டியது அவசியம்தானா என்பது குறித்து நான் அறிய விரும்பு கிறேன். ஏனென்று சொன்னால், இந்த மேலவை என்பது சட்டமன்றத்தினால்



ருவாக்கப்பட்டது என்று சொன்னாலும் கூட, இதற்கென்று சில உரிமைகள் னியாக இருக்கின்றன. சட்டமன்றப் பேரவைச் செயலகம், சட்டமன்ற மேலவைச் செயலகம் என்று இரண்டு தனித் தனிச் செயலகங்கள் இருக்க ாமே தவிர, அரசியல் கட்சிகளுக்கு இடம் ஒதுக்கீடு செய்வதில் இன்னொரு வையின் முடிவுக்கு இங்குள்ள கட்சிப் பிரதிநிதிகள் கட்டுப்பட வேண்டிய வசியமில்லை. இங்கே உள்ள கட்சிப் பிரதிநிதிகளைப்பற்றி, இவர்களுடைய அலுவல்களைப்பற்றி நாம் என்ன முடிவு செய்ய இருக்கிறோம் என்பதைப் பற்றி மாண்புமிகு தலைவர் அவர்களிடத்திலிருந்து, இந்த அவையினிடத் திலிருந்து நான் விளக்கம் பெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஏன் அது பொருந்தவில்லையென்று சொன்னால், அவைகள் இரண்டும் பொதுவாக இருக்கின்றன. தனித் தனியாக இருக்கின்றன, இரண்டும் கூட்டாக இருக்கின்றன. ஆனால் அங்கத்தினர் விடுதியிருக்கிறதே அந்தப் பகுதி நம் விதிகளுக்குள் வரவில்லை மேலவைத் தலைவருக்கு அதனுடன் தொடர்பு கிடையாது என்பதால் தான் அதை இங்கே எழுப்பக் கூடாது என்று சொன்னேன். உறுப்பினர்கள் விரும்பினால், அந்த உரிமையை தலைவருக்கு வாங்கிக் கொடுத்து விட்டால், அன்றைக்கு நான் அதை எடுத்துக் கொள்கிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்கள் விரும்புகிறார்கள் அல்லது விரும்பவில்லை என்கிற பிரச்சினைக்கே இடமில்லை. அவை யினுடைய அதிகாரம் என்பது என்ன என்பதைப் பற்றி அரசியல் சாசனத்தின் படியே சொல்கிறேன்.

"This House is a creation of the Legislative Assembly and may be so. But once it is created, we have got certain rights ourselves. They cannot control every regulation or every act of our House. We are entitled to decide ourselves, whether we are in the Assembly or outside. We have got to decide the matter and we are not bound by the Speaker or anybody else. That is what I want to say."

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்போதைய நிலையிலே நான் அதில் தலையிட விரும்பவில்லை. ஆசிரியர் கூட்டணி அங்கு இடம் பெறாத, இங்கு இடம் பெற்றிருக்கிற கட்சியாக இருக்கிறது. அவர்களுக்கு இன்னும் நோட்டீஸ் வரவில்லை. அப்படிப்பட்ட நிலை வருகிறபோது, நான் கவனித்து ஆவன செய்கிறேன், இத்தோடு இந்த விஷயத்தை முடிக்க விரும்புகிறேன்.

சட்டமன்றக கட்சிகள் சிலவற்றிற்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட சட்ட மன்ற விடுதிகளில் உள்ள-சட்டமன்றக் கட்சி அலுவலக அறைகள் காலி செய்யப்பட்டது குறித்து



திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் : எங்கள் உரிமைகளைப் பாது பதற்கு தலைவர் அவர்கள் போதுமான பாதுகாப்பு கொடுக்கவில்லை. எ காரணத்திற்காகவே நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பி. டி. ஆர். பழனிவே ராஜன், மிசா கணேசன் என்கிற ஆர். கணேசன், க. மீனாட்சிசுந்த ஆகியோர் வெளிநடப்பு செய்தார்கள்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வெளிநடப்பு தலைவரை எதிர்த் அல்லது அந்த நிலைக்கு உங்கள் மன உணர்வை ஒட்டியா என்பதை ந தெரிந்து கொள்ளலாமா ?

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசாங்கத்தின் நிலையைக் குறி நாங்கள் திருப்திப்படவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதில் அரசாங்கம் சம்பந்தப் வில்லை. தலைவர் அவர்களும் உங்கள் உரிமைக்கு எதிராக ஒரு சிறு அ அளவு கூட சொல்லவில்லை. நீங்கள் வெளியேறுவதை நான் தடுக்கவில்லை ஆனாலும் நடவடிக்கையில் ஒரு தெளிவு வேண்டும் இல்லையா ? ந கொடுத்த தீர்ப்பை எதிர்த்து வெளியேறுவது என்கிற உணர்வே வேறு. ந நான் ஒரு தீர்ப்பும் கொடுக்கவில்லையே. விதியைச் சொன்னேன். ஆசிரி கூட்டணிக்கு தனித் தன்மை இருக்கிறது என்பதை நான் அங்கீகரிக்கிறே இன்னும் அவர்களுக்கு நோட்டீஸ் வரவில்லை; காலி பண்ணும்படி நோட்டீ வந்தால், கவனிக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அப்புறமும் வெ யேறுவதற்கு என்ன இருக்கிறது ?

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விளக்கங்கள் எங்களுக்குத் திருப் அளிக்கவில்லை என்ற காரணத்திற்காக வெளிநடப்பு செய்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா வெளிநட செய்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நான் ஒன்றைச் சொல்கிறேன். தலை இங்கே முதல்வராக இருந்தபோது, அடிக்கடி ஒன்றைச் சொல்வார். இ அவைக்குரிய விதிப்படி, இந்த அவைக்குரிய சூழ்நிலைப்படி நாம் விசே மாக நடந்துகொள்ள வேண்டுமென்று குறிப்பாக வெளிநடப்பின்போ சொல்லியிருக்கிறார் என்பதை நான் இங்கே நினைப்பூட்டுவதோடு இ விஷயத்தை முடிக்கிறேன்.



(முற்பகல் 11.00)

## 5. தகவல் கோரல்.

(2) ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினைபற்றி பிரதமருக்கும் முதலமைச்சருக்கு மிடையே நடந்த தொலைபேசி தொடர்பு குறித்து.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். இந்தியப் பிரதமர் அவர்கள் நாம் அனைவரும் அக்கறை கொண்டிருக்கிற ஸ்ரீலங்கா பிரச்சினை குறித்து நம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சில விவரங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த விவரங்கள் என்ன என்பதை இந்த அவைக்கு மாண்புமிகு தலைவர் அவர்கள் தெரிவிப்பார்களானால் மிகவும் உதவியாக இருக்கும் என்பதோடு, கடந்த மூன்று தினங்களாக பத்தாயிரம் தமிழ் மக்கள் அகதிகளாக . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது நிர்வாகம் சம்பந்தமான விஷயம். பிரதமர் அவர்கள் முதல்வரோடு பேசியதைத் தெரிந்துகொள்ள மாண்புமிகு உறுப்பினருக்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன, தலைவரை ஏன் இதில் இழுக்கிறீர்கள்?

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் ஓர் அறிக்கை தாங்கள் விடுவீர்களானால் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அந்த உரிமை எனக்கு இருந்தால், உறுப்பினரை விட உணர்ச்சியுடன் நான் செய்திருப்பேன்.

## 6. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1985).

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அடுத்த இரண்டு சட்ட முன்வடிவுகளும் ஒரே பொருள் பற்றியதாக இருப்பதால், விவாதத்திற்கு மூன்றையும் ஒன்றாக எடுத்துக்கொண்டு பின்பு தனித் தனியாக நிறைவேற்றலாம்.

[1985 ஜூ

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆ
தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இ
டாம் திருத்த சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு
29/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".
என்று முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் தனி அலுவலர்
பதவிக் காலம் முறையே 11—6—85 மற்றும் 30—6—85 ஆகிய தேதிக
முடிவடைய உள்ளன. அரசு 1985 செப்டம்பரிலே ஊராட்சி மன்றங்களுக்
மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கும் தேர்தல்கள் நடத்துவது எ
முடிவு செய்துள்ளது. எனவே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 1
செப்டம்பர் 15-ல் பதவி ஏற்பார்கள். ஆகவே மேற்கூறிய தனி அலுவலர்
பதவிக்கான கால அளவை வரும் செப்டம்பர் 15 ஆம் தேதிவரை நீட்டி
இந்தச் சட்ட முன்வடிவைப் பிரேரேபித்திருக்கிறேன். ஆய்வுக்கு எடுத்
கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம் :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆ
தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இர
டாம் திருத்த சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வ
எண் 29/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம்.

(உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவையில் இல்லை).

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. இராமலிங்கம்.

திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கே
ஊராட்சிகள், நகராட்சிகள், பஞ்சாயத்து யூனியன்களுடைய தேர்தல்க
அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்
வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 53 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



ூன் 7] [திரு. சா. இராமலிங்கம்]

சென்னையிலே சென்னை மாநகரத்தினுடைய நீண்ட நாள் தலைவராகவும்,
பராகவும் இருந்த சர். பி. டி. தியாகராய செட்டியார் அவர்களது 134 ஆம்
ண்டு பிறந்தநாள் விழாவை அரசு விழா எடுத்து சிறப்பான முறையிலே
த்தியதற்காக தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் தலைவருக்கு அஞ்சலி
ச் செலுத்தும் வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு
நிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வி. அவர்களும் விழாவினை
த்து சிறப்பாகச் செய்தார்கள். அதற்காக அவர்கள் மரபிலே வந்தவன்
கிற முறையிலேயும், நெசவாளி என்ற முறையிலேயும் நன்றியைத் தெரி
துக்கொள்கிறேன்.

நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட அந்த
ாவிலே சிறப்பாகப் பேசினார்கள். சென்னை நகரிலே இருக்கக்கூடிய
நகர் என்கிற அந்தப் பகுதி சர். பி. டி. தியாகராயர் பெயரிலே நிறுவப்
டது. இந்தியாவிலேயே முதன் முதலாக எந்த மாநிலத்திலும் இல்லாத
ாவில், நகர் என்ற பெயரை அப்போதுதான் ஏற்படுத்தினார்கள். மேற்படி
நகர் என்ற பெயரை மீண்டும் தியாகராய நகர் என்று மாற்றுவதற்கு வழி
கை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-05)

பிப்பாக மாம்பலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கே இருப்பதுதான்
ம்பலம். கிழக்கே இருப்பது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சர். பி. டி. தியாக
யர் நகர் ஆகும். அங்கேயுள்ள காவல் நிலையம் கூட மாம்பலம் போலீஸ்
டேஷன் என்று இருக்கிறது. அதையும் மாற்ற வேண்டுமென்று கேட்டுக்
காண்டு, இந்த உள்ளாட்சிக்குத் தந்தையாகவும், உள்ளாட்சிச் சட்டங்களைக்
காண்டு வருவதற்கு சிறப்பாகப் பணியாற்றிய, சென்னை மாநகரை நிர்மா
ித்த சர். பி. டி. தியாகராயருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நான் அர
க்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு
ன்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் தலைமை)

திரு. எம். பி. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, நமது முன்னாலே
வைக்கப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவுகளைப்பற்றி இரண்டுவிதமான கருத்
துக்களுக்கு இடமே இல்லை என்பது உண்மை. தனி அதிகாரிகளினுடைய

[1985 ஜூன்

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண் தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இர டாம் திருத்த சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எ 29/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் தனி அலுவலர் பதவிக் காலம் முறையே 11—6—85 மற்றும் 30—6—85 ஆகிய தேதிகள் முடிவடைய உள்ளன. அரசு 1985 செப்டம்பரிலே ஊராட்சி மன்றங்களுக் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்கும் தேர்தல்கள் நடத்துவது என் முடிவு செய்துள்ளது. எனவே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 1 செப்டம்பர் 15-ல் பதவி ஏற்பார்கள். ஆகவே மேற்கூறிய தனி அலுவலர் பதவிக்கான கால அளவை வரும் செப்டம்பர் 15 ஆம் தேதிவரை நீட்டி இந்தச் சட்ட முன்வடிவைப் பிரேரேபித்திருக்கிறேன். ஆய்வுக்கு எடுத் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம் :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண் தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இர டாம் திருத்த சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடி என் 29/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம்.

(உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவையில் இல்லை).

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. இராமலிங்கம்.

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள ஊராட்சிகள், நகராட்சிகள், பஞ்சாயத்து யூனியன்களுடைய தேர்தல்கள அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றி கலத் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 53 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



5 ஜூன் 7] [திரு. சா. இராமலிங்கம்]

சென்னையிலே சென்னை மாநகரத்தினுடைய நீண்ட நாள் தலைவராகவும், யராகவும் இருந்த சர். பி. டி. தியாகராய செட்டியார் அவர்களது 134 ஆம் ண்டு பிறந்தநாள் விழாவை அரசு விழா எடுத்து சிறப்பான முறையிலே த்தியதற்காக தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் தலைவருக்கு அஞ்சலி ச் செலுத்தும் வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு நிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வி. அவர்களும் விழாவினை த்து சிறப்பாகச் செய்தார்கள். அதற்காக அவர்கள் மரபிலே வந்தவன் ன்கிற முறையிலேயும், நெசவாளி என்ற முறையிலேயும் நன்றியைத் தெரி க்துக்கொள்கிறேன்.

நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட அந்த ழாவிலே சிறப்பாகப் பேசினார்கள். சென்னை நகரிலே இருக்கக்கூடிய நகர் என்கிற அந்தப் பகுதி சர். பி. டி. தியாகராயர் பெயரிலே நிறுவப் ட்டது. இந்தியாவிலேயே முதன் முதலாக எந்த மாநிலத்திலும் இல்லாத ளவில், நகர் என்ற பெயரை அப்போதுதான் ஏற்படுத்தினார்கள். மேற்படி நகர் என்ற பெயரை மீண்டும் தியாகராய நகர் என்று மாற்றுவதற்கு வழி கை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-05)

றிப்பாக மாம்பலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கே இருப்பதுதான் ாம்பலம். கிழக்கே இருப்பது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சர். பி. டி. தியாக யர் நகர் ஆகும். அங்கேயுள்ள காவல் நிலையம் கூட மாம்பலம் போலீஸ் டேஷன் என்று இருக்கிறது. அதையும் மாற்ற வேண்டுமென்று கேட்டுக் காண்டு, இந்த உள்ளாட்சிக்குத் தந்தையாகவும், உள்ளாட்சிச் சட்டங்களைக் காண்டு வருவதற்கு சிறப்பாகப் பணியாற்றிய, சென்னை மாநகரை நிர்மா ரித்த சர். பி. டி. தியாகராயருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நான் அர க்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு ன்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் தலைமை)

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, நமது முன்னாலே வைக்கப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவுகளைப்பற்றி இரண்டுவிதமான கருத் துக்களுக்கு இடமே இல்லை என்பது உண்மை. தனி அதிகாரிகளினுடைய

[திரு. எம். பி. சுப்பிரமணியம்] [1985 ஜூன்

காலத்தை நீட்டிக்க வேண்டும் என்பதற்காக இவை கொண்டுவரப்பட்டி
இன்றன. அதன் காரணமாக அதை ஆதரிக்கிறேன். ஆனால் நான் அண்மை
பல இடங்களுக்குச் சென்றபோது தேர்தல் நடைபெறாது என்ற ஒரு அபி
ராயம் பரவலாக இருப்பதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. கட்டாயம் ந
பெறும். அதற்குரிய வாக்குறுதி அமைச்சர் அவர்கள் சார்பிலேயும்
அரசாங்கத்தின் சார்பிலேயும் சரி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை
வோம். இருந்தாலும்கூட ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் சரி, ம
கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சரி தேர்தல் நடைபெறாது, நடைபெற
என்று ஒரு தவறான எண்ணத்தில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அ
கேட்க வேண்டிய அவசியமில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறே
இரண்டாவதாக நான் குறிப்பிட விரும்புவது, பொறுப்புள்ள சில அதிகாரி
பல மாவட்டங்களுக்குச் சென்று, சில குறிப்பிட்டவர்களை அணுகி, "நீங்
நீதிமன்றத்திற்குச் செல்லுங்கள்" என்று அவர்களுக்காக Canvass செ
திருப்பதையும் கேள்விப்பட்டேன். ஆனால் எனக்குத் தெரிந்தவரை, நீதிம
றங்களுக்குச் சென்றால், தடை உத்தரவு கிடைக்குமென்ற நம்பிக்கை இல்ல
அவர்கள் சொல்கிற காரணம், ஏற்கெனவே ஆதி திராவிட மக்களுக்காக
பெண்களுக்காகவும் ஒதுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட சில சலுகை
பறிக்கப்பட்டன என்பது. அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு உ
நீதிமன்றத்திற்குப் போகலாம் என்ற ஒரு கருத்தை சில அரசியல் கட்சி
சார்பிலேயும், தனிப்பட்டவர்களின் சார்பிலேயும் விரிவாகச் சொல்கிறார்க
ஆனால் அந்த மக்களுக்கு அநீதி இழைக்கப்படவில்லை. இப்பொழுதுள்
நிலையிலே அவர்களுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விளக்
தையும் கொடுத்து, உறுதியாகத் தேர்தல் நடைபெறும் என்று, மீண்டும் தெ
வாக ஒரு வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும், ஒரு
ரிடமும் சுறுசுறுப்பே இல்லை, இப்பொழுது ஜூன் மாதம் ஆகிவிட்ட
ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர்—இரண்டு மாதங்களில்தான் தேர்தல் நடைபெ
இருக்கின்றது. ஆனால் எந்தக் கட்சியில் உள்ளவர்களும், கட்சி சார்பில்ல
வர்களும், பொது ஊழியர்களும் சில ஜனநாயகக் கடமைகளைச் செய்வத
குரிய அடிப்படை வேலைகளில்கூட ஈடுபடவில்லை என்பதை அறிகிறே
ஆகவே, தெள்ளத்தெளிவாக, சந்தேகத்திற்கு இடமில்லாது, உறுதியாக
தேர்தல் நடைபெறும் என்ற வாக்குறுதி கொடுத்தால் போதுமானது என்
கூறி சட்ட முன்வடிவை ஆதரித்து அமைகிறேன்.



5 ஜூன் 7]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த
த் திருத்தம் வந்ததற்குக் காரணமே சென்ற பிப்ரவரி மாதத்தில் சட்டத்
த்தம் செய்தபோது ஆறு மாத காலம் வரையில்தான் கால நீட்டிப்பு
டுத்து, பதவிக் காலத்தை நீட்டித்துத் தந்தார்கள். ஆனால் நகராட்சி
ளைப் பொறுத்தவரையில், டிசம்பர் மாதம் வரையில் கால நீட்டிப்பு கொடுத்
தந்தார்கள். அப்போதே டிசம்பர் மாதம் வரை நீட்டியிருந்தால், சட்டத்
த்தம் வந்திருக்காது. செப்டம்பர் 15-ஆம் தேதி பதவி ஏற்பார்கள் என்று
ன் முடிவு செய்திருக்கிற காரணத்தால், செப்டம்பர் 9-ஆம் தேதி தேர்தல்
க்கும் என்ற உறுதியோடு இருக்கிற காரணத்தால்தான், அந்தப் பதவி
ளையும் செப்டம்பர் 15-ஆம் தேதி வரை நீட்டித்தால் போதும்; டிசம்பர்
ர வேண்டாமென்று சட்டத்திலே உறுதி அளித்திருக்கிறேன். அரசு
சயம் தேர்தலை நடத்த வேண்டுமென்ற முடிவோடு இருப்பதை நான்
த் தெளிவோடு, பணிவோடு அவையில் வற்புறுத்தித் தெரிவித்துக் கொள்ள
மைப்பட்டிருக்கிறேன். சில அதிகாரிகள், பெரிய அதிகாரிகள் சென்று
றாக சில பேரைத் தூண்டி விடுவதாக மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்
வர்களால் தெரிவிக்கப்பட்டது. அப்படி எந்த அதிகாரி சென்று தெரிவித்
லும், அப்படி அதிகாரிகள் தெரிவிப்பார்களானால், அது வருந்தத்தக்கது,
ண்டிக்கத்தக்கது. அப்படி ஏதேனும் அதிகாரபூர்வமாக இருக்குமேயானால்,
ரசு நடவடிக்கை எடுக்கவும் தயங்காது என்பதை நான் உறுதியாக
தரிவிக்கிறேன்.

மற்றும் ஒரு செய்தி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும்
ராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும், ஊராட்சி மன்றங்களிலும்
ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
ரும்பி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். நல்ல நோக்கத்தோடு
காண்டு வரப்பட்ட அந்தச் சட்டத்தை எதிர்த்து சில பேர்கள் நீதிமன்றங்
ளுக்குச் சென்றார்கள். தங்கள் உரிமைகள் பாதிக்கப்பட்டதாகக் கருதி
ட்டத்திற்குத் தடை வாங்கிவிட்டார்கள். ஆனால் இப்போது நாம் செய்
ருகின்ற விதிமுறை என்னவென்றால், பழையபடியே, பழைய விதிமுறை
ளை வைத்துக்கொண்டு தேர்தலை நடத்தலாம் என்று சொல்லி, தனிப்பட்ட
துக்கீடு என்பதை எடுத்துவிட்டு தேர்தலை இப்போது நடத்துகிறோம்.
னால் ஏற்கெனவே நகராட்சிகளிலோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களிலோ
c-pt செய்து சேர்த்துக் கொள்ளலாமென்ற அந்த வசதி நிச்சயமாக

[திரு. ப. உ. சண்முகம்] [1985 ஜூன்

எடுக்கப்படவில்லை. ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகன் ஒரு பொதுத் தொகு யில், ஊராட்சி ஒன்றியத்திற்கு, தேர்தலில் நிற்பதை யாரும் தடுக்கவில்லை தடை செய்யவில்லை. எனவே, நீதிமன்றங்கள் இதில் தலையிட்டு தடை செய்வதற்கு நியாயம் இல்லை என்பதுதான் அரசினுடைய அபிப்பிராய ஆகும். பொதுவாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியதற்கு பிறகு, நான் ஒரு கருத்தைத் தெரிவிக்கிறேன்.

(முற்பகல் 11-10)

தயவுசெய்து பத்திரிகை நிருபர்கள் நான் சொல்லுவதைக் கொஞ்சம் எச்சரி கையோடு வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உயர்நீதிமன்ற திற்கு இருக்கிற அதிகாரத்திற்குள் நான் தலையிடுவதாக யாரும் கருத கூடாது. நீதிமன்றங்கள் எந்தத் தீர்ப்பை அளித்தாலும், அரசு அவற்றை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது. அதில் எந்தக் கருத்து வேறுபாடு இல்லை. அதை நான் முதலில் தெளிவாகச் சொல்லிவிட விரும்புகிறேன் எனவே, உயர்நீதி மன்றத்தின் அதிகார வரம்பிற்குள் நான் நுழைவதாகக் கருதி விட வேண்டாம். தடை விதிப்பது என்பது உயர் நீதிமன்றத்திற்கு இருக்கிற அதிகாரம். நான் அதில் நுழையவே விரும்பவில்லை. நோட்டீஸ் கொடுத்தும் தடை விதிக்கலாம். நோட்டீஸ் கொடுக்காமலும் தடை விதிக்கலாம். அது நீதிமன்றங்களுக்கு இருக்கிற அதிகாரம். அதிலும் நான் தலையிட விரும்ப வில்லை. இருந்தாலும் எனது வேண்டுகோளாக ஒன்றை மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அதாவது உயர்நீதிமன்றத்தை—நீதிமன்றங்களைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால் அதுபோன்ற நேரங்களில் அரசுக்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டு, பிறகு நீதி மன்றம் தீர்ப்பை வழங்குவது, நியாயமாக இருக்கும், நன்மையாக இருக்கும் என்பதைத்தான் நான் நீதிமன்றங்களுக்குப் பணிவன்போடு தங்கள் மூலமாக வேண்டுகோளாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் இவ்வாறு தெரிவிப்பதால், நீதிமன்றங்களுக்கு ஆணையிடுவதாகவோ அல்லது நீதி மன்றங்களின் உரிமைகளை நான் பறிப்பதாகவோ யாரும் கருதக்கூடாது என்பதால் மிக எச்சரிக்கையோடு இதைத் தெரிவிக்க விரும்புகிறேன். தயவு செய்து பத்திரிகை நிருபர்கள் இதைத் தவறாகப் போட்டுவிடக் கூடாது என்றும் கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூன் 7]

தடை விதிப்பது என்பது நீதிமன்றங்களின் உரிமை. அது யாருடைய உரிமையையும் பாதிப்பதாகச் சொல்ல முடியாது. இன்றைய தினம் நகராட்சி மன்றங்களுக்கானாலும் சரி, ஊராட்சி ஒன்றியங்களுக்கானாலும் சரி, யார் வேண்டுமானாலும் தேர்தலில் நிற்கலாம். அதில் யாருக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது. ஆனால் அதற்குத் தடை விதிக்கும் முயற்சி நடக்கிறது என்று எனக்கும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இருந்தாலும் அரசு . . .

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** உயர்நீதி மன்றத்திற்கு அப்பீல் விடுவதற்கு நமக்கும் அமைச்சர்களுக்கும் உரிமை இல்லை. ஆனால் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கம் இப்படி ஒரு வேண்டுகோளை விடுவதை விட்டு, இந்த நோக்கத்தை அடைவதற்கு வேறு ஒரு வழிமுறை இருக்கிறது. அரசாங்கத்தின் வழக்கறிஞர்கள் ஒரு 'கேவியேட்' போட்டால், இது சம்பந்தமாக வழக்கு இந்த நீதிமன்றத்திற்கு வந்தால் எங்களுக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று போட்டால், அப்படி ஏதேனும் வழக்கு வரும்போதே நாம் அதை எதிர்க்கலாம். எனவே நாம் அவையின் மூலம் நீதிமன்றத்தை தயவு தாட்சண்யத்திற்காகக் கேட்டுக் கொள்வதைப் போல் எதையும் கேட்கத் தேவையில்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததைப் போல் 'கேவியேட்' போடுவது நான் அறிந்த ஒன்று தான். இருந்தாலும் முன்கூட்டியே போய் தடை வாங்கப் போகிறார்களா என்று அச்சப்பட்டுக்கொண்டு எல்லாவற்றிலும் 'கேவியேட்' போட்டுக் கொண்டிருக்க முடியாது. என்றாலும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை நினைவுபடுத்தியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே இதுபோன்ற வகையில், யாரும், எந்த ஒரு அரசியல் கட்சியும், பொதுமக்களும் இதுபோன்ற தடை விதிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்கு உடந்தையாக இருந்துவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கெனவே இந்தச் சட்டத்தைப்பற்றி பேரவையில் பேசும்போதே ஒன்றை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். பெண்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இட ஒதுக்கீடு செய்வதில் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிற கருத்தை நாங்கள் எந்த வகையிலும் மாற்றிக்கொள்ளவில்லை. ஆனாலும் சூழ்

[திரு. ப. உ. சண்முகம்] [1985 ஜூ

நிலை, சந்தர்ப்பம் ஆகியவற்றின் காரணமாக இந்தச் சட்டத்தின் அடிப் யில் தேர்தலை நடத்த வேண்டியிருக்கிறோம் என்று சொல்லி, இந்தச் முன்வடிவை ஏற்று சட்டமாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கி

அத்துடன் இன்னும் சில விளக்கங்களையும் இங்கே நான் தெரி விரும்புகிறேன். சென்ற முறை அறிவித்த தேதிகளில் சில மாற்றங்கள் கின்றன என்ற விவரத்தைப் பேரவையில் தெரிவித்தேன். அதை மே யிலும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 31—5—1985 தேதி வாக்காளர் சேர்ப்பது முடித்துக் கொள்ளப்படும் என்று முன்பு அறிவி பட்டிருந்தது. அந்த இறுதி நாளில் மாற்றம் செய்து இப்போது பலரு வேண்டுகோளுக்கும் இணங்க 12—6—1985 வரை வாக்காளர் சேர்க்கப் என்று சொல்லியிருக்கிறோம். அத்துடன் ஏற்கெனவே அறிவிக்கப் தேதிகளில் சில மாற்றங்கள் இருப்பதால் அவற்றையும் இங்கே தெரி விரும்புகிறேன்.

நோட்டீஸ் ஆப் எலெக்ஷன்—ஏற்கெனவே தெரிவித்தது 12—8—1
அதற்குப் பதிலாக இப்போது மா
யுள்ள தேதி 2—8—1985.

ரெசிட். ஆப் நாமிநேஷன்—ஏற்கெனவே அறிவித்த தேதி 17—8—198
19—5—1985 மற்றும் 20—8—1985
இப்போது மாற்றப்பட்ட தேதிக
8—8—1985 ; 9—8—1985 மற்
12—8—1985.

ஸ்குருடினி ஆப் நாமினேஷன்—ஏற்கெனவே இருந்தது 21—8—1985
இப்போது மாற்றப்பட்ட தே
13—8—1985.

வித்டிராயல் ஆப் நாமிநேஷன்—ஏற்கெனவே அறிவித்த தே
24—8—1985.
இப்போது மாற்றப்பட்ட தே
16—8—1985.



ஜூன் 7]

பைனல் லிஸ்ட் ஆப் கேண்டிடேட்ஸ்—ஏற்கெனவே அறிவித்தது 24-8-1985.
இப்போது மாற்றப்பட்ட தேதி
16—8—1985.

ர்தல் தேதி 9 தான். அதில் மாற்றமில்லை.
க்கு எண்ணிக்கை 10-ஆம் தேதிதான்—அதிலும் மாற்றமில்லை.

ந்தத் தேதிகளில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய அவசியம் என் ட்டது என்றால், இத்தேர்தல்களுக்கான வாக்குச் சீட்டுக்களை அச்சடிக்க சம் தேவை என்று அவர்கள் கேட்டுக்கொண்ட காரணம்தானே தவிர ஒன்றுமில்லை. எனவே இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர டுமென்று, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக டுக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்): அவை முன் உள்ள சினை :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, நாடு, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) ண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 29/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவை முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

(முற்பகல் 11-15)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாற்றுத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, ழ் நாடு, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) ரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 29/1985) நிறைவேற்றப்பட வேண்டும் "
று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்): அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 29/1985) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(2) 1985-ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1985).**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985-ஆம் ஆண்டு, தமிழ் நாடு, ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்): அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985-ஆம் ஆண்டு, தமிழ் நாடு, ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

@ 54-ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985-ஆம் ஆண்டு, தமிழ்நாடு, ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்): அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(3) 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1985).**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 31/1985) @ ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 55-ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1985 ஜூன்

மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்): அவை முன் உ
பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆ
தமிழ்நாடு, ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்
பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்
வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவை
முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்
தமிழ்நாடு, ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்
பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்): அவை முன் உ
பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்
தமிழ்நாடு, ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்
பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா லெட்சுமிகாந்தன்: மேலவை
இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 10-6-19
திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.





(முற்பகல் 11-17)

7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

* 180. முந்தைய நீதித்துறையின் 8—2—1916 ஆம் நாளிட்ட 165 ஆம் எண் அறிவிக்கையில் வெளியிடப்பட்ட விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, உள்துறையின் 2—1—1985 ஆம் நாளிட்ட 10 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1913 ஆம் ஆண்டு பொறுப்பு ஆட்சியர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 2/1913) 30 (4) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

* 181. குன்னூர், இந்திய குடும்பக் கட்டுப்பாடு சங்கத்திற்கு சொந்தமான MMI 2254 ஆம் எண்ணுள்ள ஜீப்பிற்கு விதிக்கப்படும் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 27—2—1985 ஆம் நாளிட்ட 470 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

* 182. மதுரை மாவட்டம், நத்தம் தாலுகாவைச் சேர்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 4—1—1985 ஆம் நாளிட்ட 4 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

* 183. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 8—3—1985 ஆம் நாளிட்ட 567 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

* 184. அந்தியூர், கவுண்டபாடி மற்றும் பவானியைச் சேர்ந்த சில கிராமங்களை அறிவிக்கப் பெற்ற அங்காடிப் பகுதியிலிருந்து நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 12—2—1985 ஆம் நாளிட்ட 239 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

[1985 ஜூன்

* 185. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சாராவிகள் தயாரிப்பு முறைகள் (கட்டுப்பாடு) விதிகளை வகுப்பது குறித்து மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 29—8—1984 ஆம் நாளிட்ட 1131 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

* 186. அன்றைய ஒருங்கிணைந்த உணவு மற்றும் வேளாண்மைத் துறையின் II-1, 1405/1965 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 2—1—1985 ஆம் நாளிட்ட 11 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

* 187. நிலக்கடலை, இஞ்சி, விளக்கெண்ணெய், பருத்தி, மிளகாய் வகைகள், புளி, நெல், சர்க்கரை, வெல்லம், கம்பு, சோளம் மற்றும் கேழ்வரகு ஆகியவற்றைப் பொறுத்தவரை தாரமங்கலம் அங்காடியினை அறிவிக்கப் பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 18—1—1985 ஆம் நாளிட்ட 59 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

* 188. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த குளித்தலை தாலுகா, மணப்பாறை தாலுகா மற்றும் திருச்சிராப்பள்ளி தாலுகா ஆகியவற்றைச் சேர்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப் பெற்ற கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 4—12—1984 ஆம் நாளிட்ட 411 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப் படுகிறது.]

* 189. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசு தேர்வாணைக் குழு விதிகளில் சில் திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத்துறையின் 7—3—1985 ஆம் நாளிட்ட 230 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]



1985 ஜூன் 7]

* 190. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 2—11—1984 ஆம் நாளிட்ட 2487 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

* 191. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 36-வது பிரிவிலிருந்து மதுரை மாவட்டம், பழநியிலுள்ள அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி தேவஸ்தானத்திற்கு விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 4—8—1984 ஆம் நாளிட்ட 852 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப் படுகிறது.]

* 192. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத்துறையின் 7—3—1985 ஆம் நாளிட்ட 227 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

* 193. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள் மற்றும் சாராய (ஏலத்தில் விற்பனை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 5—4—1984 ஆம் நாளிட்ட 426 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

* 194. திருவாளர்கள் பல்லவன் போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநில போக்குவரத்துத் துறையினருக்குச் சொந்தமான 51 வண்டிகளுக்கு செலுத்த வேண்டிய வரியினின்று விலக்களிப்பது குறித்து உள்துறையின் [illegible]—3—1985 ஆம் நாளிட்ட 593 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

*195. கர்நாடக மாநிலத்தின் மாதேஸ்வரா மலையில் நடைபெறும் மகாசிவராத்திரி மற்றும் யுகாதி திருநாட்களை முன்னிட்டு தற்காலிக அனுமதியின் பேரில் நடத்தப்படும் கர்நாடக மாநில சாலை போக்குவரத்துக் கழகத்திற்கு சொந்தமான பயணிகள் (பேருந்துகளுக்கு விதிக்கப்படும் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போ. VI ) துறையின் 8—2—1985 ஆம் நாளிட்ட 318 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

* 196. சென்னையிலுள்ள காதுகேளாத முதியோருக்கான பயிற்சி மையத்திற்கு சொந்தமான T.M.V. 5718 என்னுள்ள வண்டிக்கு விதிக்கப்படும் வரியினை குறைப்பது குறித்து உள்துறையின் 27—2—1985 ஆம் நாளிட்ட 469-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

* 197. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசைப் பகுதி மாற்றுவாரியப் பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 9—1—1985-ஆம் நாளிட்ட 59-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்தல் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

* 198. எண்ணெய்—இயற்கை வாயு குழுவிற்குச் சொந்தமான TNZ 5723 என்னுள்ள துளையிடும் இயந்திரத்திற்கு விதிக்கப்படும் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 7—3—1985 ஆம் நாளிட்ட 556-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

199. எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் குழுவிற்குச் சொந்தமான சில வண்டிகளுக்கு விதிப்படும் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போ.) துறையின் 7—3—1985 ஆம் நாளிட்ட 557 ஆம் எண் அரசாணையில்



வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கபடுகிறது.]

200. அன்றைய ஒருங்கிணைந்த உணவு-வேளாண்மைத் துறையின் அறிவிக்கைகளில் திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 18—1—1985-ஆம் நாளிட்ட 53 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

201. ஊரக வளர்ச்சித் துறையின் சில அறிவிக்கைகளில் மாற்றங்கள் செய்வது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 14—3—1985-ஆம் நாளிட்ட 169 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

202. ஊரக வளர்ச்சித் துறையின் அறிவிக்கைகளில் மாற்றங்கள் செய்வது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 14—3—1985-ஆம் நாளிட்ட 170 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

203. தல நூலக அதிகாரக் குழுவிற்குச் சொந்தமான பன்னிரெண்டு வண்டிகளுக்கு அரசுக்கு நிலுவையாக உள்ள தண்டப் பணம் குறித்து உள் துறையின் 12—3—1985 ஆம் நாளிட்ட 592-ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

204. 30—12—1984 முதல் ஒரு ஆண்டு வரை டிரான்ஸ்பார்மர் ஆயில் ஃபீட் இருப்புகளுக்கு விதிக்கப்படும் வரியினைக் குறைப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 30—3—1985-ஆம் நாளிட்ட 303 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

205. இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் தீவில் காரைக் குடியிலுள்ள திருவாளர்கள் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத் தினரால் நடத்தப்படும் சிறிய சக்கரங்களைக் கொண்ட ஏழு பேருந்து களுக்கு செலுத்தப்பட வேண்டிய வரியினை குறைப்பது குறித்து உள் துறையின் 23—3—1985-ஆம் நாளிட்ட 731-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2 பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

206. தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணை குழு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 7—3—1985-ஆம் நாளிட்ட 229 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

207. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளி திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 24—8—1984-ஆ நாளிட்ட 1875 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்ட 4/1939) 133 (3) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

208. வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் அறிவிக்கை களில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 16—4—1985-ஆம் நாளிட் 333 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நா 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்ட 1/1959) 53 (3) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

209. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (தனியார்) வரையறுக்கப்பட்ட முதலாம் ஆண்டு அறிக்கை (தமி மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619 ( ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது).

210. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (தனியார்) வரையறுக்கப்பட்ட இரண்டாம் ஆண்டு அறிக்கை (தமி மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619 ( ) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]



## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

$ 77. கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

$ 78. பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, ஆகியவை பற்றிய செயல்முறைத் திட்டம் (ஆங்கிலம்).

$$ 79. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 29/1985).

$$ 80. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண். 30/1985).

$$ 81. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 31/1985).

* 15—5—1985 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

$ 1—6—1985 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

$$ 6—6—1985 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.

## இணைப்பு I

(18 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டம் பகுதியில் உள்ள 31 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தற்போது ரூ. 1.92 கோடி அளவிற்குத் தேங்கியுள்ள கைத்தறித் துணிகளையும், 15 நாட்களுக்குள் கொள்முதல் செய்ய வேண்டும் என்றும், அதற்கு உடனடி தொகை அளிக்க வேண்டும் எனவும், இதற்கு உத்திரவாதம் வேண்டும் எனவும் வற்புறுத்தி 18—3—1985 முதல் ஜெயங்கொண்டம் வட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்பு அனைத்து நெசவாளர் கூட்டுறவு சங்க போராட்டக்குழு என்ற பெயரில் மறியல் செய்தனர். 18—3—1985 அன்று 351 நபர்களும், 19—3—1985 அன்று 350 நபர்களும் 20—3—1985 அன்று 85 நபர்களும் ஆக மொத்தம் 786 நபர்கள் கைது செய்யப்பட்டு ஆண்டிமடம் காவல் நிலைய குற்ற எண் 90/1985, இந்திய தண்டனைச் சட்டம் 143, 341-ன் கீழ் வழக்கு தொடரப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். இம்மறியல் போராட்டத்தை நிறுத்துவதற்காக தொடர்ந்து போராட்டக் குழுவினருடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டு அதன் விளைவாக 21—3—1985 அன்றுடன் போராட்டம் முடிவு பெற்று கைது செய்யப்பட்ட 786 நபர்களும் விடுவிக்கப்பட்டனர். இப்பகுதியில் தேங்கியிருந்த ரூ. 1.92 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணியில் கோ-ஆப்டெக்ஸ் முதல் தடவை ரூ. 25 லட்சத்திற்கு கொள்முதல் செய்துவிட்டு பிறகு ரூ. 40 லட்சத்திற்கு மீண்டும் கொள்முதல் செய்ய 'ஆர்டர்' கொடுத்து ஆக ரூ. 65 லட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்ய ஏற்பாடாகியுள்ளது. மேலும் ஜூலைத் திங்கள் 1984 முதல் பிப்ரவரி 1985 வரைக்கான காலங்களில் இந்த சரகில் உள்ள சங்கங்கள் கோ-ஆப்டெக்ஸிடம் ரூ. 391 லட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்ய ஏற்பாடாகியுள்ளது. மேலும் ஜூலைத் திங்கள் 1984 முதல் பிப்ரவரி 1985 வரைக்கான காலங்களில் இந்த சரகில் உள்ள சங்கங்கள் கோ-ஆப்டெக்ஸிடம் ரூ. 391 லட்சம் மதிப்புள்ள துணிகளை விற்பனை செய்துள்ளது. கடந்த வருடம் கோ-ஆப்டெக்ஸ் இந்த சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்த துணிகளின் மதிப்பு (12 மாதங்களுக்கு) மொத்தம் ரூ. 510 லட்சமாகும். வருகின்ற திங்களில் நடைபெற இருக்கும் அகில இந்திய கைத்தறி இருவார விழாவில் மத்திய மாநில அரசு உதவியுடன் சில்லறை விற்பனை மீது 20 சதவிகிதமும் மொத்த விற்பனை மீது 15 சதவிகிதமும் இந்த சங்கங்கள் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகள் மீது தள்ளுபடி அளிக்க உள்ளது. இச்சலுகையை பயன்படுத்தி இப்பகுதியில் உள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தேங்கியிருக்கும் துணித் தேக்கம் கணிசமான அளவுக்கு குறைய வாய்ப்புள்ளது.

## இணைப்பு II

(33-ஆம் பக்கத்தில் இனம் 6 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### L.A. BILL No. 29 OF 1985.

(As passed by the Assembly.)

*3ill further to amend the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Act, 1977.*

it enacted by the Legislature of the State of Tamil Nadu in the irty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called : Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special ficers) Second Amendment Act, 1985.

(2) It shall come into force at once.

2. *Amendment of section 4. President's Act 5 of 1977.*—In ause (*a*) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Pancha- t Union Councils (Appointment of Special Officers) Act, 1977 'resident's Act 5 of 1977), for the expression "for a period of eight ears and five months on and from the 1st day of February 1977", e expression "for a period up to and inclusive of the 15th Septem- er 1985" shall be substituted.

# இணைப்பு III

(42ஆம் பக்கத்தில் இனம் 6 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

## L.A. BILL No. 30 OF 1985.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Act, 1979.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Second Amendment Act, 1985.

(2) It shall come into force at once.

2. *Amendment of section 4, Tamil Nadu Act 60 of 1979.*—In clause (*a*) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Act, 1979 (Tamil Nadu Act 60 of 1979), for the expression "for a period of five years and nine months on and from the date of commencement of this Act" the expression "for a period up to and inclusive of the 15th September 1985" shall be substituted.



# இணைப்பு IV

(43 ஆம் பக்கத்தில் இனம் 6 (5)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

## L.A. BILL No. 31 OF 1985.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Panchayats Act, 1985.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayats (Third Amendment) Act, 1985.

(2) It shall come into force at once.

2. *Amendment of section 155, Tamil Nadu Act XXXV of 1958.*—In section 155 of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958), in sub-section (1), in clause (*b*), in the poviso, for the expression, "for a further period not exceeding seven years and eleven months", the expression "for a further period up to and inclusive of the 15th September 1985" shall be substituted.

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

திங்கட்கிழமை, 1985 ஜூன் 10.

வைகாசி 28, குரோதன, திருவள்ளுவராண்டு—2016.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-00 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Micro hydel Stations.*

* 31. *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether there is any proposal to set up micro hydel stations at Vaigai Dam and Pykara; and

(*b*) if so, the stage at which the matter now stands?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்;** (அ) ஆம்.

(இ) இத்திட்டங்களுக்கான நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்காக, ஜப்பானிலுள்ள ஒரு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்வது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இது விரைவில் முடிக்கப்படும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசாங்கத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டபோது, 1984 ஆம் ஆண்டு இறுதியில் இதனுடைய உற்பத்தி தொடங்கும் என்று சொல்லப்பட்டது. இவ்வளவு காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன? இனிமேல் தொடங்கப்பட்டாலும், எவ்வளவு மின் உற்பத்தி கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூன் 10

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களினால் எவ்வளவு மின் உற்பத்தி கிடைக்கும் என்று விடையிலேயே குறிப்பிட்டிருக்கிறோம். இந்தத் திட்டம் ஜப்பான் நாட்டின் 'யென்' உதவி பெற்று நிறைவேற்றப்பட இருக்கிறது. பைக்காரா நுண் புனல் மின் திட்டம் 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள்ளும், வைகை நுண் புனல் மின் திட்டம் மே 1987-லிருந்து ஜூலை 1987-க்குள்ளும் நிறைவேற்றி முடிக்கப்படும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, இத்தகைய நுண் புனல் மின் திட்டங்கள் (மைக்ரோ ஜெனரேஷன் யூனிட்) நமது மாநிலத்தின் வேறு பகுதிகளில் எங்காவது தொடங்க இருக்கிறோமா; அதற்கான கருத்துரு அரசாங்கத்திடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, சுமார் 11 திட்டங்கள் இதைப்போல் தயாரிக்கப்பட்டு, அவைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, நெய்வேலி நிலக்கரி சுரங்க நிறுவனத்திற்கு தமிழக அரசு பல்வேறு சலுகைகளைக் கொடுத்து வருகிறது. அவர்களிடமிருந்து எந்தவித ராயல்டியையும் நாம் வசூலிக்காமல் சலுகைகள் தந்து வருகிறோம். ஆனால் அவர்கள் நம்மிடம் செய்துகொண்ட ஒப்பந்தப்படி கூட நடக்காமல், ஆண்டுதோறும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்திக் கொண்டே போவதோடு, சரியான காலத்தில் கட்டவில்லை என்று சொல்லி, ரூபாய் 112 கோடி அபராதத்தோடு தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி மத்திய அமைச்சர் நமது மாநில அரசைக் குறை சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நெய்வேலி மின் நிலையத்தை மாநில அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென மத்திய அரசை வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, தமிழ் நாட்டில் அமையவிருக்கும் நுண் புனல் மின் திட்டங்கள் பற்றியது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, பைக்காரா நீர் மின் திட்டத்தின் மூலமாக, நீலகிரி மாவட்டம் தமிழ் நாட்டின் பல மாவட்டங்களுக்கு உதவிகரமாக இருக்கிறது. இதனால் எதிர்காலத்தில் நீலகிரி மாவட்டத்தில் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்போது, மின் கட்டணத்தில் சலுகைகள் கொடுத்து குறைந்த கட்டணம் வசூலிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் சென்னைக்காரர் என்றல்லவா நினைத்தேன் ?



1985 ஜூன் 10]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டின் எந்தப் பகுதியானாலும் எல்லாம் ஒன்றுதான் என்ற எண்ணம்தான் தேவை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இதுபோன்ற 11 திட்டங்கள், 11 இடங்களில் நிறுவப்பட திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த 11 இடங்களில் எப்போது இந்தத் திட்டங்கள் துவங்கப்பட்டு, எப்போது முடிவடையும்? அந்த இடங்கள் என்னென்ன என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கோவை மாவட்டத்தில் சிறுவாணி, பூனாச்சி மினி நீர் மின் திட்டம் (கோவை), வாட்டர்பால்ஸ் (கோவை), மதுரை மாவட்டத்தில் விளாம்பட்டி, தூக்காலப்பட்டி மற்றும் தாலையார் ஆகிய இடங்களிலும், நீலகிரி மாவட்டத்தில் மரத்தகண்டி என்ற இடத்திலும், கோவையில் பூசாரிப்பட்டியில் ஆக 8 திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கோவையில் அத்திக்கடவு திட்டத்திற்கான திட்ட அறிக்கை மாநில அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருஞ்சாணி திட்டத்திற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் அது அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். கோவையில் கீழ்பவானி திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

## *Gas from Bombay High.*

* 32. *Q.*—Thiru K. MEENAKSHISUNDARAM (on behalf of Thiru S. J. SADIQ PASHA) : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether it is a fact that the Government have approached the Central Government for a share in the gas from Bombay High, for production of power in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (இ) பாம்பே ஆழ் கடலிலிருந்து கிடைக்கப்பெறும் இயற்கை எரிவாயுவை அங்கிருந்து குழாய் மூலம் தமிழ் நாட்டிற்குக் கொண்டு வந்து, அதன் மூலம் மின் உற்பத்தி செய்திட ஒரு மின் நிலையம் அமைக்குமாறு மத்திய அரசை இவ்வரசு கேட்டுக் கொண்டது. மத்திய அரசு இதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

(முற்பகல் 10-05)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கவில்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித் தார்கள். மீண்டும் அதை மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பிவைத்து, வற்புறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா? இந்தத் திட்டத்திற்கு உத்தேசமாக ஆகக்கூடிய செலவு என்ன? அதில் மத்திய அரசின் மானியமாக தொகை கொடுக்க வேண்டுமென்று மாநில அரசு கேட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பம்பாய் கடல் பகுதியில் உற்பத்தியாகும் எரிவாயுவை வைத்து உத்திரப்பிரதேசத்தில் மின் நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு, அதற்கு அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது. வடக்கே போகிற வாயுவை தெற்கே போக விடவேண்டு மென்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திரு. க. அருணாசலம் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் உள்ள விளாம்பட்டிக் கால்வாய் நான்கு அடி நீர்வீழ்ச்சியில் தயாரிக்கப்படும் மின்சாரம் எத்தனை கிராமங்களுக்குப் பயன்படும்? அதைப்போல பல இடங்களுக்கும் விரிவுபடுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போட்டால், விவ ரங்கள் சேகரித்துத் தரலாம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : வடக்கே செல்லும் வாயுவை தெற்கே செலுத்த விரும்பவில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலிருந்து தெற்கு புறக்கணிக்கப்படுகிறது என்பது தெளிவாகிறது. எடுத்துக்காட்டாக இருக்கிறது. அப்படி தெற்கு புறக்கணிக்கப்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை இனிமேலாவது மாநில அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நாம் மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்திற்கு அவர்கள் தந்திருக்கிற பதில் என்ன வென்றால்,

"The question of installation of further Gas based Thermal Stations in other parts of the country including Tamil Nadu will depend on the future availability of natural gas" என்று சொல்லியிருக்கிறார்கள்.



### குடிநீர்த் திட்டம்.

*33 வினா—திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

வட ஆற்காடு மாவட்டம், வாலாஜா வட்டம், பூண்டி கிராமத்தை மையமாகக் கொண்டு, சுமார் பதினோரு கிராமங்களுக்காக ரூபாய் 29 இலட் சத்தில் திட்டமிடப்பட்டுள்ள குடிநீர்த் திட்டம் தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இத்திட்ட அறிக்கை மறு தயா ரிப்பில் உள்ளது.

திரு. எல். ஜெயச்சந்திரன் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம், வாலாஜா வட்டத்திலுள்ள பூண்டி கிராமத்தில் குடிநீர்த் திட்டம் ரூபாய் 29 இலட்சத்தில் துவங்கப்படும் என்ற செய்தி வந்திருக்கிறது. ஆனால் அதற்கான அறிக்கைகள்தான் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல் கிறார்கள். எப்போது இந்தத் திட்டம் அமுலுக்கு வரும்? அவர்களுக்கு எப்போது குடிநீர்த் திட்டம் வரும்? இந்தத் திட்டத்தினால் எந்தெந்த கிராமங் களுக்குப் பயன் ஏற்படும்? இந்தத் திட்டம் விரைவில் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மேற் கொண்டு சில விபரங்களைக் கேட்டு, பொறியாளர்களை அறிக்கை தருமாறு கேட்டிருக்கிறார்கள். அதை விரைவுபடுத்தி, வெகு விரைவில் இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி.

*34 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில், கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1985 ஜூன் 10

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் விவசாயிகள் பெரும்பாலோர் வசிக்கிற ஒரு விவசாய மாவட்டமாகும். அங்கே பெரும்பாலும் ஏழை விவசாயிகள் மிக அதிகமாக இருப்பதால், கால்நடைகளைப் பயன்படுத்தித்தான் விவசாயம் செய்கிறார்கள். இயந்திரங்களை அதிகமாகப் பயன்படுத்துவதில்லை. அதுவும் அந்த மாவட்டத்தில் கல்லூரிகள் மிகவும் குறைவு. அந்தப் பகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துள்ளதற்கு நன்றி. கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் இந்த அரசின் பரிசீலனையில் இல்லாவிட்டாலும் வருங்காலத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்றை தஞ்சை மாவட்டத்தில் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருப்பதைப்போல், காட்டுத்தோட்டத்தில் வேளாண்மைக் கல்லூரியும், நாமக்கல் அருகில் கால்நடைக் கல்லூரியும் அமைக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அந்தப் பகுதியில் வேளாண்மைக் கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்று தான் தொடங்குகிறார்கள். வருங்காலத்தில் கல்லூரி தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, ஒன்றுதான் தொடங்கப்படுகிறது. வருங்காலத்தில் வாய்ப்பு இருக்கிறபோது, அதைப் பற்றி சிந்திப்போம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் அங்கிருந்து வந்திருக்கிறதா? ஏனென்றால், நான் நடைப் பயணம் மேற்கொண்டபோது, அந்தப் பகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்று அங்குள்ளவர்கள் ஆவல் தெரிவித்தார்கள். அதை அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** இப்போது இல்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான மதுரை-முகவை தொகுதியில் அமைச்சர் அவர்கள் இருப்பதால், மதுரையில் கால்நடை மருத்துவக் கல்லூரி எதிர்காலத்திலாவது அமைக்க திட்டம் இருக்கிறதா, அப்படி அவர்கள் கொண்டுவருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** அது அமைச்சருடைய தொகுதியாக இருந்தாலும், அமைச்சர் தமிழ் நாட்டுக்கே சொந்தம்.



1985 ஜூன் 10]

## நூலிழை வங்கிகள்.

* 35 வினா.—திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நியாயமான விலையில் நூலிழை வழங்குவதற்கு, "நூலிழை வங்கிகளை" தென்னாற்காடு மாவட்டத்தில், நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** (அ) தற்போது இல்லை.

(இ) "நூலிழை வங்கிகள்" திறக்க திட்டமிடும்போது தென்னாற்காடு மாவட்டத்திலும் திறப்பதுபற்றி ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்.

(முற்பகல் 10-10)

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நெசவாளர்கள் அதிகமாக இருக்கும் பகுதி தென் ஆற்காடு மாவட்டம். அங்கே நூல் இழைகள் வாங்குவதற்கு நெசவாளர்கள் மிகவும் அவதிக்குள்ளாகின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இல்லை என்றாலும், விரைவில் அதைப்பற்றி ஆலோசிப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அப்படி இருந்தால், தென்னாற்காடு மாவட்டத்தில் அது எப்போது வரும் என்று அறிய விரும்புகிறேன். முதற்கண் அந்த நூலிழை வங்கிகளை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோன்று, தென் ஆற்காடு மாவட்டத்தில் நூல் இழைக்காக நெசவாளர்கள் கஷ்டப்படவில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், நெசவாளர்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதி நாகர்கோயில், மதுரை, கரூர், ஈரோடு, கோவை, சேலம் மற்றும் காஞ்சீபுரம் ஆகிய ஏழு இடங்கள். அந்த இடங்களில் முதல் கட்டமாக நூல் இழைகள் வங்கிகள் தொடங்கக் கேட்டிருக்கின்றார்கள். இரண்டாவது கட்டமாக வருகின்றபோது, தென்னாற்காடு மாவட்டத்தைப்பற்றி அரசு யோசிக்கும்.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, கூட்டுறவு ஆலைகளில் உற்பத்தியாகும் நூலிழைகள் கூட்டுறவுத் துறை நெசவாளர்களுக்குக் கிடைப்பதிலே சில சிரமங்கள் இருப்பதை அரசு அறியுமா? அந்த சிரமங்களை அரசு நிவர்த்திக்குமா?

[1985 ஜூன் 10

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகளில் தயாரிக்கப்படுகின்ற நூல்கள் தமிழ் நாட்டிலுள்ள நெசவாளர்கள் அத்தனை பேர்களுக்கும் கொடுக்கப்பட்டு மிஞ்சுவதுதான் வெளி மாநிலங்களில் விற்கப்படுகின்றது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, தற்போது நூல் இழை வங்கிகள் அமைக்கப்படாவிட்டாலும்கூட, நெசவாளர்களுக்கு நியாய மான விலையில் இந்த நூலிழைகள் கிடைப்பதற்கு அரசு என்ன ஏற்பாடுகள் செய்திருக்கின்றது ? அதுபற்றிய விவரங்களை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, தனியார் துறையில் விற்கப்படுகின்ற நூல் விலைக்கும் கூட்டுறவு நூற்பாலைகளில் தயாரிக்கப்படுகின்ற நூல் விலைக்கும் வித்தியாசம் இருக்கின்றது. கூட்டுறவு நூற்பாலைகளில் தயாரிக்கப்படும் நூல்கள் விலை தனியார் மார்க்கெட்டில் விற்கப்படும் விலையைவிடக் குறைவாக இருக்கின்றது. முக்கியமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்குக் குறைவான விலையில் நூல்கள் வழங்க தனியாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஏற்பாடுகள் செய்திருக் கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, கூட்டுறவு தொழிற்சாலை களில் நெசவாளர்களுக்குத் தேவையான எண் நூல்கள் உற்பத்தி செய்வ தில்லை. ஆகவே நெசவாளர்கள் நியாயமான விலையில் நூல்கள் பெற முடிய வில்லை என்கிறார்களே, அது உண்மையா ? அது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கைகள் எடுக்க இருக்கின்றார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்ற குறைகள் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த ஊரில் இந்த ரக நூல்கள் கிடைக்கவில்லை என்று சொல்வார்களானால், அந்த நூல்கள் கிடைப்பதற்கு அரசு வழிவகைகள் செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜேப்பியார் :** தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகின்ற நூல்களை நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் தர அரசு பரிசீலிக்குமா ?



1985 ஜூன் 10]

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகின்ற நூல்கள் கூட்டுறவுத் துறை நெசவாளர் களுக்குக் குறைந்த விலையில் கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் கூட்டுறவு நூற்பாலைகள் துவக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு மலிவான விலையிலேதான் நூல்கள் தரப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. கவன ஈர்ப்பு.

**1983-84-ஆம் வருட அரவை முடிந்த கரும்பு சீசனுக்கு 31—3—1983-க்குள் விவசாயிகளுக்கு அரசு அளிப்பதாக அறிவித்திருந்த மானியத் தொகை ரூ. 20-ஐ அவர்களுக்கு வழங்காதது குறித்து**

**திரு. அ. ப. சிவராமன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

" 1983-84 ஆம் வருட அரவை முடிந்த கரும்பு சீசனுக்கு 31-3-1985-க் குள் விவசாயிகளுக்கு அரசு அளிப்பதாக அறிவித்திருந்த மானியத் தொகை ரூ. 20-ஐ இதுவரை அவர்களுக்கு வழங்காதது குறித்து ".

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரமான அறிக்கை @ அவை முன் வைக்கப் பட்டுள்ளது.

**திரு. அ. ப. சிவராமன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 2233-ல் ரூபாய் 9.09 கோடி அளவிற்கு நிதித் துறையின் ஒப்புதலோடு தொகை ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஒதுக்கீடு செய்யப்பட்டது 4 கோடி ரூபாய் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றார்கள். இந்த 9.09 கோடி ரூபாயும் ஏன் ஒதுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ? மேலும் தொகை முழுவதும் 1983-84 ஆம் ஆண்டிக்கு அரவை தொடர்புடையது. அதற்காக உதவித் தொகை

@ 162 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**1983-84-ஆம் வருட அரவை முடிந்த கரும்பு சீசனுக்கு 31—3—1985க்குள் விவசாயிகளுக்கு அரசு அளிப்பதாக அறிவித்திருந்த மானியத் தொகை ரூ. 20-ஐ அவர்களுக்கு வழங்காதது குறித்து**

[திரு. அ. ப. சிவராமன்] [1985 ஜூன் 10

31—5—1985-க்குள்ளாக பட்டுவாடா செய்யப்பட வேண்டும் என்று நாள் குறித்து அதற்கான அரசாணை இருந்தும் ரூபாய் 2 கோடிக்கு மட்டும் பட்டுவாடா செய்து மேற்கொண்டு ரூபாய் 2 கோடிக்கு காசோலை அனுப்பப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. 31—6—1985-க்குள் அந்தப் பணங்கள் பட்டுவாடா செய்யப்பட்டிருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அதற்குள்ளாக நிச்சயமாக பட்டுவாடா செய்யப்பட்டிருக்கும் என்று அரசு கருதுகிறது. ஏதேனும் சிக்கல் இருந்தால், அரசு தலையிட்டு ஆவன செய்யும்.

**திரு. அ. ப. சிவராமன் ;** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 2234-ன்படி விவசாயிகளுக்கு 8.05 சதவிகிதம் சர்க்கரை சத்துள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 185 என்று விலை நிர்ணயித்திருக்கின்றார்கள். அதை கூட்டுறவுத் துறை ஆலைகள் தந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அப்படி தனியார் ஆலைகள் தருவதில்லை. குறிப்பாக, தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள நெல்லிக்குப்பம் ஆலை தரவில்லை. அரசாணையின்படி ரூபாய் 195 டன் ஒன்றுக்குத் தர வேண்டும். ரூபாய் 162 தான் தந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலைமைகள் மாற்றி அமைக்கப்படுமா ? அது மட்டுமல்லாமல், அது விவசாயத் தொழிலாக அங்கீகரிக்கப்படாத நிலையில் இருக்கின்றது. அதற்கு அரசு தருகின்ற மான்யத் தொகையைக் கூட தவணை முறையில் தருவது அந்த விவசாயிகளுக்குத் துன்பத்தை விளைவிக்காதா ? அதைக் களைய இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-15)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, சில தனியார் ஆலைகள் இது தொடர்பாக நீதி மன்றத்திற்குச் சென்று விடுகிறார்கள். அரசு ஆணையிடும்போது, அதை மதித்து நடக்க வேண்டியதுதான் அனைத்து ஆலைகளின் கடமையாக இருக்கும். அந்த வகையில் விவசாயப் பெருமக்களுக்கு உரிய தொகையை, அரசு நிர்ணயிக்கும் தொகையை தனியார் ஆலைகள் கொடுக்க வேண்டுமென்று அரசு எதிர்பார்க்கிறது. அப்படி கொடுக்காத ஆலைகளின் நிர்வாகங்களிடத்திலே பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். அரசு நிச்சயமாகத் தலையிட்டு ஆவன செய்யும்.





3. அரசின் தீர்மானம்.

கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது விவாதம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

" சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

அவை முன் வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பை படித்ததாக எடுத்துக்கொண்டு, அதனை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குப் பேசுவதற்கு 7 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 2, 3 உறுப்பினர்கள் பேசுவார்கள் என்று எதிர்பார்க்கலாம். எனவே எல்லோருக்கும் சராசரி 15 நிமிடங்கள் என்று வைத்துக்கொண்டால்தான், அவ்வளவு உறுப்பினர்களும் பேச முடியும். நாளைய தினம் பேசுகிறவர்களுக்கு இடம் கொடுத்து, இன்றைக்கு எல்லோரும் பேசி முடிக்க வேண்டும். இதற்காக ஒதுக்கியுள்ள 2 நாட்களில் இந்த விவாதம் முடிக்கப்படும். நான் முன்பே தெரிவித்திருக்கிறேன். கடந்த ஆண்டே தெரிவித்திருக்கிறேன். இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில், கட்சிக்கு ஒருவர் பேச வேண்டுமென்ற நியதி இல்லை. ஆசிரியர் தொகுதி பிரதிநிதிகளுக்கு இடம் கொடுக்கிறோம். பட்டதாரிகள் தொகுதி பிரதிநிதிகளுக்கு இடம் கொடுக்கிறோம். இதற்காக 2 நாட்கள் ஒதுக்கியிருக்கிறோம். எனவே இதற்கு மேலும் அதிக நேரம் எதிர்பார்க்காமல், நேரத்தோடு முடிக்குமாறு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

*** திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவரவர்களே, கல்விக் கொள்கை பற்றிய விளக்கக் குறிப்பின்மீது முதன்முதலிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

@ 162—248 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

இவ்வவையில் கல்வியைப் பொறுத்தவரையிலே, 2 நாட்கள் விவாதம் நடத்துவது வழக்கம். அதோடுகூட, தேவைப்பட்டால் பிற்பகலிலும் விவாதம் நடத்துவது வழக்கம். ஆகவே 15 நிமிடங்கள் என்று பேசும் நேரத்தைக் குறைத்துவிடாமல், கூடுமானவரையில் அனைவரும் தங்கள் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் ;** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எத்தனை நிமிடங்கள் வாய்ப்பு அளிக்க வேண்டும் ?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரை மணி நேரம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் ;** 5 நிமிடங்கள் கூட எடுத்துக் கொண்டு, 20 நிமிடங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தம்முடைய பேச்சை முடிக்கலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** கல்வி மானியம் ஏப்ரல் மாதம் இரண்டாம் வாரம் சட்டமன்றப் பேரவையிலே கொண்டு வரப்பட்டது. அதற்குப் பின்னாலே நீண்ட இடைவெளி. இப்போது ஜூன் மாதம் இரண்டாம் வாரம் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. பள்ளிகள் எல்லாம் திறந்த பிறகு, எங்களிடத்திலே ஆலோசனைகள், மற்றவைகளைக் கேட்டு என்ன செய்ய இருக்கிறது அரசு என்பது தெரியவில்லை. ஒப்புக்காக இவர்களிடம் கேட்போமே என்று கேட்பதுபோல் இருக்கிறது. அப்போதே விவாதத்தை வைத்து. பள்ளிகள் திறப்பதற்கு முன்னாலேயே ஆலோசனைகளைக் கேட்காமல், காலங்கடந்து, இப்போது ஒப்புக்கு விவாதிக்கப்படுவதுபோல் இருக்கிறதென்றாலும், மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் அந்தப் பொறுப்புக்கு வந்த நாள் முதல் கல்வி பற்றிய கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பதில் அளிப்பதும், சில பல சலுகைகளை ஆசிரியர்களுக்கு இங்கே அறிவிப்பதும் வழக்கம். அந்த வழக்கத்தை இப்போதும் கைவிட்டுவிடாமல், விவாத காலம் மாறிப்போவது போல அதுவும் மாறாமல், பல்வேறு பிரச்சினைகளுக்கு அமைச்சரவர்கள் சரியான பதிலளிப்பதோடு ஆசிரியர்களுக்கு கல்வி, நிலையங்களுக்கு சில சலுகைகளை இங்கே அறிவிப்பார்கள் என்ற எண்ணத்தோடு, அப்படி அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய பேச்சைத் தொடர்கிறேன்.

மாநிலத்தின் வருவாய் 2,315 கோடி ரூபாய் என்றாலும், அதிலே 168 கோடி ரூபாய் தான் கல்விக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. மொத்த வருவாயிலே இது 20 சதவிகிதம் என்று குறிப்பிலே தரப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் 25 சதவீதம் ஒதுக்கப்பட்டது 24 சதவிகிதமாகி, 23 சதவிகிதமாகி, படிப்படியாக





குறைந்து, இப்போது 20 சதவிகிதத்திற்கு வந்திருக்கிறது என்று பார்க்கும் போது, கல்விதான் நாட்டினுடைய கண், அதுதான் எல்லாவற்றையும் வளர்க்கும்—அரசியலை வளர்க்கும், தொழிலை வளர்க்கும், நாட்டை வளமடையச் செய்யும். எனினும் அதிலே அதிக அக்கறை அரசு காட்டவில்லையே என்ற கருத்தைத்

(முற்பகல் 10-20)

தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே கூட சத்துணவுக்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதையும் கழித்துப் பார்த்தால், 20 சதவிகிதம் கூட கல்விக்காக ஒதுக்கப்படவில்லை என்பதை நாம் அறிய முடியும். சத்துணவு அளிப்பதை நான் வரவேற்கிறேன். இருந்தாலும் அண்மையில் நான் ஒரு நிகழ்ச்சியைப் பார்த்தேன். பிரான்ஸ் மற்றும் மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு நான் சென்றிருந்தேன். பிரான்ஸ் நாட்டில் கூட மாணவர்களுக்கு சத்துணவு அல்ல, "சத்துள்ள உணவு" போடுகிறார்கள். அங்கே சத்துள்ள உணவு போட்டாலும், இறுதியில் பெற்றோர்களுடைய வருவாய்க்கு ஏற்றவாறு உணவுக்குரிய தொகையை வாங்குகிறார்கள். இங்கேயும் எல்லோருக்கும் சத்துணவு போடுகிறார்கள். வருவாய் உடையவர்கள், வருவாய் இல்லாதவர்கள் எல்லோருடைய குழந்தைகளுக்கும் சத்துணவு போடுவதால், பெரும்பான்மையான பணத்தை இதற்காக ஒதுக்குவதால் கல்விக்காக ஒதுக்கப்படுகிற தொகை கூட குறைகிற சூழ்நிலை இருக்கிறது. இங்கே நம்முடைய நாட்டில் கூட பிரான்ஸ் நாடு மாதிரி சத்துள்ள உணவு அளிக்கலாம். குவான்டிட்டி மற்றும் குவாலிட்டி நல்ல முறையில் இருக்கும் அளவில் அதை அளிக்கலாம். எல்லா மாணவர்களும் சாப்பிட்டாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தலாம். அதற்கு ஆகின்ற தொகையை வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களிடமிருந்து பெறாமல், வறுமைக் கோட்டுக்கு மேல் வருவாய் உள்ளவர்களிடமிருந்து பெறலாம். அப்படிச் செய்தால், ஏழை, பணக்காரர் எல்லோருமே ஒன்று என்கிற அளவில் சோஷலிச சமுதாயம் அமைய வாய்ப்பாக இருக்கும். இதனால் அரசுக்கும் அதிகமாகச் செலவாகாது. கல்விக்காக ஒதுக்கப்படுகின்ற தொகையைக் குறைக்க வேண்டிய நிலையும் வராது. எதிர்த்தரப்பிலே இருப்பவர்கள் ஆலோசனை கூறுவதில்லை என்று ஆட்சியில் இருப்பவர்கள் கருதுகிற காரணத்தால், இந்த ஆலோசனையையும் சேர்த்து நான் என்னுடைய ஒன்றிரண்டு ஆலோசனைகளைக் கூறுகிறேன். அவற்றை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூன்று மாதத்திற்கு முன்பே, மார்ச் திங்களிலேயே இதன் மீதான விவாதம் நடந்திருக்க வேண்டும். அவ்வாறு காலாகாலத்தில் நடக்காத காரணத்தால், கோடை விடுமுறையின்போது ஆசிரியர்கள் அனுபவிக்க வேண்டிய விடுப்பு கால பயணச் சலுகையைக்கூட அதற்குத் தேவையான பணம் சட்டமன்றம் அனுமதிக்காத காரணத்தால் அனுபவிக்க முடியாமல் போய்விட்டது.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 ஜூன் 10

இங்கே பள்ளிகளில் மாணவர்களை அதிக அளவில் ஈர்த்ததற்காக தமிழக அரசுக்கு மத்திய அரசு விருது அளித்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 2.98 லட்சம் மாணவர்களைப் பள்ளிகளில் சேர்த்திருக்கிறார்கள். ஆனால் அந்த மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிற ஆசிரியர்களை எந்த அளவுக்கு நியமித்திருக்கிறார்கள் என்பதையும் நான் சொல்லியாக வேண்டும். எந்த அளவில் ஆசிரியர்களைப் போட்டிருக்கிறார்கள் என்ற குறிப்பினை மத்திய அரசு பார்த்திருந்தால், அந்தப் பரிசைத் தந்திருக்க மாட்டார்கள். அந்த மாணவர்களை மாட்டு மந்தைகளாக நினைத்திருக்கிறார்கள். அங்கே தேவையான ஆசிரியர்களைப் போடவில்லை. இந்த ஆண்டு 850 ஆசிரியர்களை மட்டுமே அனுமதித்திருக்கிறார்கள். பட்டதாரி ஆசிரியர்கள், உடல்நிலை இயக்குநர்கள், தமிழ் ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் எப்படி எல்லா ஆசிரியர்களையும் சேர்த்து மொத்தம் 850 ஆசிரியர்களுக்குத்தான் அனுமதித்திருக்கிறார்கள். இவ்வளவு ஒரு பெரிய ஜனநாயக நாட்டிற்கு இந்த ஆண்டு 850 ஆசிரியர்களை மட்டுமே நியமிக்க அனுமதித்திருக்கிறார்கள். இப்படி ஆசிரியர்கள் இல்லாத நிலை இருந்தால், கல்விக் கூடங்கள் நல்ல முறையில் நடைபெறுமா? இப்படிச் செய்வதன் வாயிலாக உள்ளபடியே இந்த அரசுக்கு கல்வியில் அக்கறை இருக்கிறதா என்கிற சந்தேகம் நாட்டு மக்களுக்கு இருக்கிறது. இன்னொன்றையும் சொல்வேன். கல்வியைக் கட்டாயமாக்க வேண்டும். எல்லா மட்டத்திலும் கல்வியை இலவசமாக அளிக்க வேண்டும். அதுபோல பெண்களுக்கு சம வாய்ப்பு அளிக்க வேண்டும். மாணவர்களுக்கு அளிக்கின்ற கல்வியை தொழில்மயமாக்க வேண்டும். மேல்நாடுகளுக்கு அமைச்சர்களும் அதிகாரிகளும் சென்று பார்த்துவிட்டு வந்து என்ன பயன்? அங்குள்ள நிலைமைகளை நல்ல செயல்களை இங்கே கடைப்பிடிக்க வேண்டும். ஏதோ சென்று பார்த்துவிட்டு வந்தோம் என்கிற நிலைமையில் விட்டுவிடுவது நல்லதல்ல. பெண்களுக்கு எந்த நாடுகள் எல்லாம் சம வாய்ப்பு அளித்தனவோ அந்த நாடுகள் எல்லாம் எல்லா வகையிலும் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. அப்படி சம வாய்ப்பு அளிக்காத நாடுகள் முன்னேற்றம் அடையவில்லை. நம் நாட்டை எடுத்துக்கொண்டால், 50 சதவிகிதம் பெண்கள் அடுக்களைகளில்தான் அடைபட்டுக் கிடக்கிறார்கள். "பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்று பாரதியார் பாட்டியிருக்கிறார். அது பாட்டோடு இருக்கிறதே தவிர செயலில் நடைபெறவில்லை. அந்த நிலைமை இந்த நாட்டிலும் வர வேண்டும். இருக்கின்ற 50 சதவிகித ஆண்களில் கூட 10 சதவிகிதத்தினர் நோயாளிகளாக இருக்கிறார்கள். 40 சதவீதத்தினர் உழைத்து 100 சதவீதத்தினரைக் காப்பாற்றினால் நம் நாட்டில் வறுமை எப்படி ஒழியும்? இந்த நிலைமை



1985 ஜூன் 10] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

தொடர்ந்தால் எப்படி வறுமைக் கோட்டுக்கு மேலே நாட்டு மக்களுடைய பொருளாதாரம் உயரும்? ஆகவே எந்தக் குறைபாடும் இல்லாதிருக்கும் வகையில் இந்த அரசு கல்வித் துறையைப் பொறுத்தவரையிலாவது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, தேர்வுகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதிலும் மாற்றம் தேவை. பள்ளிகளில் காப்பியடிப்பது என்பது இப்போது இயல்பாகப் போய் விட்டது. ஜன்னல் அருகில் மைக் வைத்து பிரச்சாரம் செய்யும் அளவுக்குப் போய் விட்டது. மேஜையில் கத்தியைக் குத்தி வைத்துவிட்டு மாணவர்கள் பரிட்சை எழுதும் அளவுக்குப் போய்விட்டது. மேலும் இத்தகைய நிலையைத் தடுத்ததற்காக பல வருடங்கள் கழித்து ஒரு பேராசிரியரை உத்தமபாளையத்தில் மாணவன் ஒருவன் குத்திக் கொன்ற நிகழ்ச்சியையும் பார்த்தோம். தேர்வைப் பொறுத்தவரையில், அதில் அவசியம் சில மாற்றங்கள் தேவை. அவ்வப்போது மாதாந்திரத் தேர்வுகளில் மாணவர்கள் எடுக்கின்ற மதிப்பெண்களின் சராசரியைப் பார்க்க வேண்டும், அதுபோல் மாணவர்களின் வருகை, நடத்தை போன்றவைகளுக்கும் மதிப்பெண் வைத்து அவற்றில் எடுக்கின்ற மதிப்பெண்களையும் கூட்டிப் பார்த்தாலே போதும். இப்போது இருப்பது மாதிரி இறுதியில் தேர்வுகள் வைக்காத நிலை வந்தாலே இப்போதைய விளைவுகள் எல்லாம் வராது. இதுபற்றி கூட அரசு ஆலோசனை செய்ய வேண்டும். மேலும் இது சம்பந்தமாக எப்படி எல்லாம் நடைமுறைப்படுத்தலாம் என்பது பற்றித் திட்டமிட வேண்டும்.

(முற்பகல் 10-25)

அடுத்தபடியாக, அனைத்துக் கல்வி நிலையங்களையும் கல்வித் துறையின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. விரைவில் அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சித் துறையின் கீழ் பள்ளிகள் இருக்கின்றன, ஆதி திராவிடர் நலத் துறையின் கீழ் பள்ளிகள் இருக்கின்றன, பிற்பட்டோர் நலத் துறையின் கீழ் பள்ளிகள் இருக்கின்றன. இப்படி கல்வித் துறை சில பிரிவுகளாகப் பிரிந்திருக்கிறது. இப்படி பலவாறாகப் பிரிந்திருப்பதால், பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க முடியவில்லை. எனவே, அனைத்துத் துறைகளின் கீழ் உள்ள பள்ளிகளையும் ஒன்றாக ஆக்க வேண்டும். அப்போதுதான் தகுதியும், பெறுகிற சலுகையும் ஒன்றாக ஆகும்.

(முற்பகல் 10-30)

இதைச் சொல்லிவிட்டு, 20 நாளாக இருந்த சி.எல்.-ஐ 12 நாள் சி.எல். என்று குறைத்து விட்டார்கள். தற்செயல் விடுப்பில் 8 நாளைக் குறைத்து விட்டோம் என்று அரசு சொல்லியிருக்கிறது. இதைக் கேட்டால், "மத்திய அரசு செய்திருக்கிறது, நாங்களும் செய்திருக்கிறோம்" என்று சொல்கிறார்கள் வாரம் இரண்டு நாள் லீவு எல்லாம் மேலை நாடுகளிலும் கொடுத்து விடுகிறார்கள். இரண்டு நாள் விடுமுறையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதற்காக ஏற்கெனவே தந்திருந்த தற்செயல் விடுப்பைக் குறைக்க வேண்டிய அவசியமென்ன? "மத்திய அரசு செய்தது, நாங்கள் செய்தோம்" என்று சொல்கிறீர்களே, மத்திய அரசு தன் ஊழியர்களுக்குத் தருகின்ற ஊதியத்தை நீங்கள் மாநில அரசு ஊழியர்களுக்குத் தருகிறீர்களா? மத்திய அரசு போனஸ் தருகிறது. நீங்கள் தருகிறீர்களா? ஏன் நீங்கள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை? மத்திய அரசு இடைக்கால நிவாரணமாக அடிப்படை ஊழியர்களுக்கே நூறு ரூபாய் மாதந்தோறும் தந்ததே. நீங்கள் தந்தீர்களா? ஆகவே இவைகள் எதுவும் செய்யாமல் 20 நாட்களை 12 நாட்களாகக் குறைப்பதற்கு மட்டும் மத்திய அரசைக் காட்டினால், அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஆகவே கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்து, குறைப்பதற்கும் செய்தால், அது ஏற்றுக்கொள்ளக்கூடியது. ஆகவே கொடுப்பதற்கு மட்டும் மத்திய அரசை ஏற்றுக்கொள்ளாமல் குறைப்பதற்கு மட்டும் மத்திய அரசின் வழியை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களே? இப்போது தினமும் ஒரு மணி நேரம் அதிகமாக அரசு ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். ஆக மொத்தத்தில் கணக்கிட்டுப் பார்த்தால், ஒரு மணி நேரம் அதிகமாக வேலை செய்கிறார்கள். வேலை அதிகமாகச் செய்கின்றபோது விடுப்பு நாளைக் குறைக்க வேண்டிய அவசியமில்லை. அதைப்போலவே ஆசிரியர்களுக்கும் குறைக்க வேண்டிய அவசியமில்லை. என்.ஜி.ஓ.க்களுக்குக் கொண்டு வந்திருக்கிறோம், எனவே உங்களுக்கும் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்வீர்களேயானால், என்.ஜி.ஓ.-க்களுக்கு ஈ. எல். 33 நாட்கள்; எங்களுக்கு சி.எல்.-ஐ 12 நாட்கள் என்று குறைத்து விட்டீர்கள். ஈ.எல்.-ஐ அவர்களுக்கு 33 நாட்கள் தந்ததைப் போலவே எங்களுக்கும் தந்துவிடுங்கள். நாங்கள் மறுக்கவில்லை. ஆகவே அந்த ஈ.எல்.-ஐ உயர்த்துங்கள். அந்த அறிவிப்பையாவது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தர வேண்டும். ஆசிரியர்களுக்காக வென்று நான் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே அந்த ஈ.எல்.-ஐ உயர்த்துங்கள். அந்த அறிவிப்பையாவது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தர வேண்டும். ஆசிரியர்களுக்காக வென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



அதற்கு அடுத்து, கிராமப்புறத்திலே இருப்பவர்களுக்கெல்லாம் எந்தவிதமான பயனும் இல்லை. கிராமப்புறத்திலே இருப்பவர்களுக்கு ரூரல் அலவன்ஸ் 10 ரூபாயை 20 ரூபாயாக உயர்த்தி இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் கிராமப்புறத்திலே இருப்பவர்களுக்கு வீட்டு வாடகைப் படி தந்திருக்கிறார்களா என்றால் இல்லை. அவர்கள் வீட்டு வாடகைப் படி இல்லாமல் இருக்கிறார்கள். கிராமங்களில் வீடு இலவசமாகவா தருகிறார்கள். அவர்களுக்கு வீட்டு வாடகைப் படியைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊதியக் குழுவின் பரிந்துரைகளை 1-4-1984 முதல் அமுல்படுத்த வேண்டுமென்று நாங்கள் கேட்டிருந்தோம். 1-10-1984 முதல்தான் தந்திருக்கிறார்கள். அதுகூட ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நான்கு ஆண்டுகளுக்கு முன்னாலே முதலமைச்சர் அவர்கள் ஒரு மாநாட்டில் சொல்லி, அதற்குப் பின்னாலே இப்போது இந்தக் கூட்டத் தொடரின் இடைக்காலத்திலே நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு மாநாட்டிலே சொல்லி இந்த வீட்டு வசதி வாரியத்தை நாங்கள் அமைக்கிறோம் என்று மீண்டும் சொல்லி இப்போது வீட்டு வசதி வாரியத்தின் தலைவரைக்கூட போட்டிருக்கிறார்கள். நான்கு ஆண்டுகளுக்குப் பின்னாலே இப்போது அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு காலதாமதம் ஆனதற்கு என்ன காரணம் என்று நான் பார்த்த வகையிலே, தேர்தலிலே நின்று தோற்றவர்கள், சீட்டுக் கிடைக்காதவர்கள், கட்சியிலே கலாட்டா செய்பவர்கள்—இப்படிப்பட்டவர்களைத் தேடிப் பிடித்து, அந்த இடத்திலே நியமிக்க வேண்டுமென்பதற்காக இவ்வளவு காலம் தாழ்த்தினார்களா என்று எனக்குத் தெரியாது. ஆனால், இப்போது . . . . . .

**டாக்டர் இரா. சனார்த்தனம்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதையாவது சொல்வதானால், வேறு எதையாவது சொல்லலாம். ஆனால் அவர் பேசுகிற முறை யாரோ ஒருவரை, இந்த அவையிலே இல்லாத ஒருவரைப்பற்றி மறைமுகமாகக் குறிப்பிடுவதாக இருக்கிறது. ஆகவே அவர்கள் அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்** : துணைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் குறிப்பிடவில்லை. என்னுடைய ஊகத்தைச சொன்னேன். ஆக, அப்படி அவரை நியமிப்பதற்கு நான்கு ஆண்டுக் காலம் ஆகியிருக்கிறது என்று சொன்னேன். வீட்டு வசதி வாரியத்தை நான் வரவேற்கிறேன் என்றாலும் கூட . . .

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான்கு ஆண்டு காலத்திற்கு முன்னால் சொல்லியிருக்கிறோம். அதற்குப் பிறகு அது பரிசீலிக்கப்பட்டு உத்திரவிடப்பட்டது. அதற்குப் பிறகு அதற்குத் தகுந்த ஒரு ஆளைத் தேடி இப்போது போட்டிருக்கிறோம். அதைப்பற்றிக் குறிப்பிடுகின்றபோது, அருமைமிகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்சியிலே கலாட்டா செய்கின்றவர்கள், தேர்தலிலே தோற்றுப்போன வர்கள் என்றெல்லாம் பேசுவது என்பது நல்லதல்ல; நல்ல சகுனம் அல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த வீட்டு வசதி வாரியம் இப்போது அமைக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஒரு முக்கியப் பிரச்சினை, ஊராட்சி ஒன்றியத்திலே பணியாற்றிய ஆசிரியர்கள் வீடு கட்ட வேண்டுமென்று நிலம் வாங்கினால், அதற்கு ஏற்கெனவே அரசின் அனுமதி தேவையில்லை; இப்போது அரசிடத்திலே அனுமதி பெற வேண்டும். அண்மையிலே ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். மாற்றப்பட்டிருக்கின்ற அந்த ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கு கல்வித் துறை அனுமதி அளிக்கிறதா என்று பார்த்தால், நீங்கள் அப்போது பணி யாற்றிய ஊராட்சி ஒன்றியத்திலே வாங்கி வாருங்கள் என்று சொல்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத்திலே கேட்டால், நீங்கள் எங்களை விட்டு, அங்கே போய் விட்டீர்கள், கல்வித் துறையிடமே வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல் கிறார்கள். எனவே அந்த ஆசிரியர்கள் திரிசங்கு சொர்க்க நிலையில் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் குறிப்பு எடுத்து வைத்துக் கொண்டு தயவுசெய்து இதற்கு ஒரு முடிவான ஆணையை வெளியிட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் அரசு ஊழியர்களாக 1—6—1981 முதல் மாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குரிய பணி விதிமுறைகள் இதுவரை உருவாக்கப்படவில்லை. ஆகவே அவர்களுக்கு புரோமோஷன் ஆப்பர் சூனிட்டிஸ் பதவி உயர்வுகள் எல்லாம் இப்போது தடைபட்டிருக்கிறது. பணிவிதி முறைகள் உருவாக்குவதற்கு உரிய நடவடிக்கையையும் அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பள்ளிக் கட்டிடத்திற்காக ஒதுக்கப்பட்டிருப்பது 1 கோடி ரூபாய். சென்ற முறை நான் பேசும்போது தெரிவித்திருக்கிறேன், " இந்த ஒரு கோடி ரூபாயிலே, 200 ஷெட்டுகள் கட்டலாம், வகுப்புகள் கட்டலாம், பள்ளிக் கட்டிடம் கட்ட முடியாது " என்று சொல்லியிருக்கிறேன். அதற்குக் கூட ஒரு ஆலோசனை சொல்வதற்கு விரும்புகிறேன். நாம் எத்தனையோ முறைகளில் கடன்கள் எழுப்புகிறோம். கட்டிடம் கட்டுவதற்கு அரசு விரும்பு



கிறது. ஆனால் நிதி இல்லை என்று சொல்கிறது. பெரும் தனக்காரர்களிட மிருந்து கடனாக, ஒரு 20 ஆண்டுக் காலக் கடனாக, ஒரு ஆயிரம் கோடி ரூபாயைத் திரட்டுவதற்கு அரசு அறிவிப்பு தந்தால், எத்தனையோ பேர்கள், பணம் வைத்திருப்பவர்கள் எல்லாம் அக்கடன் தொகைக்கு வருமான வரி இல்லையென்று சொன்னால் நிச்சயமாகத் தருவார்கள். ஒரு ஆயிரம் கோடி ரூபாயை அவ்வாறு பெற்று, அரசு ஒரு இரண்டு ஐந்தாண்டுத் திட்டம் போட்டு பத்து ஆண்டுகளிலே அனைத்துப் பள்ளிக்கூடங்களுக்குமே கட்டிடத்தைக் கட்ட முடியும். ஏன் இந்த வகையில் அரசு முயற்சி எடுத்துக் கொள்ளக் கூடாது? என்னுடைய ஆலோசனையை தயவுசெய்து பரிசீலிக்க வேண்டும். எதிர்த்தரப்பிலே இருப்பவன் சொன்னான் என்ற காரணத்தாலே விட்டுவிடாதீர்கள் என்று மட்டும் நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே பள்ளிக்கூடக்கட்டிடம் மிக மிகத் தேவை. சீக்கிரமாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-35)

ஊதியக் குழு அறிக்கை வந்த பிறகு போனஸ் பற்றி தெரிவிக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆளும் கட்சி தேர்தல் அறிக்கையில் அறிவித்த படியே நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் அது தரப்படவில்லை. அதைப் போலவே தேர்தல் அறிக்கையில் ஆளும் கட்சி அறிவித்தபடி, இருவழிப் பயணச் சலுகை வழங்கப்படும் என்று எதிர்பார்த்தோம். அதுவும் தரப்பட வில்லை. அதைப் போலவே தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் விடுப்புக்கால பயணச் சலுகை அளிக்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் அரசு தரப்பில் அறிவித்தபடி எதிர்பார்த்தோம். அதுவும் வழங்கப்படவில்லை. அதைப் போலவே நகராட்சி மன்ற ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது ரூபாய் 5,000 வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதுவும் இப்போது வழங்கப்பட வில்லை. இவைகளெல்லாம் ஆளும் கட்சி தேர்தல் அறிக்கையில் அறிவித்த படி, சொன்னபடி எதிர்பார்க்கப்பட்டன. இவைகளையெல்லாம் தரப்பட வில்லை என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடம் சென்ற முறை — ஊதியக் குழு அறிக்கை வெளியிடுவதற்கு முன்பு — மேல்நிலைப் பள்ளிகளில் போதிக்கும் எம்.எட். பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு இன்சென்டிவ் அளிக்கப் பட வேண்டும் என்று கேட்டபோது, அதைக் குறித்து ஊதியக் குழுவிடம் சொல்லியிருக்கிறோம், அவர்கள் அதைக் குறித்து முடிவெடுப்பார்கள் என்று இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் அப்படிப்பட்ட அறிவிப்பு எதும் தற்போது வெளியிடப்படவில்லை. அதைப்போலவே புலவர் பட்டம் பெற்றவர்களுக்கும், பி.எட். பட்டம் பெற்றவர்களுக்கும் இன்சென்டிவ் எதும் அறிவிக்கப்படவில்லை

என்பதையும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்துப் பிரிவுகளைச் சார்ந்தவர்களும் பெறும்போது இந்தப் பிரிவினர் மட்டும் பெறாமல் இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும் தந்துவிடுவோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பெரும்போக்காக—ஒரு பெருந்தன்மையோடு இன்றே அறிவிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவைகளையெல்லாம் செய்யாவிட்டால், ஆசிரியர்களுக்கு வேறு வழியில்லை என்ற அடிப்படையில் அரசே ஆசிரியர்களைப போராடுவதற்குத் தூண்டுகிறது என்று எண்ண வேண்டியிருக்கிறது. இதைச் செய்யாவிட்டால், ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள்பால் அன்புகொண்ட, உண்மையான ஆசிரியர் சங்கங்களும், அரசு ஊழியர் சங்கங்களும் இணைந்து போராட வேண்டிய அவசியம் ஏற்படும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நல்ல வேளையாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். ஊதியக் குழுவின் அறிவிப்பு வெளிவந்த பிறகு, விலைவாசி எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை மட்டும் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கெனவே ஓட்டல்களில் இட்டிலி இரண்டு 60 பைசாவுக்கு விற்றது, இப்போது 75 பைசாவுக்கு விற்கப்படுகிறது. நான் சொல்லுவது சாதாரண நடுத்தர ஓட்டலில் உள்ள விலை. தோசை ஏற்கெனவே ஒரு ரூபாய் விற்றது இப்போது ரூ. 1-25-க்கு விற்கப்படுகிறது. போண்டா ஏற்கெனவே ஒரு ரூபாய்க்கு விற்கப்பட்டது இப்போது ரூ. 1-20-க்கு விற்கப்படுகிறது. காபி ஒரு கப் ஏற்கெனவே 60 பைசாவுக்கு விற்றது இப்போது 80 பைசாவிற்கு விற்கப்படுகிறது. உப்புமா ஏற்கெனவே ஒரு ரூபாய்க்கு விற்றது இப்போது ரூ. 1-10-க்கு விற்கப்படுகிறது. மெதுவடை ஏற்கெனவே 50 பைசாவுக்கு விற்றது இப்போது 75 பைசாவுக்கு விற்கப்படுகிறது. இதெல்லாம் ஊதியக் குழுவின் அறிக்கையை வெளியிட்ட பிறகு இருக்கிற நிலைமை. எனவே ஊதியத்தை உயர்த்துவதைவிட விலைவாசியைக் குறைக்க வேண்டும் அல்லது கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இல்லாவிட்டால் எங்களுக்குப் பணமாக அல்ல; பொருள்களாகத் தந்துவிடுங்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஊதியக் குழுவின் அறிக்கையில் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஏதும் இல்லை. கேட்டால் "பல்கலைக் கழக மானியக் குழுதான் அவர்களுக்கு ஊதியத்தை அதிகரிக்க வேண்டும், அது எங்கள் கையில் இல்லை" என்று சொல்லப்படுகிறது. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஊதியக் குழுவினால் அவர்களுக்கு எந்த நன்மையும் ஏற்படாவிட்டாலும்கூட, அவர்களுக்கு ஏற்கெனவே கொடுத்து வந்த ஊதியத்திலிருந்து பெருமளவுக்கு ரெக்கவரி செய்யப்பட்டு வருவது எந்த வகையிலும் நியாயமில்லை என்பதைத் தெரி



வித்துக்கொள்கிறேன். பலரை கல்லூரிகளில் தற்காலிகமாக ஆசிரியர்களாக நியமித்திருக்கிறார்கள். அவர்கள் பல ஆண்டுகளாகப் பணியாற்றிய பிறகு, இப்போது தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அதன் காரணமாக அவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட இன்கிரிமென்ட் எல்லாம் ரெக்கவரி செய்யப்படுகிற நிலை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் டெமான்ஸ்ட்ரேட்டர் ஒருவர் ஒரு கல்லூரியில் நியமிக்கப் படுகிறார். 1976-ல் அவருக்கு அடிப்படைச் சம்பளம் 500 ரூபாயில் தொடங்கு கிறது. ஆண்டு தோறும் அவர் ஊதிய உயர்வு பெறுகிறார். 1981 ஆம் ஆண்டு அவர் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு நிரந்தரமாக்கப்படுகிறார். முன்பே பல ஆண்டுகளாகப் பணியாற்றி ஆண்டு தோறும் அவர் ஊதிய உயர்வு பெற்றிருந்தாலும்கூட, இப்போது தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப் பட்ட பின்பு மீண்டும் ரூ. 500 அடிப்படைச் சம்பளத்திலேயே அவரது ஊதியம் ஆரம்பிக்கப்படுகிறது. இதன் காரணமாக கொடுத்த இன்கிரி மென்ட் தொகைகளை—3,000, 5,000 ரூபாய்—வரை தற்போது அவர்களிட மிருந்து ரெக்கவரி செய்கிற பரிதாப நிலை உருவாகியிருக்கிறது. இந்த நிலை கல்லூரி ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல, பட்டதாரி ஆசிரியர்கள், இடை நிலை ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்கள் என்று பலதரப்பட்ட ஆசிரியர் களுக்கும் இந்த நிலை உருவாகியிருக்கிறது. எனவே தற்காலிகமாக நியமிக்கப்பட்ட இத்தகைய ஆசிரியர்களுக்கு எல்லாம் அரசு ஒரு தளிர்ப்பு அளித்து அவர்களையெல்லாம் பணியில் சேர்ந்த நாளிலிருந்தே நிரந்தரம் செய்யவும் தொடர்ந்து ஊதியம் பெறவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களையும் நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கும் திட்டத்தை அமுல் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக முதலில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இத்தகைய ஆசிரியர்கள் அந்தப் பள்ளியின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு மாணவர் எண்ணிக்கை அதிகரித்து அது நல்ல நிலையை அடைந்த பள்ளியாக மாறுகிற போது, அந்த ஆசிரியர்களுக்கெல்லாம் தண்டனை வழங்குவதைப்போல் அவர் கள் அந்தப் பள்ளிகளில் கூடுதல் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறார் கள். பட்டதாரி ஆசிரியர் ஒருவர் அங்கெல்லாம் தலைமை ஆசிரியராக நிய மிக்கப்படுகிறார். இவ்வாறு கூடுதல் தலைமை ஆசிரியராக நியமிக்கப்படுகிற அவர்களுக்கு சாகிற வரை டிரான்ஸ்பர் இடையாது. அவருக்கு மேலே நியமிக்கப்படுகிற பட்டதாரி தலைமை ஆசிரியர் பல நேரங்களில் அவருடைய மாணவராகக் கூட இருக்கலாம், அல்லது அவருடைய பிள்ளையாகவே கூட இருக்கலாம். இவ்வாறு மிகவும் வயது குறைந்தவர்களிடம் இவர்கள்

உதவியாசிரியராக அவமானப்பட்டுக் கொண்டே பணியாற்ற வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே அவர்களுக்கெல்லாம் தனியாக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் அல்லது அவர்களை வேறு பள்ளிகளுக்காவது ஊதியப் பாதுகாப்போடு மாற்ற வேண்டும். தகுதிக்கு ஏற்ற ஊதியம் தர வேண்டுமென்று கேட்டபோது, இதைப் பரிசிலிப்பதாகச் சொல்லப்பட்டது. அது இதுவரை செய்யப்படவில்லை. எனவே தாமே படித்துத் தங்கள் தகுதியை உயர்த்திக் கொண்டவர்களுக்கு அத்தகுதிக்கேற்ற ஊதியத்தை உயர்த்தித் தர அரசு முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** ; 30 நிமிடங்கள் கேட்டு, 30 நிமிடங்கள் முடிந்துவிட்டன என்பதை நினைவுபடுத்துகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்** ; நன்றி, முடித்துக் கொள்கிறேன். அடுத்து, மேல்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்ட முதுகலைப் பட்டத்தோடு 5 ஆண்டு பட்டதாரி ஆசிரியாக அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என்று முன்பு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது அதில் மாற்றம் செய்து முதுகலையாசிரியராக 2 ஆண்டு பணியாற்றி யிருக்க வேண்டும் அல்லது தலைமையாசிரியராகப் பணியாற்றிருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. தனியார் பள்ளிகளில் 6 ஆண்டு பணியாற்றியவர் களுக்குக் கூட அந்த இடம் தரப்படுவதில்லை. எனவே இந்த நிலையை மாற்றி ஏற்கெனவே இருந்த ஆணையை அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் குழந்தைகளுக்குப் படிப்பு உதவித் தொகை கேட்டோம். இலவசக் கல்வி கேட்டோம். ஆனால் அதற்கு ஆசிரியர் நல நிதியிலிருந்து வாங்கிக் கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டது. இப்படிச் சொல்லாமல் ஒரு துளி மையினால் ஒரு ஆணை பிறப்பித்து இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய கட்சியின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது குடியிருப்போர் நிலமெல்லாம் அவர் களுக்கே சொந்தம் என்று செய்யப்பட்டபோது, அதை ஒரு துளி மையினால் சாதித்தாரே தவிர வேறு நிபந்தனைபோடவில்லை. அவர்கள் எல்லாம் பணம் கட்ட வேண்டும் என்று சொல்லிவிடவில்லை. அந்த வகையில் நீங்களும் ஆசிரியர் குழந்தை என்ற சான்று இருந்தாலே அனைத்து பட்டத் திலும் கல்வி இலவசம் என ஒரு துளி மையினால் உத்தரவிட்டு ஆணை பிறப் பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





(முற்பகல் 10-40)

அப்படிச் சொல்லாததால் இப்போது யாரும் அந்தச் சலுகையைப் பெற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, இதைச் செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மெரிட் அடிப்படையில் 'ஸ்காலர்ஷிப்' என்று இருக்கிறது. அதற்கும் ஆறாயிரம் ரூபாய் வருமான வரம்பு என்று வைத்திருக்கிறார்கள். எதற்காக இந்த வருமான வரம்பு ? எந்த ஆசிரியர் இதைவிடக் குறைவாக ஆண்டுச் சம்பளம் வாங்குகிறார் ? தரக்கூடாது என்று இந்தச் சலுகையை வைத் திருக்கிறார்களா ? ஸ்காலர்ஷிப்புக்கு ஆறாயிரம் ரூபாய் வருமான வரம்பு என்றும் பாலிடெக்னிக்குகளாக இருந்தால் மூவாயிரம் ரூபாய் வருமான வரம்பு என்றும் வைத்திருக்கிறார்கள். இதனால் கடைநிலை ஊழியர்கள் கூட இந்தச் சலுகையைப் பெறுவதாக நிலை இருக்கிறது. ஆகவே இதை மாற்றுங்கள் வருமானவரம்பை நீக்குங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நல்லாசிரியர் விருதுபெற்றவர்களுக்கு ஐநூறு ரூபாய் ரொக்கமும் சான்றிதழும் தருகிறார்கள். நல்லாசிரியர் விருதை அநேகமாக ஓய்வு பெறும் நிலையில் தான் ஓர் ஆசிரியர் பெறுகிறார். ஆகவே அப்படி நல்லாசிரியர் விருது பெறும் ஆசிரியர்களுக்கு அதைப் பாராட்டி அவர்களுடைய பதவியை மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்புத் தரக்கூடாதா என்பதைப் பற்றிச் சிந்தியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்நிலை வந்தால் அந்த நல்லா சிரியரின் அனுபவம் மாணவர்கட்குப் பயன்படும்; கல்வித்தரம் உயரும், அதைச் செய்யுங்கள் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

சிறுபான்மையினர் பள்ளிகளில் அவர்களுடைய மத வளர்ச்சிக்கென்று ஐந்து சதவீதம் 'ஊதியத்தில் பிடித்தம் செய்கிறார்கள்' இதைப்பற்றி அரசுக்கு ரிப்போர்ட் வந்திருக்கிறது. இதனால் ஆசிரியர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார் கள். அதைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். 'மிஷன் கான்ட்ராக்ட்' என்று சொல்லி ஆசிரியர்களிடம் கொள்ளையடிக்கிறார்கள். இல்லையென்றால் ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்கிறார்கள். கொடுமைப் படுத்துகிறார்கள். இதற்கெல்லாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளையும், தனியார் பள்ளிகளையும் அரசுப் பள்ளி களாக எடுத்துக்கொண்ட பின்னர், பணிசேர்ப்பு செய்த ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை. அதனால் அவர்கள் பல்லாண்டுகளாக எந்த விதப் பயனும் இல்லாமல் தவிக்கிறார்கள். அவர்களுக்குப் பணி சேர்ப்பு செய்த நாளிலிருந்து நிரந்தரம் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். தற்காலிக ஆசிரியர்களுக்கு தேர்வாணைக் குழுவின் ஒப்புதல் தேவையில்லை என்று சட்டம் கொண்டுவர வேண்டும்.

அல்லது நிதியமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொன்னது போல, ஆசிரியர்கள் தேர்வாணைக் குழு என்று உருவாக்கி அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பணியில் இருப்பவர்களுக்கு அவர்கள் சேர்ந்த நாளிலிருந்து எல்லாச் சலுகைகளையும் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பயிற்சிக்குரிய ஊதிய உயர்வு சிறப்பாசிரியர்களுக்கும் அளிக்க வேண்டும் என்று ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்டு அதற்காக கல்வித் துறையில் பள்ளிவிவரம் சேகரிக்கப்பட்டுள்ளது. உடற் கல்வி ஆசிரியர்கள், கலை ஆசிரியர்கள், தொழில் ஆசிரியர்கள், இசை ஆசிரியர்கள் ஆகியவர்களுடைய புள்ளிவிவரத்தை எடுத்து இரண்டு வருடங்கள் ஆகின்றன. ஆனால் அது பற்றி இன்னும் நடவடிக்கை இல்லை. ஏன் அதன் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது? ஓராண்டு ஊதிய உயர்வை ஏன் அவர்களுக்குத் தரக்கூடாது? அதைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே ஒரே ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். தமிழாசிரியர்களை, ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்திலே சிறப்பாசிரியர்கள் என்ற பிரிவிலே வைத்தார்கள். இப்பொழுது தமிழ் நாடு அரசு ஆள்கிறது. தமிழுக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஆட்சி நடக்கிறது. இன்னும் அவர்களை அந்தப் பிரிவிலேயே வைத்துக் கொண்டிருக்கிறோம். அவர்களை உதவி ஆசிரியர்கள் பிரிவுக்கு மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்குப் பணம் தேவையில்லை. ஆகவே இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து தமிழ் கல்லூரியில் உள்ள முதல்வர், பேராசிரியர் ஆகியவர்களுக்கு கலைக் கல்லூரி ஆசிரியர்களுடைய சம்பளம், சலுகைகள் இல்லை. தமிழ்நாட்டிலே இருக்கக் கூடிய தமிழ்க் கல்லூரியின் முதல்வருடைய சம்பளம் மற்ற கல்லூரி முதல்வரின் சம்பளத்தைவிட குறைவாக இருக்கிறது என்றால், தமிழை எவன் மதிப்பான்? ஆகவே தமிழ் கல்லூரியில் உள்ள முதல்வருக்கும், பேராசிரியர்களுக்கும் மற்ற கல்லூரிகளில் உள்ள சம்பளத்தையும், சலுகைகளையும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழாசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக ஆக்கிய பிறகு, அவர்களுக்கு ஊதிய நிர்ணயம் அளிக்கப்படவில்லை. அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரான்ஸ் நாட்டிலே பிரஞ்சு மொழியிலேதான் முன்னுக்கு வந்திருக்கிறார்கள். ஜெர்மென் நாட்டிலே ஜெர்மென் மொழியில்தான் முன்னுக்கு வந்திருக்கிறார்கள். ஜெர்மென் நாட்டிலே 'மார்சே' என்ற ஊரிலே நான் தங்கியிருந்தபோது ஜெர்மென் நாட்டிலே 'மெசல்' என்ற ஊரிலே நான் தங்கியிருந்தபோது என்னுடைய நண்பர் ஒருவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. உடனே





டாக்டரைக் கூப்பிட்டோம். அவர் ஒரு தேர்ந்த டாக்டர், பட்டம் பெற்ற டாக்டர். ஆனால் ஆங்கிலத்திலே அவரிடம் சொன்னால், அவருக்குப் புரியவில்லை. ஜெர்மன் மொழியில் டாக்டருக்குப் படித்து முடித்துவிட்டு வைத்தியம் செய்து கொண்டிருக்கிறார். ஆனால் நாம் வேறு மொழியில் மருத்துவத்தைப் படித்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய தமிழ் மொழி வளர வேண்டும் என்றால், நர்சரியிலிருந்து ஆங்கிலம் புகுந்திருப்பதைத் தடுக்க வேண்டும். பொறியியல், சட்டம், மருத்துவம் ஆகிய எல்லாவற்றையும் தமிழில் போதிக்க வேண்டுமென்றால், அத்துறைகளிலே பயன்படுகிற 'டெக்னிக்கல்' சொற்களுக்கு தமிழில் வார்த்தைகளைக் கண்டுபிடித்து வெளியிட வேண்டும். அதற்காக ஏற்கெனவே ஒரு குழுவை நியமித்து அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றாலும், அதை மேலும் விரிவுபடுத்த விரைவுபடுத்தவும் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரான்ஸ் நாட்டிலே தமிழ் பள்ளி என்று தனியாக அங்கே உள்ள தமிழ் மக்கள் நடத்துகிறார்கள். அதற்குப் போதிய உதவியை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் 'ஈஃபில் டவர்' பக்கத்திலே துவக்கி வைத்த இந்திய கலாச்சார விழாவைப் பற்றி பத்திரிகையிலே வந்திருக்கிறது. அங்கே நான் சென்றிருந்தபோது, ஸ்டால்கள் அமைக்கப்பட்டிருந்தன. அந்த ஸ்டால்களைப் பார்த்தபோது, அங்கே 'தமிழ் நாடு ஸ்டால்' இல்லை. குஜராத் ஸ்டால் இருக்கிறது, உத்திரப் பிரதேசம் ஸ்டால் இருக்கிறது. வட மாநிலங்களுக்கு அங்கே இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டினுடைய கலாச்சாரத்தைப் பரப்ப அங்கே இடம் இல்லை. ஆனால் அங்கே இட்லி தந்தார்கள், தோசை தந்தார்கள் என்று இன்று பத்திரிகைகளிலே சொல்கிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் உணவை மட்டும் பார்த்தார்கள் போலும். தமிழ் நாட்டுக் கலாச்சாரத்தைப் பரப்ப மத்திய அரசு தமிழ் நாட்டிற்கு வாய்ப்பு கொடுக்கவில்லையா அல்லது இந்திய அரசிடம் தமிழ்நாடு அரசு அந்த வாய்ப்பைக் கேட்டுப் பெறவில்லையா? கலாச்சாரத்தைக் காட்டுவதற்குரிய நடவடிக்கையை தமிழக அரசு எடுக்கவில்லையா? அல்லது இந்திய அரசிடம் அதைக் கேட்டுப் பெறவில்லையா? இந்திய அரசு இதைக் கேட்டுப் பெறவில்லை

(முற்பகல் 10-45)

என்று சொன்னால் எந்த நாட்டிலே எந்த நிகழ்ச்சி நடந்தாலும், இந்திய கலாச்சாரத்தை விளக்குகின்ற, காட்டுகின்ற, படம் பிடித்துக் காட்டுகின்ற நிகழ்ச்சி என்றால், அந்த இடத்திலே தமிழகம் இடம் பெறவேண்டுமென்று ஏன் போராடி அங்கே இடம் பெறவில்லை என்று கேட்டுக்கொள்கிறேன். இனிமேலாவது அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 ஜூன் 10

தமிழ்அச்சுக்களை பிரான்சுக்குக் கொண்டுபோய் தமிழ் புத்தகங்கள் வெளியிடுவதற்கு அங்கேயுள்ள தமிழர்கள் துடிக்கின்றார்கள். ஆனால் தமிழ் அச்சுக்களை, அது சுயமாக இணைக்கின்ற காரணத்தினாலே, வெளி நாட்டிற்கு எடுத்துச் செல்லக்கூடாது என்று இந்திய அரசு தடுத்திருக்கின்றது. ஆகவே இந்திய அரசு அப்படி தடுத்திருந்தாலும்கூட, தமிழ் அச்சுப்பொருள்கள் வெறும் சுயமாக இல்லாமல், அச்சாக இருந்தால் அதையாவது அனுமதிக்கக் கூடிய நடவடிக்கையை இந்த அரசு ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வதால், அங்கே தமிழ் வளர்வதற்கு, தமிழ் புத்தகங்கள் வெளியிடுவதற்கு, அது வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கல்வித்துறையில் மண்டல உடல் கல்வி ஆய்வாளர்கள் 5, 6 மாவட்டங்களுக்கு ஒருவர் விதம் இருக்கின்றார்கள். அதை ஒரு ரெவின்யூ மாவட்டத்திற்கு ஒருவர் என்ற அளவில் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் உடல் கல்வியை வளர்க்கமுடியும். உடல் கல்விக்காக தனியாக அமைச்சர் நியமிக்கப்போவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் செய்தால் நன்றாக இருக்கும். ஆகவே இதையெல்லாம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றே ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். தொடக்கப் பள்ளிகளுக்கு எழுத்தர் கிடையாது. தலைமையாசிரியர் அவர்களுக்கு எழுத்து வேலைகளைப் பார்க்கத்தான் நேரம் இருக்கின்றது. ஒரே ஒரு எழுத்தரை நியமிக்கலாம். நடுநிலைப் பள்ளிக்கு ஒரு எழுத்தர், ஒரு ரெக்கார்ட் கிளார்க்கைப் போடவேண்டும். உயர்நிலைப் பள்ளிக்கு இப்போது இருக்கின்ற ஸ்டாப்பை விட அமைச்சுப் பணிகளுக்காக என்று இன்னும் கொஞ்சம் அதிகப் படுத்த வேண்டும். மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அதைப்போல் அமைச்சுப் பணியாளர்களை அதிகப்படுத்தவேண்டும். அங்கு வகுப்புகள் அதிகமாகி விட்டன. மாணவர்கள் அதிகமாகிவிட்டார்கள். ஆசிரியர்கள் அதிகமாகி விட்டார்கள். ஆனால் அந்தக் காலத்திலே இருந்த கிளார்க்கள்தான் இருந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அங்கே பணிகள் நடக்கவில்லை. அங்கே தேக்கம் ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே எப்படியாவது முயன்று நம்முடைய நிதியமைச்சர் அவர்களிடத்தில் போராடி கல்வி அமைச்சர் அவர்கள் நிதியைப் பெற்று அப்பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் கல்வித் தரம் உயரும். கல்வித் தரம் உயர்வதற்காகச் சொல்லப் பட்ட ஆலோசனைகள் தான் இவைகள். இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்று செய்ய வேண்டும்.



1985 ஜூன் 10] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

கல்வி அமைச்சர் அவர்கள் எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றி இங்கேயே அறிவிப்பு தரவேண்டும். இப்போது சொல்லி வந்தவைகளிலே பலவற்றை ஏற்று அறிவிப்பு செய்வார்கள் என்று கருதுகிறேன். விவாத கால மரபை மாற்றினாலும் அந்த மரபை மாற்றிவிடாதீர்கள் என்று கல்வி அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து அமைகிறேன்.

4. மேலவை விதி 82-ன் கீழ் அளிக்கப்பட்ட விவர அறிக்கை.
ஸ்ரீலங்கா வாழ் தமிழர்கள் பிரச்சினை குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவை விதி 82-ன் கீழ் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஸ்ரீலங்கா வாழ் தமிழர்கள் பிரச்சினை பற்றி ஒரு அறிக்கையை அவைக்கு அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீலங்கா வாழ் தமிழர்களுடைய பிரச்சினை பற்றி ஸ்ரீலங்கா அதிபர் ஜெயவர்த்தனே அவர்களும் இந்திய தலைமை அமைச்சர் மாண்புமிகு இராஜீவ் காந்தி அவர்களும் அண்மையிலே பேச்சு வார்த்தைகள் நடத்திய செய்தி செய்தித் தாள்களிலே வெளிவந்ததற்குப் பிறகு மாண்புமிகு தலைமை அமைச்சர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களோடு தொலைபேசியிலே பேசினார் என்ற செய்தியும் வந்தது. ஆக இது பற்றிய விவரங்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புவதனாலே, அதையொட்டி அந்த நிலை மையை மட்டும் விளக்க விரும்புகிறேன்.

இந்தியத் தலைமை அமைச்சர் மாண்புமிகு இராஜீவ் காந்தி அவர்கள் 4—6—1985 அன்று இரவு தொலைபேசியின் வாயிலாகத் தம்முடன் தொடர்பு கொண்டு பேசினார் என்றும், மாண்புமிகு இராஜீவ் காந்தி அவர்கள், தாம் மறுநாள் வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருப்பது பற்றித் தெரி வித்ததோடு, ஸ்ரீலங்கா அதிபர் திரு. ஜெயவர்த்தனே அவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தை பயனுள்ளதாகவும் ஸ்ரீலங்கா வாழ் தமிழர் பிரச்சினைக்கு விரைவில் சுமுகமான தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையூட்டுவதாகவும் இருந்த தென்று தெரிவித்ததாகவும், மாண்புமிகு இராஜீவ் காந்தி அவர்களின் வெளி நாட்டுச் சுற்றுப்பயணம் வெற்றிகரமாக அமைய வாழ்த்துக்களைத் தம் சார் பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் தெரிவித்ததாகவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கொள்கின்றார்கள்.

இந்தியாவின் தலைமை அமைச்சர் மாண்புமிகு திரு. இராஜீவ் காந்தி அவர்கள் அண்மையில் செய்தித்தாள் நிருபர்களுக்கு அறிவித்த அறிவிப்பில் கூறியிருப்பது "ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை பற்றி இலங்கை அதிபர்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூன் 10

திரு. ஜெயவர்த்தனே அவர்களுடன் பேச்சு நடத்தினேன். ஸ்ரீலங்கா அரசு புதிய திட்டம் ஒன்றினை வகுத்திருக்கிறது. அதன் மூலம், அரசியல் தீர்வு காண, ஸ்ரீலங்கா அரசினர் விரும்புகிறார்கள்.

ஸ்ரீலங்கா அரசும், ஸ்ரீலங்கா தமிழர்களும் சுமுகமான தீர்வு காண இந்திய அரசு பெரிதும் முயலும், அதற்கான நடவடிக்கைகளுக்குப் பெரிதும் உதவும்.

நானும் திரு. ஜெயவர்த்தனே அவர்களும் என்ன பேசினோம் என்பதை, இப்போதைக்கு வெளியிடுவது அவ்வளவு உகந்ததாக இருக்காது. ஆனாலும் இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளத் தக்க வகையில் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

8—6—1985 அன்று, பாரிஸ் நகரத்தின் தொலைக் காட்சி நிலையத்தினருக்கு மாண்புமிகு இந்தியத் தலைமை அமைச்சர் அவர்கள், பேட்டி கொடுத்த போது கூட ஸ்ரீலங்கா வாழ் தமிழர் பிரச்சினை பற்றிக் குறிப்பிடுகையில், மேற் சொல்லப்பட்ட திருத்தத்தையே உறுதிபடுத்திக் கூறியுள்ளார்கள்.

அது மட்டுமல்லாமல், எகிப்திலேயும் சரி, பிற நாட்டு நிருபர்கள் கூட்டத்திலே பேசுகின்றபோதும் சரி, அவர்கள் ஸ்ரீலங்கா வாழ் தமிழர்கள் பிரச்சினை பற்றி அவர்கள் கேள்வி எழுப்பியபோதெல்லாம். இந்தக் கருத்தையே வலியுறுத்தி வந்திருக்கின்றார்கள். அந்த நாட்டு நிருபர்களிடத்திலே இது பற்றிய கருத்துக்களைத் தெரிவித்ததாக குறிப்பிட்ட பத்திரிகைகளிலேயும்

(முற்பகல் 10-50)

வந்திருக்கிறது. இலங்கை வாழ் தமிழர் பிரச்சினை அரசியல் ரீதியில் சுமுகமாக, இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவருக்கும் மன நிறைவு ஏற்படத்தக்க முறையில் விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்பதில், இந்திய அரசும், தலைமை அமைச்சர் மாண்புமிகு திரு. இராஜீவ் காந்தி அவர்களும் ஆர்வமும், அக்கறையும் கொண்டு, முறையான நடவடிக்கைகளை மேற் கொள்வதில் முனைந்து ஈடுபட்டுள்ளனர். தமிழக முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களை அண்மையில் சந்தித்து மூன்று தடவைகளிலும், இலங்கை வாழ் தமிழர் பிரச்சினையை விரைவில் தீர்க்க உரிய நடவடிக்கைகளை இந்திய அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி வந்திருக்கிறார்கள்.

இந்தியத் தலைமை அமைச்சர் அவர்கள் வெளி நாட்டுச் சுற்றுப் பயணத்தை வெற்றிகரமாக முடித்து வந்ததற்குப் பிறகு, இந்தப் பிரச்சினையில் தீவிர கவனம் செலுத்தி, உரிய முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்று தமிழகம் எதிர்பார்க்கிறது.



1985 ஜூன் 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தமிழகத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்கள் அடங்கிய குழு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் டில்லிக்குச் சென்று, இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களைக் கண்டு, கலந்துரையாடல் நடத்தி, உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியபோது, மாண்புமிகு திரு. இராஜீவ் காந்தி அவர்கள், தமிழகத் தலைவர்களின் எண்ணங்களை ஏற்று, பிரச்சினையைத் தீர்க்க மிகுந்த அக்கறை கொண்டிருப்பதை வெளிப்படுத்தினார். இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களின் முயற்சியால் நல்ல முடிவு ஏற்பட வேண்டும் என்று இந்த அவையும் எதிர்பார்க்கிறது, தமிழகமும் எதிர்பார்க்கிறது. ஆனால் நிலைமை இப்படி இருக்க, இந்தப் பிரச்சினையில் இலங்கை அதிபர் திரு. ஜெயவர்த்தனே அவர்களும், இந்தியத் தலைமை அமைச்சர் திரு. இராஜீவ் காந்தி அவர்களும் பேச்சு வார்த்தை நடத்தி, ஒரு புதிய திட்டம் உருவாகியிருக்கிறது. சுமுகமான நிலைமை ஏற்படக்கூடும், நல்லதொரு சூழ்நிலை ஏற்படக்கூடும் என்ற அளவுக்குச் செய்தியை இந்தியத் தரப்பிலே சொல்லியும், இலங்கைத் தரப்பிலே சொன்னதற்குப் பிறகும், அதற்கான சூழ்நிலை அங்கே உருவாகாமல், தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளின் மூலமாகவும், காவல் துறை நடவடிக்கைகளின் மூலமாகவும், சிங்கள வெறியர்கள் எடுத்த நடவடிக்கைகளின் மூலமாகவும் நிரபராதிகளாக இருக்கும் தமிழர்கள் கொல்லப்பட்டுக் கொண்டு வருகிறார்கள்; இடர்பாடுகளுக்கும், இடையூறுகளுக்கும் ஆளாக்கப்பட்டு வருகிறார்கள் என்ற செய்தி தொடர்ந்து வருவது நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்துமா என்ற ஐயப்பாட்டை எல்லோருக்கும் ஏற்படுத்தி இருக்கிறது. ஆகவேதான் இதற்கான நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கும் முழுப் பொறுப்பும் இலங்கை அதிபர் திரு. ஜெயவர்த்தனே அவர்களைச் சார்ந்தது. நல்லதொரு சூழ்நிலை வருமென்ற உடனே, அதற்கேற்றபடி அங்கே இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தியிருக்க வேண்டும். இராணுவத்தைப் பின் வாங்கியிருக்க வேண்டும். காவல் துறையினர் கட்டுப்பட்டிருக்க வேண்டும். நிரபராதிகளான தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படாமல், கொடூரத்திற்கு ஆளாக்கப்படாமல் இருக்க வேண்டும். ஆனால் இவற்றையெல்லாம் மீறி நடக்கும்போது, இப்படிப்பட்ட சூழ்நிலையில் என்ன சுமுகமான சூழ்நிலை உருவாகுமென்ற ஐயப்பாடு தமிழக மக்களுக்கும், அவை உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஏற்படுவது இயற்கையே. ஆகவேதான் இலங்கை அரசினுடைய இந்தப் போக்கை நாம் வன்மையாகக் கண்டிக்கவும் இருக்கிறோம். அதன் காரணமாகப் பெரிதும் வருத்தத்தைத் தெரிவிக்கவும் இருக்கிறோம். ஆகவே உடனடியாக நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கினால்தான் இந்தப் பேச்சு வார்த்தையின் மூலம் நல்ல பலன் ஏற்படும். அதைத்தான் எதிர்பார்க்கிறோம். இப்போது ஏற்பட்டிருக்கும் விளைவுகளை, இருக்கிற நிலைமைகளை மத்திய அரசுக்கு எழுதித்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஜூன் 10

கொண்டு வருகிறோம் என்றாலும், ஒரு 5, 6 நாட்களாக ஏற்பட்டுள்ள நிலைமை, தமிழர்கள் மேலும் மேலும் கொடுமைகளுக்கு ஆளாகி வருவதால் மறுபடியும் தெளிவாக, திட்டவட்டமாக, விரைவாக ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழக அரசு சார்பாக மத்திய அரசுக்கு எழுதுவதென்று இருக்கிறோம். அது மட்டுமல்லாமல், இந்திய சதைமை அமைச்சர் திரு. இராஜீவ் காந்தி அவர்கள் வெளிநாட்டுப் சுற்றுப் பயணத்தை முடித்துவிட்டு வந்த பிறகு, இவற்றை அறிந்து, தமிழக மக்களுக்கு மன நிறைவு அளிக்கத்தக்க வகையிலே, இந்தப் பிரச்சினையில் இறுதி முடிவு காணத் தக்க அளவிலேயும் திட்டவட்டமான நடவடிக்கையை எடுப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த நிலையிலே, இருக்கிற சூழ்நிலைகளிலே தமிழக மக்களின் சார்பாகவும், இந்த அவை உறுப்பினர்களின் சார்பாகவும் இந்த எண்ணங்களை வெளிப்படுத்துகிறோம். உடனே அங்கே அமைதி ஏற்பட வேண்டும். இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை இந்த அவையின் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இந்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்க தமிழக அரசு தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு வருமென்பதை இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

### 3. அரசின் தீர்மானம்—தொடர்ச்சி.

### கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது விவாதம்—தொடர்ச்சி.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது உரையாற்றுவதற்கு முன்பு, இந்த அவையிலே ஓர் அறிக்கையை வைத்து, அனைவருடைய எண்ணங்களையும் பிரதிபலித்ததற்காக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது பேசுகிறபோது சட்டப் பேரவையிலே விவாதித்து, காலங்கடந்து இங்கே வந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். அதுதான் மேலவை என்பதை அறிந்துகொள்ள வேண்டும். மேலவையைக் கலைக்கக் கூடாது என்பதற்குக் காரணம் சொன்னபோது, எப்படி சூடான காப்பியை ஆற்றுவதற்கு சாசர் உதவுகிறதோ அப்படி, சட்டப் பேரவையிலே சூடு இருக்கும். அதை ஆற்றுகிற அவையாக மேலவை இருக்கும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி ‘கப் அன்ட் சாசர்’ என்ற நிலைமையிலே, இந்த அவையை நிலை நிறுத்துங்கள். வேறு இடங்களிலே இந்த அவைக்கு ஏற்பட்ட ஆபத்து, இங்கேயும் வந்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியது போல, இந்த அவை நல்ல கருத்துக்களைச் சொல்லு துணையாக இருக்குமென்று சொல்லி, என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.



1985 ஜூன் 10] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

(முற்பகல் 10.55)

கல்விக்காக ஒதுக்கிய தொகை, சதவிகித அளவில் குறைந்து விட்டதோ என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் வருத்தப்பட்டார். ஆனால் உள்ள நிலைமையை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 468 கோடி ரூபாய் என்றால் 20 விழுக்காடு ஆகிறது என்றாலும்கூட, கல்விக்காக நிதி ஒதுக்கத்தின் மூலம் 585 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை நாம் பார்க்கிறோம். கல்வி என்பது மாணவர்கள், ஆசிரியர்கள் என்று அடங்கிவிடாமல் அது நீண்ட பின்னணியுடைய ஒரு கொளகைக் குறிப்பாக இருக்கிறது என்பதையும் நாம் பார்க்கிறோம். மேல்நிலைக் கல்வி, தொழில் கல்வி, தமிழ் கலை-பண்பாடு, தொல்பொருள் ஆராய்ச்சி என்று முழுக்க முழுக்க தமிழ் சமுதாயத்தின் மூனைப்பான ஒன்றாக கல்வி அமைந்திருப்பதை நாம் பார்க்கிறோம். அந்த முறையில் நாம் பள்ளிகளைப் பார்த்தால், முதலில் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுடைய பிரச்சினைதான் வருகிறது. ஆசிரியர் பணியிடங்கள் போதாது என்று சொல்கிறார்கள். அதேசமயத்தில் இதுபற்றி பல்வேறு அறிஞர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதாசாரம் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி அறிஞர் சுனில் அவர்கள் கல்வி பற்றிய ஓர் அறிக்கையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"one cannot provide quality in education, when one has a large teacher-student ratio."

என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த விகிதாசாரத்தைப் பொறுத்துதான் மாணவர்களின் மன நிலையும் ஆசிரியர்களுடைய பணியும் இருக்கும் என்று அவர் சொல்லியிருக்கிறார். அந்த அடிப்படையில் ஆசிரியர் பணியிடங்கள் அமைய வேண்டும்.

அடுத்து, உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களைப்பற்றி நான் குறிப்பிட்டாக வேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் கல்வி அமைச்சர் அவர்களும் தமிழகத்தில் மேல்நிலைப் பள்ளியைக் கொண்டு வர வேண்டுமென்று திட்டமிட்ட நேரத்தில் அதற்கு உறுதுணையாக உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் இருந்தார்கள். அவர்களுடைய பணி நிலை குறித்து பலமுறை போராடியிருக்கிறார்கள். ஆசிரியர் பயிற்சிக்கு ஈடாகப் பயிற்சி பெற அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்ட நேரத்தில், ஓய்வு நாட்களில் கூட பயிற்சியில் கலந்துகொண்டு ஒத்துழைத்தார்கள். இந்த நேரத்தில் அவர்களுடைய கோரிக்கைகளை அரசு கவனிக்க வேண்டும்.

அடுத்து, ஆசிரியர்களுடைய நியமனத்தைப் பொறுத்தவரையில், தேர்வாணைக் குழுவிடம் உட்படுத்தும் நிலை வேண்டாம். ஆசிரியர்களுடைய பணி நியமனத்தைப் பொறுத்தவரையில், அதற்காக தனி அமைப்பு ஒன்று இருக்க வேண்டும். அதுபற்றிச் சொல்லியிருப்பதற்கு என்னுடைய பாராட்டுக்கள். அதனை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கிராயப்படி 10 ரூபாய் என்று இருந்ததை 20 ரூபாயாக உயர்த்தியிருப்பது குறித்து மகிழ்ந்தாலும், இந்த உயர்வு அவர்களுடைய உண்மையான குறைகளைத் தீர்க்கவில்லை. மேலும் அவர்களுக்கு பலவிதத்திலும் ஊக்கம் தர வேண்டும். கல்வி வளர்ச்சிக்கு, கல்வி அறிவுக்கு எல்லாவிதத்திலும் ஊக்கமளிக்க வேண்டும்.

அடுத்து, கல்லூரி ஆசிரியர்களுக்கு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளையொட்டி இடைக்கால நிவாரணமாக 300 ரூபாய் மாதந்தோறும் வேண்டுமென்று கேட்கிறார்கள். மத்திய அரசின் யு.ஜி.சி. நான்காவது ஊதியக் குழுவினுடைய அறிக்கையை விரைவில் அறிவிப்பதை வலியுறுத்தும் வகையில் இடைக்கால நிவாரணம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதுபோல் பணிப் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்கிறார்கள். மேலும் ஒருவழி எல்.டி.சி. வேண்டுமென்று கேட்கிறார்கள். அதையும் தர வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

அடுத்து, 6 வயது முதல் 14 வயது வரையுள்ள மாணவர்களை பள்ளிகளிலே சேர்ப்பதிலே சாதனை புரிந்ததற்காக மத்திய அரசிடமிருந்து 11 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் விருது மாநில அரசுக்குக் கிடைத்திருக்கிறது. அந்தப் பணத்தை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டும். பள்ளிகளுக்குத் தேவைப்படும் குடிநீர் வசதி, தொழிற்கூடங்கள் கட்டுதல், கழிப்பிட வசதிகள் செய்தல் போன்றவற்றுக்கு அந்தப் பணத்தைப் பயன்படுத்த வேண்டும்.

இன்றைக்கும் பல பள்ளிக்கூடங்களில் சரியான கழிப்பிட வசதியில்லாத நிலை இருப்பதைப் பார்க்கிறோம். வெளியே சில இடங்களில் காசு கொடுத்து கழிப்பிடங்களைப் பயன்படுத்தும் முறை நடைமுறையில் இருப்பதை நாம் பார்க்கிறோம். அந்த வகையில் பள்ளிக்கூடங்களிலும் நல்ல முறையில் கழிப்பிட வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்காக காசு வாங்குகின்ற முறையை நடைமுறைப்படுத்தினால் கூட நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து, ஆசிரியர்களுக்காக தனியாக வீட்டு வசதி வாரியம் அமைத்திருப்பதைப் பாராட்டுகிறேன். தமிழ் புலவர் அறிவுடை நம்பி அவர்களை அதன் தலைமைப் பொறுப்பை ஏற்கச் செய்திருப்பதற்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அமைப்பில் ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளும் இடம் பெறச் செய்ய வேண்டும். அதுபோல் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்படும் அமைப்புகளிலும், உட்குழு அமைப்புகளிலும் ஆசிரியர்கள் நிச்சயம் இடம் பெறச் செய்ய வேண்டும். ஆசிரியர்களுக்காக வீடுகளைக் கட்டும்போது, ஒதுக்குப்புறமாகக் கட்டாமல் பள்ளிகளுக்கு அருகாமையிலேயே கட்ட வேண்டும். அப்படியானால்தான் அது கல்வி வளர்ச்சிக்கு உறுதுணை செய்வதாக இருக்கும்.

(முற்பகல் 11-00)

(மாற்றுத் தலைவர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா தலைமை)

அதோடு, முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுடைய குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காக 37,447 பள்ளிகளிலுள்ள சத்துணவு மையங்களில் 55 இலட்சம் குழந்தைகள் பயன் பெறுகிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கிறபோது, மகிழ்ச்சி ஏற்படுகிறது. டாக்டர் சட்டோபாத்யாயா அவர்கள் நேஷனல் கமிஷன் பார் டீச்சர்ஸ் (National Commission for teachers) மூலமாக ஓர் அறிக்கையை மத்திய அரசுக்கு வழங்கியிருக்கிறார்கள். அதில் நமது முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தை இந்தியா முழுவதும் அமுல்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலிருந்து இது வெற்றிகரமான திட்டம் என்பதை அறிந்து நாடு மகிழ்வடைகின்றது.

அடுத்து, அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைப்பதுபற்றிச் சொல்ல விரும்புகின்றேன். பல பள்ளிகளில் இப்போதுதான் அவை உருவாகிக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு அறிவியல் வளர்ச்சி என்பது மிகவும் முன்னேறியிருக்கிற காலகட்டத்தில், அறிவியல் கூடங்கள் பள்ளிகளுக்கு மிகவும் தேவை. அதற்கு அரசின் சார்பில் நிதி ஒதுக்கம் மிகவும் குறைவாக இருந்தாலும்கூட, பொது மக்களின் உதவியுடனாவது அவைகளை அமைக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் மிகவும் பயனடைவார்கள்.

அடுத்து, கல்வித் தொலைக்காட்சிக்கென்று மத்திய அரசு 40 இலட்சம் ரூபாயை வழங்கியிருப்பதைப் பார்க்கிறபோது, ஒன்றைச் சொல்ல வேண்டும். நாம் ஒரு பக்கம் கல்வியை வளர்த்துக் கொண்டிருக்கின்றோம். கல்வியின் மூலம் நம் மாநில மொழியை வளர்த்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால்

அதே நேரத்திலே, மத்திய அரசு தொலைக்காட்சி நிலையங்களை ஊரெல்லாம் வைத்து இந்தியைப் பாடமாக ஆக்கி, முழுக்க முழுக்க இந்தியிலேயே முழங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறபோது, ஏன் இது வந்தது என்ற உணர்வைத் தந்துகொண்டிருக்கிறபோது, இப்போது கல்விக்காகத் தந்திருக்கிற தொலைக் காட்சி மூலமாகவாவது நல்ல பயன் விளைவதற்கு வழிவகை காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சரின் திட்டம் எதிர்காலத்தில் கல்வி முறையில் இளைஞர்கள், குழந்தைகள் தயாராவதற்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். பாட நூல் நிறுவனம் தாங்கள் தெரிவிக்கின்ற பொருள்களிலே பேராசிரியர்கள் எழுத வேண்டும் என்பதுபோல, பேராசிரியர்களாக இருப்பவர்கள், அறிவியலாளர்களாக இருப் பவர்கள் எதை எழுத விரும்புகிறார்களோ அவைகளையும் வெளியிடும் நிலை உருவாக வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடம் எடுக்கும் மாணவர்கள் எண் ணிக்கை வளர்ந்திருக்கிறது. பல்வேறு வகை தொழிற் கல்வியை நாம் புகுத் துகிறோம். ஆனால் மாணவர்கள் அவற்றைப் பயிலும் உற்சாகத்தைப் பெற வேண்டும். மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று வந்த 3.32 இலட்சம் மாணவர் களில் 61,502 பேர் தொழிற் பாடங்களைப் பயின்றிருக்கின்றனர். அதாவது சுமார் 19 விழுக்காட்டினர் தொழிற் பாடங்களைப் பயின்றிருக்கின்றனர். இந்த 61,502 பேர்களில், வணிகத் துறையில் 35,583 பேர்களும், பொறியியலில் 14,666 பேர்களும், வேளாண்மை இயலில் 4,498 பேர்களும், மற்றும் பலவகைகளில் 756 பேர்களும் பயின்றிருக்கின்றனர் என்பதைக் காணுகிறபோது ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த 'பலவகை' என்று போட்டிருக்கிறார்களே, அவர்கள் அனைவருக்கும் வேலை கிடைத்து விடும். மற்றவர்கள் ஏமாந்து போகிற நிலை ஏற்படுவதைப் பார்க்கிறோம். இவ்வாறு தொழிற் பாடங்களை எடுத்துப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை தமிழ் நாட்டில் உயர்ந்திருப் பது மகிழ்வைத் தருகிறது.

அதோடு, புதிய பல்கலைக் கழகம் ஒன்று உருவாவதற்கு சேலம், நெல்லை மாவட்டங்களில் வாய்ப்பு இருக்கிறது என்பதை அறிகிறபோது, மேலும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதிலும் குறிப்பாக சேலத்திலே விரைந்து ஒரு புதிய பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என்கிற என்னுடைய வேண்டு கோளையும் விடுக்கிறேன்.





அடுத்து, விளையாட்டைப் பொறுத்த மட்டில், தமிழ் நாட்டில் விளை யாடுகிற இடங்கள் நகரங்களில் போதுமான அளவு இல்லாமல் இருக்கும் காரணத்தினால்தான், இப்போது சினிமா கொட்டகைகளில் போய் அமர்வது ஒன்றுதான் இளைஞர்களின் பொழுதுபோகிற இடமாக இருக்கிறது. சமீபத் தில்கூட கர்நாடக அமைச்சர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். கர்நாடக மாநிலத்தில் திரை அரங்கங்களில் பகல் காட்சியை ரத்து செய்து விடலாம் என்கிற எண்ணத்தை அவர் தெரிவித்திருக்கிறார். இங்கேயும் அதுபோல் வந்தால்கூட நல்லது. அது இளைஞர்களின் உழைப்பு நேரம் வீணாவதைத் தடுப்பதற்கு உதவியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதுமட்டுமல்ல, சென்னையிலே கால்பந்து விளையாட்டு அரங்கத்திற்கு இடம் ஒதுக்க வேண்டும். அப்படி ஒரு அரங்கம் சென்னையில் அவசியம் தேவை என்று விளையாட்டுத் துறையைச் சார்ந்தவர்கள் விரும்புகிறார்கள். இப்போது நீலகிரி மாவட்டம் தவிர மற்ற மாவட்டங்கள் அனைத்திலும் ஒரு விளையாட்டரங்கம் இருக்கிறது. ஆனால் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் நீண்டகாலமாக எதிர் பார்க்கின்ற திறந்தவெளி விளையாட்டரங்கம் இல்லை. எனவே நீலகிரி மாவட்டத்தில் 'பிரிட்ஜ் வ்டேல்' பகுதியில் திறந்த வெளி விளையாட்டு அரங்கம் ஒன்றைக் கட்டுகிற வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தேசிய மாணவர் படையில் தற்போது வான ஊர்தி ஓட்டுதல், கப்பல், விமானம் ஓட்டுதல் போன்றவற்றிற்குப் பயிற்சி தருவது மகிழ்ச்சி தரத்தக்க ஒன்றாகும். ஏனென்றால் இனி வரப்போகிற காலங்களில், யுத்தம் நம் நாட்டின் தென் பகுதியிலே இருந்தும் வரலாம் என்பதாலும், பகைவன் தென்பகுதியிலே இருந்து கப்பல் மூலம் வரக்கூடிய வாய்ப்பு இருப்பதாலும், நாம் அனைவருமே இப் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டால்கூட நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தனியார் பொறியியல் கல்லூரிகள் பல உருவாகியிருக்கின்றன. அவ்வாறு பெரிய அளவில் வந்திருக்கின்றன என்பதை உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், அப்படி இல்லாமல் இருந்த தால்தான் நம் மாணவர்கள் வேறு மாநிலங்களுக்குச் சென்று படிக்கும் நிலை ஏற்பட்டது. இத் தொழிற் கல்வியைப்பற்றி ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய நாட்டில் பி.ஈ. படிப்பதற்கு பன்னிரண்டு ஆண்டு படித்து மேலும் நான்கு ஆண்டு படிக்க வேண்டியிருக்கிறது. பாலிடெக் னிக்கில் படிப்பதற்கு பத்தாண்டுகள் படித்து மேலும் மூன்று ஆண்டுகள் படிக்க

வேண்டியிருக்கிறது. ஆனால் மேலை நாடுகளில் பத்து பிளஸ் ஐந்து அல்லது பன்னிரண்டு பிளஸ் மூன்று என்ற அளவில் பாடத்திற்குரிய தகுதியை உருவாக்குகிறார்கள். அதுபோல் நாமும் உருவாக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-05)

பட்டம் பெற வேண்டும். பட்டப் படிப்பு என்பது ஒரு கடினமான பிரச்சினை என்ற காரணத்தாலே பழைய சென்னை நகரின் துணை வேந்தராக இருந்த திரு. ஜி. ஆர். டி. அவர்கள் ஒரு அரிய நூலை வெளியிட்டிருக்கிறார்கள். Listen to the Leader in Education என்ற நூலிலே அவர்கள் குறிப்பிடுவது, இப்படி பாலிடெக்னிக்கிலே படிப்பவர்களுக்குக் கூட ஒரு பட்டம் தருவது பொருத்தமாக இருக்கும். காரணம் அவர்களுக்கு தாங்கள் ஏதோ பட்டம் பெறவில்லை என்ற குறை நீங்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள். அதுமட்டுமல்ல. தொழிற் கல்வியைக் கற்றுத் தருகிறபோது, பக்கத்திலே இருக்கிற தொழிற் கூடங்களோடு அதை நெருக்கமாக்க வேண்டும். அதை அவர்கள் குறிப்பிடுகிறபோது "In Europe there is now a trend towards seeking close co-operation between Universities and Industries" என்று குறிப்பிடுகிறார்கள். அந்த அளவை நாம் ஏற்படுத்த வேண்டும்.

அதுமட்டுமல்ல. தமிழ் வளர்ச்சிபற்றிச் சொல்கிறபோது, தமிழ் நாட்டிலே ஆயிரத்துக்கும் மேற்பட்ட அலுவலகங்களும், 30-க்கும் மேற்பட்ட துறைகளும் மாவட்ட அளவிலே இப்போது 70 சதவீதம் தமிழ்படுத்துகிற முயற்சியிலே வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதுபோல தலைமைச் செயலகத்தை எடுத்துக் கொள்கிறபோது, அந்த அளவு அவர்கள் தமிழிலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்களா என்ற ஐயம் எனக்கு வருகிறது. அங்கே அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலவையிலே வருகிற குறிப்புகளைக் கூட அனைவருக்கும் ஆங்கிலத்தில் தரத் தேவையில்லை; வேண்டுமென்று யாராவது எழுதிக் கேட்பவர்களுக்கு மட்டும் தந்தாலேகூட பணிச்சுமை குறையும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில், பண்பாட்டுத் துறை என்று நாம் அமைத்திருப்பது இந்தியாவுக்கே வழி காட்டியாக இருக்கிறது. இதைப் பார்த்துத்தான் இப்போது ஒரிசாவிலே, ஆந்திராவிலே இதைப்போல அமைப்பதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் பண்பாட்டுத் துறையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் பெரிய அளவிலே தமிழ்ப் பண்பாட்டிலே காட்டுகிற அக்கறைக்கு என்னுடைய



மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருக்குறள் நெறி பரப்பு மையம் ஒரு அரிய சாதனையாகும். வள்ளுவர் கோட்டம் இருப்பதால் வள்ளுவர் மீது நாட்டம் ஏற்படுகிறது. தேசிய அளவினதாக திருக்குறளை ஆக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே, வாரம் ஒருமுறை திருக்குறள் சொல்லித் தரும் முயற்சியைப் பாராட்டுகிறேன். மேலும் வருடத்தில் 365 நாட்களும் அங்கே சென்றால் குறளை அறிகின்ற நிலையை உருவாக்க வேண்டுமென்றும், கீதா மந்திர் என்று வடபுலத்திலே இருப்பதைப்போல நம்முடைய தேசிய நூலான திருக்குறளை நாளும் ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலே கேட்டு அறிய வசதி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு ஓவிய ஆசிரியர்கள் 250 பேர்களுக்குப் பயிற்சி தந்ததை நினைத்துப் பார்க்கும்போது, இதேபோன்ற பயிற்சிகள் வளர வேண்டும். நேரு நினைவு நிதியிலே சிறுவர் இல்லம் என்ற ஒரு மாவட்டத்திலே உருவாக்கப்பட்ட வேண்டுமென்றும், அதன் மூலம் சிறுவர்களுக்கு நல்ல ஒரு மன வளர்ச்சி ஏற்படுமென்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். கல்விக் கொள்கை பற்றி நாம் கொஞ்சம் சிந்திக்க வேண்டிய கடமையில் இருக்கிறோம். காரணம் இந்தக் கல்விக் கொள்கை ஒரு நீண்ட கதையாகும். இங்கே தனி உறுப்பினர் தீர்மானம் என்றால் சிலருக்கு வேடிக்கையாக இருக்கும். அது ஒன்றும் சபைக்கு உதவாத காரியம் என்பார்கள். ஆனால் உள்ளபடியே என்ன நடந்தது என்றால், டெல்லி நாடாளுமன்றத்தில் 1964 மே 1-ல் 'நேஷனல் பாலிஸி ஆன் எஜுகேஷன்' என்பதிலே தனி உறுப்பினர் திரு. சித்தேஷ்வா ராவ் பிரசாத் என்பவர் ஒரு தனி உறுப்பினர் தீர்மானத்திலே இந்தக் கருத்தை வலியுறுத்தி இதற்காக ஒரு வரலாறு இருக்கிறது. கல்வி மாநிலங்களினுடைய பொறுப்பிலே இருந்ததை 1974-லே தான் மத்தியும் சேர்ந்து அதிலே இணைந்து கொள்ளலாம் என்று வகுத்தார்கள். பிறகு, 1949, 1952-லே எல்லாம் பல குழுக்களை நியமித்தார்கள். அடிப்படையிலே, அகில இந்தியாவுக்கே, கல்வி ஒன்றாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தது. அந்த அடிப்படையிலே 1967-லே கூட. நேஷனல் பாலிஸி ஆன் எஜுகேஷன் என்ற நாடாளுமன்றக் குழு கொள்கை வகுத்தார்கள். இப்போது வருகிற 12 ஆம் தேதி மத்திய கல்வி அமைச்சர் அவர்கள் நம்முடைய கல்வி அமைச்சரவையும் சந்திப்பார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் அவர்கள் நமக்குத் தெளிவுபடுத்த வேண்டும். அகில இந்தியக் கல்விக் கருத்து என்பது ஏதோ அகில இந்திய அளவிலே இந்தியை எல்லோரும் ஏற்றுக் கொள்வதற்குச் செய்கிற தந்திரமா? அல்லது அகில இந்திய மொழிகளுக்கு ஏதேனும் ஒருமைப்பாட்டைக் காண ஒப்பிடுகிறார்களா என்பதை நாம் அறிய கடமைப்பட்டிருக்கிறோம். காரணம் இப்போது இருக்கிற நடைமுறையிலே என்ன கோளாறு? இப்போது நாம்

நடத்திக் கொண்டிருக்கிற கல்வி நிலையங்களிலே என்ன குறைபாடு? மத்தியிலே இருக்கிற அதிகாரங்களைக் குறைக்க வேண்டும், குறைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது, இனி சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களை எல்லாம் மத்திய அரசினுடைய ஆளுகையின் கீழ் கொண்டு வந்து விடுவார்களோ என்ற அச்சம் வந்து, அப்படி இல்லையென்று அமைச்சர் சொல்கிற அளவுக்கு அதிகாரம் மத்தியிலே போவதற்கு அனுமதிப்பது நியாயம் இல்லை. அதுவும் கல்வியைப் பொறுத்தமட்டில் இரு வழிக் கொள்கை என்று இந்த மாநிலம் ஆகிவிட்ட நிலையில் நாம் அதைப்பற்றி அகில இந்திய அடிப்படையிலே போனால், அது அவர்களுக்கும் நல்லதல்ல; நமக்கும் லாபமில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, யூ.ஜி.சி.-க்கு இங்கேயிருந்து ஆசிரியர்களை அனுப்புகிற அரிய முயற்சியை இந்த அரசு மேற்கொள்கிறது. பாட நூல்கள் எல்லாம் 20 ஆயிரம், 20 ஆயிரம் என்ற அளவிலே இரண்டு நிலையிலே அனுப்பியிருக்கிறார்கள். அதைத் தெரிவிக்கிறபோது, இந்தோநேஷியாவுக்கும் அப்படி பாட நூல் அனுப்பினார்கள். அப்படி அனுப்பியதை நான் அண்மையில் காணும்போது, அவர்கள் அதை அப்படியே கட்டி வைத்திருந்தார்கள். அப்படி இல்லாமல் அவர்கள் தேவை அறிந்து அதனைச் செய்ய வேண்டுமென்றும், இதில் நம்முடைய அரசுக்கு ஒரு மகத்தான பொறுப்பு இருக்கிறதென்றும் சொல்லிக் கொள்கிறேன். இந்த அவையிலே நிதி அமைச்சர் அவர்கள் அறிக்கை வைத்தார்களே—முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கை—அந்த அடிப்படையிலே சொல்கிறேன், நமக்கு நம்முடைய மாநிலத்திற்கு மட்டுமல்ல, உலகத்திலே பரவிக் கிடக்கிற தமிழர்கள் அனைவருக்கும் நாம் ஒவ்வொரு வகையிலேயும் கடமைப்பட்டிருக்கிறோம்.

(முற்பகல் 11-10)

இந்தியாவுக்கு திரு. ஜெயவர்த்தனே வந்தார்கள், பேசினார்கள், போனார்கள். அதற்குப் பின்னாலே ஸ்ரீ லங்காவில் ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும் என்று அனைவரும் எதிர்பார்த்தோம். ஆனால் அங்கே நடப்பது வேறாக இருக்கிறது. திரு. ஜெயவர்த்தனே வருவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னாலே திரிகோணமலைப் பகுதியில் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். அவர் ஸ்ரீ லங்கா போய்ச் சேர்ந்து மூன்று நாட்கள் கழிந்த பிறகும்கூட, அந்தத் தாக்குதல் அங்கே நிற்கவில்லை. அதுமட்டுமல்ல, அவர் "ஸ்ரீலங்காவில் உள்ள சிங்களவர்களை யாராவது தாக்கினால், அவர்கள் அத்தனை பேரையும் ஒழித்து விடுவோம்" என்றார். இப்படி இன்றையதினம் 18 தமிழ் கிராமங்கள் ஸ்ரீலங்காவில் அழிக்கப்பட்டிருக்கின்றன. 15,000 தமிழர்கள் இன்றையதினம் இலங்கையில் தமிழர்களுடைய வீடுகளில் சென்று அடைக்கலம் புகுந்திருக்



கிறார்கள். 100 தமிழர்கள் அங்கே கொல்லப்பட்டிருக்கிறார்கள். 200 தமிழர்கள் காணாமல் போயிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் நம்மாலே தாங்கிக்கொள்ள இயலவில்லை. நேற்றையதினம் கூட கப்பலில் ஒரு தமிழ்த் தாய் தன்னுடைய ஐந்து குழந்தைகளோடு இங்கே தப்பியோடி வந்திருக்கிறார். அவரோடு வந்த தமிழ் இளைஞர் ஒருவர் தன்னுடைய கண் முன்னாலே ஒரு தமிழ் இளைஞரை ஸ்ரீலங்கா இராணுவம் அடித்து எரித்துப் போட்டது என்றும் தன்னையும் அவர்கள் எரிக்க வந்தார்கள் என்றும் தான் எப்படியோ காயத்தோடு இங்கே தப்பியோடி வந்துவிட்டதாகவும் குறிப்பிட்டார். எப்படியாவது தனக்குக் கல்லூரியில் இடம் வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். இப்படி நாளும் துன்பங்கள் தொடருகிறபோது, நம்மாலே வேறு எந்தப் பிரச்சினையிலும் ஈடுபட முடியவில்லை.

தமிழக அரசைப் பொறுத்தவரையில், மிகவும் நல்லுணர்வோடு ஸ்ரீலங்கா தமிழர்களுக்கு நாம் உதவியைச் செய்து வருவதைப் பார்க்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் அங்கிருந்து வரும் தமிழ் மாணவர்களுக்கு எவ்வளவோ இடங்களைத் தந்திருக்கிறார்கள். இன்றையதினம் ஸ்ரீலங்காவில் தமிழ் மாணவர்கள் கல்விக் கூடங்களுக்குப் போக இயலவில்லை. அங்கே பள்ளிகளே இல்லை. மாணவர்கள் வெளியே நடமாட முடியாத நிலையில் இருக்கிறார்கள். தவிக்கிறார்கள். இவ்வாறு 35 லட்சம் தமிழர்கள் அங்கே நம் கண் முன்னாலே அழிகிறார்கள். அவர்களைக் காப்பாற்றுகிற பொறுப்பு நமக்கிருக்கிறது. பிஜித் தீவுக்கு ஆசிரியர்களை அனுப்புவதோடு இல்லாமல் இவர்களைக் காப்பாற்றுகிற பொறுப்பையும் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அடுத்து, உலகத் தமிழ் மாநாட்டை நடத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். மலேசியாவில் உள்ள திரு. டேவிட் அவர்கள் அதை அவர்களுடைய நாட்டில் நடத்த அனுமதி கேட்டிருக்கிறார். நாமும் இங்கே நம்முடைய உலகத் தமிழ் ஆராய்ச்சித் துறையின் மூலம் அதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இதன் மூலம் உலகத்தில் வாழ்கிற தமிழ் மக்களிடையே ஒரு ஒற்றுமையையும் நல்லுணர்வையும் உருவாக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். இதற்கிடையில் நாம் ஸ்ரீலங்காவுக்கு இராணுவத்தை அனுப்பப் போகிறோமா அல்லது கப்பல்களை அனுப்பப் போகிறோமா என்பதல்ல பிரச்சினை. இதைச் சொல்லும்போது, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் "செங்கோல்" பத்திரிகையில் தெரிவித்த கருத்தையும் இங்கே நினைவுபடுத்துவது நல்லது என்று கருதுகிறேன்.

இன்னமும் 'இலங்கைத் தமிழர்' பிரச்சினையை அரசியல் ரீதியில் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுங்கள்' என்பதாக அதிபர் ஜெயவர்த்தனாவுக்கு வேண்டுகோள் விடுத்தவண்ணம் இருக்கப் போகிறாரா? ஸ்ரீலங்கா அரசால் கட்டுப்படுத்த முடியாத இராணுவத்திற்கு இந்திய இராணுவத்தால் புத்தி புகட்ட முடியும் என்பதைக் காட்டப் போகிறாரா? ஸ்ரீலங்காவிற்கு இராணுவத்தை அனுப்பு என்று நம் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்குச் சொல்லப் போவதில்லை. ஆனால் அதிபர் திரு. ஜெயவர்த்தனே "ஸ்ரீலங்கா இராணுவம் எனது கட்டுப்பாட்டின் கீழ் இல்லை" என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு விட்ட பின்னர், ஐ.நா. மன்றத்தின் சமாதானப் படையை ஸ்ரீலங்காவிலுள்ள ஈழப் பகுதியில் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை இந்தியப் பிரதிநிதியைக் கொண்டு ஐ.நா. மன்றத்தில் எழுப்பலாமே என்று ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதில் நமக்கு எந்தக் கருத்து வேறுபாடுமில்லை. ஆனால் நாள்தோறும் வருகிற செய்திகள், ஒவ்வொரு நிமிடமும் அங்கே நடக்கிற நடப்புகள் இனி ஸ்ரீலங்காவில் தமிழர்கள் இருப்பார்களோ என்ற ஐயத்தை உருவாக்குகின்றன. இந்த நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை மிகவும் ஆறுதலைத் தருகிறது என்பதோடு, அவர் பிரதமரோடு கொண்ட தொடர்பு அங்கேயுள்ள தமிழர்களுக்கு ஒரு நல்ல நிலையை உருவாக்கும் என்ற நம்பிக்கையை வளர்க்கிறது. எனவே, இறுதியாக இங்கே இந்தக் கருத்துக்களையெல்லாம் தெரிவிக்க வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

திரு. அ. மயில்சாமி; மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு கல்வித் துறைக்காக ரூ. 468 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டதைவிடக் குறைவு என்ற அடிப்படையில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கல்விக்காகச் செலவிடுவதை நாம் செலவாகக் கொள்ளாமல், கல்விக்காக நாம் எதைச் செய்தாலும் அதையெல்லாம் ஒரு இன்வெஸ்ட்மென்டாக, ஒரு முதலீடாக கொள்ள வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில், இதை ஒரு செலவினமாகக் கருதக்கூடாது என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இந்த ஒதுக்கீடு குறைவு என்று சொல்வதற்குக் காரணம் தமிழக அரசு மாணவர்களை ஈர்ப்பதற்காக பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. முதலமைச்சருடைய சத்துணவுத் திட்டத்தினால் தொடக்கப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதைப்





போலவே உயர்நிலைப் பள்ளிகளிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அடுத்து, சீருடை வழங்குவதாக மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. இலவசமாகப் பாடப் புத்தகம் வழங்குவதாலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இவ்வாறு மாணவர்கள் எண்ணிக்கை ஒருபுறம் அதிகரித்து வருகிறபோது, அந்த வளர்ச்சிக்குத் தகுந்தாற்போல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

(முற்பகல் 11-15)

ஆக நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஒரே அறையில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். இட வசதி இல்லாமல், கழிப்பிட வசதிகள் இல்லாமல், கட்டிட வசதிகள் இல்லாமல் உள்ள நிலை தமிழகத்திலே இருக்கிறது. குறிப்பாக அரசுப் பள்ளிகளில் போதுமான வசதிகள் கிடையாது, சுற்றுப்புற சுகாதார வசதிகள், கழிப்பிட வசதிகள் கிடையாது. குறிப்பாக பெண்கள் பள்ளிகளில் எந்த வசதிகளும் இல்லை என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அது மாத்திரமல்லாமல், போதிய ஆசிரியர்களை நியமனம் செய்யவில்லை. மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்களுடைய பணியிடங்களைத் தோற்றுவித்ததாக இந்தக் கல்விக் கொள்கைக் குறிப்பிலே நிச்சயமாக இல்லை. 825 ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவிக்கிறார்கள். தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஆகிய எல்லாவற்றுக்கும் சேர்த்து 825 பணியிடங்கள் என்பது மிகவும் குறைந்தது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி அதிக நிதி ஒதுக்கீடு பெற்று எப்படியாவது இந்த ஆண்டு மேலும் ஆசிரியர் பணியிடங்களை அதிகப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கல்வித் தரத்தைப்பற்றி பல்வேறு கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கல்வியின் தரம் குறைந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். கல்வித் தரத்தை அதிகப்படுத்தி உயர்த்திக் கொண்டிருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கெல்லாம் அந்தக் கல்வித் தரம் உயர்ந்த நாளிலிருந்து பதவி உயர்வு கொடுத்தால், அவர்கள் மன நிறைவோடு பணியாற்றக் கூடிய நிலைமை இருக்கலாம். தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், பி.எட்., எம்.எட். பட்டம் பெற்ற ஆசிரியர்கள்கூட இளநிலை ஆசிரியர்களாகவும், சிறப்பாசிரியர்களாகவும், பணியாற்றக்கூடிய நிலை இருக்கிறது. ஓராண்டு, இரண்

[திரு. அ. மயில்சாமி] [1985 ஜூன் 10

டாண்டுகள் அல்ல, பத்தாண்டுகளாகக்கூட பதவி உயர்வு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பதவி உயர்வு அளித்தால், நிச்சயமாக கல்வியின் தரத்தை உயர்த்த அவர்களுடைய பங்கு சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வு முடிவுகள் இப்போது வெளி வந்திருக்கின்றன. குறிப்பாக மெட்ரிகுலேஷன் பள்ளிகள்தான் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றன. இதை நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழகத்திலே பல்வேறு பள்ளிகள், அரசுப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், மாநகராட்சிப் பள்ளிகள் என்று இருக்கும்போது, மெட்ரிகுலேஷன் பள்ளிகள் அந்த அளவிற்கு தேர்ச்சியுறுவதற்குக் காரணம் என்னவென்றால், அப்பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பிலும், பத்தாம் வகுப்பிலும் செயல்முறைப் பயிற்சியை வைத்திருக்கிறார்கள் என்பதுதான். நம்முடைய பள்ளிகளிலும் ஒன்பதாம் வகுப்பிலும், பத்தாம் வகுப்பிலும் செயல்முறைப் பயிற்சி வந்தால் நிச்சயமாக அவர்களுக்குச் சமமாக, மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்குச் சமமாக இவர்களும் தேர்ச்சி பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்களுடைய பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்தால், கல்வியின் தரம் உயர்வதற்கு அவர்கள் மன நிறைவோடு செயலாற்ற முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அரசுப் பள்ளிகளையும், மற்ற பள்ளிகளையும் எடுத்துக் கொண்டால், தலைமையாசிரியர்கள் கல்விப் பணியை ஆற்ற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. கல்விப் பணியை மேற்பார்வையிட நேரம் இல்லை. காரணம், அவர்களுக்கு உதவியாளர்கள் இல்லை. 'நான்-டீச்சிங் ஸ்டாஃப்' போதுமானதாக இல்லை. ஐந்தாறு ஆண்டுகளாக 'நான் டீச்சிங் ஸ்டாஃப்'—ஒரு எழுத்தர் கூட —இல்லாத நிலையில் ஏராளமான பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே எழுத்தர்களை அவசரமாக நியமிக்க வேண்டும். மேல்நிலைப் பள்ளிகளில் அசிஸ்டெண்டுகள் இல்லை. அசிஸ்டெண்டுகள் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்து ஏழு ஆண்டுகள் ஆகியும், எல்லா மேல்நிலைப் பள்ளிகளிலும் அசிஸ்டெண்டுகள் இல்லாத நிலை இருக்கின்றது. ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளிக்கும் ஒரு அசிஸ்டெண்டை கண்டிப்பாக நியமித்தாக வேண்டும்.

ஆசிரியர்களுக்கெல்லாம் மூன்று நாளிலிருந்து பத்து நாள் ஈட்டிய விடுப்பு அளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதே சலுகை பள்ளிகளில் பணியாற்றுகிற எழுத்தர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவர்களும் ஆசிரியர்களைப் போலவே பணியாற்றுகிறார்கள். அதைவிட அதிகமான நாட்களுக்குக் கூட பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு இந்தச் சலுகை கிடையாது. ஆகவே அவர்களுக்கும் பத்து நாட்கள் ஈட்டிய விடுப்பு கண்டிப்பாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூன் 10] [திரு. அ. மயில்சாமி]

கல்லூரிகளில் இருக்கக் கூடிய பேராசிரியர்களுடைய ஊதிய விகிதத்தில் உச்சநிலை வந்தவுடன் ஸ்டாக்னேஷன் அலவன்ஸ் இல்லை என்று குறிப்பிடப்படுகிறது. இதனால் ஓர் ஆசிரியர் 1,600 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வந்தவுடன—இதை நான்காண்டுகளில் ஒருவர் அடைந்து விடுகிறார்—தொடர்ந்து அதே ஊதியத்தை வாங்கும் நிலை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு ஸ்டாக்னேஷன் அலவன்ஸ் கொடுக்க நம்முடைய கல்வித் துறை முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே தனியார் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஏராளமாக இருக்கின்றன.

தனியார் பள்ளிகளை நிர்வகிக்க பல சட்டங்கள் கொண்டு வந்தும், அந்தச் சட்டங்களிலே குறைபாடுகள் இருப்பதைக் கண்டறிய வல்லுநர் குழு ஒன்று போடப்பட்டது. பள்ளிக் கல்வி இயக்குநரைத் தலைவராகக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டது.

143953

(முற்பகல் 11-20)

நானும்கூட அதிலே உறுப்பினராக இருந்தேன். பல்வேறு கருத்துக்களை அங்கே எடுத்து வைத்தேன். இந்தச் சட்டத்திலே இருக்கக்கூடிய குறைபாடுகளை, ஓட்டை உடைசல்களை அடைப்பதற்கு அங்கே பல கருத்துக்களை வைத்தேன். அப்படி வைத்து இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றன. அது என்னதான் ஆயிற்று என்று தெரியவில்லை. இன்றைக்கு அந்த எக்ஸ்பர்ட் கமிட்டியினுடைய பரிந்துரைகள் அங்கே இருக்கின்றன. அது மட்டுமல்ல. நாங்கள் சொன்ன கருத்துக்கள் எல்லாம் இன்றைக்கு எந்த நிலையில் இருக்கின்றன ? எக்ஸ்பர்ட் கமிட்டியினுடைய பரிந்துரைகள் எங்கே இருக்கின்றன? இல்லை, அவைகள் அமுலுக்கு வரப் போகின்றனவா இல்லையா என்பது தெரியவில்லை. அரசு ஒரு குழுவைப் போடுகின்றது. இரண்டு, மூன்று படுகிறது. 1985-86 ஆம் ஆண்டில் 5.50 மெ. டன் காய்கறி விதைகள் பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதா என்று அந்தக் குழுவிலே இருக்கக்கூடிய எனக்கே தெரியவில்லை என்றால், அது வேதனையாக இருக்கின்றது. தனியார் பள்ளிகளை, கல்லூரிகளை எல்லாம் எடுத்துக்கொண்டால், இன்றைக்குப் பெரும்பாலானவை நிச்சயமாக வியாபார நோக்கத்திலேதான் நடைபெறுகின்றன. அந்தக் காரணத்தினாலே, கல்வித் துறையிலே ஒரு அமைதியற்ற நிலைமை இருக்கிறது. நினைத்தால் தற்காலிக வேலை நீக்கம் என்றெல்லாம் இருக்கிறது. இந்தத் தற்காலிக வேலை நீக்கத்திற்கு ஏதாவது ஒரு முட்டுக்கட்டை வேண்டும். யாரிடமிருந்தாவது அனுமதி பெற்று தற்காலிக வேலை நீக்கம் செய்ய வேண்டும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு

[திரு. அ. மயில்சாமி] [1985 ஜூன் 10

வந்தாலொழிய, ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பிரச்சினையை முக்கியமாகத் தீர்க்க முடியாது. இன்றைக்கு நினைத்தால், கல்லூரி முதல்வரைக்கூட தற்காலிக வேலைநீக்கம் செய்கின்றார்கள். ஆக அதையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு, கல்வித் துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகளுடைய அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய வேண்டும் என்று வர வேண்டும். அப்படி ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தாலொழிய, இந்தப் பிரச்சினையை நிச்சயமாக நாம் தீர்த்துவிட முடியாது. அந்த அடிப்படையில்தான் நான் இந்தக் கருத்தைச் சொல்கிறேன். தனியார் பள்ளி ஆசிரியர்கள் பிரச்சினை தீர, ஒரு குழுவைப் போட்டு நம்முடைய கல்வித் துறைச் செயலாளர், அல்லது கல்வி இயக்குநர் தலைமையிலே அதை நடத்த வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அந்தக் குழு கூடி, ஆண்டுக்கணக்காக எந்தெந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கின்றதோ அப்படிப்பட்ட பிரச்சினைகளை எடுத்துத் தீர்ப்பதுதான் சரியாக இருக்கும். இல்லை என்றால், 10 ஆண்டுகள் ஆகியும் கூட ஒரு தனிப்பட்ட ஆசிரியர் பிரச்சினை தீரவில்லை என்றால், நம்முடைய கல்வித் துறையில் உள்ள ஆசிரியர்கள் நிலைமை எந்த அளவுக்குப் பாதிக்கப் பட்டிருக்கும் என்பதை தயவு செய்து நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு சிறிய உதாரணத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கோவை மாவட்டத்திலே கன்னிகா குருகுலம் மேல்நிலைப் பள்ளி என்று இருக்கின்றது. அங்கே கண்ணம்மாள் என்ற பெண் ஆசிரியர் இருக்கின்றார். டைப்ரைட்டிங் டீச்சர். ஏற்கெனவே 15 ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழ் தட்டெழுத்திலே மேல்நிலை தேர்ச்சி பெற்று வந்திருக்கின்றார்கள். அங்கே வந்து பணியாற்றி வந்திருக்கின்றார்கள். "தமிழிலே மேல்நிலை தேர்ச்சி பெற்றிருக்கின்ற காரணத்தால் உங்களுக்குக் கல்வித் தகுதி இல்லை" என்று சொல்லியிருக்கின்றார்கள். ஐந்து ஆண்டுகள் கழித்துச் சொன்னார்கள். அதற்குப் பின்னால் கல்வித் தகுதி என்று சொல்லி, இன்றைக்கு 10 ஆண்டுகள் ஆகியும் கூட, ஒரு ஊதிய உயர்வும் இல்லாமல் அவர்கள் அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய பரிதாபமான நிலையில் இருக்கின்றார்கள். 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். ஆங்கிலம் ஹையர் கிரேட் பாஸ் செய்திருக்கின்றார்கள். தமிழ் தட்டெழுத்து ஹையர் கிரேட் பாஸ் செய்திருக்கின்றார்கள். இன்றைக்குத் தமிழகத்தினுடைய நிலைமை என்ன? தமிழிலே ஹையர் கிரேட் பாஸ் செய்வதுதான் மிக முக்கியம். அது தான் தேவை என்று சொல்கின்றார்கள். ஆனால் 15 ஆண்டுகளுக்கு முன்னாலே தேர்ச்சி பெற்ற காரணத்தினாலே தகுதியில்லை என்று சொல்லி, இன்றைக்குப் பத்தாண்டுக் காலமாக இன்கிரிமென்ட் இல்லாமல் பணி செய்து கொண்டிருக்கக்கூடிய பரிதாபமான நிலைமை அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. நாங்களும் எல்லா மட்டங்களிலேயும் சொல்லியும்கூட அது எந்த இடத்திலே



1985 ஜூன் 10] [திரு. அ. மயில்சாமி]

நிற்கிறது என்று எங்களாலே கண்டுபிடிக்க முடியாது இருக்கின்றது. அந்தப் பரிதாபமான நிலைக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் தீர்ப்பதற்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தனியார் ஆசிரியர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு உயர்மட்டக் குழு ஒன்றை நியமித்து, ஐந்து ஆண்டுக் காலமாக முடியாத பிரச்சினைகள் எவையெவை இருக்கின்றன என்று பார்த்து அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முயல வேண்டும். அப்படித் தீர்த்தால்தான் சரியாக இருக்கும். நிச்சயமாக வளர்ந்து வருகின்ற இந்தத் தனியார் பள்ளி ஆசிரியர்கள் பிரச்சினையை வேறு வகையில் தீர்த்துவிட முடியாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, 'அப்சார்ப்ஷன்' பிரச்சினை. பல பள்ளிகளை நம்முடைய அரசு எடுத்துக்கொண்டிருக்கின்றது. அந்தப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் பணியாற்றியிருந்தும்கூட, அவர்களுக்கு எந்தச் சலுகையும் இல்லை. சி.எல். ஒன்றைத் தவிர அவர்களுக்கு வேறு சலுகை எதுவும் இல்லாமல்தான் இருந்துகொண்டிருக்கின்றார்கள்.

எனக்குத் தெரிந்த ஒருவர், ராசிபுரம் நகராட்சி மேல்நிலைப் பள்ளி ஆசிரியர், அந்தக் காலத்திலே எம்.ஏ. படித்துவிட்ட காரணத்தினால், கல்லூரிக்கு 10 ஆண்டுகளுக்கு முன்னாலே சென்றார். தமிழ்த் துறைக்குச் சென்றார். 'அப்சார்ப்ஷன்' ஆகாத காரணத்தினால், அவருக்குப் பதவி உயர்வு இல்லை. இன்றைக்கு தமிழகத்திலே தேடிப்பார்த்தால், கல்லூரிகளிலே மொத்தம் 10 டியூட்டர்கள்தான் இருப்பார்கள். அந்த பத்து டியூட்டர்களிலே அவரும் ஒருவர். அவருக்கு 'அப்சார்ப்ஷன்' ஆகவில்லை. அதனால் அவருக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை. இன்னும் ஒன்று இரண்டு ஆண்டுகள் பணியாற்றப் போகின்றார். அவர் ஓய்வு பெறப் போகின்றார். இங்கே இருந்திருந்தாலும்கூட, அவர் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக ஆகியிருப்பார். ஆக இந்த அப்சார்ப்ஷனில் என்ன சிக்கல்? அரசே மான்வந்து எடுத்துக்கொள்கின்றபோது, ஒரு இடத்திலேயிருந்து இன்னொரு இடத்திற்குப் போவதற்கு அனுமதி அளிக்கின்றபோது, ஏன் இந்தக் காலதாமதம்? அப்சார்ப்ஷன் ஆகாத காரணத்தினால், ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஒரு நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக மாறும்போது அங்கு ஆசிரியராக வந்து, அங்கே அப்சார்ப்ஷன் ஆகாத காரணத்தினால், அவருக்கு மாறுதல் கிடையாது. இன்கிரிமென்ட் கிடையாது. அவர்கள் கல்வித் தகுதியை ஏற்றிக்கொண்டிருந்தாலும்கூட.

அந்த அதிகாரிகளிடமிருந்து அப்சார்ப்ஷன் வாங்காத காரணத்தினால், ஆயிரக் கணக்கான ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் தீர முடியவில்லை. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதால்தான் அவர்களுக்குப் பதவி உயர்வு எல்லாம் கொடுக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தது. இப்போது ஜூன் திங்கள். மாணவ மாணவியர்கள் எல்லாம் பள்ளியை நோக்கி சிபாரிசோடு செல்ல வேண்டும் என்ற காலம். அதுவும் குறிப்பாக நகரங்களிலே தனியார் பள்ளிகளிலும் மெட்ரிகுலேஷன் பள்ளி களிலும் மிகப்பெரிய சிபாரிசுடன்தான் சேர்கின்றார்கள்.

(முற்பகல் 11-25)

அதை ஒன்றும் கட்டுப்படுத்த முடியவில்லை. காரணம், இன்றைக்கு எல்லோரும் வசதி இருந்தாலும், வசதி இல்லாவிட்டாலும் இங்கிலீஷ் மீடியம் பள்ளிகளுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்புவது நாகரீகமாக இருக்கிறது. ஆனால் கிராமப்புற மாணவர்களுக்கு எங்கே இங்கிலீஷ் மீடியம் பள்ளிகள் இருக்கின்றன ? கிராமப் புறங்களிலே உள்ள அரசுப் பள்ளிகளிலே இங்கிலீஷ் மீடியம் செக்ஷன் ஒன்றை ஏன் தோற்றுவிக்கக்கூடாது ? நகரங்களில் உள்ள வர்களுக்கு அந்த வசதியைக் கொடுத்துவிட்டு, கிராமப்புறங்களில் உள்ளவர் களுக்கு அந்த வசதியைக் கொடுக்கவில்லை என்றால், அது என்ன நியாயம் என்று கேட்க விரும்புகிறேன். எனவே நகர்ப்புறங்களில் உள்ள நெரிசலை நீக்க, கிராமங்களில் உள்ள பள்ளிகளிலும் இங்கிலீஷ் மீடியம் வகுப்புகளைக் கொடுத்தால், கிராமங்களில் உள்ளவர்கள் நிச்சயமாக நகரங்களை நோக்கி ஓடி வரமாட்டார்கள். நிச்சயமாக இதைச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் ஆசிரியர்களுடைய பிரச் சினைகளைத் தீர்ப்பதற்கு 'த்ரி டையர் கவுன்சில்' என்று ஒன்றை அமைத் தார்கள். கல்வி மாவட்ட அளவிலும், ரெவின்யூ மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் அமைத்தார்கள். பல்வேறு மாவட்டங்களில் இந்தக் கூட்டம் நடைபெறவேதே இல்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை, அங்கே





ரிக்கப்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகள்தான் அதிலே உறுப்பினர்களாக அங்கம் வகிக்கிறார்கள். அந்தக் கூட்டத்தைக் கூட்டினால், அங்கே ஆசிரியர்கள் பிரச்சினைகளைச் சொல்லி, அவற்றைத் தீர்க்க முடியும். எங்கேயாவது அந்தக் கூட்டத்தை இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டியிருக்கிறார்களா என்றால் இல்லை. நல்ல எண்ணத்தோடு கொண்டு வந்த அந்தத் திட்டம் செயல்படவில்லை. இதில் என்ன சங்கடம் என்று தெரியவில்லை. எதிர்காலத்திலாவது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கல்வி மாவட்ட அளவிலும், ரெவின்யூ மாவட்ட அளவிலும் அந்தக் கூட்டத்தைக் கூட்டி, அங்கே ஆசிரியர்கள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். அதற்காகத் தான் 3 டையர் கவுன்சில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் மாநில அளவிலே அந்தக் கவுன்சில் ஒரு முறை கூட கூடவில்லை என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன். ஆசிரியர்களின் பிரச்சினைகளை ஓரளவுக்கு ஆங்காங்கேயே தீர்க்க இந்தத் திரி டையர் கவுன்சில்கள் நல்ல முறையிலே பயன்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, விடைத் தாள்கள் திருத்தும் ஆசிரியர்கள் பல்வேறு மாவட்டங் களிலிருந்து பல்வேறு மையங்களுக்குச் செல்கிறார்கள். இன்றைக்கு விடைத் தாள்கள் திருத்தும் பட்டதாரிகள், தமிழாசிரியர்கள், முதுகலைப் பட்டதாரிகள் ஆகியோருக்கு முதல் வகுப்பு ரயில் பயணம் செய்ய எலிஜிபிலிட்டி உண்டு. முதல் வகுப்புக்கு எலிஜிபிலிட்டி உண்டு என்று அவர்கள் சொல்லாமல், கொடுப் பதில்லை. இந்த நேரத்தில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். யார் யார் விடைத் தாள்களைத் திருத்துகிறார்களோ, அவர்களில் யார் யாருக்கு முதல் வகுப்புக்கு எலிஜிபிலிட்டி இருக்கிறதோ அவர்களுக்கு அதைக் கொடுக்க வேண்டும். அது மாதிரி, உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 1978-லிருந்து இன்றையவரை உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எட்டு ஆண்டுகளாக இருந்தாலும், அவர்களுக்கு விடைத் தாள்கள் திருத்தும் வாய்ப்பு இல்லை. அந்த ஆசிரியர்கள் பாடங்கள் நடத்துகிறார்கள், பள்ளிகளில் விடைத் தாள்களைத் திருத்துகிறார்கள். இருந்தாலும் அவர் களுக்கு விடைத் தாள் திருத்தும் வாய்ப்பு கிடைக்காமல் இருக்கிறது. இந்த ஏற்றத் தாழ்வையும் நிச்சயமாகப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

[திரு. அ. மயில்சாமி] [1985 ஜூன் 10

அடுத்து, முதுநிலை ஆசிரியர்களுக்கு ஒரு ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எம். பி.எட். பட்டம் பெற்ற உடற்பயிற்சிக் கல்வி இயக்குநர்களுக்கு அந்த ஊதியம் தரப்படுவதில்லை. அவர்களுக்கும் அந்த ஊதியத்தைத் தர வேண்டும். இன்றைக்கு விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இன்றைக்கு ஐந்து மாவட்டங்களுக்கு ஒரு ரீஜினல் இன்ஸ்பெக்டர் ஆஃப் எஜுகேஷன் இருக்கிறார். நிச்சயமாக அந்த ஐந்து மாவட்டங்களில் உள்ள பள்ளிகளை அவரால் ஆய்வு செய்ய முடியாது. எனவே மாவட்டத்திற்கு ஒரு ஆர்.ஐ.பி.இ. நியமித்தால், நிச்சயமாக அந்தப் பள்ளிகளுக்கு அவர் சென்று, ஆய்வு செய்து, விளையாட்டிலே ஊக்கமுடைய மாணவர்களை ஊக்குவிக்க முடியுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழக அரசு, ஆசிரியர்களுக்காக 'டீச்சர்ஸ் ஹோம்' ஏற்படுத்த வேண்டுமென்று முயற்சி எடுத்திருக்கிறது. அதாவது மாவட்டந்தோறும், மாவட்டத் தலைநகரங்களில் ஆசிரியர்களுக்காக ஒரு வீடு—'டீச்சர்ஸ் ஹோம்'—அமைக்க வேண்டுமென்று திட்டம் இருக்கிறது. ஆசிரியர்கள் அங்கே வந்து தங்கவும், கூட்டம் நடத்தவும், மற்ற காரியங்களுக்கும் அது வசதியாக இருக்குமென்ற கருத்தைச் சொன்னார்கள். பல்வேறு மாவட்டங்களில் அந்த நிலைமை ஏற்படவில்லை. பல மாவட்டங்களில் அந்த நிலைமை ஏற்படவில்லை என்றாலும், 'டீச்சர்ஸ் ஹோம்' இருக்கக்கூடிய மாவட்டங்களிலாவது சரியாக அதனைப் பாதுகாக்கிறார்களா என்றால் இல்லை. உதகமண்டலத்திலே ஒரு ஆசிரியர் இல்லம் இருக்கிறது. அது சரியாகப் பராமரிக்கப்படாமல் இருக்கிறது. எந்த ஆசிரியரும் அங்கே சென்று தங்க முடியாத நிலைமை இருக்கிறது. மழை பெய்தால், அந்த இல்லத்தைச் சுற்றி தண்ணீர் தேங்குகிறது. எனவே உதகமண்டலத்திலே உள்ள ஆசிரியர் இல்லத்தை நல்ல முறையிலே பழுது பார்த்து, ஆசிரியர்கள் அங்கே தங்குவதற்கான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

இன்றைக்கு தமிழகத்தில் ஏராளமான மெட்ரிகுலேஷன் பள்ளிகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஆண்டுக்காண்டு இப்பள்ளிகள் பெருகி வருகின்றன. ஆனால் இப்பள்ளிகளை ஆய்வு செய்ய தமிழகம் முழுவதற்கும் ஒரே ஓர் இன்ஸ்பெக்டர் ஆப் மெட்ரிகுலேஷன் ஸ்கூல்ஸ் தான் இருக்கிறார். அவர் ஒருவரே தமிழகம் முழுவதும் இருக்கின்ற அத்தனை பள்ளிகளுக்கும் சென்று



1985 ஜூன் 10] [திரு. அ. மயில்சாமி]

ஆய்வு நடத்துவது என்பது முடியாத காரியம். ஒரு பக்கம் பள்ளிகள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. இன்னொரு பக்கம் ஒரே ஓர் அதிகாரி மட்டுமே ஆய்வு செய்கின்ற நிலை இருக்கிறது. குறைந்தபட்சம் நான்கு மண்டலங்களாக இதனைப் பிரிக்க வேண்டும். இதற்காக நான்கு அதிகாரிகளைப் போட வேண்டும். அப்படியானால்தான் வளர்ந்து வருகின்ற மெட்ரிகுலேஷன் பள்ளிகளைச் சரியாக ஆய்வு செய்ய முடியும் கண்காணிக்க முடியும். இல்லையென்றால், சரியாகக் கண்காணிக்க முடியாது. இப்படியே விட்டு விடுவது நல்லதல்ல. இப்பள்ளிகள் அனைத்தும் கல்வித் துறையினுடைய கண்காணிப்பின்கீழ் வந்தாக வேண்டும். பாடத் திட்டங்களைப் பொறுத்த வரையில், ஆசிரியர்களுடைய பணி நிலைமைகளைப் பொறுத்தவரையில், அவர்களை சரியாக கவனிப்பதே இல்லை. எதிர்காலத்திலும் இப்படியே விட்டு விட்டால், தமிழகத்தில் இரண்டு ஜாதிகள் தோன்றிவிடும். அதாவது மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலிருந்து படித்து வருபவர்கள் ஒரு ஜாதியினராகவும், அரசு மற்றும் நகராட்சிப் பள்ளிகள் போன்றவைகளில் படித்து வருபவர்கள் இன்னொரு ஜாதியினராகவும் ஆகிவிடுவார்கள். அதற்கு இடம் கொடுக்காத வகையில் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் அத்தனையையும் கல்வித் துறையின் நிர்வாகத்தின் கீழ் உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நீலகிரி ஒரே ஒரு கல்வி மாவட்டமாக இருக்கிறது. அதற்குக் குன்னூர் தான் தலைநகர். அங்கு இன்றைக்கு நூற்றுக்கு மேற்பட்ட பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே உதகையை தலைநகராகக் கொண்டு இன்னொரு கல்வி மாவட்டத்தை அவசியம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி ஈரோடு கல்வி மாவட்டம் மிகப் பெரியது. ஒரே ஓர் அதிகாரியால் அனைத்துப் பள்ளிகளையும் ஆண்டுக்கு ஒரு முறையாவது ஆய்வு செய்வது என்பது சாத்தியமல்ல. பெரிய மாவட்டமாக இருப்பதால், ஆசிரியர்களுடைய பிரச்சினைகளையும் தீர்க்க முடியவில்லை. ஆகவே ஈரோடு மாதிரி இருக்கின்ற பெரிய கல்வி மாவட்டங்களை எல்லாம் இரண்டாகப் பிரிக்கின்ற நிலைமை வர வேண்டும். இதற்காக ஆகின்ற நிர்வாகச் செலவை நாம் அவ்வளவாகப் பொருட்படுத்த வேண்டாம்.

அடுத்து, தர்மபுரி மாவட்டம் என்னுடைய தொகுதி. அங்கே ஒரே ஒரு பாலிடெக்னிக் தான் இருக்கிறது. அங்கே இன்னொரு அரசு பாலிடெக்னிக்கை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. மயில்சாமி] [1985 ஜூன் 10

அடுத்து, தனியார் பள்ளிகளை எல்லாம் அரசு எடுக்க வேண்டுமென்று சங்கங்கள் எல்லாம் கோரிக்கை வைத்தாலும், அவற்றை எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. அதேசமயத்தில் சில பள்ளிகளை அவர்களாகவே முன் வந்து அரசிடம் ஒப்படைக்க முன்வந்தாலும, அரசு அவற்றை எடுப்பதில்லை. உதாரணமாக கோவையில் மின் வாரியத்தால் நடத்தப்படும் பள்ளிக்கூடம் இருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக அதனை அரசு எடுக்க வேண்டு மென்று அவர்களே சொல்கிறார்கள். என்ன காரணத்தாலோ அதனை அதிகாரிகள் எடுக்காமல், ஒரு சின்ன விளக்கம் கேட்டுக்கொண்டே தாமதப் படுத்திக்கொண்டிருக்கிறார்கள். மின் வாரியம் ஒப்படைக்க முன் வந்துள்ள அந்தப் பள்ளியை அரசு உடனே எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, நம்முடைய கல்வித் துறையில் பல்வேறு விதிகள் இருக்கின்றன. மேல்நிலைப் பள்ளிகள் வந்தபோது விதிகள் போட்டோம். இருந்தும் சில வற்றை இன்னும் அமுல்படுத்தவில்லை. தனியார் பள்ளிகளைப் பொறுத்த வரையில், 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் பணியாற்றிய நிலைமையில் பதவி உயர்வு என்று வரும்போது, மேல்நிலைப் பள்ளிகளில் அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. அதன் காரணமாக தகுதி யுள்ள ஆசிரியர் குறிப்பிட்ட பள்ளியில் இருந்தும், அவர் தலைமை ஆசிரியராக வர முடியாத நிலைமை இருக்கிறது. அதனால் வேறு பள்ளிகளிலிருந்து தலைமையாசிரியராக இன்னொருவர் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. பணி யாற்றுகிற பள்ளியிலேயே அதற்குரிய தகுதியைப் பெற்றிருந்தால், தலைமை யாசிரியர் பதவி அளிக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எப்ரல் திங்களில் எங்களுடைய இயக்கம் போராட்டம் நடத்தியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் உறுதி மொழி தந்தார்கள். தனியார் பள்ளி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணி யாற்றும் ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது, ஐந்து ஆயிரம் ரூபாய் 1—5—1983 முதல் கொடுப்பதாக அரசாணை வந்துள்ளது. இப்போது கூட தனியார், நகராட்சி மற்றும் எல்லா அமைப்புகளிலும் பணியாற்றும் அனைத்து ஆசிரி யர்களுக்கும் பொருந்தும் என்கிற வகையில் அந்த அரசாணை வரவில்லை. அரசுத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு ஒரு சலுகையை அறிவிக்கும் போது அந்தச் சலுகை உள்ளாட்சித் துறை அமைப்புகளிலும், தனியார் துறையிலும் மற்றும் அனைத்து துறைகளிலும் பணியாற்றும் ஆசிரியர் களுக்கும் பொருந்தும் என்கிற வகையில் அரசானை போடுவதில் என்ன சிக்கல் இருக்கிறது என்று நான் அறிய விரும்புகிறேன்.



1985 ஜூன் 10] [திரு. அ. மயில்சாமி]

அடுத்து, அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இன்றைக்கு தொட்டதற்கெல்லாம் ஆசிரியப் பெருமக்கள் இயக்குநர் அலுவலகத்திற்கு வரவேண்டிய நிலை இருக்கிறது. ஒரு சாதாரண அதிகாரிக்கு ஒரு பிரச்சினை என்றாலோ, டிரான்ஸ்ஃபர் சம்பந்தமாகப் பிரச்சினை என்றாலோ, எதுவாக இருந்தாலும் சென்னை யிலுள்ள இயக்குநர் அலுவலகத்திற்கு வரவேண்டிய நிலை இருக்கிறது.

(முற்பகல் 11-35)

செலக்ஷன் கிரேடு கொடுக்க வேண்டுமா ? சென்னைக்குத்தான் வர வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த அதிகாரத்தை முதன்மைக் கல்வி அலுவலருக்கே கொடுத்துவிட்டால், பல ஆசிரியர்கள் சென்னைக்கு வரவேண்டிய அவசியம் இல்லை. அதிகாரத்தை ஒரே இடத்தில் குவித்துவைப்பதால், பிரச்சினைகள் தீர்வதில்லை. அதுபோல் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் பணிமாற்ற ஆணையை, முதன்மைக் கல்வி அலுவலர்தான் போடவேண்டும் என்ற நிலை இருக்கிறது. இதை மாவட்டக் கல்வி அலுவலருக்கு மாற்றினால், முதன்மைக் கல்வி அலுவலரின் பணிச் சுமை குறையும். மாவட்டக் கல்வி அலுவலருக்கு இப்பொறுப்பை மாற்றினால், இப்போது ஏற்படுகிற காலதாமதம் நிச்சய மாக இருக்காது. முதன்மைக் கல்வி அலுவலர் மாவட்டம் முழுவதும் சென்று பார்த்து. ஆசிரியர்களுக்கு மாற்றல் உத்தரவு போடுவது என்பது சுலபம் அல்ல.

அடுத்து, கல்வித் துறையில், முதன்மைக் கல்வி அலுவலர்கள், தலைமை ஆசிரியர்கள் குறித்து "பானல்" ஆண்டுக்காண்டு தயாரித்து வெளியிட வேண்டும். முதன்மைக் கல்வி அலுவலருக்குப் பதவி உயர்வு வருகிறதா என்று, முதன்மைக் கல்வி அலுவலரைக் கேட்டால் அவருக்கே தெரியாது. ஆண்டுக்காண்டு "பானல்" தயாரித்து வெளியிடுவதில் என்ன சிக்கல் இருக் கிறது ? ஆண்டுக்காண்டு "பானல்" தயாரித்தால்தான், ஒவ்வொருவருக்கும் எப்போது பதவி உயர்வு வரும் என்று தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும். முன்பு ஆண்டுக்காண்டு தயாரிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால் இப்போது என்ன காரணத்தாலோ தயாரிக்கப்படுவதில்லை. இதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது தேர்வுகள் முடிந்து, மாணவர்கள் எல்லாம் கம்யூனிடி சர்ட்டிபிகேட் பெற தாசில்தார்களிடம் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. ஏன் கம்யூனிடி சர்ட்டிபிகேட்டுகளை தலைமையாசிரியர்களே கொடுக்கக் கூடாது ? எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்தைப் பார்த்துத்தான் தாசில்தார்கள் கம்யூனிடி சர்ட்டிபிகேட் கொடுக்கிறார்கள். இந்த எஸ்.எஸ்.எல்.சி புத்த

கத்தைத் தலைமை ஆசிரியர்தான் தயாரித்துக் கொடுக்கிறார். அந்தத் தலைமை ஆசிரியரே கம்யூனிடி சர்ட்டிபிகேட் கொடுப்பதில் என்ன சிக்கல் இருக்கிறது? இந்தப் பொறுப்பை தலைமை ஆசிரியர்களிடம் கொடுத்தால், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் வேலை உடனடியாக முடியும். இதை யும் கல்வித் துறை பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான்காவது ஊதியக் குழு அறிக்கை வந்திருக்கிறது. முழு அறிக்கையும் இன்னும் கிடைக்கவில்லை. நாங்கள் கேட்டுக்கொண்டதெல்லாம் வந்திருக் கிறதா என்று தெரியவில்லை. ஒரேயொரு கருத்தை மிகவும் வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு சிலருக்கு அவர்களது பணியின் சிறப்பைக் கருதி அதிகமாகக் கொடுப்பதாக அரசுத் தரப்பிலேயிருந்து செய்திகள் வந்திருக்கின்றன. அப்படியானால் அவர்கள் மட்டும்தான் முக்கிய மானவர்களா? மற்றவர்கள் எல்லாம் முக்கியம் இல்லையா என்கிற கேள்வி எழுகிறது. அவர்களுக்கு மட்டும் அதிகமான ஊதியம் தந்துவிட்டு, மற்றவர் கள் முக்கியமானவர்கள் இல்லை என்று கருதினால், இவர்கள் பணியெல்லாம் அரசுக்குத் தேவை இல்லையா? நாட்டுக்குத் தேவை இல்லையா? இவ்வாறு அரசு கூறியிருப்பதால், அரசே ஊழியர்களைப் பிரித்தாளுகிற நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறதே தவிர, வேறல்ல. இதை அரசே சொல்லாமலே கூட செய் திருந்தாலும் பரவாயில்லை. சொல்லிச் செய்வதால்தான், "நாங்கள் எல்லாம் முக்கியம் இல்லை, மற்ற துறைகளிலே பணியாற்றுகிறவர்கள் எல்லாம் முக்கியம் இல்லை" என்ற உணர்வு ஏற்பட்டிருக்கிறது. இது கூடாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது சரியான முறை அல்ல. ஊதியக் குழு அறிக்கையின் முழு விவரம் தெரியவில்லை. ஆதலால் இத்தோடு அதன்மீது பேசுவதை நிறுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே சேலத்திலே சௌடேஸ்வரி கல்லூரி என்ற ஒரு கல்லூரி இருக்கிறது. அங்கே அன்றாடம் பிரச்சினைகள்தான். நினைத்தால் வேலை நீக்கங்கள். இன்கிரிமெண்ட் வெட்டு. இங்கிருந்து அதிகாரிகள் சென்று, நிர்வாகத்தினரையும், ஆசிரியர்களையும் அழைத்துப் பேசி என்ன பிரச்சினை என்று பேசித் தீர்க்க முடியாதா? முதலில் அதிகாரிகள் ஜன நாயக முறையில் பேசிப் பார்க்கலாம். நான், கல்வித் துறையினரிடம் பணி வன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், தனியார் நிர்வாகம் அரசின் விதிமுறை களை மீறினால், உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் அரசிடம் பயப்படுவார்கள். இல்லையென்றால், அவர்களைக் கட்டுப் படுத்தவே முடியாது. இன்றைக்கு தனியார் கல்விக் கூடங்கள் எல்லாம் வியாபாரக் கூடங்களாக மாறிக்கொண்டிருக்கின்றன. மிகவும் வேதனையாக





இருக்கிறது. அவர்கள் அத்துமீறல்கள் கணக்கில் அடங்காது. இந்த நிலையை மாற்றுவதற்கு தயவு செய்து கல்வித் துறை அதிகாரிகள், சேலம் சௌடேஷ்வரி கல்லூரிக்குச் சென்று, அங்கே என்ன பிரச்சினை என்பதை அறிந்து, உடனடி யாகத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால், பேராசிரியர்களின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கும். கல்லூரிகள் விரைவிலே திறக்கப்படவிருப்பதால், பேராசிரியர்கள் நிம்மதியாகப் பணியாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே, அருள்கூர்ந்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

சென்ற மாதம் ஏப்ரல் திங்களில் நடைபெற்ற 10 ஏ-1 ஆசிரியர்கள் பிரச் சினையை நாங்கள் எல்லாம் எடுத்துச் சொல்லி போராட்டம் நடத்தியதற்குப் பின்னால் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் 10 ஏ-1 ஆசிரியர்களுடைய பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறோம் என்ற உறுதிமொழியைத் தந்தார்கள். ஆகவே அவர்கள் மீண்டும் தேர்வாணைக் குழுவிற்குச் செல்வதா அல்லது என்ன வென்று தெரியவில்லை. ஆகவே அவர்களுடைய பிரச்சினையை மீண்டும் நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மீண்டும் தேர்வாணைக் குழு விற்குச் சென்றால், அவர்கள் 10 ஏ-1 ஆகத்தான் இருக்க வேண்டும். ஆகவே இன்றைக்குப் பணியில் இருக்கக்கூடிய அத்தனை ஆசிரியர்களுக்கும் விதி விலக்குத் தந்து, அவர்களை எல்லாம் நிரந்தரப்படுத்துகிறோம் என்று ஒரு ஆணையையும் போட்டால்தான், அந்த ஆசிரியர்களுடைய வாழ்வு மலரும் என்று கூறி, வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

**திரு. க. அருணாசலம்** : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கை பற்றி எனது கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது மாநிலத்தின் கல்வி பற்றி பிற மாநிலங்கள் மிகச் சிறப்பாகக் கருதுகின்றன. அதற்கு எத்தனை யோ காரணங்கள் உண்டு. நம்முடைய பாரம்பரியம், பண்பாடு, போக்கு, தேசிய உலக நோக்கு—இவைகள் எல்லாம் சேர்ந்து மிகச் சிறப்பாக நம் கல்விக் கொள்கை பற்றி விமர்சனம் செய்து வந்திருக்கிறோம். இப்போது நாம் நடை முறையைப்பற்றி விமர்சிக்கவில்லை. ஆகவே கொள்கையைப் பற்றி மட்டுமே என்பதை எடுத்துக்கொண்டால், குறிப்பு கொள்கையைக் கோடிட்டுக் காட்டி யிருக்கின்றது. கொள்கை நடைமுறைக்கு வந்துவிடவில்லை. ஆனால் நம் போக்கு, போகிற திசை நோக்கி அந்தக் கொள்கைகள் வகுக்கப்படுகின்றன. உதாரணமாக எல்லாத் துறைகளைப்பற்றியும் பேச நேரம் இல்லாததால், ஒன் றிரண்டு மட்டும் பற்றி கொஞ்சம் விரிவாகச் சொல்ல வேண்டுமென்று நினைக் கிறேன். [illegible]

[திரு. க. அருணாசலம்] [1985 ஜூன் 10

வாழ்க்கைக்கான கல்வி என்பது பல ஆண்டுகளாக பல்வேறு நாடுகளிலே பேசப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் இந்த நாட்டிலே மிகச் சிறப்பாக இந்த நூற்றாண்டிலே, மகாத்மா காந்தியடிகள் வாழ்க்கைக் கல்வி இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது நடைமுறையிலே இருக்கிற கல்வியானது வாழ்க்கையோடு தொடர்பற்ற கல்வி. ஆகவேதான் தொடர்பு ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். படித்தவர்கள் சமுதாயத்தைப்பற்றி நினைக்காமல் தங்களைப்பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். சமுதாயத்தைப்பற்றி நினைக்க வேண்டும். அண்டையிலுள்ளவர்களைப்பற்றி நினைக்க வேண்டும். அந்த உணர்வு வரவேண்டும் என்பதற்காகத்தான் வாழ்க்கைக் கல்வி என்பதை வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். நமது முதலமைச்சர் அவர்களும் சென்ற ஆண்டு முதலே இந்த வாழ்க்கைக் கல்வியை அமுலாக்க வேண்டுமென்பதை எண்ணி, சில பள்ளிக் கூடங்களிலே வாழ்க்கைக் கல்வியை அமுலாக்கியிருந்தார்கள். அந்த நேரத்திலே பல்வேறு கல்வி நிலையங்களிலே நடந்த ஆராய்ச்சிகளை எடுத்துக்கொண்டு அதிலேயிருந்து ஒரு புதுவிதமான அணுகுமுறையை வைப்பதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த வாழ்க்கைக் கல்வி உண்மையாகவே நம்முடைய பண்பாட்டினையொட்டி வைக்கப்படுமேயானால் நன்றாக இருக்கும். நாம் பிற நாடுகளைப்பற்றிப் பேசுவது அவசியம் தான். ஆனால் நம்முடைய நாட்டிலே அந்நியர்கள் வந்து ஆளுவதற்கு முன்னாலே நாம் என்ன நிலைமையில் இருந்தோம், கல்வி அறிவு அற்றவர்களாக இருந்தோமா, பண்பாடு அற்றவர்களாக இருந்தோமா என்று சொன்னோம். இப்போது நாம் பொருள் வளர்ச்சியைப்பற்றி மட்டும் தான் பேசுகிறோம். அறிவு வளர்ச்சியைப் பற்றியும் பேசுகிறோம். தனியார் வளர்ச்சியைப்பற்றியும் பேசுகின்றோம். அறிவு வளர்ச்சி, பொருள் வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி எல்லாம் ஒன்றி வளருகிறதேயல்லாமல் ஒன்றைவிட்டு ஒன்று நழுவ முடியாது. ஆகவே தான் நாம் கல்விக் கொள்கையைப்பற்றி நினைக்கும்போது, தொழிற்கல்வியும் அதோடு இணைந்ததாக. விவசாயக் கல்வியும் அதோடு இணைந்ததாக இருக்க வேண்டுமென்று நினைக்கின்றோம். இப்போது அப்படி இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். என்னுடைய சிற்றறிவுக்கு எட்டியமட்டில், கல்விக் கொள்கைக்கும், இப்போது நடைமுறையில் இருக்கிற தொழிற் கொள்கைக்கும் விவசாயக் கொள்கைக்கும், பண்பாட்டுக் கொள்கைக்கும் முரண்பாடு இருப்பதுபோல் தோன்றுகிறது. நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்லாமல், அகில இந்தியாவிலேயும் இருந்து வருகிறது. அதையொட்டித்தான் 'இன்டகிரேடட் பாலிசி' ஒன்று இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். நம்முடைய கல்வியிலே பல துறைகளிலே இருப்பதையெல்லாம் எடுத்துக்காட்டி, எப்படி நம் பள்ளிக் கல்வியைப்பற்றி



1985 ஜூன் 10] [திரு. க. அருணாசலம்]

சில துறையில், வேறு துறையிலே இருக்கிற கல்வியைப்பற்றி எல்லாம் சிந்தித்து மொத்தமாக அதிக பணத்தை ஈடுபடுத்துகிறோம் என்பதை எனது இளம் நண்பர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

இந்த அறிக்கையிலே விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது புதிய டெக்ஸ்டைல் பாலிசி ஒன்று அண்மையிலே மத்திய அரசாங்கத்திலே வெளியிட்டிருக்கிறார்கள். அதிலேயிருந்து 'மேன் மெய்டு பைஃபர்ஸ்' தான் அதிகமாக வரப்போகிறது. வரட்டும், அதைப்பற்றி ஒன்றும் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் மனிதன் இயல்பாகவே கிடைக்கிற இந்த பைஃபரை எல்லாம் இல்லாமலே ஆக்கிக் கொண்டிருக்கிறான் நம்முடைய விவசாயத்தின் மூலமாக. தென் பிராந்தியத்திலே, திருநெல்வேலி ஜில்லா, நாகர்கோவில் போன்ற பகுதிகளில் எல்லாம் உட்கன், நாணல் என்ற பருத்தி அதிகமாக வளர்ந்து கொண்டிருந்தது. பிற மாவட்டங்களிலே கூட வளர்ந்து கொண்டு வந்தது. அதைக் கொஞ்சம் கொஞ்சமாக அரசு குறைத்தது. அவர்களுக்கு வேண்டிய நீளப் பருத்தியை ஏற்றுமதி செய்து கொண்டிருந்தார்கள். எதற்கெனவே ஏற்றுமதி செய்ததைவிட இங்கேயிருந்து ஏற்றுமதி செய்வது சுலபமாக இருக்கிறது என்றார்கள்.

(முற்பகல் 11-45)

அந்த ஊரில் என்ன விளைகிறது என்பது அங்கே உள்ளவர்களுக்கே தெரிவதில்லை. இந்த நாட்டில் எவ்வளவு தொழில்கள் இருக்கின்றன, என்னென்ன தொழில்கள் இருக்கின்றன என்று நம்முடைய படித்த மக்களுக்கே தெரியவில்லை என்று சொல்லி நாம் அங்கலாய்க்கிறோம். நம்முடைய குழந்தைகளுக்கு அண்டை அயலில் இருக்கிற சாதனங்களை எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பதுகூட தெரிவதில்லை. திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் தொழிலுக்கும் பள்ளிகளுக்கும் சம்பந்தம் இருக்க வேண்டும் என்று சொல்லியுள்ளார் என்று குறிப்பிட்டார்கள். தொழிலுக்கும் பள்ளிகளுக்கும் சம்பந்தம் இருக்க வேண்டியது உண்மைதான். ஆனால் தொழிலுக்கும் விவசாயத்திற்கும் முக்கியமாக சம்பந்தம் இருக்க வேண்டாமா? தொழில் படிக்கிறவர்கள் விவசாயத்தைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டாமா? அவர்கள் தான் விவசாயத்தைப் பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும். காரணம் தொழில்களுக்கான மூலப் பொருள்கள் கிடைப்பது விவசாயத்திலிருந்துதான். ஆனால் பெரும்பாலானவர்கள் அத்தகைய மூலப் பொருள்கள் நம் தேசத்திலேயே கிடைக்கிறதா அல்லது வெளிநாடுகளிலிருந்து அந்நியச் செலாவணியை செலவழித்து வருகிறதா என்றுகூட தெரியாமல் இருக்கிறார்கள். இப்படி தெரியாமல் இருந்தால் இன்னொருவர் சொல்வதைக் கேட்டுத்தான் ஏமாந்து போவார்கள்.

ஆகவே நம் நாட்டில் யார் கொள்கையை அறிவிக்கிறார்களோ அவர்கள் கையிலே இது இருக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். இதன் காரணமாகத்தான் டி.வி., ரேடியோ, பத்திரிகைகள் கூட அவர்கள் தங்களுடைய கண்ட்ரோலுக்குள் கொண்டு வரப்பட வேண்டும் என்று நினைக்கிறார்கள். இப்படி வந்தால் யாரும் சுதந்திரமாகச் சிந்தித்துச் செயல்பட முடியாது. நம்முடைய மக்கள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் என்று தான் நாம் கல்வியைக் கொடுக்கிறோம். ஆனால் இன்றைய கொள்கைகள் காரணமாக மக்கள் சுதந்திரத்திலிருந்து பறிக்கப்படுகிறார்கள். இதனால் அறிவு உடையவர்கள்கூட மேலே பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எதையும் நாம் ஒப்புக்கொள்கிறோமோ இல்லையா என்ற எண்ணமே வருவதில்லை.

பள்ளிசாராக் கல்வி என்று சொல்லி ஒரு புதிய கொள்கையை வகுத்து செயல்படுத்தி வருகிறார்கள். நம்முடைய மாநிலத்தில் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கிற குழந்தைகளுக்கு இந்தப் புதிய முறையில் கல்வி கொடுக்கிறார்கள். எனக்கு ஆர்வம் இருந்ததால், நான் அதை நேரில் போய்ப் பார்த்தேன். இரண்டு மணி நேரம் பள்ளி சாராக் கல்வியைப் பள்ளிக் கூடத்தில் சொல்லிக் கொடுப்பதைப் போலவே சொல்லிக் கொடுப்பதை நான் அங்கே பார்த்தேன். அந்த மாணவர்களிடம் நான் விசாரித்துப் பார்த்தேன். இந்தத் தீப்பெட்டிகளை யார் உபயோகப்படுத்துகிறார்கள் என்று தெரியுமா என்று கேட்டபோது, அந்த மாணவர்கள் தெரியாது என்று சொல்லி விட்டார்கள். தீப்பெட்டிகளை எப்படி விற்பனை செய்கிறார்கள் என்று தெரியுமா என்று கேட்டதற்கும் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். உனக்கு எப்படி பணம் கொடுக்கிறார்கள், யார் கொடுக்கிறார்கள் என்று கேட்ட போது, எனக்கு முதலாளி பணம் கொடுக்கிறார், அவருக்கு யார் கொடுக்கிறார்கள் என்று தெரியாது என்று சொன்னார்கள். ஆக, நான் உழைக்கிறேன், அதிலிருந்து எனக்குப் பணம் உண்டாகிறது, அதில் ஒரு பகுதியை நான் அவர்களுக்குத் தருகிறேன், மற்றொரு பகுதியை நான் எடுத்துக் கொள்கிறேன் என்ற அறிவு அந்த மாணவர்களுக்கு இன்னும் ஏற்படவில்லை. பள்ளிசாரா கல்வி என்றால், அது தெரிந்திருக்க வேண்டும். அதைப்போலவே சமீபத்தில் முக்கூடல் சென்றிருந்தேன். தீப்பெட்டித் தொழிலில் எப்படி பல மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்களோ அப்படியே அங்கே பீடித் தொழிலில் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். கதர் வாரியத்தின் தலைவர் திரு. தாமஸ் அவர்கள் வந்திருந்தார்கள். அவர் என்னைக் கூப்பிட்டுச் சென்று காட்டினார். அந்தத் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்தபோது, அவர், "என்ன அருணாசலம், பீடித் தொழிலில் செய்கிற மாதிரியே அகர்பத்தித் தொழிலும் பண்ணுகிறார்கள்'





என்றார். அங்கே இரண்டு விதமான பையன்கள் வேலை செய்கிறார்கள். அதில் ஒரு 50 பையன்கள் பள்ளிக்கூட மாணவர்கள். மீதி 50 பையன்கள் பள்ளிக்கூடத்தையே பார்க்காதவர்கள். பள்ளியில் படிக்கிற அந்த மாணவர்களைப் பார்த்து ஏன் இந்த வேலைக்கு வந்தீர்கள் என்று கேட்டபோது, எங்களுக்கு 2 மாதம் லீவு. இந்த வேலையை 5 நாளில் கற்றுக் கொள்ளலாம். "ஒரு நாளுக்கு 5 ரூபாய் கிடைக்கிறது, அதை வைத்துக் கொண்டு புத்தகங்கள் துணி மணி வாங்கிக் கொள்கிறோம்" என்றார்கள். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அங்கே உள்ள மாணவர்களைப் பார்த்தும் நான் கேட்டேன். "சரி இந்த பீடிகளை யார் உபயோகப்படுத்துகிறார்கள், இந்த அகர்பத்திகளை யார் உபயோகப்படுத்துகிறார்கள் என்று தெரியுமா? இதற்கு எப்படி சாமான் வாங்குகிறார்கள், எப்படி பட்டுவாடா செய்கிறார்கள்?" என்றெல்லாம் கேட்டேன். அவர்களுக்குத் தெரியவில்லை. அந்தச் செயலாளரைப் பார்த்து நான் கேட்டேன். "இதையெல்லாம் என்ன ரகசியமாக வைத்திருக்கிறீர்களா?" என்றேன். "ஒன்றுமில்லை. இங்கே கணக்கு வழக்கே கூட எல்லோரும் பார்க்கலாம்" என்றார். லாபநட்டம் என்ன என்பதையும் மாணவர்கள் கூட பார்க்கலாம் என்றார் அவர். அப்படியானால் இந்த மாணவர்களுக்கு இதைப்பற்றியெல்லாம் முழுமையாகச் சொல்லிக் கொடுப்பது தானே என்று கேட்டேன். எனவே இப்படி பள்ளிசாராக் கல்வி என்று பெயர் மட்டும் போட்டுவிட்டால் போதாது. அது உண்மையாகவே பள்ளி சாராக் கல்வியாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் பேசும்போது, கல்வியை 'டிசென்ட்ரலைஸ்' செய்ய வேண்டும் என்றார். அவ்வாறு கேட்கும்போது அவரவர்கள் அவர்களுடைய நன்மைக்காகத்தான் டிசென்ட்ரலைஸ் செய்ய

(முற்பகல் 11-50)

வேண்டுமென்று கேட்கிறார்கள். திரு. ராஜீவ் காந்தி அவர்கள் கூட 'டிசென்ட்ரலைசேஷன்' பற்றிப் பேசுகிறார்கள். தன்னுடைய மந்திரி சபையில் 'டிசென்ட்ரலைசேஷன்' என்று சொல்லுகிறார். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கலாம் என்று அவர் பேசமாட்டார். மாநிலங்களுக்குரிய கல்வியைக்கூட அவர்கள் எடுத்துக்கொண்டார்கள். சுதந்திரத்தைப்பற்றிப் பேசுகிறவர்கள்கூட அடித்தளத்திலே இருப்பவர்களுக்கு சுதந்திரம் வழங்க வேண்டும் என்று சொல்லும்போது, அவர்களுக்குச் சுதந்திரம் கொடுக்க முடியாது, அவர்களுக்கு அறிவு வளரட்டும், பிறகு சுதந்திரம் கொடுக்கலாம் என்று சொல்லுகிறார்கள். எப்போது அவர்களுக்கு அறிவு வளர்வது? அது ஆண்டவனுக்குத்தான் தெரியும். ஆகவே உண்மையாகவே நாம் பள்ளிசாராக் கல்வியை நடத்த வேண்டுமென்று கருதினால்—

எத்தனையோ காரியங்களுக்கு கார்ப்பரேஷன்களைப் போடுவதைப் போல— இதற்கும் ஒரு கார்ப்பரேஷனைப் போடலாம் என்று சொல்லி, அப்படிப் போட்டால் முன்நின்று அவர்கள் நடத்தினால் சிறப்பாக நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னுமொரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். தொழிற் கல்வியைப்பற்றி அக்கறையோடு சென்ற சில ஆண்டுகளாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். நாம் இதிலே முன்னோடியாக இருக்கிறோம் என்ற பெருமையுண்டு. ஆனால் தொழில் கல்வியைப் படித்தவர்கள் மேலும் படிக்க வேண்டும் என்ற நிலையிலே, வேலைக்காகக் கையேந்தும் நிலைமைதான் இருக்கிறது. இரண்டு வருடங்களில் நம்மால் பேசிக் ஃபேக்டைத்தான் சொல்லித் தர முடியும். பேசிக் பேக்டை சொல்லிக் கொடுக்க, ஏற்கெனவே பத்தாண்டுகள் படித்த மாணவர்களுக்கு, மேலும் இரண்டாண்டுகள் தேவையில்லை. கையேடுகளைப் படித்தே தெரிந்து கொள்ளலாம். அவர்களுக்கு பாவலான முறையில் தொழில்களைக் கற்றுத் தரும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதைவிட மிக முக்கியமானது ஒன்று. செப்டம்பர் 15 ஆம் தேதி வரப் போகிறது, அன்று முதல் மதுவிலக்கு அமுலாகும் என்று நாங்கள் எல்லாம் உண்மையாகவே மகிழ்ச்சியோடு இருந்தோம். இனிமேல் குழந்தைகள் அறிவாளிகளாக இருப்பார்கள் என்று நினைத்தோம். சின்ன குழந்தைகளுக்கு அறிவைக் கொடுக்கிறோம். அந்தச் சின்ன குழந்தைகள்கூட பணத்தைக் கொடுத்து ரகசியமாகக் குடிக்கிறார்கள். கள் குடித்தால் பலம் வருகிறது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். சாராயம் குடித்தால் பலம் வரும் என்றும் சொல்லுவார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. மதுவிலக்கை அமுல்படுத்துவோம் என்று மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதாவது ‘நிச்சயமாக அமுல்நடத்தப் போகிறோம், கள்ளச் சாராயம் குடிப்பது ஒழிந்த பிறகும், வருவாய் போதுமான அளவிற்குக் கிடைக்கும் என்ற நிலை வரும்போதும், அதைப் பற்றி ‘யோசிப்போம்’ என்று வெள்ளைக்காரர்கள் சொன்னதையே அவரும் சொல்லியிருக்கிறார். வெள்ளைக்காரர்கள் ஆட்சியை இந்தியர்களிடம் ஒப்படைத்தபோது, கல்வியோடு சேர்ந்து பணம் வேண்டும் அல்லவா? ஆகவே, கள்ளுக் கடையையும் நிர்வாகம் செய்யுங்கள்’ என்று அவர்கள் கூறி சென்றிருக்கிறார்கள். அதுபோலவே இப்போது அதிகமாகக் கடைகளைத் திறந்திருக்கிறார்கள். முன்பு ஓரிருவர் குடித்தார்கள் என்றால் இப்போது





அதிகமானவர்கள் குடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இப்போது உள்ள ஆறாயிரம் கடைகளை பத்தாயிரம் கடைகள் என்ற அளவிற்கு உயர்த்தப் போகிறார்கள். ஆகவே குடிப்பதை அதிகப்படுத்தப் போகிறோம். ஒருவருக்குப் பதிலாக இருவர் குடிக்கப் போகிறார்கள்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே பள்ளிசாராக் கல்வி, தொழிற் கல்வி, வாழ்க்கைக் கல்வி பற்றியெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கொள்கைகள் எல்லாம் புத்தகத்திலேதான் இருக்கின்றன, நடைமுறையில் அல்ல. தமிழ் பண்பாட்டுக் கொள்கை பற்றியும் கூறியிருக்கிறார்கள். இப்போதெல்லாம் மேநாட்டுப் பாட்டுக்கள்தான் அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன. இந்தி பாட்டும் வந்து கொண்டிருக்கின்றது. இந்தியைப் படிக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆங்கிலப் பாட்டும், இந்தி பாட்டும் போட்டி போடுகின்றன. இடையில் பெரிய ‘கிளாசிக்கல் வெஸ்ட்டர்ன் மியூசிக்’ வந்தது. அது நல்லது. இப்போது ‘ஜான் மியூசிக்’ வந்திருக்கிறது. அதைப் பாடும்போதே ஆட ஆரம்பிக்கிறார்கள். சட்டையையெல்லாம் கழற்று கிறார்கள். வேட்டியைக் கழற்றுகிறார்கள். அப்போதுதான் ஆட முடியும் என்று சொல்லுகிறார்கள். இந்தப் பண்பாட்டைத்தான் அதிகமாக வளர்த்துக் கொண்டிருக்கிறோம். இதற்கெல்லாம் காரணம் நாம் அடிப்படையை மாற்ற வில்லை என்பதுதான். வெள்ளைக்காரர்கள் விட்டுச் சென்ற அடிப்படையை நாம் மாற்றவில்லை. எந்த மொழியில் கல்வியை போதித்தாலும் ஆட்சேபணை இல்லை. ஆங்கிலமாக இருந்தாலும் சரி, தமிழாக இருந்தாலும் சரி, பண்பாடு சரியாக இருந்தால் சரி. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அதிகமாகத் தெரிந்தவர்கள். இந்த நாட்டின் பண்பாடு கிராமங்களிலேதான் இப்போது அதிகமாக இருக்கிறது என்று நாம் நினைக்கிறோம். நம்முடைய பண்பாடு கிராமங்களிலே அதிகமாக வளர வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிந்து வைத்திருப்பவர் அவர். அதோடு கூட கல்வியிலே தானும் கற்று, கற்பித்து, உலக நாடுகளுக்குச் சென்று சுற்றிப் பார்த்து தெரிந்து கொண்டு வந்திருப்பவர். நம்முடைய பண்பாட்டிற்கேற்ப நம்முடைய கல்வி இருக்க வேண்டும். தஞ்சாவூரில் உள்ள கல்வியை உதகமண்டலத்திற்கும் உதகமண்டலத்தில் உள்ள கல்வியை மதுரைக்கும் கொண்டுவந்தால், வாழ்க்கைக்கு ஒத்ததாக இருக்காது.

(முற்பகல் 11-55)

“டெக்ஸ்ட் புக்ஸ்” அடுத்த வருடத்திற்கும் சேர்த்து வந்து விடுகின்றன. இந்த வருடத்தில், இப்போது உடனே கிடைக்கும். எல்லோருக்கும் கிடைக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சொல்கின்றார்கள். “டெக்ஸ்ட் புக்ஸ் சொசைட்டி” மூலமாக அச்சடித்துக் கொடுக்கின்றார்கள்; அதையெல்லாம்

திறமையாகத்தான் செய்கின்றார்கள். அதன் காரணமாக ஏராளமான பணமும் வருகின்றது. அந்தப் பணத்தையெல்லாம் எப்படி எப்படி செலவழிக்க முடியுமோ அப்படிச் செய்ய வேண்டும். அதையெல்லாம் சரியாகச் செலவழித்து நிர்வகிக்க வேண்டும். நம்முடைய நல்ல கொள்கைகளையெல்லாம் நிறைவேற்றி, புரட்சிகரமான முறையிலே நிறைவேற்றி புதிய மனித சமுதாயம் ஏற்படச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மான்யம் விளக்க உரையிலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் பேசும்போது, ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்பாக இதே சட்டமன்ற மேலவையிலே பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிவிப்பை நினைவுபடுத்தினார்கள். அவர்கள் அன்று கொடுத்த அறிவிப்பை இந்த மேலவையிலே ஆண்டு ஆண்டுக்காலமாக யாரும் கொடுக்க முடியாத ஒரு புரட்சிகரமான அறிவிப்பு என்று நான் எங்களுடைய அணியினுடைய சார்பிலே வெகுவாக அவர்களைப் பாராட்டினேன். அதோடு கூட பேரவையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அதே அறிக்கையினைக் கொடுத்தார்கள். கல்வி இலகாவிலே 10எ (1) என்ற நிலையை நீக்கி தமிழகத்திலே ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கக்கூடிய அறிவிப்பு இப்போது எந்த அளவுக்கு அரசு ஆணையாக மாற இருக்கிறது என்பது தெரியாத நிலை இருக்கிறது. அதை அவர்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அடுத்து அடிமை விலங்கை ஒடித்தெறிகின்ற அளவுக்கு, கல்வித் துறையிலே ஆசிரியர்கள் குழுவை அமைக்கும் நிலைமை எந்த அளவுக்கு முன்னேறி இருக்கின்றது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் உரையிலே அறிவிப்பார்கள் என்று கருதுகிறேன்.

இன்றைக்கு கல்விக்கான நிதி ஒதுக்கீடு குறைந்திருக்கின்றது. சென்ற ஆண்டு .8 விழுக்காடு குறைந்திருக்கின்றது. ஆனால் பொதுவாக பல நல்ல திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அதையெல்லாம் எடுத்துக் கொள்ளாவிட்டாலும்கூட, சென்ற ஆண்டு 1984-85-லே கல்விக்கு 21 விழுக்காடாக இருந்தது. ஆனால் அதுவே 1980-81-ல் 23 விழுக்காடாக இருந்தது. இதுவே 20.2 விழுக்காடாகக் குறைந்திருக்கிறது. ஆகவே, தாலப்போக்கிலே கல்விக்கான ஒதுக்கீடு வெகுவாகக் குறைந்து கொண்டு





வருவது வேதனையாக இருக்கின்றது. ஆனால் இதற்கு மாறாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தினை எடுத்துக் கூறி அதன் மூலமாக நாம் ஈடு செய்கிறோம். கல்விக்காக அதிகமாகச் செலவிடுகிறோம் என்று சொல்கின்றார்கள். நாட்டினுடைய எதிர்காலத்தை நிர்மாணிக்கக்கூடிய கல்விக்கு, படிப்புக்கு தொடர்ந்து ஒதுக்கும் ஒதுக்கீடானது, மூலதனம் என்ற அடிப்படையில் அதிகப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை எங்கள் அணியின் சார்பிலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசியல் சட்டத்தின் 45-வது ஷரத்தின்படி அரசியல் சட்டம் வெளியிட்ட 10 ஆண்டுகளிலே கட்டாய இலவசக் கல்வி புகுத்தப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே ஒரு திட்டம் வகுக்கப்படலாம் என்ற அளவில், எந்த மாநிலமும் இந்தத் திட்டத்தை அமுல்படுத்தவில்லை. ஒவ்வொரு மாநிலமும் பல காரணங்களைச் சொன்னார்கள். "மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. வறுமை அதிகமாக இருக்கின்றது. பள்ளிகள் இல்லை. ஆசிரியர்கள் இல்லை" என்று சொன்னார்கள். என்னதான் காரணம் அவர்கள் காட்டினாலுங்கூட, தமிழகத்தைப் பொறுத்தவரையில், பல நல்ல வாய்ப்பு வசதிகளை மாணவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்து, பெற்றோர்களுக்கு வசதி தந்து, மாணவர்களைக் கட்டாயப்படுத்தாமல் கவர்ந்த பெருமை இந்த ஆட்சிக்கு உண்டு என்பதை எங்கள் ஆசிரியர்கள் சார்பில் பாராட்டுகிறேன். குறிப்பாக சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டம் 10 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரை வயதுள்ளவர்களுக்கு என்று அறிவிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள்கூட சென்ற ஆண்டு சொன்னார்கள். 11-வது 12-வது வகுப்புகள் வரைகூட அதைக் கொடுக்கலாம் என்றார்கள். ஒருவேளை அதிகமாக முதலீடு இல்லாமல்கூட இப்போது இருக்கின்ற ஒதுக்கீட்டை வைத்துக்கூட அந்த உணவைக் கொடுக்கலாம் என்ற கருத்தை இங்கே சொன்னார்கள்.

(நண்பகல் 12-00)

தேவையிருந்தால், வசதியில்லாத மாணவர்களுக்குக் கொடுப்பதில் தவறில்லை. அதையும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். 1985-86 ஆம் ஆண்டிலிருந்து 1 முதல் 8 ஆம் வகுப்புவரை இலவச சீருடையும், புத்தகங்களும் கொடுக்கப்பட இருக்கிறது. இவ்வாறு பார்க்கும்போது, நம்முடைய மாநிலமானது கல்வியிலே, ஒருவேளை இப்போது மூன்றாம் இடத்திலே இருந்தாலும், சில ஆண்டுகளிலே அகில இந்திய அளவிலே விரைவிலே முதல் இடத்தைப் பெற வாய்ப்பு உருவாகி இருக்கிறதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவ்வாறு கல்வி வளர வளர, பெருகப்

[திரு. பா. ரா. தாமஸ்] [1985 ஜூன் 10

பெருக, கல்வியிலே இவ்வளவு முதலீடு செய்கிறோமே, என்ன ரிட்டர்ன் இருக்கிறதென்று தொழிலதிபர்கள் போலக் கேட்கிறார்கள். மன வளமும், உடல் வளமும், பண்பு வளமும் மாணவர்கள் பெறும்போது, நாட்டின் வளம் முதன்மை இடத்திற்கு வருமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாணவர்களின் தேவைக்கேற்ற முறையில் பள்ளிக்கூடங்கள் இல்லை. 2.98 இலட்சம் மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அதற்கேற்ற பள்ளிகள் உண்டா, தளவாடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. நாங்கள்கூட அதிகாரிகளை அணுகி அதிகமான பள்ளிக்கூடங்கள் தேவை என்று கேட்கும்போது, அவர்கள் "எங்களிடம் பணியிடங்கள் இல்லை, உங்கள் அவை இவ்வளவுதான் கொடுத்திருக்கிறது ; ஏராளமான பணியிடங்களைக் கொடுத்தால் நிறைய பள்ளிகளுக்குக் கொடுப்போம்" என்று சொல்லுகிறார்கள். ஆகவே, கல்வி வளம் பெற வேண்டுமென்றால், கல்வி பரவலாக்கப்பட வேண்டுமென்றால் நிதித் துறையானது முட்டுக்கட்டையாக இருப்பது தவிர்க்கப்பட வேண்டும். கல்வியைப் பொறுத்தவரையில், நிதிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டாலொழிய, கல்வியை முழுமையாக அமுல்படுத்த முடியாது. இன்றைக்கு 875 பணியிடங்களை உயர்நிலைப் பள்ளி மட்டத்திலே கொடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு 1,600 பணியிடங்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு அது பாதியாகக் குறைந்திருக்கிறது. மேல்நிலைக் கல்வியை எடுத்துக் கொண்டால்,, 75 முதுகலைப் பட்டதாரிகள் பணியிடங்கள், 250 உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள், 900 ஆய்வுக்கூட உதவியாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்க்கும்போது, இதே அளவு பணியிடங்கள் கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். சென்ற ஆண்டு இந்தப் பணியிடங்கள் கொடுக்கப்பட்டதாக உறுதி அளிக்கப்பட்டாலும், அந்தப் பணியிடங்கள் நிதித் துறையினால் ஏற்றுக்கொள்ளப்படாததால், இந்த ஆண்டுதான் அவை வழங்கப் பட்டிருப்பதாக ஒரு கருத்து இருக்கிறது. 75 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்களை நாம் பரிந்துரை செய்தும், கொடுக்கப்பட வில்லை. அப்படியென்றால் கல்வித் துறையால் விடுவிக்கப்படவில்லை. மீண்டும் இப்போது அதை விடுவிக்கிறார்கள். இப்போது தரப்பட்டுள்ள பணியிடங்கள், நிச்சயமாக இந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளிகளுக்கு வழங்கப் படுமென்று உறுதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூன் 10] [திரு. பா. ரா. தாமஸ்]

பல மேல்நிலைப் பள்ளிகளிலே பி.ஜி. அசிஸ்டென்ட் இல்லாமல் பாடங்கள் நடத்தப்படுகின்றன. இன்வெஸ்ட்மென்ட் இல்லாமல் ரிட்டர்ன் கேட்பதுபோல இருக்கிறது. இந்த நேரத்திலே ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். கல்வி அமைச்சரவர்கள் ஆசிரியர்களுக்கு அறிவுரை வழங்குகிறார்கள். அதை மதிக் கிறோம். பொறுப்புணர்ச்சியோடு பணியாற்றுங்கள், கடமை உணர்வோடு பணியாற்றுங்கள் என்று சொல்லுகிறார்கள். ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். ஒரு ஆசிரியர் 70, 90 மாணவர்களை வைத்துக்கொண்டு, எப்படி தொழில் திருப்தியோடு பணியாற்ற முடியும் ? ஜாப் சேட்டிஸ்பேக்ஷன் எப்படிப் பெற முடியும் ? பணியிடங்கள் கொடுத்தால்தான் அதைப் பெற முடியும் என்று வலியுறுத்தி, வருகிற ஆண்டிலாவது அதிகமான பணியிடங்கள் எல்லா நிலை களுக்கும் வழங்க வேண்டும்.

கைத் தொழில் ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 100 பணியிடங்கள் கொடுப்போம். சென்ற ஆண்டுகூட 100 பணியிடங்கள் கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு 50 பணியிடங்களை அப்-கிரேட் செய்கிறோம். புதிதாக கைத் தொழில் ஆசிரியர் பணியிடங்கள் வழங்கவில்லையே. அப்படி என்றால், கைத் தொழிலை எப்படி வளர்க்க முடியும் ? அதையும் கருத்தில் கொள்ள வேண்டும். பைபர்கேட்டட் கோர்ஸ் உள்ள பள்ளிகளில் உள்ள தொழிற் கல்வி ஆசிரியர்கள் 491 பேரை தொடர்ந்து பணி அமர்த்தியிருக்கிறார்கள். புதிதாக 4,300 ஆசிரி யர்கள் பகுதி நேர ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை யும் முழு நேர ஆசிரியர்களாக பேஸ்ட் ப்ரோகிராமில் கொண்டு வர வேண்டு மென்ற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் ஒரு கருத்தைச் சொன் னார்கள். 1978-ல் மேல்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்தப் பள்ளிகளுக்கு அலுவலக உதவியாளர்கள் வழங்கப்படவில்லை : அந்த அடிப் படையிலே ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளிக்கும் அலுவலகப் பணியாளரை கூடுதலாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-05)

நம்முடைய மாநிலத்தில் ஆங்கில மொழி பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. அதுபோல் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழும் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை நடத்தப்படுகின்ற ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகள் இருக்கின்றன. அங்கெல்லாம் பெரிய கூட்டம் இருக்கிறது. அங்கே விற்பனை கூட ஆகிறதாகச் சொல்கிறார்கள். இப்படி சில இடங்களில் மட்டும் நாம் அனுமதிப்பதால் போட்டி அதிகமாகி, கூட்டம் அதிகமாகிறது. உடனே 30

முதல் 100 பேர் வரை சேர்க்க வேண்டிய கட்டாய நிலைமை தலைமையாசிரியருக்கு ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி சொன்னது போல், ஏன் எல்லா அரசுப் பள்ளிகளிலும் 6-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்புவரை ஒவ்வொரு பள்ளிக்கும் ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புக்காக என்று தனிப் பிரிவை வைக்கக் கூடாது என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். இன்றைக்கு தனியார் எல்லோரும் ஆங்கிலப் பயிற்று மொழி மூலம் வகுப்புகளை நடத்த அனுமதித்துக்கொண்டிருக்கும்போது, அரசுப் பள்ளிகளிலும் அதற்காக என்று ஏன் ஒரு பிரிவை அனுமதிக்கக் கூடாது? 11, 12-ஆம் வகுப்புகளில் பயிற்சி மொழிக் கட்டணம் என்று ஒரு சிறிய தொகையை வாங்குகிறோம். அதுபோல் இந்தப் பிரிவில் படிப்பவர்களிடமிருந்தும் ஒரு சிறு தொகையை கட்டணமாக வாங்கலாம். இன்றைக்கு மற்றவர்கள் அவ்வாறு வாங்கிக் கொண்டிருக்கும்போது, அரசு ஏன் இதற்கு வழிவகை செய்யக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, 250 நாட்களை 200 நாட்களாகக் குறைத்திருக்கிறார்கள். ஆனால் ஷிப்ட் சிஸ்டத்தில் இருக்கிற பள்ளிகளுக்கு எவ்வளவு வேலை நாட்கள் என்று தெரியவில்லையாதலால் அதுகுறித்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊதியக் குழுவின் அறிக்கையைப் பொறுத்தவரையில், தமிழக அரசு ஊதியக் குழுவை அமைப்பதற்கு முன்பே மத்திய அரசு ஊதியக் குழுவை அமைத்தது. இருந்தாலும் நம்முடைய அரசு மத்திய அரசு தன்னுடைய அறிக்கையை வெளியிடுவதற்கு முன்பே, மத்திய அரசுக்கு ஒரு முன்னோடியாக தன்னுடைய அறிக்கையை வெளியிட்டதற்காக எங்களுடைய அணியின் சார்பாக பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தல் அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஊதியக் குழுவினுடைய பரிந்துரைகளை அரசு 1—10—1984 முதல் அமுல்படுத்தும் என்று சொன்னார்கள். ஆனால் அண்மையிலே பார்த்தோம். ஏதோ அதனை 1-4-1985 முதல் அமுல்படுத்துவதாக கருத்து நிலவியதும் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்ததும் அவர்கள் அதுகுறித்து வாக்குறுதி அளித்தார்கள். அந்த வகையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 1-10-1984 முதல் அமுல் படுத்தப்படும் என்று கொடுத்த வாக்குறுதியை, உறுதிமொழியை அப்படியே நடைமுறைப்படுத்தியதற்காக எங்களுடைய அணியின் சார்பில் பாராட்டுகிறோம். இருப்பினும் சில குறைகள் இருக்கலாம். அவற்றை கோரிக்கைகள் மூலம் நிறைவேற்ற வாய்ப்பிருக்கிறது. ஓய்வுகால ஊதியத்தைப் பொறுத்தவரையில், எந்த மாநில அரசும் அறிவிக்காத, மத்திய அரசும் அறிவிக்காத



ஒரு முன்னோடித் திட்டத்தை இந்த அரசு அறிவித்திருக்கிறது. பணியில் இருப்பவர்களுக்கு அளிக்கப்படும் அகவிலைப்படி விதம் ஓய்வு பெறுபவர்களுக்கும் அளிக்கப்படும் என்று அறிவித்திருப்பது ஒரு முன்னோடித் திட்டம். பிற மாநிலங்களும், மத்திய அரசும் கூட இந்த முன்னோடித் திட்டத்தைப் பின்பற்றக் கூடிய வாய்ப்பிருக்கிறது. இந்த அறிவிப்பின் மூலம் அவர்களும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒருவகையில் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அதுபோல் குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூபாய் 235 என்று இருப்பதை வரவேற்கிறேன். கிராமப்புறப் படியை 10 ரூபாயிலிருந்து 20 ரூபாய்க்கு உயர்த்தியிருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வீட்டு வாடகைப் படியைப் பொறுத்தவரையில், அனைவருக்கும் சமமாக அளிக்க வேண்டும். நகர ஈட்டுப்படியைப் போல், அதற்கு சமமாக, கிராம ஈட்டுப்படி வழங்க வேண்டும் வீட்டு வாடகைப் படிக்கு எவ்வாறு ஸ்லாப் சிஸ்டம் வைத்திருக்கிறோமோ அதுபோல் எல்லோருக்கும் கொடுத்து விட்டால், எந்த ஒரு பிரச்சினையும் எழ வாய்ப்பில்லை. அப்படிக் கொடுத்து விட்டால், ஆசிரியர்களும் மற்றவர்களும் மாறுதல் வேண்டுமென்று கேட்கின்ற தொல்லை ஒன்றும் வராது. இப்போது கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் வீட்டு வாடகைப் படி மற்றும் நகர ஈட்டுப் படி வழங்குவதில் பெருத்த வேறுபாடு இருப்பதால், பல தொல்லைகள் இருக்கின்றன. நாம் அனைவருக்கும் இதனை சமமாகக் கொடுத்துவிட்டோம் என்றால், அனைவரும் கிராமப்புறங்களில் பணியாற்றக் கூடிய நிலைமை வரும். ஆகவே கிராமப்புறத்தில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கும் கிராம ஈட்டுப் படியும், வீட்டு வாடகைப் படியும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தேசிய ஆசிரியர் குழு, நேஷனல் கமிஷன் ஆப் டீச்சர்ஸ் இன்றைக்கு சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. இருப்பினும் பொதுவாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது எல்லோருக்கும் மெடிக்கல் அலவன்ஸ் என்கிற முறையில் ரூபாய் 50 கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபோல் யாராவது மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு விட்டால், ஆகின்ற முழுமையான மருத்துவச் செலவையும் அரசே ஏற்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது இதனை நடைமுறைப் படுத்துகிறார்களா இல்லையா என்பது வேறு. ஆனால் இத்திட்டத்தை நான் இங்கே ஒரு முன்னோடிக் கருத்தாக வைக்கிறேன். அதோடு கூட இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். உடற்பயிற்சி இயக்குநர், இசை ஆசிரியர், அந்தந்தப் பிராந்திய மொழி ஆசிரியர் இவர்களுக்கெல்லாம் எந்தவிதமான வேறுபாடும் இல்லாத வகையில் ஊதியம் வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உடற்பயிற்சி இயக்குநர்கள் முதுகலைப் பட்டம் பெற்

[திரு. பா. ரா. தாமஸ்] [1985 ஜூன் 10

(பிற்பகல் 12-10)

திருந்தால், ரூ 600 ஊதிய விகிதம் கொடுக்கிறார்கள். வேறு பல ஆசிரியர்
களுக்கு 675 ரூபாய் ஊதிய விகிதம் கொடுக்கிறார்கள். ஆனால் எம். எட்.
படித்த மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு 600 ரூபாய்தான் ஊதிய விகிதம்
கொடுக்கிறார்கள். இது என்ன நியாயம்? இந்த முரண்பாட்டை அகற்ற
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தற்செயல் விடுப்பு குறித்து சொல்ல விரும்புகிறேன். நாங்கள்
முன்பு 15 நாட்கள் அனுபவித்து வந்தோம். அதாவது தற்செயல் விடுப்பு
12 நாட்களும், ஆப்ஷனல் ரெலிஜியஸ் ஹாலிடேஸ் 3 நாட்களும் என்று 15
நாட்கள் அனுபவித்து வந்தோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
ஐந்து நாட்கள் அதிகமாக்கிக் கொடுத்து இருபது நாட்களாக அதை ஆக்கி
னார்கள். ஆனால் அநேக நிர்வாகங்களில் நான்கு நாட்கள்கூட தற்செயல்
விடுப்பு எடுக்க முடியாது.

They say that it is not a matter of right. It cannot be demanded as a matter of right. ஒரு பள்ளியில் ஒரு ஆசிரியருக்கு,
அவர் 3, 4, 5 நாட்கள்கூட தற்செயல் விடுப்பு எடுக்காதவர். அவருக்குத்
தற்செயல் விடுப்பு மறுக்கப்பட்டு, ஊதியத்தை வெட்டினார்கள்.

Casual leave must be granted when demanded or applied for. It should be granted as a matter of right. Every teacher must be given the right to demand casual leave. It should not be refused or rejected.

தற்செயல் விடுப்பு கேட்கும்போது கொடுக்க வேண்டும் என்று எங்கே இருக்
கிறது ஆணை என்று கேட்கிறார்கள். நிலைமை இவ்வாறு பல தனியார்
பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இருக்கிறது.

இப்போது 20 நாட்கள் தற்செயல் விடுப்பு என்பதை 12 நாட்களாகக்
குறைத்திருக்கிறார்கள். இதுவும் ஆசிரியர்களுக்கு எப்படி என்று தெரிய
வில்லை. ஆசிரியர்கள் வேலை நாட்கள் எப்படி என்றும் தெரியவில்லை.
மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நினைக்
கிறேன். எங்களுக்கும் தற்செயல் விடுப்பு நாட்கள் குறைத்திருக்கிறதா?
அல்லது பழையபடியே இருபது நாட்கள்தானா? மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் விளக்குவார்கள் என்று நினைக்கிறேன்.



1985 ஜூன் 10] [திரு. பா. ரா. தாமஸ்]

அடுத்து, ஊதிய நிர்ணயத்தைப் பொறுத்தவரையில், ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். 1-5-1984 அன்று உள்ள அகவிலைப் படியை இணைத்து ஊதிய நிர்ணயம் செய்யப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது 528 புள்ளிகள் வரை இணைத்து ஊதிய விகிதம் செய்யப்படும் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அன்றைய தேதியிலிருந்து விலைவாசிப் புள்ளி 552 ஆகும். இவ்வாறு 24 விலைவாசிப் புள்ளிகளைக் குறைத்து ஊதிய விகிதம் நிர்ணயித்தால் பெருத்த இழப்பு வரும் என்கிற கருத்தைக் கூறி, அதை ஈடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் கோரிக்கைகளில் பல, ஊதியக் குழுவிடம் ரெபர் செய்யப்பட்டது. ஹையர் செகண்டரி ஸ்கூலில் பணியாற்றும் எம்.எட். படித்தவர்களுக்கு இன்சென்டிவ் கேட்டிருக்கிறோம். விடுப்புப் பயணச் சலுகையை அனைவருக்கும் அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். ஓய்வு பெற்றால் பத்தாயிரம் ரூபாய் அனைத்து ஆசிரியர்களுக்கும் கேட்டிருக்கிறோம். ஓய்வு பெற்றால் பத்தாயிரம் ரூபாய் கோரிக்கையைப்பற்றிக் கூறுகிறபோது மிகவும் வேதனையாக இருக்கிறது. தனியார் பள்ளி ஆசிரியர்கள் என்ன பாவம் செய் தார்கள்? அல்லது ஊராட்சி, நகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள்தான் என்ன பாவம் செய்தார்கள்? இது குறித்து சென்ற முறைகூட கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். ஓய்வு பெற்றால் பத்தாயிரம் ரூபாய் அனை வருக்கும் கொடுக்க வேண்டும் என்பதை கொள்கை அளவில் ஏற்றுக்கொண் டிருப்பதாக அரசுத் தரப்பில் சொன்னார்கள். ஆனால் ஓய்வு பெற்றால் பத்தா யிரம் ரூபாய் திட்டம் சென்னை மாநகராட்சி ஆசிரியர்களுக்கு மட்டும் 1-8-1984-லிருந்து வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், மற்ற மாநகராட்சி ஆசிரி யர்களுக்கு இல்லை. ஏன் இல்லை? தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு 1—4—1985-லிருந்து இந்தத் திட்டம் அமுலாகும் என்று அண்மையில் மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இது சரியா? ஒரு சாராருக்கு வழங்கிவிட்டு, மற்றவர்களுக்கு வழங்காவிட்டால், நாங்கள் எப்படி ஆசிரியர்களைச் சென்று சந்திக்க முடியும்? ஒரு சாராருக்கு வழங்குவதை அனைத்து சாராருக்கும் வழங்க வேண்டாமா? மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களையும் கேட்டுக்கொள் கிறேன். அவர்கள் எங்களைக் கேட்கிறார்கள். "இத்தனை பேர் இருந்து கொண்டு ஒரு நீதியை வாங்காவிட்டால், பெருத்த கேவலமாக இருக்கிறதே" என்று கேட்கிறார்கள். நாங்கள் மிகவும் புண்படுத்தப்படுகிறோம். எனவே ஓய்வு பெற்றால், பத்தாயிரம் ரூபாய் திட்டத்தை தனியார் பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள், நகராட்சி, மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் முதலிய அனைத்துப் பகுதி ஆசிரியர்களுக்கும் அமுல்படுத்த வேண்டுமென்று சிரம் தாழ்த்திக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பா. ரா. தாமஸ்] [1985 ஜூன் 10

அடுத்து, தலைமை ஆசிரியர்களுக்கும் சிறப்பூதியம் வேண்டும் என்று கோருகிறோம். கல்லூரி முதல்வர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். ஆயிரம் மாணவர்கள் இருந்தால் ரூ. 250 என்றும், மற்றவர்களுக்கு ரூ. 200 என்றும் கொடுத்திருக்கிறோம். ஏன் அதுபோல் தலைமை ஆசிரியர்களுக்கும் கொடுக்கக் கூடாது ? அதுபோல் உதவித் தலைமை ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். ஒரு தலைமை ஆசிரியரும், ஓர் எழுத்தரும்தான் ஒரு பள்ளியிலே விடுமுறை அனுபவிக்காத பணியாளர்கள் என்று தீர்மானித்து அரசாணை கொடுத்திருக்கிறோம். ஆனால் தலைமை ஆசிரியர் என்ன செய்ய முடியும் ? இந்தத் தலைமை ஆசிரியரும் எழுத்தரும்தான் பள்ளியின் கதவைத் திறக்க வேண்டும். விளக்கமாறை எடுத்து வந்து பள்ளியைச் சுத்தம் செய்ய வேண்டும். எல்லாம் செய்ய வேண்டும். பள்ளிகளின் நிலை இவ்வாறிருக்கிறது.

(பிற்பகல் 12-15)

ஆகவே அலுவலகத்திலுள்ள அனைத்துப் பணியாளர்களும், விடுமுறை அனுபவிக்காத பணியாளர்கள் என்று அறிவிக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

நம்முடைய கல்வித் துறையிலே சற்று சீர்திருத்தம் செய்ய வேண்டும். ஏதாவது ஒரு முரண்பாடோடு அல்லது குரோத மனப்பான்மையோடு அல்லது குற்றச்சாட்டு சாட்ட வேண்டுமென்ற கருத்தோடு நான் சொல்லவில்லை. நான் சொல்கிற கருத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் சொன்னார்கள். பொதுவாகச் சொன்னார்கள். "Bureaucracy is like fire invaluable as a servant, but ruinous when it becomes a matter" என்று சொன்னார்கள். நாங்கள் ஆசிரியர் பணியாற்றுகிறோம். ஜூன் மாதம் ஆரம்பிக்கிறோம். மே மாதம் பணியை முடிக்கிறோம். எங்கள் கடமையை முடித்துவிட்டோம் ; மாணவர்களை அனுப்பிவிட்டோம். ஆனால் பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் கிடப்பில் கிடக்கின்றன. ஏனென்று தெரியவில்லை நான் கூட பல பிரச்சினைகளைப்பற்றி எழுதியிருக்கிறேன். பிரச்சினைகளை எடுத்துச் சொல்லும்போது, அந்தப் பிரச்சினைகளின் உணர்வோடு தீர்க்கப்பட வேண்டும் என்ற கருத்தை நான் சொல்கிறேன். ஆட்சியிலே உள்ள பெரிய அதிகாரிகளுக்கு நல்ல மனது இருக்கலாம். அது செயல்படுகிறதா என்று பார்க்க வேண்டும். மற்றொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். அலுவலகங்களிலே எல்லாம் ஒன்று It should be education-oriented or teacher-oriented or office-oriented.



1985 ஜூன் 10] [திரு. பா. ரா. தாமஸ்]

சில அலுவலர்களை, தலைவர்களே கட்டுப்படுத்த முடியாத நிலை இருக்கிறது. அதையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். அப்படியெல்லாம் இந்தப் பிரச்சினை எப்படி முடியும்? ஒருநாளும் முடியாது. ரெட் டேபிஸம், இந்த பியூரோகிரசியிலுள்ள ரெட் டேபிஸம், புரொகிஃபிஷன் தடுப்புச் சுவரும் உடைக்கப்பட வேண்டும். ஒருவேளை அவசியம் இருக்குமென்றால், நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் எங்களையெல்லாம் ஒரு குழுவாக அழைத்து எவ்வாறு நிர்வாகச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டால், நாங்கள் சொல்ல ஆயத்தமாக இருக்கிறோம். அதிலே ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். எவால்யூவேஷன் ஆப் ஹையர் டிகிரீஸ் வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்திலே பொருளாதாரம் எம்.ஏ. படித்தவர் பட்டம் பெற்றிருக்கிறார். அவருக்கு அவருடைய பட்டத்தை சீர்தூக்கிப் பார்த்து ஏற்று வழங்கியிருக்கிறார் நம்முடைய கல்வி இயக்குநர் அவர்கள். ஒருவருக்கு வழங்கி விட்டார். அடுத்தவர் ஒருவர் வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்திலே பொருளாதாரம் படித்திருக்கிறார். தேறியிருக்கிறார். அவருக்கு ஏற்பு வழங்க என்ன வேண்டும் ? ஏற்கெனவே வழங்கிய ஆணையின் நகல் போதாதா அல்லது போட்டோஸ்டட் எடுத்தது போதாதா ? மீண்டும் அவருடைய பட்டத்தை சென்னைக்கு அனுப்பி மாவட்டக் கல்வி அலுவலருக்கு, முதன்மைக் கல்வி அலுவலருக்கு சென்னைக்கு வந்து ஒரு வருடமாக படுத்துக் கிடக்கிறது. என்ன வேதனை ? எங்களைக் கேட்கிறார்கள்—ஒரு 10 பேப்பரைக் கொடுத்திருக்கிறார்கள். எவால்யூவேஷன் என்னவாயிற்று என்று கேட்கிறார்கள். ஒருவருக்குக் கொடுத்த எவால்யூவேஷன்படி, ஏன் அந்த ஜி.ஓ.படி கொடுத்தால் என்ன ? அடிமட்டத்தில் கொடுத்தால் என்ன ? இந்தப் பிரச்சினை எங்களுக்கு வராவிட்டால் வேலை குறையும். இதை ஒரு எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன். இதுபோல பல பிரச்சினைகள் இருக்கின்றன. சில பள்ளிகளிலே மூன்று ஆண்டுகளாக ஊதியம் வழங்காமல் தலைமை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். எனக்குத் தெரிந்து நான்கு தலைமை ஆசிரியர்கள் என்னுடைய தொகுதியில் அப்படி இருக்கிறார்கள். உறுப்பினரவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். சில சமயங்களிலே நம்முடைய கல்விச் செயலகத்திலுள்ள ஆணையர், அவர்களுடைய ஆணைகள் கூட முறையாக அமல்படுத்தப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் சொன்னார்கள். தலைமை ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப் பற்றிச் சொன்னார்கள், ஏற்பு அளிக்கவில்லை என்று சொன்னார்கள்

There is G.O. 720 released on 28.4. For what purpose? The purpose of the G.O. was to frame regulations regarding promotion of Headmasters of Higher Secondary Schools under the Government, and not for those in Aided and Local Body Schools.

அதனாலே உண்டான பிரச்சினைகளைக் கண்டு நம்முடைய செயலாளர் அவர்கள் ஒரு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அருமையான அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். என்ன கொடுத்திருக்கிறார்கள் என்றால்

It did not provide for a blank enforcement of the service rules on the non-Government Higher Secondary Schools. It cannot be implemented. 2 உ. 1 என்ன சொல்கிறது? G.O. 720 என்ன சொல்கிறது?

It stipulates the conditions. A person to be promoted must have served in a High School. 50 per cent of the promotions shall be from High Schools and Higher Secondary Schools. The other 50 per cent will be from post-Graduate degree holders who are serving in the Higher Secondary Schools.

20 வருடம், 22 வருடங்களாக எம்.ஏ. பட்டம் தகுதி வேண்டும், இதைத்தான் நம்முடைய கல்விச் செயலாளர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கல்வி இயக்குநர் அலுவலகத்திலே இன்று எத்தனை தலைமை ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் முடியாமல் பல மாதங்களாக ஊதியம் பெறாமல், சிறப்பு ஆணை வழங்கப்படாமல் இருக்கிறது? இது தவிர்க்கப்பட வேண்டும். தேவையில்லாத காலதாமதம். தலைவர் அவர்களுக்கு இந்த நிலை என்றால், எப்படி பள்ளிகள் சிறப்பாக, செம்மையாக, சீராக நடைபெறும் என்ற கருத்தை நான் கூறிக்கொள்கிறேன். இது உண்மையான, நியாயமான பிரச்சினை. இத்தகைய பிரச்சினைகள் நம்முடைய கல்வித் துறையிலே எழக்கூடாது என்று நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-20)

இரண்டு தினங்களுக்கு முன்னால் பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். இந்த ஆண்டு கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரையில், அனைத்து கல்லூரி முதல்வர் பதவிகளும் நிரப்பப்பட்டு அனைவரும் நியமிக்கப்பட்டுவிட்டார்கள் என்று செய்தி பார்த்தேன். இது மிகவும் சிறப்பான ஒன்றாகும். இன்றைய தினம் கல்லூரிகள் திறக்கப்படும்போது, ஒன்றில் கூட கல்லூரி முதல்வர்



இல்லாத நிலை இருக்காது. பொதுவாக ஓய்வு பெற்றவர்களின் இடங்கள் நிரப்பப்படுவதில் நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக பல இடங்கள் நிரப்பப்படாமலேயே இருக்கும். ஆனால் இந்த ஆண்டு அனைத்து முதல்வர்களும் நியமிக்கப்பட்டுவிட்டார்கள் என்ற நிலை மிகவும் மன நிறைவை அளிக்கிறது.

ஆனால் இத்தகைய நிலை பள்ளிகளில் இல்லை. 80 சதவிகிதம் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் இல்லை. மேல்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படாத நிலைமை இருக்கிறது. எனவே இதில் காலதாமதம் இருக்கக் கூடாது. என்ன காரணத்தாலோ பள்ளிகளில் இதை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஆகிறது. இது துறைக்கு எந்த வகையிலும் அழகல்ல என்று கூறிக்கொள்கிறேன். இத்தகைய நிலைமைகளைத் தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் 25 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார். இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ்; மன்னிக்க வேண்டும். விரைவில் முடித்துக் கொள்கிறேன்.

அரசுப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், பல வகையான அதிகாரங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அதாவது

He has got the power to draw pay, sanction increment, sanction Selection Grade, Medical Leave, Leave Travel Concession, Provident Fund Loan, Incentive increment, etc. All these powers, he is enjoying.

ஆனால் தனியார் பள்ளித் தலைமை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு இந்த அதிகாரங்கள் ஏதுமில்லை. ஒவ்வொன்றிற்கும் அவர்கள் டி.ஈ.ஓ.-வுக்கு எழுத வேண்டும்.

The Headmaster of an Aided School recommends to the Correspondent. The Correspondent sanctions. It goes to the D.E.O for approval. Why should there be this procedure?

[திரு. பா. ரா. தாமஸ்] [1985 ஜூன் 10

தனியார் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் உள்ளாட்சித் துறைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் இத்தகைய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். காரணம் அவர்களும் அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குச் சமமானவர்களே. ஆண்டு தோறும் அவர்களுடைய கணக்கு வழக்குகள் எல்லாம் ஆடிட் செய்யப்படுகின்றன. அவர்கள் செய்ததில் தப்பு அல்லது தவறு இருந்தால், அவர்களுக்கு தண்டனை வழங்கலாம். ஒரு இன்கிரிமென்ட்டை நிறுத்தலாம். அப்படிச் செய்யாமல் ஒவ்வொன்றிற்கும் டி.ஈ.ஓ.-விடம் போக வேண்டும் என்றால், அது சரியல்ல. காரணம் டி.ஈ.ஓ. அலுவலகத்தில் ஏற்கெனவே வேலைப் பளு அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தால், முதல் தேதி சம்பளம் கொடுக்க முடிவதில்லை. இருக்கிற பணிகளோடு இப்போது ஸ்பெஷல் டெபாசிட் ஸ்கீம் வேறு. குறிப்பாக, பெண்கள் ஆய்வாளர்கள் பள்ளிகளில் இத்தகைய வேலைப் பளு காரணமாக 10, 15 தேதிகளுக்குள் நிச்சயமாகச் சம்பளமே கூட கொடுக்க முடிவதில்லை என்பதை என்னாலே உறுதியாகச் சொல்ல முடியும்.

I can even say it as a challenge.

In spite of the orders that pay should be disbursed on the last working day, how many Girls' Schools are able to implement it? How many are doing that?

கேட்டால் வேலை அதிகம். எனவே அப்படித்தான் செய்வோம் என்கிறார்கள். எனவே தலைமை ஆசிரியர்களிடம் இந்த அதிகாரங்களை ஒப்படையுங்கள். ஆண்டு இறுதியில் ஆடிட்டில் அவர்கள் தவறு செய்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டால், அவர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யுங்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஸ்பெஷல் பீஸ் கமிட்டி இருக்கிறது. அதில் சயன்ஸ், கேம்ஸ் போன்றவற்றிற்காக நான்-ரெக்கரிங் செலவு 100-க்கு மிகைப்படாமல் இருந்தால் மட்டும் செலவு செய்யலாம் என்று இருக்கிறது. அதற்கு மேல் ஆகிற செலவுகளைப் பொறுத்தவரையில், அவற்றை மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று விதி இருக்கிறது. சயன்ஸ் எக்விப்மென்ட் ஒன்று 1,000 ரூபாய் கூட ஆகிறது. அதற்காக அவர்களுக்கு எழுதினால், அவர்களிடமிருந்து பதிலே வருவதில்லை. இதையெல்லாம் செய்ய அந்தக் கமிட்டிக்கே அதிகாரம் உண்டு என்று ஏன் சொல்லக் கூடாது ?



1985 ஜூன் 10] [திரு. பா. ரா. தாமஸ்]

The operation of Special Fees account is done by the Headmaster. Why not he be permitted to operate the accounts right royally? If he commits any blunder, punish him and take action against him.

பழைய ஆங்கிலேயன் காலத்தில் இருந்த அதிகாரத்தை அப்படியே எதற்காகப் பின்பற்ற வேண்டும் ? பதவி துறக்கிற தலைமை ஆசிரியருக்கு ஸ்பெஷல் கிரேட் கிடையாது என்கிறார்கள். இது எப்படி நியாயமாகும் ? அதைப் போலவே பி.டி. ஆசிரியர் தலைமை ஆசிரியராகப் போனால், இரண்டு ஸ்கேல்களும் ஒரே மாதிரியானவை என்பதால், எப்.ஆர். 22-பி விதி பொருந்தாது என்கிறார்கள். இது முறையற்ற வாதம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரிகளைப் பொறுத்த வரையில், அண்டர் கிராஜுவேட் என்ற காரணத்தால் 'ஹெட் ஆப் தி டிபார்ட்மென்ட்' கிடையாது என்கிறார்கள். அதைக் கொடுத்தால் என்ன ? இப்படிப்பட்ட கோரிக்கைகளுக்காகத்தான் கல்லூரி ஆசிரியர்கள் டெமான்ஸ்ட்ரேட் செய்திருக்கிறார்கள். தங்களுக்கும் யு.ஜி.சி. ஸ்கேல் கொடுக்க வேண்டும், பணிப் பாதுகாப்பு வேண்டும் என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-25)

தொழில் கல்வி வகுப்புகளில் (புரஃபஷனல் கோர்சுகளுக்கு) சேர்வதற்கு தேர்வு வைத்திருக்கிறோம். சென்ற ஆண்டும் தேர்வு வைத்தோம். வைஃபர் கேட்டெட் கோர்ஸ், என்ஜினியரிங் கோர்சில் வொக்கேஷனல் பாடம் படித்த மாணவர்களிடம் 'பிசிக்ஸ்', 'கெமிஸ்ட்ரி' கேள்விகளைக் கேட்டார்கள். அவர்கள் அந்தப் பாடங்களைப் படிக்கவில்லை. ஆகவே அவர்கள் படித்த பாடத்திலேயே கேள்விகளைக் கேட்டால், சரியாக இருக்கும். சித்தூரில் கூட ஒரு மாணவர் கோர்ட்டுக்குப் போனார். கோர்ட் கூட அவரை பி.ஈ. கோர்சில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற தீர்ப்பை வழங்கியிருக்கிறது. ஆகவே அவரவர் படித்த பாடங்களில் தேர்வு வைக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவரவர் படித்த பாடங்களில் தேர்வு வைக்க வேண்டும் என்று சொன்னால் நடைமுறையில் 'என்ட்ரன்ஸ் டெஸ்டே' வைக்க முடியாது. அதிலே இடர்ப்பாடு வருகிறது. கல்லூரிகளில் எந்தப் பாடத்தினைப்

[திரு. செ. அரங்கநாயகம்] [1985 ஜூன் 10

படிக்கச் சேர்கிறார்களோ அதற்குரிய பாடத்திலேதான் தேர்வு நடத்த முடியும். அவர்கள் படித்த அந்தந்தப் பாடத்திற்கேற்ப தேர்வு நடத்த முடியாது. நீதி மன்றத்திலே அந்த மாணவருக்கு என்று ஓர் இடத்தை ரிசர்வேஷனில் வைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. பா. ரா. தாமஸ் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் ஒதுக்கப்படாமல் இருப்பதற்காகத் தான் நான் சொன்னேன். குரூப் ஒன்றில் படித்த மாணவர்கள் கணிதம், கெமிஸ்ட்ரி, பையாலஜி படிக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொன்னது மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்களுக்காக மட்டுமல்லாமல், மக்களுக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், அவர்களுடைய வருங்கால வைப்பு நிதிக்கு 5 விழுக்காடு வட்டி என்று இருக்கிறது. அரசு அலுவலர்களின் வைப்பு நிதிக்கு 9.5 விழுக்காடு வட்டி என்று இருக்கிறது. இதனால் தங்களுடைய வாழ்நாளில் 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை இழப்பு ஏற்படுகிறது என்று கூறுகிறார்கள். இதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அரசு அறிவித்த சலுகைகளுக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை-இராமநாதபுரம் மாவட்டம் ஐந்து மாவட்டங்களாகப் போகிறது. ஏற்கெனவே மூன்று மாவட்டங்களாகப் பிரிந்திருக்கிறது. மதுரை மாவட்டம் மேலும் பெரிய இருக்கிறது. அங்கேயுள்ள கல்வி நிலையங்களுக்குச் சரியான கட்டிடங்கள், குடியிருப்பு வசதிகள் இல்லை. ஆகவே மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அதற்குரிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கென்ற வீட்டு வசதி வாரியம் உருவாக்கி அதற்குத் தலைவரை நியமித்ததற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அது எவ்வாறு செயல்படும் என்பதைப் பற்றி விவரமாகக் கூறுவார்கள் என்று நினைக்கிறேன். அதன் மூலமாக பல பகுதிகளில் வீடுகள் கட்ட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூன் 10] [திரு. பா. ரா. தாமஸ்]

முடிவாக ஒரு கருத்தைச் சொல்லுகிறேன். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் வீடு கட்ட கடன் வாங்கியிருக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டில் 50 விழுக்காடு வாங்கி வீடு கட்டியிருக்கிறார்கள். மேற்கொண்டு இரண்டாவது தவணையை வாங்க முடியவில்லை. கட்டிடம் அப்படியே இருக்கிறது. ஆகவே முதலிலே வீடு கட்ட கடன் வழங்கியவர்களுக்கு விரைவாக மேலும் கடன் வழங்க ஏற்பாடு செய்து அவர்களுடைய அல்லல்களைப் போக்க வேண்டுமென்று கேட்டு இவ்வளவு நேரம் பேசஅனுமதி அளித்தமைக்காக துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டு கல்விக் கொள்கைக் குறிப்பின் மீது வாதிக்க வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கை குறிப்பில் கொள்கைகளைக் கோடிட்டுக் காட்டியிருந்தாலும், பல்கலைக் கழகம் முதல் தொடக்கப் பள்ளிகள் வரையில் கொள்கைகள் நடைமுறையில் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவது, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் பிரதிநிதி என்ற முறையில் எனது கடமையாகும்.

தமிழகத்திலே ஐந்து பல்கலைக் கழகங்கள் நடந்துகொண்டிருந்தாலும், கடந்த நான்காண்டு காலமாக மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் தொடர்ந்து நடைபெறாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட 'சிண்டிகேட்', 'செனெட்', 'அகடமிக் கவுன்சில்' ஆகியவை இல்லாமல் தொடர்ந்து முடங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு துணைத் தலைவர் மூலமாக அமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு நீதி மன்றத்திலே இருப்பதாக சுட்டிக்காட்டலாம். நீதி மன்றத்திலே நான்கு ஆண்டுக் காலமாக உள்ள ஸ்டே வெகேட் செய்யப்படாமல் எப்படி அரசால் காலம் தள்ளப்படுகிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக் குழுவும் கல்விக் குழுவும் செனட்டும் இல்லாத காரணத்தால், அங்கே வேலைகள் முடங்கிக் கிடப்பதாக அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆகவே திருநெல்வேலியில், நாகர்கோவிலில் உள்ள பல்கலைக் கழக மையங்களை விரிவுபடுத்த முடியாமல் முடங்கிப் பணிக் கேந்திர [illegible] நான்காண்டுகளுக்கு முன்னால் திருநெல்வேலியில் ஆயிரம் ஏக்கர் நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. இன்னும் அங்கே கட்டடம் கட்டப்படாமல் [illegible] அதே நிலையிலே தொடர்ந்து இருக்கிறது. ஆகவே இதில் [illegible] யர்கள் தலையிட்டு, அதை அமல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12.30)

தேர்ந்தெடுக்கப்பட்ட பல்கலைக்கழகங்களும், அங்கே அமைக்கப்பட்ட சிண்டிகேட்டுக்கும் சரிவர நடைபெறவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணமாகச் சொல்கிறேன். பாரதியார் பல்கலைக் கழகத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இருந்தாலும், அதிகாரம் முழுவதும் துணை வேந்தர் அவர்களிடம் இருக்கின்ற காரணத்தினால், அங்கே பல்வேறு கோளாறுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தக் கல்விக் கழகங்கள், பல்கலைக் கழகங்கள் எல்லாம் ஒழுங்காக நடைபெறுவதில்லை என்பதை எடுத்துக்காட்டுவது என்னுடைய கடமையாகும். பாரதியார் பல்கலைக் கழகத்தில் ஒரே ஒரு துறைதான் இருக்கிறது, வேறு ஒரு புதிய துறையும் 4 ஆண்டுகளாக வரவில்லை. அரசு இதைக் கேட்டிருக்கிறதா? நாம் அதை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அங்கே ஏற்படுத்திய துறை எம்.பி.ஏ. அதிலும் ஊழல் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஊழலைக் கண்டுபிடிக்க ஒரு சப்-கமிட்டி போடப்பட்டது. அந்த சப்-கமிட்டியினுடைய ரிப்போர்ட் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அதன் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அந்த சப்-கமிட்டியின் ரிப்போர்ட் 'பாலோ அப்' பண்ணப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் இஷ்டம் போல் மாணவர்களை அங்கே சேர்க்கின்றார்கள். இது போன்றவற்றை இந்த மேலவையிலேயே கல்விக் கொள்கைக் குறிப்பின் மீது பேசும்போது, சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அட்மிஷன் நடந்து கொண்டிருக்கும்போது, மேலவையில், கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது பேசுவதிலே நிச்சயமாக நமக்கு ஒரு கடமை இருக்கிறது. தமிழகத்தில் கல்வி வியாபாரமாக ஆகிக்கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மறுக்க முடியாதது என்ற சூழ்நிலைதான் இருக்கின்றது. சென்னையிலே ஒரு அரசு மேல்நிலைப் பள்ளியில், ஒரு மாணவனைச் சேர்க்க வேண்டுமென்றால், குறைந்தபட்சம் ரூ. 500 நன்கொடை என்ற பெயரால் 'லஞ்சம்' கொடுக்கப்பட்டால்தான் சேர்க்கப்படுவதாக எனக்குப் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசு மேல்நிலைப் பள்ளி பெற்றோர்கள் ஆசிரியர்கள் கழகம், குரோம்பேட்டை. ரூ. 500க்கு ரசீதும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 6—6—1985 அன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆங்கில போதனா மொழியில் சேர்க்க வேண்டுமென்றால் ரூ. 500 தமிழ் போதனா மொழியில் சேர்க்க வேண்டுமென்றால் ரூ. 150. அங்கே பெற்றோர்கள் ஆசிரியர்கள் கழகம் என்ற பெயரால், அவர்கள் பட்ஜெட்டும் வெளியிட்டிருக்கின்றார்கள். 1984—85 ஆம் ஆண்டு வாங்கிய பணத்திற்கு, பெற்றோர்கள் ஆசிரியர்கள் கழகம் என்ற





பெயரில், செலவழித்த பணத்திற்கு பட்ஜெட் ரூ 3 லட்சம். 1985—86 ஆம் ஆண்டு வசூலிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது ரூ. 5 லட்சம். அங்கே ஒரு கடை வியாபாரம் போல், ஆசிரியர்கள் உட்கார்ந்துகொண்டு வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். பெற்றோர்கள் ஆசிரியர்கள் கழக விதிப்படி வசூல் செய்ய வேண்டுமென்றால், முதன்மைக் கல்வி அதிகாரியின் பெர்மிஷன் வாங்க வேண்டும். அதற்குப் பிறகு நன்கொடை பெற வேண்டும். ஆனால் ஏழை மாணவர்களுக்கு சத்துணவு வழங்குகின்ற கால கட்டத்தில், சீருடை வழங்குகின்ற கால கட்டத்தில், இலவசப் புத்தகங்கள் வழங்குகின்ற காலகட்டத்தில் இந்த பட்ஜெட்டைக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கான கணக்கு வழக்குகளும் மோசமானவையாக இருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பழைய கூரையைப் பிரித்து புதுப்பிக்க 1984-85 ஆம் ஆண்டில் செலவு ரூ. 10,000 1985—86-ல் அந்த ஆண்டுக்கான புரோபோசல் அந்த கூரையைப் பிரித்துப் புதுப்பிக்க ரூ. 40 ஆயிரம் என்று போட்டிருக்கின்றார்கள். அதாவது ஒரே கூரையை 1984—85-லே பிரித்து புதுபித்த கூரையை, 1985—86-லே பிரித்து புதுப்பிக்க ரூ 40 ஆயிரம் என்ற வகையில் இன்னொரு ரிவைஸ்ட் எஸ்டிமேட் வைத்திருக்கின்றார்கள். பணம் தேவைப்படுவதால், அட்மிஷன் என்று வருகின்றபோது பணம் வாங்குவதில் முனைந்திருக்கிறார்கள். அது கட்டாயமாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதற்கு சட்ட பூர்வமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசுப் பள்ளிகள் தனியார் பள்ளிகளுக்குக் குறைந்தவை அல்ல என்பதைக் காட்டுவதற்காக இப்படிச் செய்கிறார்கள். பி.எ.கே. பழனிசாமி மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களைச் சேர்ப்பதற்காக அரசுக்கும் தெரியாமல், எந்தவிதமான ரசீதும் கொடுக்காமல் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றார்கள். 6வது வகுப்பில் சேர்வதற்கு என்று தேர்வு எழுதச் சொல்கின்றார்கள். அப்படித் தேர்வு எழுதியவர்கள் எல்லாம் தேறாதவர்கள் என்று சொல்லிவிட்டு பிறகு, பள்ளியில் சேர வேண்டுமென்பவர்கள் முதலில் செயலாளர் அவர்களைப் பார்க்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.

(பிற்பகல் 12.35)

முதலிலே செயலாளரைப் பார்க்க வேண்டும். அவர் அனுமதியோடு அந்தப் பள்ளியின் பொருளாளரைப் பார்த்தால், அவர் நாடக டிக்கட் தருவார். அதன் விலை 500 ரூபாய். மார்க்கைப் பொறுத்து 500, 1,000 அல்லது 2,000 ரூபாய் என்று டிக்கட் நிர்ணயிக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது. இராஜா அண்ணாமலை மன்றம், 21—7—1985 மாலை 6-45 மணிக்கு திரைப்பட நடிகை மனோரமா, இராமாராவ் நடிக்கும் சாட்டையைத் தேடும் பம்பரங்கள்—இதுதான் டொனேஷன் டிக்கட்டாகத் தரப்படுகிறது. பள்ளியின் பெயரோ, நிர்வாகியின் பெயரோ போடாமல் இருக்கிறது . . . . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் ;** அவையிலே உள்ள மரபு என்னவென்றால், குற்றச்சாட்டு அல்லது சாட்சியம் காட்டுவதாக இருந்தால் முதலிலே தலைவரிடம் காட்டி, அவர் அனுமதி பெற்றுப் பேசுவது நல்லது. இந்த மரபை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அடுத்த முறையாவது கடைப் பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் ;** திடீரென்று பேச வாய்ப்பு கொடுத்ததால், தலைவரவர்களிடம் காட்ட முடியவில்லை. அடுத்த முறை அந்த மரபைக் கடைப்பிடிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இது போன்ற நடவடிக்கைகளை சட்டபூர்வமாக நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே 10,000 நர்சரிப் பள்ளிகளுக்கு 500 உயர் நிலைப் பள்ளிகள்தான் இருக்கின்றன. நர்சரிப் பள்ளிகளைக் கட்டுப் படுத்தக்கூடிய சட்டம் இல்லாததால், யாருமே அதைத் தடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. நர்சரிப் பள்ளிகளில் படித்த மாணவர்கள் மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு, 9 ஆம் வகுப்பு சேர வரும்போது, இது போன்ற சூழ்நிலை வருகிறது. மேல்நிலை வகுப்புகளில் ஆங்கில போதனா மொழியில் மக்களுக்கு ஆர்வமிருந்தால், அந்த செக்ஷன்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதில் எந்தவிதக் கஷ்டமும் இராது என்பதால், அந்த வகுப்புகளின் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு சலுகைகள் கல்லூரி ஆசிரியர்களுக்கும், மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும், தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அளித்திருந்தாலும், நம்முடைய மொத்த வருவாயில் 468 கோடி ரூபாய் கல்விக்காகச் செலவழிக்கப் படுகிறது என்று பெருமை பட்டுக்கொண்டாலும், அது முறையோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா என்பதை நாம் விவாதிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். அரசு ஆணைகள் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப்பட்டாலும், தனியார் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டாலும், அந்த ஆணைகள் சரிவர நிறைவேற்றப்படாமல், நம்முடைய பணங்கள் எல்லாம் விரயம் ஆகிறதென்பதையும், அதனைக் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலை இருப்பதையும் நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்கலைக் கழக மானியக் குழுவால் ஒவ்வொரு கல்லூரிக்கும் 5 முதல் 6 லட்சம் ரூபாய் வரையில் கொடுக்கப்பட்டு, அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாணை 883, நாள் 27—6—1984-ன்படி ஆடிட் செய்திருக்க வேண்டும். ஆனால் தமிழ் நாட்டிலுள்ள எந்தக் கல்லூரியின் கணக்கும் ஆடிட் செய்யப்படாததால்—மானியப்





பல்கலைக் கழகம் தவிர—அங்கே பணம் விரயமாகிக் கொண்டிருக்கிறது என்ற செய்தி வந்திருக்கிறது. சில கல்லூரிகள் 40 ஆயிரம் ரூபாய்க்கு புத்தகங்கள் வாங்கியிருப்பதற்கு வவுச்சர் இருக்கிறது. ஆனால் புத்தகங்கள் இல்லை. எனவே அரசு ஆணையை நிறைவேற்ற தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் கல்லூரி, தனியார் பள்ளி, தனியார் நிறுவனங்களில் அரசால் போடப்படும் ஆணைகள் நிறைவேற்றப்படாமல், அங்கே கல்வியின் தரம், நிலை குறைந்து கொண்டிருப்பதை பல்வேறு உதாரணங்கள் மூலமாக கல்வி அமைச்சர் அவர்களிடமும், அவையிலும் பல்வேறு கால கட்டங்களில் கூறியிருந்தாலும், கல்விக் கொள்கைக் குறிப்பில் கூறுவது முக்கியமான கடமை என்று கருதுகிறேன். இங்கே தனியார் நிர்வாகங்கள் எந்தவிதமான சட்டமும் இன்றி, விதியுமின்றி, அரசினுடைய அங்கிகாரம் பெறாமலேயே சஸ்பென்ட் செய்வதும், தற்காலிக வேலை நிக்கம் செய்வதும், நிரந்தரப் பணி நிக்கம் செய்வதும் ஒரு நிகழ்ச்சியாக இல்லாமல், வாடிக்கையாக இருந்து கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 12-40)

அதற்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல் சேலம் கல்லூரியில் மட்டும் 4 ஆண்டுகளில் 12 ஆசிரியர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். கல்லூரி முதல்வர் செருப்பால் அடிக்கப்பட்டதாகக்கூட தகவல் வந்தது. நிலைமை இப்படி இருந்தும் நிர்வாகத்தின் மேல் நடவடிக்கை எடுக்காமல் கல்லூரியின் முதல்வர் மீது நடவடிக்கை எடுத்து அவரை தற்காலிகமாக வேலை நிக்கம் செய்திருக்கிறார்கள். பணம் செலவு செய்வது அரசு. ஆனால் கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசுக்கு இல்லை. ஆசிரியர்களுக்குரிய சம்பளம், அலுவலர்களுக்குரிய சம்பளம், நிர்வாகச் செலவு அனைத்தும் அரசைச் சார்ந்தது. ஆனால் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசுக்கு இல்லாததால், அங்குள்ள ஆசிரியர்களும், மாணவர்களும் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அனைத்து காரியங்களிலும், 'அப்பாயின்ட்மென்ட்' உட்பட லஞ்சம் வாங்குகின்ற நிலைமை இருக்கிறது. அந்தப் பணத்தைக் கொண்டு ஆசிரியர்களைப் பழி வாங்குகின்ற நிலைமையும் இருக்கிறது. இதையெல்லாம் கட்டுப்படுத்துகின்ற வகையில், நிறுத்துகின்ற வகையில் 1976-ல் எடுக்கப்பட்ட சட்ட விதிகளை மாற்றியமைக்க வேண்டுமென்று பல்வேறு ஆண்டுகளாக இந்த மன்றத்தின் மூலம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்தச் சட்டங்களையும், சட்ட விதிகளையும் அரசுக்கு அதிகம் பொறுப்பு இருக்கும் வகையில் அவசியம் மாற்றியமைக்க வேண்டும்.

அடுத்து, தனியார் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் சிறுபான்மையினர் என்கிற பெயரால் பல்வேறு கோளாறுகள் நடைபெற்றுக்கொண்டிருக் கின்றன. அவர்களைக் கட்டுப்படுத்த அதிகார பூர்வமாக இப்போதுள்ள சட்டத்தில் வகை இல்லாவிட்டால், அவர்களைக் கட்டுப்படுத்தும் வகையில் சட்ட விதிகளைக் கொண்டுவர வேண்டும். அப்படி இல்லாததால் தான், அவர்கள் தங்களுடைய இஷ்டம் போல் செய்கிறார்கள். உதாரணமாக இடையான்குடி கல்லூரியில் பலர் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். ஆண்டுக் காண்டு அங்கே பணியாற்றுபவர்களை வெளியேற்றும் நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக, நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் கட்டுப்பாடுகளைக் கொண்டுவர வேண்டும்.

அடுத்து, சுயாட்சிக் கல்லூரி என்கிற பெயரில் பல்வேறு கல்லூரிகள் இயங்குகின்றன. அவைகள் நன்கு இயங்குவதாகச் செய்திகள் வந்தாலும் கூட, பல்கலைக் கழகத்தால் ஏற்படுத்தப்பட்ட கமிஷனின் அறிக்கை யிலிருந்து நாம் ஒன்றைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

"Visited the Avinashilingam Home Science College for Women, Coimbatore on Friday, the 22nd April 1983 and Saturday, the 23rd April 1983, for a review of the autonomous status."

அந்த அறிக்கையின் முடிவுப்படி, அதன் தலைவர், முன்னாள் கல்லூரிக் கல்வி இயக்குநர் ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்.

"The Commission regrets that the continuation of the experiment ; ..........; therefore, the Commission painfully recommends that the autonomous status which has been extended to Avinashilingam Home Science College for Women, Coimbatore may be withdrawn forthwith by the Bharathiyar University for both Under-Graduate and Post-Graduate courses and curricula."

என்று தெரிவித்திருக்கிறார். பட்டப் படிப்புக்கு பெற்பட்ட சுயாட்சி உரிமையை 'வித்ட்ரா' செய்யும்படி பாரதியார் பல்கலைக் கழகத்தை அந்தக் குழு கேட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** ; அவினாசிலிங்கம் ஹோம் சயன்ஸ் கல்லூரியைப் பொறுத்தவரையில், அவர்கள் 3 மேஜரில் எக்ஸ்பெரிமெண்ட் செய்கிறார்கள். அதைத்தான் ஆசிரியர்களும் மாணவிகளும் எதிர்த்து





போராட்டத்தை நடத்தினார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் அது ஒரு பிரச்சினையாக இருந்தது. போன கமிஷன், கமிட்டி எல்லாம் கூட ஆசிரியர் களுடைய கருத்துக்களின் அடிப்படையில் ரிப்போர்ட்டுகளை சமர்ப்பித் திருக்கிறார்கள். இப்போது ஆசிரியர்களும் நிர்வாகிகளும் கூடி, 3 மேஜர் என்ற திட்டத்தை மாற்றியமைத்து பல்கலைக் கழக அனுமதியோடு அது ஒழுங்காக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 12-45)

**திரு. மு. செ. சங்கரலிங்கம்** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சுயாட்சிக் கல்லூரி பற்றி பல்வேறு செய்திகள் வருகின்றன. அவற்றை இந்த அவைக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுரை, பல்கலைக் கழகப் பகுதியிலுள்ள சுயாட்சிக் கல்லூரியில், அதனுடைய ரெகமன்டேஷனில்

"The autonomous college students were not given due recognition outside the college campus. In the case of the Post-graduate courses, autonomous college students were restricted by applying for ten per cent quota only."

இதுபோன்று அங்கே தரம் அதிகம் குறைந்திருப்பதற்குக் காரணம், அவர்கள் அங்கு மதிப்பெண்கள் அதிகமாகப் போட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற் படுகிறது. இதுபோல் அண்மையில் சென்னையில் ஒரு கல்லூரியில்—நான் அதன் பெயரைச் சொல்ல விரும்பவில்லை—ஒரு சுயாட்சி கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் தேர்வு எழுதியவுடனேயே அந்தத் தேர்வுத்தாள்களை ஜெராக்ஸ் காப்பி எடுத்து பின், திருத்த அனுப்புகிறார்கள். ஏன் என்று கேட்டால், இதற்கு முன்னால் தாள்களைத் திருத்த அனுப்பிய போதெல்லாம், அந்தத் தாள்களுக்குப் பதிலாக திருத்தப்படுகிற இடத்தில் மாற்றுத்தாள்கள் வைப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. இதைத் தடுப்பதற்காகத்தான் போட்டோ ஸ்டாட் காப்பி, ஜெராக்ஸ் காப்பி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, இப்படி ஒரு நிலைமை இருக்கிறது. இப்படி நிலைமை நீடித்துக்கொண்டிருந்தால், சுயாட்சிக் கல்லூரி மீது உள்ள நம்பிக்கையை மக்கள் இழந்து விடுவார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற குற்றச்சாட்டு சுயாட்சிக் கல்லூரியாக அது இருப்பதால் ஏற்படுவதல்ல, எந்தக் கல்லூரி யாக இருந்தாலும் இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படலாம். நாம் குறிப்பிட்ட ஒரு சோதனையைச் செய்து பார்க்கிறபோது, ஒரு நல்ல திட்டத்தைக்

கொண்டு வருகிறபோது, அதுவும் கல்லூரிக் கல்வித் துறையில் கடந்த 30 வருஷத்திலே ஓரேயொரு மாறுதலைக் கொண்டுவந்து, கல்லூரி கல்வியின் தரத்தை உயர்த்த முயற்சி எடுக்கிறபோது, அதுவும் அகில இந்திய அளவில் பெரியவர்கள் அடங்கிய குழுக்கள் எல்லாம் சொன்ன கருத்துக்களின் அடிப் படையில், தமிழ் நாட்டில் நாம் இதனைச் செயல்படுத்திக்கொண்டிருக்கிற போது, சுயாட்சிக் கல்லூரியே சரியாக நடைபெறவில்லை என்று கூறுவது சரியல்ல. சுயாட்சிக் கல்லூரிகளை மற்ற கல்லூரிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து, சுயாட்சிக் கல்லூரிகளில் உள்ள நன்மை தீமைகள் என்ன, மற்ற கல்லூரிகளில் உள்ள நன்மை தீமைகள் என்ன, சுயாட்சிக் கல்லூரிகளில் பாடங்கள் எப்படி நடைபெறுகின்றன. மற்ற கல்லூரிகளில் பாடங்கள் எப்படி நடைபெறுகின்றன, சுயாட்சிக் கல்லூரிகளில் பையன்கள் எப்படிப் படிக்கிறார்கள், மற்ற கல்லூரிகளின் பையன்கள் எப்படிப் படிக்கிறார்கள், சுயாட்சிக் கல்லூரிகளில் ஆசிரியர்கள் எப்படிச் சொல்லித் தருகிறார்கள், மற்ற கல்லூரிகளில் ஆசிரியர்கள் எப்படிச் சொல்லித் தருகிறார்கள் என்பவைகளை எல்லாம் ஒப்பிட்டுப்பார்க்கிறபோதுதான், சுயாட்சிக் கல்லூரிகளின் நன்மைகள் ஓரளவுக்கு நமக்குத் தெரிய வரும். அதுபோல் அல்லாமல் சுயாட்சிக் கல்லூரிகளின் ஒருசில குறைபாடுகளை மட்டும் வைத்துக்கொண்டு பேசுவதென்பது, இதற்கு முன்பு இருந்த நிலைமைக்கே நம்மைத் திரும்பக் கொண்டு வரும், பிறகு எந்த ஒரு நல்ல காரியத்திற்கும் நாம் ஒத்துழைப்பு தர முடியாத நிலைமை ஏற்பட்டு விடும். ஒன்றை குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். சுயாட்சிக் கல்லூரி முறை என்பது ஆசிரியர்களுக்குக் கூடுதல் பணியை உருவாக்கத்தான் செய்யும். ஆகவே அதற்கு சம்மதிக்கிற ஆசிரியர்கள் சுயாட்சிக் கல்லூரிகளில் பணியாற்றலாமே தவிர, வேறு எந்தப் பிரச்சினைகளும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. மு. செ. சங்கரலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சுயாட்சிக் கல்லூரிகளின் குறைகள் நீக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் குறைகளைச் சுட்டிக் காட்டுகிறேனேயொழிய, சுயாட்சிக் கல்லூரியே வேண்டாம் என்ற அடிப்படையில் இல்லை. இந்தச் சூழ்நிலையில் சுயாட்சிக் கல்லூரிகளுக்கு சில . . . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறைகளைக் களைய வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறார் என்றால், அவர் கருத்துக்களை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆனால், ஆசிரியர்கள் சங்கம் என்ற பெயரை வைத்துக்கொண்டு சுயாட்சிக் கல்லூரியே கூடாது என்று தீர்மானத்





தைப் போட்டு, மக்களிடத்திலே பீதியைப் பரப்பக்கூடிய அளவுக்கு பரபரப்பு உண்டாக்கக்கூடிய அளவுக்கு, அவநம்பிக்கை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு ஒரு நல்ல திட்டத்திற்கு நாம் எதிர்ப்பைத் தர முன்வருவோமானால், அப்போது நமக்காக கல்லூரி நடைபெறுகிறதா அல்லது மாணவர்களுக்காக கல்லூரி நடைபெறுகிறதா என்கிற கேள்வி வந்துவிடுகிறது. மாணவர்களுக்காகத் தான் கல்லூரி நடைபெறுகிறது; நடைபெற வேண்டும் என்று நினைக்கிற ஒவ்வொருவரும் சுயாட்சிக் கல்லூரிகளையும், சுயாட்சி இல்லாத கல்லூரி களையும் ஒப்பிட்டுப் பார்ப்பார்களானால், நிச்சயமாக இதை நல்லமுறையில் வரவேற்பார்கள். சுயாட்சிக் கல்லூரிகளில் கல்வித் தர உயர்வு ஏற்பட்டிருக் கிறது. இன்னும் சொல்லப் போனால், இன்னும் நல்லமுறையில் நடை பெறுவதற்குரிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. அதற்கு ஆசிரியர்கள் ஒத்துழைப்பு தருவார்களானால், இன்னும்கூட சிறப்பாக அவை நடைபெற முடியும்.

திரு. மு. செ. சங்கரலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, சுயாட்சிக் கல்லூரிகளில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் கூறிக்கொண்டிருக்கிறேன். இன்னும் சுயாட்சி ஒவ்வொரு கல்லூரிக்கும் கொடுக்கப்பட்டால்கூட, நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் இதுபோன்ற குறைபாடுகள் இருந்தால், கல்வியின் தரம் குறைந்து விடும் என்ற காரணத்தால், சுயாட்சிக் கல்லூரிகளிலே உள்ள குறைபாடு களைக் கண்டிப்பாகக் களைந்துவிட வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தோடுதான் இவைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

பல்வேறு கல்லூரிகளிலே, தற்சார்பு பொறியியற் கல்லூரிகளும், தொழில் நுட்பக் கல்லூரிகளும், கடந்த ஒன்றிரண்டு ஆண்டுகளில் பல்வேறு நிலைகளில் பெருகியிருப்பது மகிழ்ச்சிக்குரியது என்றாலும் கொள்கைக் குறிப்பை ஏற்று, செல்ஃப் பைனான்சிங் என்ஜினியரிங் கல்லூரிகளில் அரசாங்கம் வகுக்கும் விதிமுறைகளுக்கு உட்பட்டு மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும். சேரும் மாணவர்களிடம் எத்தகைய தரக் கட்டணமும் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் கிட்டத்தட்ட 25 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முடித்த பிறகு இன்னொரு உறுப்பினர் பேசவேண்டும். ஆகவே இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்து விடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. செ. சங்கரலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கடைசியாக ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் தரக் கட்டணம் வசூலிக்கக்கூடாது. நிபந்தனைகள் மீறப்பட்டால், தொழிற் கல்வி நிறுவனங்களை அரசே எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முறையிலே தனியார் நிறுவனங்கள் இசைவு தரவேண்டும். இத்திட்டத்தின்கீழ் தான் அங்கே 'செல்ஃப் பைனான்சிங் இன்ஸ்டிட்யூஷன்' ஏற்பட்டதாக அரசுக் கொள்கைக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. ஆனால் நேற்று வந்த பத்திரிகைச் செய்திப்படி, கல்லூரி நிர்வாகத்தில் ஒதுக்கப்பட்ட இடங்களுக்கும் நன்கொடைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சென்ற ஆண்டு ஒரு என்ஜினியரிங் கல்லூரி இடத்திற்கு சுமார் 50 ஆயிரம் ரூபாய் வரை வசூலிக்கப்பட்டதாக பத்திரிகைச் செய்தி கூறுகிறது. நடைமுறையிலும்கூட ஒவ்வொரு என்ஜினியரிங் கல்லூரியிலும், பாலிடெக்னிக்கிலும் இடம் வேண்டுமானால் 50 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவில்லாமல் வாங்காமல் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள். அரசாலே ஒதுக்கப்பட்ட இடங்களிலேகூட நன்கொடைகள் வழங்குகின்ற நிலை இருக்கிறபோது, கொள்கைக் குறிப்பில் நன்கொடை வாங்கக்கூடாது என்ற விதி இருக்கும்போது, அவர்கள் எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல், நேரிடையாக அவர்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடை செய்வதற்கும் ஒரு விதி வகுக்க வேண்டும். உடனடியாக ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற பல்வேறு நிலைகளில் . . . .

திரு. க. சுப்பு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நன்கொடை வாங்கக்கூடாது என்றுதான் சொல்கிறார். கொடுக்கக் கூடாது என்று ஏதாவது இருக்கிறதா ? வாங்கக் கூடாது என்றால் கொடுக்கலாம். கொடுக்காமல் இருந்தால் பரவாயில்லை. கொடுக்கக் கூடாது என்பதற்கு விதி முறை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். கொடுக்கவில்லை என்றால், வாங்க மாட்டார்கள். கொடுத்தால்தானே வாங்க முடியும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் திரு. சுப்பு அவர்களின் குறுக்கீட்டிற்கு நன்றி. கொஞ்சம் கலகலப்பாக இருக்கட்டும் என்பதற்காகத்தான் சொல்கிறார்.

திரு. மு. செ. சங்கரலிங்கம் ; துணைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பு அவர்கள் கூறியதுபோல கொடுப்பதும், வாங்குவதும் 'காம்ப்ளிமென்டரி'. ஆகவே கொடுத்ததை வாங்கினால்கூட வாங்கினார் என்பதை . . . .





திரு. க. சுப்பு : வேறு ஒன்றுமில்லை. கொடுக்கிறவர்கள் சிலர் வருத்தப் படுகிறார்கள். நாங்கள் எல்லாம் நன்கொடை கொடுக்கிறோம். அதை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்று வருத்தப்படுகிறார்கள். அப்படி இருக்கும் போது, அவருடைய மனம் புண்படக்கூடிய அளவுக்கு நாம் இங்கே விவாதிக்கிறோம் என்றால், நன்கொடையாளர்கள் இல்லாமல் போய் விடுவார்கள். அவர்கள் தானே கொடுக்கிறேன் என்கிறார்கள். நீங்கள் ஏன் வேண்டாம் என்று சொல்கிறீர்கள் ? கொடுக்கக் கூடாது என்று சட்டம் போட்டுச் சொல்லுங்கள், நான் ஒத்துக் கொள்கிறேன்.

திரு. மு. செ. சங்கரலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நன்கொடை கொடுக்கும் அளவுக்கு தமிழ்நாடு வளர்ந்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தமாதிரி லட்சம் ரூபாய் கொடுக்கும் அளவுக்கு நமது மாநிலம் வளம் பெற்றிருந்தால், நானும் பெருமைப்படுகிறேன். இந்தக் கொள்கைக் குறிப்பிலே உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டலாமென்று எண்ணுகிறேன்.

ஊட்டியிலே உள்ள அரசுக் கல்லூரியில் டிபென்ஸ் போர்ஸ் என்று ஒன்று இருக்கிறது. ஏழு ஆண்டுக் காலமாக அந்த வகுப்பு, படிப்பு நடந்து கொண்டிருக்கிறது. அது தமிழகத்திலே உள்ள ஒரே ஒரு கல்லூரி. அங்கு ஏழு ஆண்டுக் காலமாக ஒரே ஒரு பேராசிரியர் இருந்து கொண்டிருக்கிறார். அவரும் 10(எ)(1). அவர்தான் அந்த எக்சாமினேஷன் போர்டுக்கு சேர்மன். ஒரு ஆசிரியருக்கு எப்படி மூன்று ஆண்டுக் காலமாகத் தேர்வு நடத்த முடியும் ? இதுபோன்ற குறைகளையெல்லாம் அதிகாரிகள் நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, ஆராய்ச்சியை நம்பி பாடம் நடந்து கொண்டிருக்கிறது . . .

திரு. எம். பி. சுப்பிரமணியம் ; துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு ஆசிரியர்தான் இந்தப் பரீட்சையினுடைய தலைவர் என்று சொன்னால், திருத்துபவரும் அவர் தானா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. செ. சங்கரலிங்கம் : அந்த டிபன்ஸ் போர்ஸிலே கொடுக்கப்பட்ட அந்த டிபன்ஸ் கோர்ஸுக்கு ஒரே ஒரு ஆசிரியர். அதற்கு ஆன்சிலியரி என்று ஹிஸ்டரி இருக்கலாம், பாலிடிக்ஸ் இருக்கலாம், வேறு ஏதாவது சப்ஜெக்ட் இருக்கலாம். அதைத் திருத்துவதற்கு வேறு ஆசிரியர் உண்டு. ஆனால் இதைத் திருத்துவது அவர்தான். அவர்தான் சேர்மன். அவர்தான் எக்சாமினர். அவர் தான் டீச்சர். அப்படி ஒரு மோசமான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-55)

நாட்டு முன்னேற்றத்தின் அடிப்படைத் தளமே ஆராய்ச்சிதான். ஆக, ஆராய்ச்சியை மேற்கொண்டால்தான் ஒரு நாடு முன்னேறுவதற்கான வாய்ப்பு ஏற்படும். ஆனால் தமிழகத்தில் என்ன காரணத்தாலோ, ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது போல் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது ஊட்டி ஆர்ட்ஸ் காலேஜ என்று நினைக்கிறேன்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** அப்படி ஆராய்ச்சிப் பட்டம் பெற்றவர் களுக்கு 1978 ஆம் ஆண்டு வரை ரூ. 100 ஊக்க ஊதியமாகக் கொடுத்தார்கள். ஆனால் தமிழ்நாட்டில் இப்போது இந்த ஊக்க ஊதியம் கொடுக்கப் படுவதில்லை. தற்போது பி.எச்டி. பட்டம் பெற்றவர்களுக்கு 100 ரூபாய் ஊக்க ஊதியம் கொடுத்ததை நிறுத்திவிட்டார்கள். இந்த நிலைமையை மாற்றி மீண்டும் இவர்களுக்கெல்லாம் ஊக்க ஊதியம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் ஊதியக் குழுவின் அறிக்கைக்குப் பிறகு இடைக் கால நிவாரணம் கொடுக்கப்படாத ஒரு பிரிவு இருக்கிறது என்றால் அது கல்லூரி ஆசிரியர்களின் பிரிவுதான். தமிழக அரசைக் கேட்டால், கல்லூரி ஆசிரியர்களின் ஊதியத்தைப் பொறுத்தமட்டில், மத்திய அரசைத்தான் கேட்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். மத்திய அரசைக் கேட்டாலோ, "சம்பளத்தைப் பொறுத்தமட்டில், உங்களுடைய மாநில அரசைத்தான் கேட்க வேண்டும்" என்று சொல்லுகிறார்கள். ஆக கல்லூரி ஆசிரியர்கள் மாநில-மத்திய அரசுகளுக்கிடையே திரிசங்கு சொர்க்கத்தில் நின்று கொண்டிருக் கிறார்கள். ஏற்கெனவே யு.ஜி.சி. சிபாரிசு செய்ததைப் போல் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 75 இடைக்கால நிவாரணமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்று மாநில அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தற்போது கன்கரன்ட் லிஸ்டில் இருக்கிற கல்வியை மாநில லிஸ்டின்கீழ் கொண்டு வர வேண்டும். அதுபற்றி கொள்கைக் குறிப்பில் எதும் சொல்லப்படவில்லை. அங்கே சொல்லப்படவில்லை என்றாலும்கூட, கல்வியை மாநில லிஸ்டின் கீழ் கொண்டு வர வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக மாநில அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தற் போது கல்வி கன்கரன்ட் லிஸ்டில் இருப்பதால், பல்வேறு பாட திட்டங்களைக் கொண்டு வருவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதைப் போலவே ஊதிய





முறையிலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன. எதற்கெடுத்தாலும் நாங்கள் டெல்லி வரை செல்ல வேண்டியிருக்கிறது. அமைச்சராக இருந்தால், டெல்லி செல்வது சுலபமாக இருக்கும். ஆசிரியர்கள் டெல்லி சென்று இதுபோன்ற பிரச்சினை களைப் பற்றிப் பேசுவது என்பது மிகவும் கடினமாக இருப்பதால், இதை மாநில அரசுக்கான லிஸ்டில் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள் வதோடு கடைசியாக ஒரு கருத்தை மட்டும் தெரிவித்து முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சங்கங்கள் மூலமாகப் பல ஆண்டுகளாகக் கோரிக்கைகள் வைக்கப்பட்டும் அது இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அத்தகைய கோரிக்கை களை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, நிறை வேற்றித் தரப்பட்ட கோரிக்கைகளைப் பொறுத்தவரையிலும், நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கிற அகில இந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழகத்தின் சார்பில் 1985-86 ஆம் ஆண்டுக்கான கல்வி வளர்ச்சிக் கொள்கைக் குறிப்பின்மீது சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நான் பேச எழுவதற்கு முன்னாலே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நேரத்தைச் சுட்டிக்காட்டினார்கள். அதையும் நான் நினைவில் வைத்துக்கொண்டு எவ்வளவு விரைவாகப் பேசி முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாகப் பேசி முடிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** செவிக்க உணவு இல்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

உறுப்பினர் பேசி முடிக்கும் வரை, அவையின் நேரம், அவையின் அனுமதி யோடு நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1.00)

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** செவிக்கு உணவாகவும், சிந்திக்கின்ற நிலைமைக்கும், தமிழ் நாட்டினுடைய கல்வி ஸ்தாபனங்களைப் பற்றியெல்லாம் இங்கே பெருவாரியாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள் எடுத்துச் சொன்னார்கள். எந்தக் கொள்கைக் குறிப்பு விவாதத்திற்கும் இரண்டு நாள் ஒதுக்குவது இல்லை. ஆனால் கல்விக்கு மட்டும்தான் இந்த மாமன்றத்திலே இரண்டு நாள் ஒதுக்கி வாதாடுகின்ற தன்மையை நீண்ட காலமாக நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன், கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

இன்றைய தினம் நம்முடைய ஆசிரியர்-பட்டதாரி முற்போக்கு கூட்டணியின் தலைவரும், இந்த மன்றத்தின் உறுப்பினருமான திரு. தாமஸ் அவர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். நாட்டிற்கு வழிகாட்டுகிற, வளர்ந்து வருகிற சமுதாயத்தினுடைய கல்வியின் தரத்தை எப்படியெல்லாம் உயர்த்தலாம் என்கிற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் வாத்தியார்களுக்குச் சம்பளம் போதவில்லை—வாத்தியார் என்றால் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கோபித்துக் கொள்வார்கள்—ஆசிரியர்களுடைய நிலை உயர்த்தப்பட வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். வருங்கால தலைமுறை அல்லது சமுதாயம் முன்னேற வேண்டுமென்றால், கல்வியின் தரம் உயர வேண்டும் என்பது எல்லாத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய கருத்து என்று நான் கருதுகிறேன். இன்றைய தினம் நான் ஒன்றைச் சொன்னால், ஆசிரியர்கள் என் மீது கோபித்துக்கொள்ளக் கூடாது. எந்த அளவிற்கு அவர்கள் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். ஒன்றிலிருந்து பத்து வரை கூட்டிவிட்டு அதற்குப் பின்னாலே ஒன்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால், ‘பால் கோடு’ போட்டு விட்டு 11 என்று சொல்லுகிறார்கள். அந்த அளவிற்குத்தான் இன்றைய தினம் தமிழகத்திலே உள்ள ஆசிரியப் பெருமக்கள் தங்களுடைய நிலையை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அதை உயர்த்த வேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்போடு ஆசிரியப் பெருமக்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்களுடைய ஞாபகம் எல்லாம் ஊதியக் குழுவிலே இடம் பெறவில்லையே, பணம் பெறவில்லையே, என்பதுதான். அவர்களுடைய வாக்குகளைப் பெறுவதற்காக அந்தக் குறைகளை மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்ல வேண்டும், அடுத்த முறை வெற்றி பெற வேண்டும் என்ற முறையிலே எடுத்துரைத்தார்கள் என்று நான் கருதுகிறேன்.



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் ;** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேச்சுக்கு உள்நோக்கம் கற்பித்துப் பேசக்கூடாது என்பது மரபு. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அப்படிச் சொல்லக்கூடாது . . . . ஆகவே அதற்காகச் சொன்னார் என்று உள்நோக்கம் கற்பித்துப் பேசக் கூடாது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி ;** துணைத் தலைவர் அவர்களே, உள்நோக்கம் கற்பித்து அந்தக் கருத்தைச் சொல்லவில்லை. அப்படி உள்நோக்கம் கற்பித்ததாகக் கருதினால், அந்த வார்த்தையை நீக்கிவிடலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் ;** ஆசிரியர்கள் வாக்குகளைப் பெற்று வந்திருக்கிறார்கள். மீண்டும் பெற வேண்டும், ஆகவே ஆசிரியர்கள் பேசுகிறார்கள் என்பது உள்நோக்கம் கற்பிப்பதாகும்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** ஆகவே கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக ஆசிரியப் பெருமக்கள் . . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம் ;** துணைத் தலைவர் அவர்களே, பத்துக்கு மேலே 11 என்பதற்கு ஒன்றுக்குப் பக்கத்திலே ஒரு கோடு போட்டுச் சொல்லுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறார். வேறு எப்படிச் சொல்லுவது என்று விளக்கம் அளிப்பார்களா ?

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு உறுப்பினர் நான் சொன்னதை விட்டுவிட்டார்கள். பால் கோடு போடுவதைப் போட்டு அந்தக் கணக்கைக் காட்டுகிறார்கள் என்று சொன்னேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தனியாக பிறகு விளக்கலாம். மேற்கொண்டு பேசலாம்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** இன்றைய தினம் கல்வியின் தரம் உயருவதற்காக ஆசிரியப் பெருமக்கள் உதவிபுரிய வேண்டும் என்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-05)

அடுத்து, நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சென்னை வாழ் மாணவர்களை கல்விச்சாலைக்குச் செல்கின்ற நேரத்தில், கல்வி போதிக்கின்ற ஆசிரியர்கள், தங்களுடைய வீட்டிற்கு மாலை நேரத்தில் கல்வி கற்க வர வேண்டும் என்று வற்புறுத்துவதாக எனக்குச் செய்தி வருகின்றது. பெற்றோர்கள் வேறு

[திரு. ஆர். டி. சித்தாபதி] [1985 ஜுன் 10

வழி இல்லாமல், அவர்கள் இல்லங்களுக்கு அனுப்பி வைக்கின்றார்கள். எந்த வகுப்பிலே படிக்கின்றார்களோ அந்த வகுப்பு ஆசிரியரின் இல்லத்திற்குச் செல்ல வேண்டும். இல்லை என்று சொன்னால், ஒரு வேளை அந்த மாணவர் தேர்விலே தேறாமல் போய்விடுகின்ற சூழ்நிலையை உருவாக்கி விடுவார்களோ என்ற அச்சத்தின் அடிப்படையிலே இன்றையதினம் அவர்கள் இருக்கின் றார்கள். நான் ஒரு குறிப்பிட்ட ஆசிரியரைப்பற்றிச் சொல்லவில்லை. வேண்டுமென்றால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் என்னோடு வருவார் களானால், நான் பல்வேறு இல்லங்களிலே இதைக் காட்டுகின்றேன். மாலை நேர வகுப்புகள் நடப்பதைப் பார்க்கலாம். நான் அப்படி கல்வி கற்க வேண் டாம் என்று சொல்லவில்லை ஆனால் அந்த அச்சத்தின் அடிப்படையிலே கல்வி கற்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்படுவதைத்தான் இந்த அரசு தவிர்க்க வேண்டுமென்று நான் மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நான் இவ்வளவும் சொல்வதற்குக் காரணம், இன்றையதினம் அந்த அச்ச மனப்பான்மை பள்ளியில் படிக்கின்ற மாணவர்களிடையிலே இருக்கின்றது. ஆசிரியர்கள் தன்னிடம் ஒரு மாணவன் சேர்ந்தால், ஒரு 50 ரூபாய், இரண்டு மாணவர்கள் சேர்ந்தால் ரூ. 100 என்று வாங்குகின்றார்கள். ஒரு சின்ன அறை. ஒரு பக்கம் சமையல், இன்னொரு பக்கம் பாடம். தன்னுடைய வீட்டிற்குள்ளேயே அப்படி நடத்துகின்றார்கள். ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் என்று நடத்துகின்றார்கள். ஏறத்தாழ மாதம் ரூ. 1,500, ரூ. 2,000 என்று வருமானம் பெறுகின்றார்கள். அதைத் தவிர்ப்பதற்கு சர்க்கார் . . .

**திரு.பா. ரா. தாமஸ் ;** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர் களே, இந்தக் காலத்திலே ஒரு பழக்கம் உருவாகிவிட்டது. ஆசிரியர்கள் பணி ஆற்றுவதுபற்றிச் சொல்கின்றார்கள். ஒரு என்ஜினியர், ஒரு டாக்டர், ஒரு எழுத்தர் இப்படி எல்லோருமே தனியாக டியூஷன் நடத்துகின்றார்களே, அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா ? அதைப் பற்றி என்ன கருத்து சொல்கின்றார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர் களே, மருத்துவர்கள்கூட, அரசு மருந்தகத்திலே வேலை செய்துகொண்டிருக் கின்றார்கள். தனிப்பட்ட முறையிலே அவர்களும் பிராக்டீஸ் பண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். சென்னையிலே மாதம் ரூ. 10,000, ஒரு லட்சம் ரூபாய் என்று சம்பாதித்துக்கொண்டிருக்கின்றார்கள். ஏழை ஆசிரியர்கள் சம்பாதிப்பதில் என்ன இருக்கின்றது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜுன் 10]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாணவர்களிடத்திலே பணம் வாங்குவதற்கு ஒவ்வொரு இடத்திலும் காரணம் கேட்டால், ஒவ்வொரு நியாயத்தைச் சொல்லிக்கொண்டுதான் இருப்பார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பக்கம் சமையல், ஒரு பக்கம் வகுப்பு நடத்தி மாதம் ரூ. 2,000 வரை பெறுகின்றார்கள் என்று சொல்கின்றார்கள். அந்த அளவுக்கு ஆசிரி யர்கள் வறுமையில்தானே இருக்கின்றார்கள். அவர்களுக்குத் தனியாக ஒரு இடம் வைத்துக்கொள்ள முடியவில்லை என்பதை உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொள்கின்றார்களா ?

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிறேன். சில பேர்கள் இல்லாததுபோல காட்டிக் கொள்கின்றார்கள். அண்ணா நகரில் வீடு வாங்கிவிட்டு, இங்கே புரசை வாக்கம் பகுதியிலே ஒரு சின்ன அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு நடத்துகின்றார்கள். அந்தச் சம்பளத்தை வைத்து மாமன் பெயரிலே, மச்சான் பெயரிலே வீடு வாங்கியிருப்பதையெல்லாம் இந்த அவையிலே நான் சொல்ல வேண்டும் என்று கருதுகின்றேன். இந்தப் பிரச்சினையை நான் இத்தோடு விட்டுவிடுகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அது உறுப்பினர் அவர்களுடைய அனுபவம். எங்களுக்கு அப்படிப்பட்ட அனுபவம் இல்லை. அவர்களுக்கு இருப்பதால் தான் சொல்லிக்காட்டுகின்றார்கள்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி;** இந்த அனுபவம் அவர்களுக்கு இல்லை என்றால், நாட்டிற்கு அனுபவம் இல்லை என்ற பொருள் அல்ல. ஆகவே இந்த நிலையை மாற்ற வேண்டுமென்று நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் மொழியின் பாலும், தமிழ் நாட்டின் பண்பாட்டிலும் கொண்ட தணியாத ஆர்வத்தின் காரணமாக தமிழ் மொழிக்காக, தமிழுக் காக தியாகம் செய்த தியாகிகளுக்கெல்லாம் ரூ. 150 தருவதாக இந்தக் கல்விக் கொள்கைக் குறிப்பில் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் மிக நாசுக்காக நுழைத்திருக்கின்றார்கள் என்று நான் கருதுகிறேன். தமிழ் மொழிக்காக தீயிட்டு தங்களை வருத்திக்கொண்டு உயிர்த் தியாகம் செய்த நண்பர்களுடைய குடும்பத்திற்கு மாதம் ரூ. 150 தருவது என்று அரசு அறிவித்ததற்கு நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஒரு வேண்டுகோளையும் கல்வி அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் நான் சொல்கின்ற கருத்துக்கு ஒத்துவருவார்

(பிற்பகல் 1-10)

என்ற நம்பிக்கையோடு அந்தக் கருத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். உயிர்த் தியாகம் செய்தவர்களுடைய குடும்பத்திற்கு மட்டும்தான் 150 ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ் மொழிக்காக சிறை சென்ற வர்களுக்கெல்லாம் அவர் அத்தகைய உதவிப் பணத்தைத் தர வேண்டும் . . . .

**திரு. எம். பி. சுப்பிரமணியம்** : துணைத் தலைவர் அவர்களே, இந்தியை எதிர்த்து சிறை சென்றதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். தமிழுக்காகச் சிறை சென்றதாக நான் படிக்கவில்லை. விவரம் இருந்தால், சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தி எதிர்ப்புக்குப் போனவர்கள் தமிழுக்காகத்தான் போனார்கள். இந்தியை எதிர்ப்பதற்காக அல்ல.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்** : இந்தி எதிர்ப்பு என்பது, ஒருவருடைய ஆதிக்கம் மக்களுக்கு வேண்டாமென்று சொன்னதாகக் கேள்விப்பட்டிருக் கிறேன். ஆனால் அது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு எதிர்ப்பாக இருந்ததாக யாரும் இதுவரைக்கும் சொன்னதாக நான் கேள்விப்படவில்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** ; தமிழ் மொழி வளர்ச்சி என்பதல்ல, தமிழே அழிந்துவிடுமென்ற நிலை உருவாகும் என்பதால்தான் அந்தப் போர்க் கொடியை எழுப்பினோம். இந்தி எதிர்ப்பு அல்ல. இங்கே சில பள்ளிக் கூடங்களில் இந்தியைக்கூட சொல்லித் தந்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்** ; கல் தோன்றா, மண் தோன்றா காலத்திற்கு மூத்தைய தமிழ் ; ஆரியம் புகுந்து அழியாத தமிழ் எப்படி அழிந்து போய்விடும் என்ற அச்சம் வந்ததோ, தெரியவில்லை எனக்கு.





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : ஆரியம் புகுந்து அழியவில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? ஆரியம் புகுந்ததால் அழிந்த நிலையைத் தான் தெலுங்கு, மலையாளம், கன்னடம் எல்லாம் காட்டிக் கொண்டிருக் கின்றன.

**திரு. ஆர். டி. சீத்தாபதி** : துணைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் அவர்களுக்கும் அந்தத் தொகையினை வழங்க வேண்டு மென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்போது, உச்ச நீதி மன்றத்தில் இதுகுறித்து ஒரு வழக்கு தொடரப்பட்டு, நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். இருந்தாலும், எந்த வகையிலாவது அவர்களுக்கும் இந்த உதவித் தொகையைத் தர வேண்டுமென்று நான் அரசை மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மொழி பெயர்ப்புத் துறையில் ஏறத்தாழ எல்லாக் காரியங் களையும் செய்து வருவதாக பக்கம் 72-ல் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தொலைபேசி எண்களை அச்சிட்டுத் தந்துள்ள புத்தகம் ஆங்கிலத்திலே இருக்கிறது என்பதைத் தெரிவித்து, அதைத் தமிழிலே அச்சிட்டுத் தர வேண்டுமென்று தங்கள் மூலமாக, அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 13 சுயாட்சிக் கல்லூரிகளை ஆரம்பித்திருக்கிறார்கள். இன்றைய தினம் தனியார் கல்லூரிகள் எப்படி இருக்கின்றன என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். துணைத் தலைவரவர்களே, டான் பாஸ்கோ, குட் ஷெப்பர்ட், சர்ச் பார்க் போன்ற கல்வி நிறுவனங்கள் எல்லாம் எப்படி நடைபெறுகின்றன என்பதை ஒரு கணம் இந்த அவையின் முன்னாலே கொண்டுவர விரும்புகிறேன். அங்கே நம்முடைய பிள்ளைகளைச் சேர்க்க வேண்டுமென்றால், பெற்றோர்களுக்கு என்ன கல்வித் தகுதி இருக்கிறது, ஐ.ஏ.எஸ். அதிகாரியா, எம்.ஏ., பி.ஏ. பட்டதாரியா அல்லது இன்கம்-டாக்ஸ் அசெசியா, கார் வைத்திருக்கிறார்களா என்ற கேள்விகளை எல்லாம் இந்த மூன்று நிறுவனங்களிலும் கேட்பதாகவும், அவர்களுடைய பார்ம்களிலே அவைகள் இருக்கின்றன என்றும் சொல்லுகிறார்கள். "நீங்கள் ஏன் உங்களுடைய குழந்தைகளை அங்கே அழைத்துச் சென்றீர்கள், சர்க்காருடைய கல்வி நிறுவனங்களிலே சேர்க்கலாமே" என்று கல்வி அமைச்சர் அவர்கள் பதிலளிக்கக்கூடும். என்னுடைய பிள்ளைகளை அங்கே அனுப்பும் அளவுக்கு நான் உயர்ந்தவனும் அல்ல. காரணம், அந்த அளவுக்கு எனக்கு வசதியும் இல்லை. உழைத்து, பணத்தை சம்பாதித்துள்ள சிலர் தங்கள் குழந்தைகளை அங்கே சேர்க்க வேண்டுமென்றால், அதாவது வியாபாரிகள், தொழிற்சாலை

வைத்திருப்பவர்கள் சென்றால், பி.ஏ. படித்திருக்கிறாயா என்று அவர்களைப் பார்த்துக் கேட்டால், எப்படி அவர்கள் தங்களுடைய குழந்தைகளை அங்கே சேர்க்க முடியும்? இந்த நேரத்தில் ஒன்று எனக்கு நினைவு வருகிறது. நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் 'நாடோடி மன்னன்' படத்தில் ஒரு கருத்தைச் சொல்லுவார்கள். நான் சினிமா என்று சொன்னதாலே, அது எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு எப்படி இருக்குமோ தெரியாது. அந்தக் கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** துணைத் தலைவர் அவர்களிடத்தில் கொடுத்து, சரி என்று சொன்னவுடன், பேசினால் நல்லது என்று கருதுகிறேன்.

(பிற்பகல் 1-15)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் சினிமாவுக்கு விரோதியாக எனக்குத் தெரியவில்லை.

**திரு. ஆர். டி. சித்தாபதி :** நாடோடி மன்னனில் அறிவிக்கும்பொழுது எல்லோரும் கல்வி கற்க வேண்டுமென்று அறிவிக்கிறார்கள். தங்களுடைய பிள்ளைகளை கல்விச் சாலைகளில் சேர்க்காத பெற்றோர்களை சிறைச் சாலைக்கு அனுப்ப வேண்டுமென்று சட்டத்தைப் போடுகிறார்கள். அப்படிச் சொல்கிறபோது—இங்கே சில மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது அவசரமாக எழுந்து கேள்வி கேட்பார்களே அது போல்—ஒரு அமைச்சர் எழுந்து, "வசதியில்லாத பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கல்விச் சாலைகளுக்கு அனுப்பாவிட்டால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்கிறார். அப்படிக் கேட்கும்போது இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் படத்தில் மன்னனாக இருந்து பதிலளிக்கும் போது, "அந்தப் படிப்புக்கு ஆகின்ற செலவை எல்லாம் நானே அதாவது சர்க்காரே ஏற்றுக்கொள்ளும்" என்று சொன்னார்கள். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இலவசமாகச் சாப்பாடு 10-வது வகுப்பு வரை போடுகிறார்கள். மேலும் அவர்களுக்கு இலவசமாக சீருடை தருவது என்றும் திட்டமிட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அடிப்படை வசதிகளைச் செய்து தந்தால் தான், கல்வி முன்னேறும் என்ற அடிப்படையில் இதனைச் செய்திருக்கிறார்கள். இப்படி சீருடைக்காக துணிகளைத் தருகின்ற நோக்கில் கூட—மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே உங்கள் மூலமாக கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்—பேரறிஞர் அண்ணா வகுத்துத் தந்த கொள்கையின்





அடிப்படையில், கைத்தறி ஆடைகளை பிள்ளைகளுக்கு அளிக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சர்க்கார் தரப்பிலிருந்துகூட இன்னொரு விதமாகச் சொல்லலாம். கைத்தறி ஆடைகளை வாங்கினால் செலவு அதிகமாகும், ஆகவே மில் துணிகளை வாங்கலாம் என்று அதிகாரிகள் ஆலோசனை சொன்னால், அதைக் கேட்காமல் பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த கொள்கையின் அடிப்படையில், கைத்தறித் துணிகளை வாங்கி மாணவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எப்போது அரசாங்கம் ஒரு கல்வி நிர்வாகத்தை நடத்துவதற்கு அனுமதி தருகிறதோ அப்போதே அந்தக் கல்வி நிர்வாகத்தைக் கட்டுப் படுத்துகின்ற உரிமையும் சர்க்காருக்கு இருக்க வேண்டும். தனியார் நிர்வாகம் ஏதாவது தவறு செய்தால், அதைத் தட்டிக் கேட்கின்ற உரிமை சர்க்காருக்கு இருக்க வேண்டும். அதற்குக் கட்டுப்படவில்லையென்றால், சர்க்காரே அந்த நிர்வாகத்தை ஏற்று நடத்த வழிவகை இருக்க வேண்டும். இன்றைக்கு பெரும்பான்மையான தனியார் நிர்வாகங்கள் தங்களை அரசு எதற்கும் காரணம் கேட்க முடியாது, ஒன்றும் செய்ய முடியாது என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். எல்லா அதிகாரிகளுடைய பிள்ளைகளும் அங்கே படிக்கிற காரணத்தால், இப்படிப்பட்ட எண்ணம் நான் குறிப்பிட்ட மூன்று பள்ளிகளுக்கும் இருந்துகொண்டிருக்கிறது. ஒருவேளை தேவைப்படும்போது சர்க்கார் அதிலே நாட்டம் செலுத்தாவிட்டால், எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடத்தில் சொல்லி அதற்கான போராட்டத்தை ஆரம்பிக்கக்கூட வலியுறுத்துவேன் என்பதை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், இன்றையதினம் மற்றொரு பிரச்சினையும் இருந்துகொண்டிருக்கிறது. சமீபத்தில் மத்திய கல்வி அமைச்சர் அவர்கள் "இங்கே மத்திய சர்க்காரின் சார்பில் 10 கல்லூரிகளை திறக்க இருக்கிறேன்" என்று அறிவித்ததாக பத்திரிகையில் பார்த்தேன். அப்படியானால் நான் ஒன்றை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. சுப்பு :** சமீபத்தில் மாவட்டத்திற்கு ஒரு பள்ளிவீதம் 100 பள்ளிகள் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது அதைத்தான் திரு. சித்தாபதி அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

**திரு. ஆர். டி. சித்தாபதி :** பத்து கல்லூரிகள் என்று தான் நான் நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாடல் ஸ்கூல்ஸ் என்ற பெயரில், மாதிரிப் பள்ளிகளை மாவட்டத்திற்கு ஒன்றிரண்டு வீதம் ஆரம்பிப்பதாகத் தான் பத்திரிகைகளில் செய்திகள் வந்தன.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** அப்படிப்பட்ட பள்ளிகளைப் பொறுத்தவரையில், நம்முடைய கல்வி அமைச்சரைக் கலந்துகொண்டு அந்தக் காரியத்தைச் செய்தார்களா ? இதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். காரணம் இந்த சர்க்காருக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லாமல் இப்படி போய்க் கொண்டிருப்பதாக நான் நினைக்கிறேன். மாநிலத்திற்கு அதிக அதிகாரம் தேவை என்ற அடிப்படையில் சர்க்காரியா கமிஷன் போடப்பட்டது. அதற்குப் பின்னால் மத்திய சர்க்கார் இந்தியைப் புகுத்துவதற்காகத்தான் இப்படிப்பட்ட ஒரு நிலைமையை உருவாக்குகிறார்களோ என்ற அச்சம்கூட தமிழக மக்கள் மத்தியில் உண்டாகிக்கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் அண்மையில்கூட மும்மொழித் திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தி புகுத்துவிடும் என்று அறிவித்த நேரத்தில், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒன்றை அறிவித்தார்கள். ஏறத்தாழ

(பிற்பகல் 1-20)

ஒரு மாதத்திற்கு முன்பு என்று கருதுகிறேன். இருமொழிக் கொள்கைதான் இந்தச் சர்க்காருடைய கொள்கை என்று திட்டவட்டமாக, தெளிவாக நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் இன்றையதினம் மத்திய சர்க்காரிலே இருக்கிறவர்கள்—இந்திய நாட்டினுடைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள்—ஒரு புதிய கொள்கையை நாட்டிலே அறிமுகப்படுத்தப் போகிறேன் என்று அறிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கொள்கை என்ன கொள்கை என்று நாம் பார்ப்போமானால் . . .

**திருமதி வி. ஜெயலட்சுமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் பேசும்போது, மத்திய அரசு முன்மாதிரி பள்ளிகளை ஆரம்பிக்கும்போது, அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்களா என்று கேட்டார்கள். முன்மாதிரி பள்ளிகளை ஆரம்பிக்கும் போது, அது மும்மொழிக் கொள்கையைக் கொண்டுவருவதற்கு, இந்தி ஆதிக்கத்திற்குத்தான் வழிகோலுகிறது என்று சொல்வதை நான் வன்மையாக எதிர்க்கிறேன். தமிழகத்திலே பிறந்த யாராவது ஒரு மாணவர் இந்தி படிக்க வேண்டும் என்று விரும்பினால், அது அவருக்கு மறுக்கப்பட வேண்டுமா ? இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு குடிமகனுக்கும் தான் விரும்பிய மொழியைப் படிப்பதற்கு உரிமை இருக்கிறது. இது அவருடைய அடிப்படை





உரிமை, (ஃபண்டமெண்டல் ரைட்) எதற்கெடுத்தாலும் அரசு அவர்களுடைய வழியிலே குறுக்கிட்டு, அவர்கள் இந்தி மொழியைக் கற்கவிட மாட்டோம் என்று சொல்வது சரியல்ல. இந்தி மொழியைக் கற்க பிரியப்படாதவர்கள் இருந்துவிடலாம். ஆனால் ஒரு மாணவன் தானாகவே முன்வந்து வாலண்டரியாக இந்தி கற்க விரும்பினால், அவனுக்குப் பயிற்சி கொடுப்பது தவறா, இல்லை, அது நமது கல்விமுறைக்கு முரணானதா என்பதைத்தான் தமிழகத்தின் மாணவர்கள் சார்பில் அறிந்து கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தி வருகிறதா இல்லையா என்று அம்மையார் அவர்கள் கேட்டார்கள். மிக்க நன்றி. நான் கையிலே வைத்திருக்கிறேன். காரணம் தமிழ்நாட்டில் நாம் இருக்கிறோம். ஆனால் இங்கு இருக்கின்ற தந்தி அடிக்கின்ற பாரங்கள் எந்த மொழிகளில் இருக்கின்றன ? இந்த நேரத்திலே தங்கள் மூலமாக இந்தப் பாரங்களைப்பற்றி அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதிலே இந்தியும் ஆங்கிலமும் மட்டும்தான் இருக்கின்றன. மும்மொழிக் கொள்கை என்று மத்திய சர்க்கார் வாதிடுமானால், இந்த மாநிலத்தில் தமிழில் அடிக்கலாமே என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தி என்பது இந்தியாவில் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழி. ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்று நாம் விரும்பிக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அதுவும் அனுமதிக்கப்பட்ட மொழி. அதிலே ஒன்றும் தவறு இல்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் மத்திய அரசாங்க அலுவலகங்களில் இந்த இரு மொழிகளும் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மும்மொழிக் கொள்கை என்று வைத்துக்கொண்டு, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையாகிலும் இதுபோன்ற மணியார்டர் பாரங்கள், தந்தி பாரங்கள், வங்கி பாரங்களில் நம்முடைய தமிழ் மொழியையும் ஏன் அச்சடிப்பதற்கு வலியுறுத்தக்கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி.

**திருமதி வி. ஜெயலட்சுமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாம் மும்மொழித் திட்டத்திற்கு இங்கே எதிர்ப்பு தெரிவிப்போமானால் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இப்போது டில்லியிலே நம்முடைய தமிழ்

நாட்டிலே இருந்து சென்றவர்கள் ஐந்து இடங்களிலே பள்ளிகளை வைத்து. நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் சென்னையிலே இருந்து சென்றிருக்கின்ற தமிழர்கள் அனைவரும் தங்களுக்கு வேண்டிய கல்வித் திட்டங்களை தங்களுடைய ஸ்தாபனங்களின் மூலமாக அளித்துக் கொண்டு வருகிறார்கள். இங்கே முழுமையாக ஒட்டுமொத்தமாக நாங்கள் இந்தியை வரவே விடமாட்டோம் என்று சொன்னால், இதே நிலைமை அடுத்த மாநிலங்களிலும் வரும்போது நம்முடைய நிலைமை என்னவாகும்? அங்கே யுள்ள நம்முடைய தமிழர்களுடைய நிலைமை என்னவாகும்? அவர்களுடைய குழந்தைகளுக்கு எந்தவிதமான கல்வி அளிக்கப்படும் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எதிர்கால நன்மையை முன்னிட்டுப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதைக் குறுகிய மொழி வெறி என்று சொல்ல மாட்டேன். ஆனால் மொழிப்பற்று மொழி வெறியாக மாறி விடக்கூடாது என்ற அனுபவத்தில்தான் நான் இதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே மொழிப் பிரச்சினை என்பது வெறும் கல்விப் பிரச்சினை அல்ல. பயிற்சி மொழிப் பிரச்சினை அல்ல. இது ஒரு அரசியல் பிரச்சினை. இதை ஒரு அரசியல் பிரச்சினையாகக் கருதிப் பார்க்கிறபோதுதான், நாம் பேசுகிற பேச்சுக்கள் மற்றவர்களுக்குப் புரிய முடியும். ஆகவே அந்த அடிப்படையில்தான் தற்போது எதிர்ப்பு வருகிறதே தவிர, வெறும் மொழியாகக் கருதி அல்ல. ரஷ்ய மொழி படிக்கிறார்கள், ஜெர்மன் மொழி படிக்கிறார்கள். எந்த எந்த மொழியோ படிக்கிறார்கள். அந்த மொழிகள் படிப்பதுபோல அல்ல, இந்தி மொழி படிக்கச் சொல்வதென்பது. இந்தி மொழியை ஒரு பொலிடிகல் ரீசனுக்காக, அரசியல் காரணத்திற்காகப் படிக்கச் சொல்கிறார்கள். ஆகவே அதேமாதிரி அரசியல் காரணத்திற்காகத்தான் தமிழ்நாடு அரசும் இந்தியை எதிர்க்கிறது.

(பிற்பகல் 1-25)

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவது, இக் கையிலே இருக்கிற ஒரு ரூபாய் கரன்சி நோட்டு கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இதை சிரமப்பட்டு வாங்கினேன். ஆனால் இதிலே 14 மொழிகளும் இருக்கின்றன. அப்படி இருக்கிற காரணத்தாலே, மும்மொழித் திட்டக் கொள்கை என்று வருகிற நேரத்தில் நமது கல்வி அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்க





வேண்டியது, இங்கு இருக்கின்ற மத்திய சர்க்காரின் எல்லா அலுவலகங் களிலும் மும்மொழிக் கொள்கைத் திட்டத்தில் தமிழுக்கு முதலிடம் தர வேண்டும். அதற்குப் பின்னாலே இந்தி என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது மட்டுமல்ல, இந்தி தெரியாது, ஆங்கிலம் தெரியாது. தமிழ்தான் தெரியும். இது அந்த அலுவலகங்களில் வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் தமிழ் மக்களுடைய கோரிக்கை.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** துணைத் தலைவர் அவர்களே, தமிழிலே மணியார்டர் பார்ம் வேண்டுமென்று கோரிக்கை வைத்து, போராட்டம் நடத்தி தமிழிலே மணியார்டர் பார்ம் இப்பொழுது இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மணியார்டர் பார்ம் வந்து விட்டது. உறுப்பினரவர்கள் இப்போது தந்தி பார்ம் தமிழிலே வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர் அடிக்கடி தந்தி அடிக்க வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கேட்டால் கொடுக்கப்படும் என்று காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் சொல்கிறார்கள். அந்தக் கேட்கிற பணியையும் அவர்களே தமிழ்நாட்டின் சார்பிலே எடுத்துக் கொள்ளலாமென்றுதான் நாங்கள் தெரிவிக்கிறோம்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மொழி விஷயத்தில் ஒரு குழப்பத்தை உண்டாக்கிக் கொண்டிருப்பதை நான் உணருகிறேன். ஏனென்று சொன்னால் இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படக் கூடாது என்பதுதான் தமிழ்நாட்டின் கடந்த கால இந்தி எதிர்ப்பு வரலாறு என்பதை நான் உணருகிறேன். ஆனால் இந்தியா பூராவும் என்று சொல்வது என்பது அரசியல் சாஸனத்திற்கு முரணானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தி என்பது ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தி கட்டாயமாக யார் மீதும் திணிக்கப்படக் கூடாது என்பதுதான் நம்முடைய வாதம். அதைத்தான் நாம் வலியுறுத்தி பல காலமாகச் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறோம். கட்சிப் பாகுபாடின்றி சொல்கிறோம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தியைக் கட்டாயமாக்கக் கூடாது என்பதைத்தான் இப்போது நாங்கள் சொல்கிறோம். ஆனால் நுழைப்பதைப் பார்க்கிறபோது, கட்டாயம் இல்லையென்று சொல்லிக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக கட்டாயமாக

ஆக்கிக் கொண்டிருக்கக் கூடிய நிலைமைகள் உருவாவதைத்தான் பார்க்கிறோம். இந்தியே கூடாது என்று சொன்னால் எங்கள் எதிர்ப்பு தமிழ் நாட்டோடு நிற்காது, அது உத்திரப் பிரதேசத்திற்கும் போகும்.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே பல சி.பி.எஸ். பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அங்கே மும்மொழித் திட்டத்தை பிள்ளைகள் விரும்பிப் படிக்கின்றார்கள். பெற்றோர்களும் பிள்ளைகள் இந்தியைப் படிக்க வேண்டுமென்று விரும்புகின்ற போது, அதை இங்கு யாரும் படிக்கக்கூடாது என்று கட்டாயப்படுத்துவதாகத் தெரியவில்லை. இன்றைக்குப் பல பள்ளிகளில் அது நடக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது நாங்கள் யாரும் அதைத் தடுக்கவில்லை.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** நான் கூறவந்த கருத்து இரு மொழிக் கொள்கை இந்த அரசினுடைய கொள்கை. மத்திய சர்க்காருடைய கொள்கை மும்மொழிக் கொள்கை. இந்த மும்மொழிக் கொள்கையிலேதான் தமிழ் நாட்டில் வாழுகின்ற தமிழர்களுக்கு இங்கே ஆங்கிலமும் தெரியாது, இந்தியும் தெரியாது, தமிழ் மட்டும்தான் தெரியும் என்றால், மத்திய சர்க்கார் அலுவலர்களாகப் போகிற நேரத்தில் ஆங்கிலமும், இந்தியும் இருந்தால் மட்டும் அவர்கள் தங்களுடைய கடமையை ஒழுங்காகச் செய்ய முடியாத காரணத்தாலேதான் இந்த அளவுக்கு இந்தக் கருத்தை நான் எடுத்து வைத்தேனேயல்லாமல் வேறு எந்தக் காரணமும் இல்லை. இங்கு அம்மையார் அவர்கள் எல்லா மாநிலங்களிலும் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நானும் பல்வேறு மாநிலங் களுக்குச் சென்று வந்திருக்கிறேன். எங்கு பார்த்தாலும் தங்களுடைய தாய் மொழியோடு நின்றிருக்கிறார்கள். இந்தி படித்துவிட்டால் ஐ.ஏ.எஸ். ஆக ஆகிவிடலாம். ஆனால் இங்கே இரண்டு மொழிகளும் கற்று, மூன்றாவது மொழியிலும் தேறுவது என்பதுதான் எங்களுக்கு இருக்கின்ற சிரமம். அந்தச் சிரமத்தினுடைய அடிப்படையிலேதான் நீங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டேனே தவிர வேறு அல்ல என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக நான் முடிப்பதற்கு முன்னால் நான் ஒன்றைக் கல்வி அமைச்சர் அவர்களை மெத்த பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புவது, மத்திய சர்க்காரிலிருந்து வந்த எந்த அறிவிப்புகளானாலும் சரி, அந்த அறிவிப்பு கொள்கை ரீதியாக வருகிற நேரத்தில் மாநில சர்க்காரைக் கலந்து அறிவித்தால் நலமாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக நேரு கால்பந்து போட்டி ஆட்டம் நம்முடைய



சென்னையிலேதான் நடைபெறும் என்று முதலமைச்சர் அவர்களே அறிவித்தார்கள். இன்றையதினம் அந்தக் கால்பந்து போட்டியினுடைய நேரு கோப்பையின் நிலை எங்கு இருக்கிறது என்று சொன்னால், அது வெளி மாநிலங்களுக்குப் போகின்ற அளவுக்கு இருந்துகொண்டிருக்கிறது. அதை நம்முடைய சர்க்கார் இங்கே நடத்துவதற்கான வழி வகைகளையும் காண வேண்டுமென்று நான் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இறுதியாக நான் பேசி முடிப்பதற்கு முன்னால் நம்மை யெல்லாம் ஆளாக்கிய அறிஞர் அண்ணா அவர்கள் எந்த அளவுக்கு மத்திய சர்க்காருடைய மும்மொழிக் கொள்கையினாலே நாம் போகிறோம் என்ற ஒரு அச்சத்தை 1963 ஆம் ஆண்டு அதாவது 7—12—1963-ல் நீதிமன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் வாக்குமூலமாகக் கொடுத்தார்கள்.

(பிற்பகல் 1-30)

அந்த வாக்குமூலத்தை இந்த அவையில் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

" இந்தி . . . யா ? இந்தியா . . . வா ?"

இந்தி ஆட்சி மொழி ஆக்கப்படுவது பல பெரியவர்கள் தெரிவித்ததுபோல் அநீதியானது. இந்தி பேசாத மக்கள் வாழும் பகுதியை அவமதிப்புக்கு உள்ளாக்குவது—அதிலும் ஈராயிரம் ஆண்டுகளாக ஓர் உயர்தனிச் செம்மொழிக்கு உரியவர்கள் வாழும் தமிழ்நாட்டுக்குப் பெரிய அவமதிப்பு— என்று நாங்கள் மனதார நம்புகிறோம்.

மொழிகளிலே எம்மொழி, மற்ற எந்த மொழியைவிடச் சிறப்புடையது என்று ஒப்பிட்டு உண்மை உணர்வது ஒரு புறமிருக்க, ஒரு பகுதி மக்களுக்கு மட்டுமே தாய்மொழியாக உள்ள ஒரு மொழியை இந்தியாவின் எல்லாப் பகுதி மக்களுக்கும் சேர்த்து, ஒரே ஆட்சி மொழியாக ஆக்கிவிடுவது, கொடுங்கோன்மை என்றும், அதன் விளைவாக இந்தியாவின் ஒரு பகுதிக்கு நிரந்தரமான சலுகையும் உயர்வும் ஏற்பட்டு, மற்ற பகுதிகள் இருட்டறையில் தள்ளப்பட்டுவிடும் என்றும் நாங்கள் திடமாக எண்ணுகிறோம். முழு வளர்ச்சி பெறாததும் மற்ற தேசிய மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தனிச் சலுகை பெறுவதற்கு எந்தவிதத் தகுதியும் பெற்றிராததுமாகிய இந்தியை ஆட்சிமொழியாக்குவது தமிழகத்தின் தொன்மை வாய்ந்த மொழி, பண்பாடு, ஆகியவற்றைப் பாழ்படுத்திவிடும். சான்றோர் பலரும் இதனைத் தான் இந்தி மொழி ஏகாதிபத்தியம் என்று இடித்துரைத்துள்ளனர்.

. . . நாட்டு மக்கள் அனைவரும் சமமாக நடத்தப்படுவார்கள். நாட்டின் ஒரு பகுதி பிற பகுதியின்மீது ஆதிக்கம் செலுத்தாது என்பதைச் சொல்லளவிலே மட்டுமல்ல, செயல் வடிவிலேயும் மெய்ப்பித்துக் காட்டுவதன் மூலமாகத்தான் தேசிய கௌரவம் நிலை நாட்டப்பட முடியும் . . .

. . . அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவு, நடைமுறையாக்கப்பட்டு விடுமேயானால்—நான் நிச்சயமாக நம்புகிறேன்—தேசத்தின் ஒரு பகுதி, தாழ்நிலைக்குத் தள்ளப்பட்டு, மதிப்பிழக்கும். ஒரு பகுதி மதிப்பிழப்பதன் காரணமாக, தேசிய அவமதிப்பு ஏற்பட்டுவிடுகிறது. இந்தியை ஆட்சி மொழி ஆக்கும் விஷயத்தில் தவறான போக்கை மேற்கொள்வதன் மூலம் இந்தி பேசாத மக்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்கி, அதன் மூலம் தேசிய அவமதிப்பைத் தேடுகிறார்கள் என்பதை இந்தி மொழி விஷயத்தில் பிடிவாதப் போக்கு காட்டும் . . .

என்று இந்தி மொழி காரணமாக நாமெல்லாம் இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கப்படும் நிலையை, அன்றைக்கே பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைவு படுத்தியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் . . .

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்கள் மும்மொழிக் கொள்கைத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஒரு அறிக்கை அளித்ததாகவோ அல்லது நீதிமன்றத்தில் சொன்னதாகவோ மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே படித்துக் காட்டினார்கள். 1957-லிருந்து 1962 வரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்றக் கட்சித் தலைவராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் அப்போது மும்மொழித் திட்டத்தை ஏற்றுக்கொண்டு அப்போது கல்வி யமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்களோடு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, அந்த ஒப்பந்தம் குறித்து திராவிடர் கழகத் தலைவர் பெரியார் அவர்கள் அறிக்கை விட்டது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** நான் அதை அறிந்தவன் என்பது மட்டுமல்ல, அப்போதே கட்சியில் இருந்தவன். எனக்கு நிச்சயமாக அப்போது நடந்தது. தெரியும். காரணம் பேரறிஞர் அண்ணா அவர்களே கூட இப்படிப்பட்ட பிரச்சினையைக் குறித்து சட்டமன்றத்திலும் சரி வெளியேயும் சரி, தான் அதில் கையொப்பமிடவில்லை என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் பொதுக்கூட்டத்தின் வாயிலாகவும் இதை அறிவித்ததை திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அதுதான் இப்போதும் எங்களுடைய நிலை. இவ்வளவையும் நான் இங்கே எடுத்துக் கூறுவதற்குக் காரணம் எதுவாக இருந்தாலும் சரி. மாநில அரசைக் கேட்டு, கல்வி அமைச்சரைக் கலந்து அல்லது முதலமைச்சரைக் கலந்து மத்திய அரசு அறிவிக்க வேண்டுமே தவிர, தானாகவே எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளக் கூடாது. எனவே





அதுதான் நாட்டுக்கு நல்ல பயனைத் தரும் என்று கூறி, என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 11—6—1985 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-34)

## 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

211. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான கணக்குகளும், தணிக்கை அறிக்கையும். [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24 (3) பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

212. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான பதினான்காம் அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

213. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாம் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

*82. கோரிக்கை எண் 3—சட்டங்கள்-நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

*83. தமிழ்நாட்டில் 1984-85 ஆம் ஆண்டிற்கான சாலை மேம்பாட்டு திட்டங்கள் பற்றிய ஆய்வும் 1985-86 ஆம் ஆண்டிற்கான திட்டங்களும் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

*84. நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து குறித்த சாதனை பற்றிய ஆய்வுரை, 1985-86. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

*85. 1985-86 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு துறைமுகத் துறை பற்றிய சாதனை விளக்க அறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

---

* 7—6—1985 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டன.

[1985 ஜூன் 10

## இணைப்பு I

(65 ஆம் பக்கத்தில் இனம் 2-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

கரும்பு விவசாயிகளுக்கு 1983-84-ம் வருடம் தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகளுக்கு அரவைக்கு விநியோகம் செய்யப்பட்ட பதிவு கரும்புக்கு மான்ய தொகையாக டன் ஒன்றுக்கு ரூ. 20 விதம் ரூ. 9.09 கோடி வழங்க அரசு ஆணை பிறப்பித்தது. இதில் 31—3—1985 முடிய ரூபாய் நான்கு கோடியை அரசு விடுவித்துள்ளது. இந்த மான்யத் தொகையில் ரூ. 2 கோடி சர்க்கரைத் துறை இயக்குநரால் அனைத்து சர்க்கரை ஆலைகள் மூலமாக கரும்பு விவசாயிகளுக்கு ஏற்கனவே பட்டுவாடா செய்யப்பட்டு விட்டது. மேலும் இரண்டு கோடி ரூபாய் சர்க்கரை ஆலைகள் மூலம் மான்யத் தொகையாக வழங்க காசோலைகள் அனுப்பப்பட்டு விட்டன.

## இணைப்பு II

(67 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### தோற்றுவாய்.

**கல்விச் செலவும் மாநில வரவு செலவுத் திட்டமும்.**

**கல்விக்காக 1985—86 ஆம் ஆண்டில் "மானியக் கோரிக்கை 17—கல்வி" இன் கீழ் ஒதுக்கியுள்ள ரூ. 468 கோடி அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 2,315 கோடியில் 20 விழுக்காட்டுக்கும் அதிகமாகும்.**

**2. கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1985—86 வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :—**

| | 1985–86 வரவு செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்டமல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | ((ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 259. அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றின் கட்டட பராமரிப்புச் செலவு. | 75 | .. | 75 |
| 265. பிற நிருவாகப் பணிகள் — மாவட்ட விவரச் சுவடிகள். | 3 | .. | 3 |



1985 ஜூன் 10]

| | 1985-86 வரவு-செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்டமல்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 277. கல்வி— | | | |
| 1. தொடக்கக் கல்வி .. | 1,97,82 | 32,94 | 2,30,76 |
| 2. உயர்நிலைப் பள்ளிக் கல்வி. | 1,19,35 | 1,34 | 1,20,69 |
| 3. மேல்நிலைப் பள்ளிக் கல்வி. | 31,62 | 1,53 | 33,15 |
| 4. கல்லூரிக் கல்வி .. | 40,53 | 5,53 | 46,06 |
| 5. சிறப்புக் கல்வி—வயது வந்தோர் கல்வி, தமிழ் வளர்ச்சி முதலியவை. | 1,74 | 3,21 | 4,95 |
| 6. விளையாட்டும், இளைஞர் நலனும் மற்றும் தேசிய மாணவர் படை. | 2,90 | 1,74 | 4,64 |
| 7. தொழில் நுட்பக் கல்வி | 13,62 | 3,45 | 17,07 |
| மொத்தம் .. | 4,07,58 | 49,74 | 4,57,32 |
| 278. கலை, பண்பாடு.— | | | |
| நூலகங்கள், | 4,82 | 20 | 5,02 |
| ஆவணக் காப்பகங்கள். | 31 | 11 | 42 |
| நுண்கலைக் கல்வி .. | 46 | 13 | 59 |
| கலை, பண்பாடு ஆகியவற்றின் மேம்பாடு. | 10 | 67 | 77 |
| தொல்பொருள் ஆராய்ச்சி | 19 | 17 | 36 |
| அருங்காட்சியகங்கள் .. | 24 | 7 | 31 |
| மொத்தம் .. | 6,12 | 1,35 | 7,47 |
| 279. ஏனைய அறிவியல் பணிகள்,— | .. | 2,27 | 2,27 |
| 288. சமூகப் பாதுகாப்பும் நலனும். | 16 | .. | 16 |
| மொத்தம்—மானியக் கோரிக்கை '17-கல்வி'. | 4,14,64 | 53,36 | 4,68,00 |

துறை வாரியாக நிதி ஒதுக்கீடு விவரம் வருமாறு;—

| (1) | 1985–86 வரவு-செலவு மதிப்பீடு. திட்ட மல்லாத செலவினம். (2) | திட்டச் செலவினம். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| கல்வித் துறை .. | 4,13,30 | 49,98 | 4,63,28 |
| மின்னணுவியல், அறிவியல், மற்றும் தொழில் நுட்பவியல் துறை. | .. | 2,29 | 2,29 |
| தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறை. .. | 1,34 | 1,09 | 2,43 |
| மொத்தம் .. | 4,14,64 | 53,36 | 4,68,00 |

3. மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர, பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள், கடன்கள், முதலியவற்றிற்காக பிற மானியக் கோரிக்கைகளின் கீழ் 1985–86 இல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—

| (1) | 1985–86 வரவு-செலவு மதிப்பீடு. திட்ட மல்லாத செலவினம். (2) | திட்டச் செலவினம். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| (அ) வருவாய்க் கணக்கில் செலவு.— | | | |
| மானியக் கோரிக்கை 28, சமுதாய வளர்ச்சிப் பணிகள்—ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியைகளுக்கு வீடுகள். | .. | 20 | 20 |
| சமூகக் கல்வி .. | .. | 9 | 9 |
| நகராட்சிப் பள்ளிக் கட்டிடங்களுக்கான மானியம். | .. | 30 | 30 |
| கோரிக்கை—37. பொதுப் பணி—அரசுப் பள்ளி. கல்லூரிக் கட்டடங்கள். சிறு பணிகள். | 8 | 1,44 | 1,52 |
| 266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஒய்வூதியம். | 16,31 | .. | 16,31 |
| 309. உணவு .. .. | 36,02 | 53,33 | 89,35 |
| (ஆ) வருவாய்க் கணக்கின் கீழ்வராத செலவு.— | | | |
| 477. கல்வி, கலைகள், பண்பாடு, ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு—அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றிற்கான கட்டடங்கள். | 8 | 4,93 | 5,01 |
| 677. கடன்கள்— | | | |
| தேசிய கடன், படிப்பு உதவித் தொகைகள் | .. | 32 | 32 |
| தொழில் நுட்பக் கல்வி நிலையங்களுக்குக் கடன். | .. | 4 | 4 |
| தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன். | 6 | .. | 6 |
| 767. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கடன்கள். | 4,17 | .. | 4,17 |
| மொத்தம் .. | 56,72 | 60,65 | [illegible]7.37 |



மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1985-86 ஆம் ஆண்டில் கல்விக்காகச் செலவிட இருக்கும் தொகை ரூ. 585 கோடியாகும்.

4. இவ்விடத்தில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது பின் வருவதாகும்—அதாவது ஆதி திராவிடர் மற்றும் பின் தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், ஆதி திராவிடர், பழங்குடி வகுப்பினர், பின் தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவு, சீர்திருத்தப் பள்ளிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள், ஊனமுற்றோருக்கான பள்ளிகள் போன்றவற்றிற்காக ஆகும் செலவு;

மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகிய வகைக் கல்விகளுக்கு ஆகும் செலவு, ஆகிய செலவினங்கள் கல்விச் செலவு பற்றிய மேற்கண்ட புள்ளி விவரங்கள் எவற்றிலும் சேரவில்லை.

5. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277. கல்வி ; 477 கல்விப் பணி குறித்த கட்டடச் செலவு ; 677. கடன் முதலியன.) கல்விக்காக 1985-86 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளில் செலவு விவரம் வருமாறு—(" + " குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினை குறிக்கும்.)

| | பொறுப் பேற்ற செலவினம். | 1985–86-ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சங்களில்.) | | |
| I. பொதுக்கல்வி— | | | |
| 1. பள்ளிக் கல்வி (மேல் நிலைப் பள்ளிக் கல்வி உள்பட). | 12,34<br>+5 | 26,72 | 39,06<br>+5 |
| 2. வயது வந்தோர் கல்வி | 1,38<br>+1,63 | 10 | 1,48<br>+1,63 |
| 3. கல்லூரிக் கல்வி .. | 5,60<br>+32 | 49<br>+33 | 6,09<br>+32 |
| 4. விளையாட்டு இளைஞர் நலன். | 1,18<br>+92 | 6 | 1,24<br>+92 |
| 5. தமிழ் வளர்ச்சி .. | 6 | .. | 6 |
| 6. கட்டட வகையில் பொதுப் பணித் துறைச் செலவு. | 45 | | 45 |
| | 21,01<br>+2,92 | 27,37 | 48,38<br>+2,92 |
| II. (அ) தொழில் நுட்பக் கல்வி. | 5,32<br>+10 | 22 | 5,54<br>+10 |
| (ஆ) அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல். | 9 | 2,20 | 2,29 |
| III. கலைப் பணிகள்— | | | |
| கல்வித் துறை | 27 | 2 | 29 |
| தமிழ் வளர்ச்சித் துறை | 98 | 16 | 1,14 |
| | 27,67<br>+3,02 | 29,97 | 57,64<br>+3,02 |



## II பள்ளிக் கல்வி.

### (i) பொது.

1985-86 ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூ. 468 கோடியில் பெரும பகுதியான ரூ. 384 கோடி பள்ளிக் கல்விக்கே (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. 36-9-1984 அன்றைய நிலவரப்படி தமிழ் நாட்டில் இருந்த பள்ளிகள் பற்றிய விவரங்கள் வருமாறு ;—

| | பள்ளிகளின் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. | மாணவ மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (இலட்சத்தில்) |
| தொடக்க நிலைப்பள்ளிகள் (1–5 வகுப்புகள்). | 28,847 | 1.16 | 48.92 |
| நடுநிலைப் பள்ளிகள் (1–8 அல்லது 6–8 வகுப்புகள்). | 5,691 | 0.67 | 28.27 |
| | 34,538 | 1.83 | 77.19 |
| உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகள் (பொதுவாக 6–10/6–12 வகுப்புகள்). | 3,950 | 1.01 | 28.27 |
| மொத்தம் .. | 38,488 | 2.84 | 105.46 |

வகுப்புத் தொகுதி வாரியாக மாணவ மாணவியர் எண்ணிக்கை வருமாறு :—

| வகுப்புகள். | | மாணவ மாணவியர். (இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1—5 | .. | 70.44 |
| 6—8 | .. | 23.19 |
| 9—10 | .. | 8.52 |
| 11—12 | .. | 3.31 |
| | | 105.46 |

நிருவாக வாரியாக பள்ளிகளின் விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

2. 1985-86 ஆம் ஆண்டில் பள்ளிகளுக்கு பின்வரும் ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்படவிருக்கின்றன :—

| | |
|---|---|
| இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பணியிடங்கள் | 500 |
| நடுநிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் உடற் பயிற்சி ஆசிரியர் பணியிடங்கள். | 50 |
| நடுநிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் தமிழாசிரியர் பணியிடங்கள். | 75 |
| உயர்நிலைப் பள்ளிகளுக்கு பி.எட். தர ஆசிரியர் பணியிடங்கள். | 150 |
| நடுநிலைப் பள்ளிகளில் (ஏற்கெனவே உள்ள பகுதி நேரக் கைத் தொழில் ஆசிரியர் பணியிடங்களை உயர்த்தி) முழு நேரப் பணியிடங்கள். | 50 |
| | 825 |

பள்ளிச்சீரமைப்பு மாநாடுகள் :

3. பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்த உள்ளூர் மக்களின் நன்கொடையையும் ஒத்துழைப்பையும் பெறும் நோக்குடன் தொடங்கி நடத்தப்பெறும் பள்ளிச்சீரமைப்பு மாநாடுகள் தொடக்க காலம் முதல் 1984 முடிய மொத்தம் 740-ஐ பள்ளிக் கல்வித் துறை நடத்தியுள்ளது. அவற்றில் கடந்த ஐந்து ஆண்டுகளில் நடந்த 165 மாநாடுகளில் பெற்ற நன்கொடையின் மதிப்பு ரூ. 139 இலட்சமாகும்.

(ii) தொடக்கக் கல்வி.

வரவு-செலவு மதிப்பீட்டில் நிதி ஒதுக்கத்தில் முதன்மையான இடத்தைத் தொடக்கக் கல்வி பெறுகிறது. 1984-85-ல் புதிதாக 355 தொடக்கப் பள்ளிகள் (தொடக்க நிலைப் பள்ளிகள் 299-ம் நடுநிலைப் பள்ளிகள் 56-ம்) தொடங்கப்பட்டுள்ளன. பள்ளி வயதுச் சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை



விரிவாக்குதல் புதிய அம்ச திட்டத்தில் 16 ஆவது அம்சம் ஆகும். இந்த அம்சத்தின் கீழ் தமிழ்நாட்டின் சாதனை பெருமை தரக்கூடியதாக இருக்கிறது என்பதைப் பின்வரும் விவரங்கள் காட்டும் :—

| | வயதுத் தொகுதி 6–11 (வகுப்புகள் 1–5). | வயதுத் தொகுதி 11–14 (வகுப்புகள் 6–8). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (சதவீதத்தில்.) | |
| அனைத்திந்தியாவிலும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் (1984–85 இறுதியில்) எய்த வேண்டும் எனக் குறித்த இலக்கின்படி பள்ளியில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் விழுக்காடு .. .. .. | 95.00 | 50.00 |
| தமிழ்நாட்டில்— | | |
| 1979–80–ல் சாதனை .. .. | 94.64 | 59.68 |
| 1984–85–ல் சாதனை .. .. | 98.66 | 72.18 |

2. தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் 1984–85–ல் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை வருமாறு :—

| வயதுத்தொகுதி. | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (இலட்சத்தில்) | |
| 6—11 .. .. | 0.87 | 0.83 | 1.70 |
| 11—14 .. .. | 0.67 | 0.61 | 1.28 |
| | 1.54 | 1.44 | 2.98 |

1984-85-ல் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட 2.98 இலட்சம் குழந்தைகள் உட்பட ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1980-81 முதல் 1984-85 முடிய) மொத்தம் 13.67 இலட்சம் குழந்தைகள் (6—11 வயதுத் தொகுதியினரில் 8.15 இலட்சமும் 11-14 வயதுத் தொகுதியினரில் 5.52 இலட்சமும்) கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

3. பள்ளிகளில் 6—14 வயதுத் தொகுதிச் சிறுமியரைச் சேர்ப்பதில் சிறந்த சாதனைக்கு விருதுகள் தரும் திட்டம் ஒன்றை 1983-84-லிருந்து மைய அரசுக் கல்வித் துறை செயல்படுத்தி வருகிறது. 1982-83-ல் நிகழ்ந்த சாதனைக்கான விருதுகள் 1983-84 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தின் கீழ் தரப்பட்டன. அனைத்து மாநிலங்களிலுமுள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு ஒரு சிறந்த ஊராட்சிக்கு ரூ. 25,000 ; நாடெங்கிலும் மொத்தம் 150 சிறந்த பிளாக்குகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 50,000 ; நாடெங்கிலும் மொத்தம் 65 சிறந்த மாவட்டங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 இலட்சம் ; சிறந்த மாநிலங்கள் மூன்றுக்கு மாநில விருதுகள் என்றவாறு இவ்விருதுகள் தரப்பட்டன. 1983-84ம் ஆண்டிற்கான செயல் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டுக்கு பின்வரும் விவரப்படி மொத்தம் ரூ. 11.25 இலட்சம் விருதாகக் கிடைத்தது ;—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| சிறந்த ஊராட்சிகளுக்கான விருதுகள்—15 ஊராட்சிகளுக்கு | 3.75 |
| சிறந்த பிளாக்குகளுக்கான விருதுகள்—11 பிளாக்குகளுக்கு | 5.50 |
| சிறந்த மாவட்டங்களுக்கான விருதுகள்—2 மாவட்டங்களுக்கு (கன்னியாகுமரி மற்றும் நீலகிரி) | 2.00 |
| | 11.25 |

இந்த விருதுத் தொகையைத் தொடக்கப்பள்ளிகளில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, கைத் தொழில் கருவிகள், தொழிற்கூடங்கள் ஆகியவற்றுக்காகச் செலவிட அரசு ஏற்பளித்துள்ளது.



4. பள்ளிகளில் சேரும் (6—11) மாணவ மாணவியருள் தொடர்ந்து 5-வது வரையில் படிக்காமல் இடையிலேயே பள்ளியில் இருந்து நின்று விடுவோர் விழுக்காடு (“வியர்த்த விழுக்காடு”) 1977-78 ஆம் ஆண்டில் 40 சதவீதமாக இருந்தது. 1983-84-ல் 26 சதவீதமாகக் குறைந்து உள்ளது. இந்த நல்ல மாற்றத்திற்கு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் முக்கியமான காரணமாகும்.

5. குழந்தைகள் காப்பகங்கள் 4,140-ல் ஒவ்வொன்றிலும் இப்பொழுது ஒரு இளஞ்சிறார் பள்ளி வகுப்பும் நடத்தப்படுகிறது. இளவயதிலேயே பள்ளி செல்லும் மனப்பாங்கை வளர்ப்பதாலும், சிறுமியர் தங்கள் தம்பி தங்கையரைக் கவனித்துக் கொள்ள வீட்டில் நிறுத்தப்படுவதைத் தவிர்ப்பதாலும் இவ்விளஞ்சிறார் பள்ளிகளும் “வியர்த்த விழுக்காட்டை” மேலும் குறைக்க வருங் காலத்தில் உதவும். இக்காப்பகங்களிலுள்ள குழந்தைகள் நல அமைப்பாளர்களுக்கு இளஞ்சிறார் கல்வியில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய இளஞ்சிறார் பள்ளி வகுப்புக்களை மேலும் 10,000 குழந்தைகள் காப்பகங்களில் தொடங்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 1—10 வகுப்பு பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு.

6. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் தமிழகத்தில் 1—7—1982, 15—9—1982 முதல் 1—5 வகுப்புகளிலும், 15—9—1984 முதல் 6—10 வகுப்புகளில் அமுலாக்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் பள்ளிகளில் 1—10 வகுப்புகளில் படிப்பவர்களில் 55 இலட்சம் குழந்தைகள் 37,447 பள்ளிகளிலுள்ள சத்துணவு மையங்கள் மூலம் சத்துணவு பெற்று வருகின்றனர். இம் மையங்களில் பெரும்பாலானவை பள்ளிக்கல்வி இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும் ; மற்றவை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை ; பிற்பட்டோர் நலத்துறை ; நகராட்சி நிருவாகத்துறை ஆகியவற்றின் இயக்குநர்கள் ; மற்றும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் ஆணையாளர்கள் ஆகியோரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும் செயல்படுகின்றன.

7. 1—5 வகுப்புக் குழந்தைகளுக்கு ஆண்டின் 365 நாட்களும் சத்துணவு வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட சில விடுமுறை நாட்கள் (ஆண்டுக்கு சுமார் 20 நாட்கள்) சத்துணவு மையங்களுக்கும் விடுமுறையானாலும் அந்நாட்களுக்குரிய உணவுப் பொட்டலமும் முதல் நாளன்றே தரப்படுகிறது. 6—10

வகுப்புக் குழந்தைகளுக்கு பள்ளி வேலை நாட்களில் சத்துணவு வழங்கப்படு கிறது. ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்குத் தரப்படும் உணவின் அளவு வருமாறு :

| (1) | | 1–8 வகுப்புகள் (2) | 9–10 வகுப்புகள் (3) |
|---|---|---|---|
| | | (அளவு கிராம்களில்.) | |
| அரிசி | .. | 100 | 120 |
| பருப்பு | .. | 15 | 15 |
| எண்ணெய் | .. | 3 | 3 |
| காய்கறிகளும் மசாலாப் பொருட்களும் | .. | 50 | 50 |

8. அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகியவற்றை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் அந்தந்த சத்துணவு மையத்தில் வழங்குகிறது. 1984-85-ம் ஆண்டுக்கு கேர் நிறுவனம் 8 இலட்சம் குழந்தைகளுக்கு 120 நாட்களுக்குப் போதுமான அரிசியையும், எண்ணெயையும் இலவசமாகத் தந்தது. பிறகு, காய்கறி, மசாலா பொருள்கள் முதலிய செலவினங்களுக்காக ஒரு மாண வருக்கு ஒரு நாளைக்கு 13 காசு வீதம் கணக்கிட்டு தொடரும் மானியம் தரப் படுகிறது. 500-க்குக் குறைந்த மாணவர்களுக்கு உணவளிக்கும் மையத்துக்கு மாதம் ரூ. 20-ம், 500-ம் அதற்கு மேலும் மாணவர்களுக்கு உணவளிக்கும் மையத்திற்கு மாதம் ரூ. 30-ம் சில்லறைச் செலவினமாக அனுமதிக்கப்படுகிறது. பள்ளி சத்துணவு மையம் ஒவ்வொன்றிலும் மாதம் ரூ. 150 மதிப்பூதியத்தில் சத்துணவு அமைப்பாளர் ஒருவரும் நாளைக்கு ரூ. 2 சம்பளத்தில் ஒரு பகுதி நேர சமையலரும், நாளைக்கு ரூ. 1 சம்பளத்தில் ஒரு பகுதி நேர உதவியாளும் பணி செய்கின்றனர். உணவுபெறும் மாணவர் எண்ணிக்கை 500-க்கு மேல். இருந்தால் கூடுதலாக ஒரு சமையலாளரையும், ஒரு உதவியாளரையும் நியமித்துக் கொள்ளலாம்.

9. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைச் சார்ந்த நிதி ஒதுக்கமாக கல்வி மானியத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது ரூ. 25 கோடியாகும். சமையலாளர் மற்றும் உதவியாளர் சம்பளம்; சத்துணவு அமைப்பாளர்கள் மதிப்பூதியம் ; தொடரும் மானியச் செலவு முதலிய செலவினங்களுக்கு மட்டுமே இந்த ரூ. 25 கோடியாகும். பள்ளி சத்துணவு மையங்களுக்கு வழங்கும் உணவுப் பொருட்களின் விலையாக நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்கு கொடுக்க வேண்டிய தொகைக்கான நிதி ஒதுக்கம் மானியக் கோரிக்கை 35. "நுகர்பொருள் வழங்கலில்" சேர்க்கப்பட்டுள்ளது.



## இலவச உடை

10. 1985 செப்டம்பர் 15-ம் நாளிலிருந்து 1—8 வகுப்புக்களில் பயிலும் தகுதியுள்ள ஏழைக் குழந்தைகளுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது.

## இலவசப் புத்தகங்கள், கற்பலகைகள் வழங்குதல் ;

11. 1-3 வகுப்புகளில் பயிலும் ஏழை மாணவர்கள் 13 இலட்சம் பேர் களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும், சிலேட்டும், 2—3 வகுப்பு களில் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்பட்டு வந்துள்ளது. 1972-73-ம் ஆண்டிலிருந்து பாட நூல்கள் வழங்குவதற்கு ஆகும் செலவை தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்று வருகிறது. இதற்காக இந்நிறுவனம் இப்பொழுது ஆண்டு தோறும் ரூ. 1.60 கோடி செலவிடுகிறது. 1985-86 லிருந்து இலவசப் பாட நூல்கள் வழங்கும் திட்டம் 1—8 வகுப்புகளில் படிக்கும் தகுதியுள்ள ஏழை மாணவ மாணவியர் அனைவருக்கும் விரிவாக்கப் படவிருக்கிறது.

## புத்தக வங்கிகள் :

12. ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் வாங்கும் செலவினைத் தவிர்ப்பது புத்தக வங்கிகளின் நோக்கமாகும். 1—10—1984 நிலவரப்படி 36,553 பள்ளிகளில் இவ்வங்கிகள் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. பயன் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 13 இலட்சத்திற்கும் அதிகமாகும். உயர் வகுப்புக்குச் செல்லும் மாணவர்கள் நன்கொடையாக வழங்கும் புத்தகங் களைக் கொண்டும், பெற்றோர் ஒத்துழைப்புடனும் சமூகத் தொண்டு நிறு வனங்கள் உதவியுடனும், இப்புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள் :

13. நன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1980-81 முதல் 1982-83 முடிய மூன்று ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டித் தருவதற்கான ஒரு பெருந் திட்டம் சுமார் 30 கோடி செலவில் செயல் படுத்தப்பட்டு, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் 4,500க்கு கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டன. தனியார் மற்றும் நகராட்சித் தொடக்கப் பள்ளிகளுக்கு மானியம் தர ரூபாய் 21 இலட்சமும், அரசு தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூபாய் 3 இலட்சமும் 1985-86-ல் ஒதுக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களுக்காக "சமுதாய வளர்ச்சி" மானியக் கோரிக்கையின் கீழ் தனியே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் ;**

14. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றி வந்த ஆசிரியர்களும், அடிப்படை ஊழியர்களும் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர். அப்பள்ளிகளின் கட்டிடப் பராமரிப்பு தவிர, பள்ளி நிருவாகப் பொறுப்பு முழுவதையும் பள்ளிக் கல்வித்துறை கவனித்து வருகிறது. இப்பள்ளிகளில் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் எண்ணிக்கை 97,509 ஆகும்.

**நகராட்சி மாநகராட்சித் தொடக்கப் பள்ளிகள் ;**

15. 1983-84-ல் நகராட்சிகளும், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளும் நடத்தி வந்த தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 1,546 ஆகும். (1,128 தொடக்கநிலை மற்றும் 418 நடுநிலைப்பள்ளிகள்). 16,385 ஆசிரியர்கள் இப்பள்ளிகளில் பணி செய்கின்றனர். நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன், அவ்வாறு வசூலாகும் தொகையில் 50 விழுக்காட்டுக்கு ஈடான தொகையினை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகள், மாநகராட்சிகள் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) ஆகியவற்றின் தொடக்கக் கல்விக் கணக்கு நிதியில் துண்டுவிழும் முழுத் தொகையினை அரசே ஈடு செய்து வருகிறது.

**(iii) உயர்நிலைப் பள்ளிக் கல்வி.**

1984-85-இல் தமிழ்நாட்டில் 14—16 வயதுத் தொகுதியினர் 17.95 இலட்சம் பேர்களுள் 47.45 விழுக்காடாகிய 8.52 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9—10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1984-85-இல் உயர்நிலைப்பள்ளி வகுப்புகள் நடைபெற்று வந்த பள்ளிகளின் எண்ணிக்கை வருமாறு :—

| | | சாதாரணப் பள்ளிகள் (ஆங்கிலோ இந்தியன் மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் உட்பட). | மைய அரசின் உயர்நிலைக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்தவை. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| உயர்நிலைப்பள்ளிகள் | .. | 2,387 | 89 | 2,476 |
| மேல்நிலைப் பள்ளிகள் | .. | 1,421 | 53 | 1,474 |
| மொத்தம் | .. | 3,808 | 142 | 3,950 |



1984-85-இல் மேற்கண்ட 3,950 பள்ளிகளில், வெவ்வேறு நிலைகளில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | மாணவர்களின் எண்ணிக்கை. (இலட்சத்தில்.) |
|---|---|
| 8-ஆம் வகுப்பும் கீழும் | 16.44 |
| 9—10 வகுப்புகள் | 8.52 |
| 11—12 வகுப்புகள் | 3.31 |
| மொத்தம் | 28.27 |

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் (1980-81 முதல் 1984-85 முடிய) மொத்தம் 421 உயர்நிலைப்பள்ளிகள் புதிதாக திறக்கப்பட்டுள்ளன (1984-85 இல் திறந்த 110 உயர்நிலைப் பள்ளிகள் உட்பட).

2. அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் சில உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெறுகின்றன. 1984-85 முடிய 1,123 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள்ளன. இத்திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்படும் பள்ளிகளுக்கு அண்மை ஆண்டுகளில் ஆய்வுக்கூட கட்டட வகையிலும், அறிவியல் தளவாடங்கள் வகையிலும் சேர்த்து ஒரு பள்ளிக்கு ஏறத்தாழ ரூபாய் 1.40 இலட்சம் செலவிடப்படுகிறது. இதுவரையில் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத, கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் சோதனைகளை நடத்திக்காட்ட உதவும் வண்ணம் கல்வி மாவட்டங்கள் 51-இல் ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டி செயல்பட்டு வருகிறது.

3. மாநில அளவில் ஆண்டுதோறும் நடத்தும் அறிவியல் கண்காட்சிகள் ஆண்டுதோறும் வெவ்வேறு மாவட்ட தலைமையிடங்களில் நடத்தப்படுகின்றன. மாணவர்களின் அறிவியல் திறனை ஊக்குவிப்பதும், அறிவியல் பயிற்றுந் தரத்தினை மேம்படுத்துவதும் இக்கண்காட்சிகளின் குறிக்கோளாகும். தென் மாநிலங்களுக்காக பெங்களூரில் உள்ள விசுவேசரய்யா தொழில் மற்றும் தொழில் நுட்ப அருங்காட்சியகம் ஆண்டுதோறும் நடத்தி வரும் "தென் இந்திய அறிவியல் கண்காட்சியில்" 1980-இல் இருந்து தமிழகப் பள்ளிகளும் கலந்து கொள்கின்றன. 1985-இன் இக்கண்காட்சி பெங்களூரில் நடந்தது. இக்கண்காட்சியின் மிக உயர்ந்த பரிசு "அறிவியல் காட்சியன்

களுக்கான தேசிய மன்றம்." வழங்கும் படிப்புதவித் தொகையாகும். அப்படிப்புதவித் தொகையாக இவ்வாண்டு கோவை பீளமேடு சர்வ ஜன மேல் நிலைப் பள்ளி மாணவர் திரு. ஏ. ஜி. கல்யாணசுந்தரம் பெற்றுள்ளார். அறிவியல் காட்சிப் பொருள்களிலேயே சிறந்ததை உருவாக்கியதற்காக அப்பள்ளிக்கு கோள முதலமைச்சர். கேடயமும் கிடைத்துள்ளது.

4. மைய அரசுக் கல்வி அமைச்சகம் சென்னையில் கல்வித் தொலைக் காட்சிக்கான படநிலையம் ஒன்று கட்ட ரூபாய் 40 இலட்சம் மானியம் தர கொள்கை அளவில் இசைந்துள்ளது. வீடியோ நிழற்படக் காமிராக்களும் அதனோடு இணைந்த கருவிகளும் வாங்க அவ்வாசினர் ஏற்கெனவே ரூபாய் 12 இலட்சத்திற்கு மேல் மானியம் வழங்கியுள்ளனர்.

**உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் :**

5. 1985-86 வரவு-செலவு மதிப்பீட்டில் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங் களுக்கான நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளுக் கான கட்டிட மானியம் | 13 |
| அரசு உயர்நிலைப்/மேல்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள். | |
| சிறு பணிகள் | 144 |
| முன் ஆண்டுகளில் ஏற்பளித்து முடிவுறாமல் உள்ள கட்டட வேலைகளுக்கு 1985-86-இல் நிதி ஒதுக்கம் | 62 |
| புதுப்பணிகள் | 100 |
| வெள்ளம் முதலியவற்றால் சேதமாகும் கட்டிடங்களின் மராத்துப் பணிகளுக்காக | 5 |
| மொத்தம் | 324 |

6. பெண்களுக்கான அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு மேல் நிலைப் பள்ளிகள் அனைத்திலும் கழிவறை வசதிகள் செய்வதற்கான ஒரு திட்டம் மொத்தம் ரூபாய் 5 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது. இதில் ரூ. 3.25 கோடிக்கு 1982-83, 1983-84 ஆம் ஆண்டுகளில் ஏற்பளிக்கப் பட்டது. எஞ்சிய ரூபாய் 1.75 கோடியில் ரூபாய் 75 இலட்சம் 1985-86-லும்



மீதி ரூபாய் 1 கோடி அதற்குப் பின்னரும் செலவு செய்யப்பட்டு இத்திட்டம் நிறைவேற்றப்படும். சிறு பணிகளுக்காக என்று மேலே குறித்துள்ள ரூபாய் 144 லட்சத்தில் கழிவறைகளுக்கான நிதி ஒதுக்கமும் சேர்ந்துள்ளது.

**கல்விச் சலுகைகள், படிப்பு உதவித் தொகைகள் மற்றும் பிற ஊக்குவிப்புப் பணிகள் :**

7. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி பொதுவாக 1—12 வகுப்புகளில் ஏறத் தாழ அனைத்து நிலைகளிலும் அனைவருக்கும் இலவசமாகும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்கள் சிறப்பு படிப்பு உதவித் தொகைகளையும், இதர வசதிகளையும் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத் துறையிடமிருந்து பெறுகின்றனர். அதேபோன்ற வசதியை பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டத்தைப் பள்ளிக் கல்வித்துறை நிருவகித்து வருகிறது. இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்டுக்கு நான்கு மாணவர்களுக்கு புதிதாக படிப்புதவித் தொகைகள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன. ஒருமுறை உதவித் தொகையினை பெற்ற மாணவர் மேல்நிலைக் கல்வி உட்பட, பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இவ்வுதவித் தொகையினைப் பெறுவர். இப்படிப்புதவித் தொகைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

8. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் பாடங்கள் ஆகியவற்றில் பள்ளி நேரத்திற்கு பின்னர் நாள் தோறும் ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் 500 உயர்நிலைப் பள்ளிகளில் 8—10 வகுப்புகளிலும் 300 மேல் நிலைப் பள்ளிகளில் 11, 12 வகுப்புகளிலும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1984-85-இல் மொத்தம் 12,000 மாணவர்கள் பயன் பெற்றனர்.

9. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தவறிய மாணவர்களுக்கு பள்ளிகளிலேயே மூன்றுமாத காலம் சிறப்பு போதனை தரும் புதிய திட்டம் ஒன்று முதன் முதலாக 1984-85-இல் செயல்படுத்தப்பட்டது. அவ்வாறு தவறிய மாணவர் களில் 18 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு 1984 ஜூலை—அக்டோபர் மாதங் களில் தெரிந்தெடுக்கப்பட்ட 1,000 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி களில் ஒவ்வொரு பள்ளியிலும் 20-லிருந்து 30 மாணவர்கள் வரை சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்காக அப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் குறிப்பாக நியமிக்கப்பட்ட இரண்டு முழு நேர பி.டி., ஆசிரியர்கள் அவர் களுக்கு போதனை அளித்தனர். அந்தந்த இடத்திலுள்ள தேவைமற்றும் வசதிக்கேற்ப பள்ளி நேரத்திலோ பிற நேரத்திலோ இந்த போதனை தரப்பட்டது.

( ) பள்ளிப் பாடங்கள், பாடத்திட்டம், பாடநூல்கள்.
வாழ்க்கைக் கல்விக்கான முதல் அமைச்சர் திட்டம் ;

பள்ளிகளில் தற்பொழுது குழந்தைகளுக்குக் கற்றுத்தரப்படும் பாடங்கள் பெரும்பாலும் ஏட்டறிவு சார்ந்தவையாகவே உள்ளன. அவர்களின் அடிப் படைத் தேவைகளுக்கும் அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கும் இக்கல்வி முறை உதவுவதாக இல்லை. தொடர்ந்து படிக்காமல் பல்வேறு கட்டங்களில் பள்ளி வாழ்க்கையை நிறுத்தி விடுபவர்களுடைய தேவைகளை இம்முறை கணக்கிற் கொள்ளுவதேயில்லை. வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் திட்டத்தின் நோக்கம் பள்ளிக் கல்வியானது அனைத்து மட்டங்களிலும் தொழில் மற்றும் வேலைவாய்ப்போடு இணைந்ததாக ஆக வேண்டும் என்ப தாகும். மாணவ—மாணவியருக்குப் பள்ளிகளில் கற்றுத்தரப்படும் திறன்கள் பிற்காலத்தில் அவர்கள் பொருத்தமான வேலையில் சேரவோ, சுயமாகத் தொழில் நடத்தவோ ஆற்றல் வாய்ந்தவர்களாக உருவாக்க உதவ வேண்டும். உழைப்பின் கௌரவத்தைக் குழந்தைகள் உணரும்படியான மனநிலையை உருவாக்க வேண்டும். கல்விமுறைக்கும் வாழ்க்கைக்கும் இடையேயுள்ள இடை வெளி குறைக்கப்பட்டு வாழ்க்கைப் பிரச்னைகளை சமாளிக்க வல்லவர்களாக குழந்தைகள் ஆகவேண்டும். இத்திட்டத்திற்கு மிகப்பெரும் முதலீடு தேவை. அண்மைக் காலமாக கல்வியைத் தொழில் மயமாக்குவதன் இன்றியமை யாமையை மைய அரசும் வலியுறுத்தி வருகிறது. எனவே, இம்மாபெரும் திட்டத்திற்கு கணிசமான மைய அரசு நிதியுதவி ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கிட்டும் என்று இவ்வரசு நம்புகிறது. மேலும் மைய அரசின் ஆதரவுடன் உலக வங்கி உதவியும் இத்திட்டத்திற்கு கிடைக்கும் என்று நம்பிக்கையும் உள்ளது.

2. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் 1984-85-லேயே தொடங்கப்பட்டு விட்டன. தற்பொழுது 1—12 வகுப்புகளில் கற்றுத்தரும் பாடங்கள், பாடத்திட்டம், பாடநூல்கள் ஆகியவற்றை புதிய கல்வித் திட்டத்தின் கோட்பாடுகளுக்கு ஏற்ப திருத்தியமைக்க அரசு குழுக் களை அமைத்துள்ளது. அவை தயாரிக்கும் புதிய பாடத் திட்ட வரைவுகள் வெளியிடப்பட்டு கல்வியாளர்களுடைய கருத்துகளும் மற்றவர்கள் கருத்து களும் கோரப்படும். இதுவரை தொழிற்பாட வகுப்புகள் தொடங்கப்பட் டிராத பல மேல்நிலைப்பள்ளிகளில் 1984-85 முதல் தொழிற் பாட வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. மேல்நிலைப் பள்ளிகளில் பொதுப்பாடங்களை பயில் பவர்கள் படிக்க வேண்டியுள்ள விருப்பப்பாடங்கள் நான்கில் ஒன்றுக்கு பதிலாக தொழிற் பாடம் ஒன்றைக் கற்றுத்தர 1984-85 ஆம் ஆண்டு முதல் வகை செய்ய



லாமென்று விருப்பமுள்ள மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதி தரப் பட்டுள்ளது. மேலும் சுமார் 750 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் தங்கள் விருப்பத்தின் மேல் 1984-85 ஆம் ஆண்டு முதல் 9—10 வகுப்பு மாணவர்களுக்கும் தொழிற்பாடம் ஒன்றைத் கற்றுத்தர, அனுமதிக்கப் பட்டன. ஆங்காங்கு கருத்தரங்குகள் பல நடத்தி வாழ்க்கைக் கல்வியின் கோட்பாடுகள் ஆசிரியர்களிடையேயும், தலைமையாசிரியர்களிடையேயும் பரப்பப்பட்டுள்ளன.

3. தற்பொழுதுள்ள பாடத் திட்டத்தின்படி எழுதப்பட்ட பள்ளிப் பாடப் புத்தகங்களின் புதிய வடிவங்களை அண்மையில் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் பின்வரும் திட்டப்படி வெளியிட்டுள்ளது :—

**பாடப் புத்தகங்களின் புதிய வடிவங்கள் அமுலுக்கு வந்துள்ள வகுப்புகள்:—**

| ஆண்டு. | கணிதம். | புவியியல். | அறிவியல். | வரலாறு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1980-81 | 1—3 | .. | .. | .. |
| 1981-82 | 4,7,9 | 4,6 | 3,4,6 | 3,4,6 |
| 1982-83 .. | 5,8,10 | 5,7,9 | 5,7,9 | 5,7,9 |
| 1983-84 | .. | 8,10 | 8,10 | 8,10 |

| | ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலத் துணைப் பாடம். | தமிழ்த் துணைப் பாடம். | தமிழ் இலக்கணம். |
|---|---|---|---|---|---|
| | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1981-82 .. | 3 | 1—3 | .. | 9 | .. |
| 1982-83 .. | 4,6 | 4,6 | 6 | 6 | .. |
| 1983-84 .. | 5,7,9 | 5,7,9 | 7,9 | 7 | 9 |
| 1984-85 .. | 8,10 | 8,10 | 8 | 8 | 8,10 |

[1985 ஜூன் 10

( ) பள்ளிப் பாடங்கள், பாடத்திட்டம், பாடநூல்கள்.

வாழ்க்கைக் கல்விக்கான முதல் அமைச்சர் திட்டம் ;

பள்ளிகளில் தற்பொழுது குழந்தைகளுக்குக் கற்றுத்தரப்படும் பாடங்கள் பெரும்பாலும் ஏட்டறிவு சார்ந்தவையாகவே உள்ளன. அவர்களின் அடிப் படைத் தேவைகளுக்கும் அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கும் இக்கல்வி முறை உதவுவதாக இல்லை. தொடர்ந்து படிக்காமல் பல்வேறு கட்டங்களில் பள்ளி வாழ்க்கையை நிறுத்தி விடுபவர்களுடைய தேவைகளை இம்முறை கணக்கிற் கொள்ளுவதேயில்லை. வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் திட்டத்தின் நோக்கம் பள்ளிக் கல்வியானது அனைத்து மட்டங்களிலும் தொழில் மற்றும் வேலைவாய்ப்போடு இணைந்ததாக ஆக வேண்டும் என்ப தாகும். மாணவ—மாணவியருக்குப் பள்ளிகளில் கற்றுத்தரப்படும் திறன்கள் பிற்காலத்தில் அவர்கள் பொருத்தமான வேலையில் சேரவோ, சுயமாகத் தொழில் நடத்தவோ ஆற்றல் வாய்ந்தவர்களாக உருவாக்க உதவ வேண்டும். உழைப்பின் கௌரவத்தைக் குழந்தைகள் உணரும்படியான மனநிலையை உருவாக்க வேண்டும். கல்விமுறைக்கும் வாழ்க்கைக்கும் இடையேயுள்ள இடை வெளி குறைக்கப்பட்டு வாழ்க்கைப் பிரச்னைகளை சமாளிக்க வல்லவர்களாக குழந்தைகள் ஆகவேண்டும். இத்திட்டத்திற்கு மிகப்பெரும் முதலீடு தேவை. அண்மைக் காலமாக கல்வியைத் தொழில் மயமாக்குவதன் இன்றியமை யாமையை மைய அரசும் வலியுறுத்தி வருகிறது. எனவே, இம்மாபெரும் திட்டத்திற்கு கணிசமான மைய அரசு நிதியுதவி ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கிட்டும் என்று இவ்வரசு நம்புகிறது. மேலும் மைய அரசின் ஆதரவுடன் உலக வங்கி உதவியும் இத்திட்டத்திற்கு கிடைக்கும் என்று நம்பிக்கையும் உள்ளது.

2. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் 1984-85-லேயே தொடங்கப்பட்டு விட்டன. தற்பொழுது 1—12 வகுப்புகளில் கற்றுத்தரும் பாடங்கள், பாடத்திட்டம், பாடநூல்கள் ஆகியவற்றை புதிய கல்வித் திட்டத்தின் கோட்பாடுகளுக்கு ஏற்ப திருத்தியமைக்க அரசு குழுக் களை அமைத்துள்ளது. அவை தயாரிக்கும் புதிய பாடத் திட்ட வரைவுகள் வெளியிடப்பட்டு கல்வியாளர்களுடைய கருத்துகளும் மற்றவர்கள் கருத்து களும் கோரப்படும். இதுவரை தொழிற்பாட வகுப்புகள் தொடங்கப்பட் டிராத பல மேல்நிலைப்பள்ளிகளில் 1984-85 முதல் தொழிற் பாட வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. மேல்நிலைப் பள்ளிகளில் பொதுப்பாடங்களை பயில் பவர்கள் படிக்க வேண்டியுள்ள விருப்பப்பாடங்கள் நான்கில் ஒன்றுக்கு பதிலாக தொழிற் பாடம் ஒன்றைக் கற்றுத்தர 1984-85 ஆம் ஆண்டு முதல் வகை செய்ய



1985 ஜூன் 10]

லாமென்று விருப்பமுள்ள மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதி தரப் பட்டுள்ளது. மேலும் சுமார் 750 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் தங்கள் விருப்பத்தின் மேல் 1984-85 ஆம் ஆண்டு முதல் 9—10 வகுப்பு மாணவர்களுக்கும் தொழிற்பாடம் ஒன்றைத் கற்றுத்தர, அனுமதிக்கப் பட்டன. ஆங்காங்கு கருத்தரங்குகள் பல நடத்தி வாழ்க்கைக் கல்வியின் கோட்பாடுகள் ஆசிரியர்களிடையேயும், தலைமையாசிரியர்களிடையேயும் பரப்பப்பட்டுள்ளன.

3. தற்பொழுதுள்ள பாடத் திட்டத்தின்படி எழுதப்பட்ட பள்ளிப் பாடப் புத்தகங்களின் புதிய வடிவங்களை அண்மையில் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் பின்வரும் திட்டப்படி வெளியிட்டுள்ளது :—

பாடப் புத்தகங்களின் புதிய வடிவங்கள் அமுலுக்கு வந்துள்ள வகுப்புகள்:—

| ஆண்டு. | கணிதம். | புவியியல். | அறிவியல். | வரலாறு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1980-81 | 1—3 | .. | .. | .. |
| 1981-82 | 4,7,9 | 4,6 | 3,4,6 | 3,4,6 |
| 1982-83 .. | 5,8,10 | 5,7,9 | 5,7,9 | 5,7,9 |
| 1983-84 | .. | 8,10 | 8,10 | 8,10 |

| | ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலத் துணைப் பாடம். | தமிழ்த் துணைப் பாடம். | தமிழ் இலக்கணம். |
|---|---|---|---|---|---|
| | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1981-82 .. | 3 | 1—3 | .. | 9 | .. |
| 1982-83 .. | 4,6 | 4,6 | 6 | 6 | .. |
| 1983-84 .. | 5,7,9 | 5,7,9 | 7,9 | 7 | 9 |
| 1984-85 .. | 8,10 | 8,10 | 8 | 8 | 8,10 |

[1985 ஜூன் 10

**தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் :**

4. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாடநூல்கள் மாவட்ட மற்றும் வட்ட கூட்டுறவு சங்கங்கள் 54 இன் மூலமாக மாநிலம் முழுவதும் 120 விநியோக மையங்களின் வாயிலாக விநியோகிக்கப்படுகின்றன. இக் கூட்டுறவு சங்கங்களால் நியமிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக இப்பாடநூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை நகரில் இந் நிறுவனம் தனது வெளியீடுகளை தானே நேரடியாக 101 சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக விற்பனை செய்கிறது.

**நோட்டுப் புத்தகங்கள் :**

5. தமிழ்நாட்டுக்கு மைய அரசு ஒதுக்கும் மலிவு விலைத் தாளைக்கொண்டு நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் பணியையும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமே செய்து வருகிறது. 1979-80 முதல் 1983-84 முடிய இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட மலிவு விலை நோட்டுப்புத்தகங்களின் மதிப்பு ரூ. 12 கோடிக்கும் அதிகமாகும். 1985-86 ஆம் ஆண்டில் தயாரிக்க இருக்கும் நோட்டுப்புத்தகங்களின் மதிப்பு ஏறத்தாழ ரூ. 2 கோடியாகும்.

6. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மாநிலத்தின் கல்வி வளர்ச்சிக்காக ஆற்றிவரும் வேறு பணிகளில் சில 1—3 வகுப்புகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இலவசமாகப் பாட நூல்களை வழங்குதல் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட நிதி வழங்குதல், பள்ளி சாராக் கல்விக்கான புத்தகங்கள், தமிழில் கல்லூரிப்பாடநூல்கள், தமிழ் வளர்ச்சிக்கான பல்வேறு நூல்கள் ஆகியவற்றை வெளியிடுதல் முதலியவாகும்.

7. பிஜித் தீவில் வாழும் தமிழர்களிடமிருந்து வந்த வேண்டுகோளின் பேரில் அந்நாட்டுக் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிப்பதற்காக தமிழ் பாட நூல்களை இலவசமாக அனுப்பிவைக்க பாட நூல் நிறுவனம் முன்வந்துள்ளது. முதல் வகுப்பிற்கான தமிழ் பாடநூல்கள் 10,000 படிகளும் இரண்டாம் வகுப்பிற்கான தமிழ்ப் பார்நூல்கள் 10,000 படிகளும் ஆக மொத்தம் 20,000 பாட நூற்படிகள் (மொத்தம் ரூ. 60,000 செலவில்) அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன. பிஜித்தீவில் உள்ள தமிழ்க் கழந்தைகளுக்குத் தமிழ் கற்பிப்பதற்காக கணவனும் மனைவியும் ஆசிரியாக உள்ள இரண்டு தம்பதியினரைத் தமிழ்நாட்டிலிருந்து அனுப்பிவைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.



1985 ஜூன் 10]

### (v) ஆசிரியர் பயிற்சி.

தற்பொழுது பின்வரும் விவரப்படி அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 74 உள்ளன :—

| | ஆடவர். | மகளிர். | மொத்தம். |
|---|---|---|---|
| அரசு .. .. .. | 14 | 14 | 28 |
| அரசு (சமூக நலத் துறை) | .. | 1 | 1 |
| (உதவிபெறும்) தனியார் | 14 | 3[illegible]* | 45 |
| | 28 | 46 | 74 |

[* இவற்றில் சென்னையில் உள்ள கிறிஸ்தோபர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியோடு இணைந்த இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பிரிவு 1-ம் இளஞ்சிறாருக்கான ஆசிரியை பயிற்சி நிலையங்கள் 3-ம் அடங்கும்.]

2. 1984-85-லிருந்து ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒவ்வொன்றிலும் ஆண்டுதோறும் 40 மாணவர்கள் இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

3. கருநாடக இடைநிலை ஆசிரியர் பதவிச் சான்றிதழ்களை மதிப்பீடு செய்வது குறித்த கோட்பாடுகளை வரையறுத்து அரசு தெளிவான ஆணைகளை அண்மையில் பிறப்பித்துள்ளது. இதன் மூலம் அச்சான்றிதழ்களைப் பெற்றவர்களுடைய பிரச்னை தீர்வடைந்துள்ளது.

4. இளநிலை ஆசிரியர்கள் (ஹையர்கிரேடு), இடைநிலை (செகண்டரி கிரேடு) தகுதி பெற்று இடைநிலைத் தகுதிக்கான ஊதியத்தைப் பெற வகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம் நடத்தி வரும் 5 மாத அஞ்சல்வழி மற்றும் நேரடித் தொடர்பு பயிற்சியில் இதுவரை 30,000 ஆசிரியர்கள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் இப்பொழுது ஆண்டுதோறும் 10,000 பேர் பயன்பெறுகின்றனர்.

5. ஆங்கில மொழிப் பயிற்றுவிப்பு மேம்பாட்டிற்கான 10 மையங்கள் 1984-85-இல் 6—8 வகுப்புகளில் ஆங்கிலம் கற்றுத் தரும் ஆசிரியர்கள் 2,340 பேருக்கு ஆங்கிலம் கற்பித்தலில் 3 வாரப் பயிற்சியும் ; 9—10 வகுப்புகளில் ஆங்கிலம் கற்றுத்தரும் ஆசிரியர்கள் 990 பேருக்கு 4 வாரப் பயிற்சியும் நடத்தின.

6. பெங்களூரிலுள்ள வட்டார ஆங்கிலப் பயிற்சி நிறுவனத்தை நடத்த இவ்வரசு ஆண்டுதோறும் ரூ. 4 இலட்சம் அளவுக்கு நிதியுதவி செய்கிறது. 1984-85-ல் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆங்கில ஆசிரியர்கள் 10 பேர் அந்நிறுவனத்தில் நான்கு மாதப் பயிற்சி பெற்றனர்.

### தமிழ்நாடு கல்வியாராய்ச்சி-பயிற்சி நிறுவனம்.

தமிழ்நாடு கல்வியாராய்ச்சி-பயிற்சி நிறுவனம் பள்ளிக் கல்வித் துறையின் கல்வித் தர வளர்ச்சிப் பிரிவாகச் செயல்பட்டு வருகிறது. தொடக்கப்பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி முடிய அனைத்து நிலை ஆசிரியர்களும் பயன் பெறும் வகையில் பல்வேறு கருத்தரங்குகள், பணிக்களரிகள், புத்தறிவுப் பயிற்சிகள் ஆகியவற்றை இந்நிறுவனம் நடத்தி வருகிறது. இளநிலை ஆசிரியர்களுக்கான அஞ்சல்வழி மற்றும் நேரடித் தொடர்பு பயிற்சி, மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் உள்ள "உட்படுத்தப்பட்ட" ஆசிரியர்கள் சுமார் 3,100 பேருக்கும் 10 மாத சான்றிதழ் வகுப்பு ஆகியவையும் இந்நிறுவனம் நடத்தும் பயிற்சிகளில் அடங்கும். இந்நிறுவனம் ஆசிரியர்களுக்காக மேலும் பல பயிற்சித் திட்டங்களை நடத்த 1985-86-இல் ரூ. 4 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

2. தொடக்கக் கல்வியைச் சார்ந்த பின்வரும் சிறப்பு முன்னோடித் திட்டங்களை யூனிசெப் உதவியுடன் இந்நிறுவனம் செயற்படுத்தி வருகிறது.—

| | திட்டம். | செயற்படுத்தப்படும் இடங்கள். |
|---|---|---|
| (i) | தொடக்கக் கல்விப் பாடத் திட்டத்தைப் புதுப்பித்தல். | 130 தொடக்கப்பள்ளிகள் (50,000 மாணவர்கள்.) |
| (ii) | சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி 35 வயது முடிய அனைவருக்கும் அவரவருக்கு இசைந்த தொழிற் சார்ந்த கல்வி அளித்தல். | பல்வேறு மாவட்டங்களில் மொத்தம் 5 சமுதாய மையங்கள். |
| (iii) | தொடக்கக் கல்வி வாய்ப்புக்களைப் பரவலாக்குதல் (பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்தி விட்ட 9—14 வயதுத் தொகுதியினருக்கு பள்ளி சாராக் கல்வி முறையை உருவாக்குதல் ) | 74 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள். |
| (iv) | இளஞ்சிறார் கல்வி (3—5 வயதுக் குழந்தைகளுக்கு). | இராமநாதபுரம் மாவட்டம் சாரியாபட்டி வட்டத்தில் தொடங்கப் பட்டுள்ள 61 இளஞ் சிறார் பள்ளிகள். |



### மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வி :

3. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகள் அவை (UNFPA) தரும் சுமார் ரூ. 25 இலட்சம் உதவித் தொகையைக் கொண்டு 1980 நவம்பர் முதல் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியைச் செயல்படுத்துவதற்கான ஒரு மாபெரும் திட்டத்தை தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சுமார் 1.5 லட்சம் பேர்களுக்கும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் 7,000 பேர்களுக்கும் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியில் பயிற்சி தரப்பட்டுள்ளது. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியின் அடிப்படைத் தன்மை, பயிற்று முறைகள் ஆகியவை பற்றிய வெளியீடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

4. சென்னையிலும் வேறு சில இடங்களிலும், ஆசிரியர்கள் பயன் பெறுவதற்கான தொடர்கல்வி மையங்களை கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் நடத்தி வருகிறது. தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி, 6—10 வகுப்புகளில் தமிழ் கற்றுத் தரும் ஆசிரியர்கள் திறனை வளர்க்க அஞ்சல் மற்றும் வானொலி வழிப்பயிற்சி ஆகியவற்றையும் நடத்தி வருகிறது.

### அனைவருக்குமான (அஞ்சல் முறைப்) பள்ளி :

5. உயர்நிலைப் பள்ளி நிலையில், பள்ளி சாராக் கல்வியினை விரிவாக்கும் பொருட்டு, அனைவருக்குமான (அஞ்சல் முறைப்) பள்ளியை (Open School) மாநில கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் தொடங்கியுள்ளது. ஏற்கனவே 8 வது வகுப்பு தேறி 15 வயது நிறைந்தவர்கள் இதன் மூலம் பயன் பெறலாம். முதலில் 2,500 பேர் சேர்த்துக்கொள்ளப்படுவர். அஞ்சல் வழிப் பயிற்சியும் நேரடித் தொடர்பும் இணைந்த இப்பள்ளி 12 மாத காலம் நடத்தப்பட்டு எஸ்.எஸ்.எல்.சிக்கு இணையான கல்வி தரப்படும். இதற்கான பாடத் திட்டம் ஆயத்தம் செய்யப்பட்டு பாடத் தொகுப்புகளும் அச்சிடப்பட்டு வருகின்றன.

### (vii) பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத பணியாளர்களின் நலன்

கடந்த சில ஆண்டுகளில் ஆசிரியர்கள் பெற்ற நன்மைகளில் முக்கியமானவை வருமாறு :—

(1) ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர்;

(2) இளநிலை ஆசிரியர்களை, இடைநிலை ஆசிரியர்களாக உயர்த்த, அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப் பயிற்சி தொடங்கப்பட்டது ;

(3) இளநிலை மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கு அவரவர் ஊதிய விகிதத்தில் 1—6—1981 முதல் ஓர் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. இச் சலுகை ஓராண்டுப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும், மற்றும் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாகவும், கூடுதல் தலைமை ஆசிரியர்களாகவும் உள்ள இடை நிலை ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது ;

(4) இடைநிலைத் தகுதிபெறும் இளநிலை ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் சம்பள விகிதம் தரப்படுவது ; மற்றும் பி.எட். தகுதி பெறும் நடுநிலைப் பள்ளி (இடைநிலைத்தர) தலைமையாசிரியர்களுக்கு பி.எட். சம்பள விகிதம் தரப்படுவது ;

(5) நடுநிலைப் பள்ளிகளிலுள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளை படிப்படியாக முழுநேரப் பதவிகளாக உயர்த்துதல் ;

(6) இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் அனைவருக்கும் 1—1—1982 முதல் முதனிலைத் தமிழாசிரியர்களாகத் தர உயர்வு ;

(7) தத்தம் நிலையில் 20 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்களுக்குச் சிறப்பு நிலை வழங்கும் சலுகை 1—6—1981 முதல் இளநிலை / இடைநிலை ஆசிரியர்களுக்கும், 1982-83 முதல் பி.எட். தர ஆசிரியர்களுக்கும் அளிக்கப் பட்டது ;

(8) அனைத்து ஆசிரியர்களுக்கும், 1982-83 ஆம் ஆண்டிலிருந்து ஈட்டிய விடுப்பு 3 நாட்களிலிருந்து 10 நாட்களாக அதிகரிக்கப்பட்டது ;

(9) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி வேலை நாட்கள் 1984-85 லிருந்து 220 லிருந்து 200 ஆகக் குறைக்கப்பட்டது (அப்பள்ளிகள் நாள் தோறும் வேலை செய்ய வேண்டிய நேரம் 5 மணியிலிருந்து 5½ மணியாக மாற்றப்பட்டது).

(10) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியரும், ஓர் இளநிலை உதவியாளரும் விடுமுறையல்லாத பணியைச் சார்ந்தவராக அறிவிக்கப்பட்டது.

(11) ஆசிரியர்களது குறைகளை உடனுக்குடன் உரிய மட்டத்தில் தீர்த்துவைக்கும் பொருட்டு, கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில நிலைகளில் " ஆசிரியர்களுக்கான ஆலோசனைக் குழுக்கள் " ;



**தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கான நலன்கள் ;**

(12) மேல் முறையீட்டின் பேரில் மீண்டும் பணியில் சேர்க்கப்பட ஆணையிடப்படுகின்ற தனியார் பள்ளி ஆசிரியர்களை நிருவாகங்கள் மீண்டும் பணியில் எடுத்துக் கொள்ள வகை செய்தலும், தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பெற்ற ஆசிரியர்கள் இன்னலுக்குட்படுத்தாமலும் தடுத்தலும்;

(13) சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளைத் தவிர பிற தனியார் பள்ளிகளில் நியமனங்கள் அனைத்தும் வேலை வாய்ப்பு நிறுவனங்கள் மூலமே செய்யப்படவேண்டும் என்ற விதியையும் நியமனங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரும் 18 விழுக்காடும் பிற்பட்டவர்களுக்கு 50 விழுக்காடும் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற விதியையும் அமுலாக்குதல் ;

(14) தனியார் பள்ளியாசிரியர்களும் பிற பணியாளர்களும் பணியிலிருக் கும்பொழுதே இறந்து அவர்கள் குடும்பங்கள் வறுமை நிலையில் இருந்தால் அவர்கள் மகன்/மகள்/மனைவி/கணவன் ஆகியோருக்கு கருணை அடிப்படை யில் அப்பள்ளிகளில் நியமனம் செய்து கொள்ளும் சலுகை ;

(15) தனியார் பள்ளியாசிரியர்களுக்கு பலவகைக் கடன்களும் முன் பணங்களும்;

(16) தனியார் பள்ளிகளில் சராசரி மாணவர் வருகை ஆகஸ்டு மாதத்தில் உள்ளதன் அடிப்படையில் அப்பள்ளிக்கு ஆசிரியர் மாணவர் விகிதத்தின்படி நிர்ணயிக்கும் மொத்த ஆசிரியர் எண்ணிக்கையை அப்பள்ளி ஆண்டு முடியும் வரைத் தொடர்ந்து கடைபிடித்தல் ;

**அரசு அல்லாத கல்வி நிறுவனப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்.**

2. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) பள்ளி ஆசிரியர் களுக்கு 1—6—1970-ல் இருந்தும், தனியார் பள்ளிகளின் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 1—4—1972 லிருந்தும், தனியார் கல்லூரி ஆசிரியர் களுக்கு 2—10—1970 லிருந்தும், பிற வகையான தனியார் கல்வி நிலையப் பணியாளர்களுக்கு வேறு வேறு நாட்களிலிருந்தும் தாராள ஓய்வூதிய விதி களின் பயன்கள் தரப்பட்டுள்ளன. தாராள ஓய்வூதிய விதிகளின் கீழ் ஓய்வு பெறுபவர்களுக்கு ஓய்வூதியம் கணக்கிடும் முறையில் 1—10—1979 அல்லது அதற்குப்பின் ஓய்வு பெற்றவர்களைப் பொறுத்தவரை சிறப்புச் சலுகை தந்து ஆணை வெளியிட்டது. 30—9—1979 அன்று அல்லது அதற்கு முன்னர் ஓய்வு பெற்று 1—10—1979 அன்று உயிருடனிருந்த அரசுப் பணியாளர்களுக்கும்

1—10—1979க்குப் பின் ஓய்வு பெறுபவர்களுக்குரிய சிறப்புச் சலுகையை 1—10—1979லிருந்து விரிவாக்கி டெல்லி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றின் படி 1984 ஜூன் மாதத்தில் நிதித்துறை ஆணை வெளியிடப்பட்டது. அரசு அல்லாத கல்வி நிலையங்களிலிருந்து ஓய்வு பெற்று தாராள ஓய்வூதிய விதி களின்கீழ் பயன்களுக்கு அருகதையுள்ளவர்களில் 30—9—1979 அன்று அல்லது அதற்கு முன் ஓய்வுபெற்று 1—10—1979 அன்று உயிருடனிருந்தவர்களுக்கும் 1984 ஜூன் மாத நிதித்துறை ஆணையில் (அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற வர்களுக்கு) தரப்பட்ட அதே போன்ற சலுகைகளை விரிவாக்கி கல்வித் துறை யிலிருந்து ஆணை வெளியாகியுள்ளது.

**ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி :**

3. ஆசிரியர்களும், அவர்களது குடும்பத்தினரும் வறுமை முதலியவற்றால் வாடும் பொழுது. நிதியுதவி செய்யவும், அவர்களது குழந்தைகளுக்கு மேற் படிப்புக்கான உதவித் தொகைகளை அதற்கான விதிமுறைக்குட்பட்டு அளிப்ப தற்கும் இந்நிதியிலிருந்து உதவித் தொகைகள் வழங்கப்படுகிறது. 1984-85-ல் இந்த படிப்புதவித் தொகைகளை 126 மாணவர்கள் பெற்றனர். நிதியுதவி பெற்ற ஆசிரியர்கள் எண்ணிக்கை 23 ஆகும்.

**ஆசிரியர்களுக்கான விருதுகள் :**

4. பள்ளியாசிரியர்களுக்கான மாநில விருதுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 1984-85 ஆம் ஆண்டுக்கு பின்வரும் விவரப்படி 207 ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் | 101 |
| உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் | 102 |
| ஆங்கிலோ-இந்தியப்பள்ளி ஆசிரியர்கள் | 2 |
| மெட்ரிகுலேஷன் பள்ளி ஆசிரியர்கள் | 2 |
| | 207 |

தமிழகத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் எண்மரும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஒருவரும் மைய-அரசிடமிருந்து 1984 ஆம் ஆண்டுக்கான தேசிய விருதுகளையும் பெற்றுள்ளனர்.



## III. மேல்நிலைப் பள்ளிக் கல்வி

தமிழ்நாட்டில் 1984-85-ல் செயல்பட்டு வந்த 1,474 மேல்நிலைப் பள்ளிகளின் நிருவாக வாரி விவரங்கள் வருமாறு :

| | |
|---|---|
| அரசு | 675 |
| அரசு (தொழில் நுட்பம்) | 14 |
| நகராட்சி மற்றும் மாநகராட்சி | 60 |
| தனியார் | 582 |
| | 1331 |
| ஆங்கிலோ இந்திய மேல்நிலைப் பள்ளி | 27 |
| மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி | 63 |
| | 1421 |
| இடைநிலைக் கல்விக்கான மைய அரசு வாரியத்தோடு (C.B.S.E.) இணைந்த மேல்நிலைப் பள்ளிகள் | 53 |
| | 1,474 |

இப்பள்ளிகளில் 1984-85-ல் புதிதாகத் தொடங்கிய பள்ளிகள் 39 (அரசு—13; தனியார்—25; நகராட்சி—1). மேற்கண்ட 1,421 மேல்நிலைப் பள்ளிகளில் (C.B.S.E.) உடன் இணைந்த 53 பள்ளிகள் தவிர மற்றவை மேல்நிலை வகுப்புகளில் பயின்று வந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|
| பொதுப்பாடங்கள் | 1,57,905 | 1,12,165 | 2,70,070 |
| தொழிற் பாடங்கள் | 40,695 | 20,807 | 61,502 |
| | 1,98,600 | 1,32,972 | 3,31,572 |

[1985 ஜூன் 10

2. 1978-79 இல் மேல்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டபொழுது மேல்நிலை வகுப்புகளில் கலை, அறிவியல் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் தேவையில் பெறும் பகுதி, மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பதவிக்கு முழுத் தகுதி பெற்ற உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றம் செய்தும், முதுகலைப்பட்டத் தகுதி பெற்றிராத உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை மேல்நிலை வகுப்புகள் நடத்த "உட்படுத்தியும்" பூர்த்தி செய்யப்பட்டது. அவ்வாண்டும் அதற்குப் பின்னர் உள்ள ஆண்டுகளுக்கும் கூடுதலாகத் தேவைப்பட்ட மேல்நிலைப் பள்ளியாசிரியர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இதுவரை மொத்தம் 7,040 மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1985-86-ல் மேலும் 75 பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இவற்றோடு உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் 250-ம் ஆய்வுக்கூட உதவியாளர் பணியிடங்கள் 900-ம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3. மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர், மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பணியிடங்களுக்கான பணி விதிகள் ஏப்ரல் 1981-ல் வெளியிடப்பட்டன. உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து "உட்படுத்தப்பட்ட" ஆசிரியர்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களாக முறையான நியமனம் பெறுவதற்கு மேற்படிப்புத் தகுதி அடைய போதிய காலம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதுவரை இவ்வாசிரியர்கள் மாதந்தோறும் ரூ. 40 சிறப்பூதியம் பெற்று வருகின்றனர். "உட்படுத்தப்பட்ட" ஆசிரியர்களுக்கு மாநிலக் கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் மூலமாக பத்து மாத, "பட்ட மேற்படிப்புச் சான்றிதழ்" வகுப்பை நடத்த அரசு ஏற்பாடு செய்து இருக்கிறது. இவ்வகுப்பில் தேறியவருபவர் அந்நிறுவனத்திடம் சான்றிதழ் பெற்று அவரவர்களுக்குரிய பாடத்தை மேல்நிலை வகுப்புகளில் நடத்த முழுத்தகுதி உடையவர்களாகக் கருதப்பட்டு மேல்நிலை வகுப்பு ஆசிரியர்களுடைய சம்பள விகிதத்தை அடையத் தகுதி பெறுவர். மேல்நிலைப் பள்ளி உடற்பயிற்சி இயக்குநர்களில் பி.பி.எட். (B.P.Ed.) பட்டம் உள்ளவர்கள் எம்.பி.எட்., தேர்ச்சி பெற உதவுவதற்காக அவர்கள் எம்.பி.எட். பயிலும் காலத்தில் 64 நாட்கள் பணிக்காலமாகக் கருதப்பட அரசு ஆணையிட்டுள்ளது. எம்.பி.எட். பயிற்சிக் காலத்தில் எஞ்சிய பகுதி அவ்வாசிரியர்களுடைய கோடை விடுமுறைக் காலத்திற்குள் அடங்குவதாகும்.

4. மேல்நிலைப் பள்ளிகளில், மேல்நிலை வகுப்புகளில் அறிவியல் பாடங்களின் செயல்முறை வகுப்புகளை நடத்த அறிவியல் ஆசிரியர்களுக்கு உதவியாக 'மானிட்டர்'களை நியமிக்கும் திட்டம் 1983-84-லிருந்து செயற்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மானிட்டருக்கும் மாதம் ரூ. 20 வீதம் ஆண்டுக்கு 10 மாதம் மதிப்பூதியம் தரப்படுகிறது. ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலும்



1985 ஜூன் 10]

11 ஆம் வகுப்பில் அறிவியல் பாடம் ஒவ்வொன்றிலும் ஒரு மானிட்டரும், 12 ஆம் வகுப்பில் அறிவியல் பாடம் ஒவ்வொன்றிலும் ஒரு மானிட்டரும், என்றவாறு மொத்தம் அனைத்துப் பள்ளிகளிலும் ஒவ்வோராண்டும் ஏறத்தாழ 7,742 அறிவியல் மானிட்டர்கள் இருப்பர்.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள் :

5. மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற் பாடங்களைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டின் சாதனை அனைத்திந்திய மட்டத்தில் பாராட்டினைப் பெற்றுள்ளது. 1984-85-ல் மொத்தம் 969 மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. சில பள்ளிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொழிற்பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அவ்வாறு கற்பிக்கப்பட்ட தொழிற் பாடங்களின் மொத்த எண்ணிக்கை 1,432 ஆகும். 1984-85-ல் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று வந்த 3.32 இலட்சம் மாணவர்களில் 61,502 பேர் (அதாவது சுமார் 19 விழுக்காட்டினர்) பின்வரும் விவரப்படி தொழிற்பாடங்களைப் பயின்று வந்தனர் :—

| தொழிற் பாட வகை. | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. வேளாண்மை .. | 4,123 | 375 | 4,498 |
| 2. மனையியல் .. | 132 | 2,193 | 2,325 |
| 3. வாணிகத்துறை .. | 19,150 | 14,433 | 33,583 |
| 4. பொறியியலும், தொழில் நுட்பவியலும். | 14,476 | 190 | 14,666 |
| 5. உடல் நலம் .. | 2,686 | 2,988 | 5,674 |
| 6. பலவகை .. .. | 128 | 628 | 756 |
| மொத்தம். | 40,695 | 20,807 | 61,502 |

6. மைய அரசு நாடெங்கும் அமுல்படுத்திவரும் ஒரு திட்டத்தின்கீழ் மின் கணிப்புப் பொறியைப் பற்றிய கல்வியானது 1984-85-ல் இம்மாநிலத்தில் 10 மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகளில் 16 பள்ளிகள் சென்னையிலும் 6 பள்ளிகள் கோயம்புத்தூரிலும் அதையொட்டியும் அமைந்துள்ளன. இப்பள்ளிகளுக்கு மின் கணிப்புப் பொறி வசதிகளை அளிப்பதுடன் வழிகாட்டும் மையங்களாகச் செயல் படுபவை இந்தியத் தொழில் நுட்பவியல் நிலையம், சென்னை; பூ. சா. கோ. தொழில் நுட்பவியல் கல்லூரி, கோயம்புத்தூர் ஆகியவையாகும்.

7. மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் பொதுப் பாடங்களைப் பயிலும் மாணவர்கள் விருப்பப் பாடங்களாகக் கற்க வேண்டிய 4 பாடங்களில் ஒன்றுக்குப் பதிலாக தொழிற் பாடம் ஒன்றைப் பயில அனுமதிக்கும் திட்டத்தை விருப்பமுள்ள மேல் நிலைப் பள்ளிகள் 1984-85 முதல் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளன.

8. முன்னர் உயர்நிலைப் பள்ளிகளில் இருமுறைப் பாடங்களைக் கற்பித்து வந்தவர்களான 491 முழு நேர தொழிற்பாட ஆசிரியர்களோடு புதிதாக நியமிக்கப்பட்ட 4,300 பகுதி நேர தொழிற்பாட ஆசிரியர்களும் தொழிற் பாடங்களைக் கற்றுத் தருகின்றனர். பகுதி நேர ஆசிரியர்கள் மாத ஊதியம் 1984 ஏப்ரல் முதல் ரூ. 150-லிருந்து ரூ. 300 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுவோரில் பொருத்தமானவர்கள் இருப்பின் அவர்களும் பிற இடங்களில் வெளி நபர்களும் பகுதி நேர ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றனர். மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் தொழிற்பாடங்களுக்காக தளவாடங்கள் வகையில் அரசுப் பணத்திலிருந்தும் மட்டும் செய்துள்ள செலவு ரூ. 40 இலட்சத்திற்கு மேல் ஆகும். இதுபோக அந்தந்தப் பள்ளி வசதிக் கட்டண நிதியிலிருந்தும் தனியார் நிருவாகங்களின் பணத்திலிருந்தும் தொழிற்பாட தளவாடங்களுக்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது. தொழிற்பாட மானிட்டர்களை நியமிக்கும் முன்னோடித் திட்டமும் செயல்பட்டு வருகிறது.

9. மேல்நிலைப் பள்ளி தொழிற்பாட மாணவர்களின் வேலை வாய்ப்புகளை அதிகரித்தல், அவர்கள் உயர் கல்வியும் தொடர் கல்வியும் பெற வழி செய்தல், போன்ற நோக்கங்களுடன், மேல்நிலைக் கல்வித் தொழிற்பாட வகுப்புகளின் பாடங்கள் பாடத் திட்டம் ஆகியவற்றை மாற்றி அமைப்பதற்கான அரசு அமைத்த குழந்தைசாமி குழுவின் பரிந்துரைகளை படிப்படியாக அரசு அமுலாக்க எடுத்துக் கொண்டுள்ளது.

10. மேல்நிலைப்பள்ளி தொழிற்பாடங்களைப் பயின்று தேறி வெளிவரும் மாணவர்களுக்கு 6 மாத சிறப்புப் பயிற்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட 19 தொழில்களில் ஏதாவது ஒன்றில் அவ்வாறு மொத்தம் 1,300 பேருக்கு "தொழில் பழகு பயிற்சிக் குழு" வின் மூலமாக பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 200 ஊதியம் தரப்படும்.





கட்டடங்களும் தளவாடங்களும் :

11. அரசு மேல்நிலைப் பள்ளிகள் 644-க்கு ஒவ்வொன்றிற்கும் ஒரு வகுப்பறையும், ஒரு ஆய்வுக் கூடமும் கட்ட, பெருந்தொகையான ரூ. 12 கோடிக்கு மேல் அரசு ஏற்பளித்துள்ளது. இவற்றில் 582 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

12. இதுவரை தொடங்கியுள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகள் அனைத்திற்கும் தேவையான ஆய்வுக் கூடத் தளவாடங்கள் வகையில் மொத்தம் ரூ. 6.24 கோடிக்கு மேல் செலவிடப்படுகிறது, சிறு தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) மூலமாக இத்தளவாடங்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் மரச் சாமான்கள் வாங்க ரூ. 24 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதிகளை மேம்படுத்த அரசு இதுவரை ரூ. 43 இலட்சம் அளவில் செலவிட்டுள்ளது.

13. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) மேல்நிலைப் பள்ளி கட்டடங்கள் கட்டவும், தளவாடங்கள் வாங்கவும் ஆகும் செலவில் 40 விழுக்காட்டை பள்ளிக்கு ரூ. 1 இலட்சம் என்ற வரம்புக்குட்பட்டு மானியமாகத் தரும் திட்டம் ஒன்றுக்கும் அரசு ஏற்பளித்துள்ளது. இதுவரை அத்தகைய பள்ளிகள்325 இத்திட்டத்தின் கீழ் மானியம் பெற அனுமதிக்கப்பட்டுள்ளன.

14. கல்லூரிகளிலும் பாலிடெக்னிக்குகளிலும் உள்ள ஆய்வுக்கூட வசதிகளை மேல்நிலைப்பள்ளி மாணவர்களும் பயன்படுத்திக்கொள்ள வகை செய்யும் நோக்குடன் "கல்லூரி இணையங்களும்" "பாலிடெக்னிக் இணையங்களும்" இயன்ற இடங்களில் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளன.

## அரசுத் தேர்வுகள்

அரசுத் தேர்வுத் துறை 1975 பிப்ரவரியிலிருந்து தனித்துறையாக இயங்கி வருகிறது. சென்னையிலுள்ள தலைமை அலுவலகத்துடன் இத்துறையில் பின்வரும் வட்டார அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன. (வட்டார அலுவலகங்கள் ஒவ்வொன்றுக்கும் உட்பட்ட மாவட்டங்களின் விவரங்களும் தரப்பட்டுள்ளன) :—

| வட்டார அலுவலகம். | உட்பட்ட மாவட்டங்கள். |
|---|---|
| சென்னை (அக்டோபர் 1984-ல் இருந்து செயல்படுகிறது) | சென்னை, செங்கல்பட்டு, வட ஆர்க்காடு. |
| திருச்சிராப்பள்ளி .. .. | தென் ஆர்க்காடு, திருச்சிராப் பள்ளி, தஞ்சாவூர், புதுக் கோட்டை. |
| கோயம்புத்தூர் .. .. | சேலம், கோயம்புத்தூர், தருமபுரி, நீலகிரி. |
| மதுரை .. .. .. | மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியா குமரி. |

2. இத்துறை நடத்தும் முக்கியமான தேர்வுகளை எழுதும் மாணவர் எண்ணிக்கை வருமாறு:—

| தேர்வுகள். | 1984 மார்ச்/ஏப்ரல் தேர்வு எழுதியோர். | 1984 மார்ச்/ஏப்ரல் தேறியோர் விழுக்காடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| எஸ்.எஸ்.எல்.சி.— | | (சதவீதம்) |
| மொத்தம் (தனிபட்ட முறையில் எழுதுவோர் உட்பட.) | 3,75,841 | * |
| பள்ளியில் பயின்று முடித்து விட்டு எழுதுபவர்கள். | 2,86,841 | 57.5 |
| ஆங்கிலோ-இந்தியன் .. .. | 2,867 | 88 |
| மெட்ரிக்குலேசன் .. .. .. | 4,493 | 89 |
| மேல்நிலைப்பள்ளித் தேர்வு : | | |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட). | 1,75,629 | * |
| பள்ளியில் பயின்று முடித்துவிட்டு எழுதுவோர். | 1,31,046 | 67 |
| தொழில் நுட்பத் தேர்வு (வணிக வியல் அல்லாதவை). | 2,900 | .. |



| தேர்வுகள். | 1984 செப்டம்பர்/அக்டோபர் தேர்வு எழுதியோர். | 1985 மார்ச்/ஏப்ரல் தேர்வு எழுத இருப்போர் (தோராயமாக). |
|---|---|---|
| (1) | (4) | (5) |
| எஸ்.எஸ்.எல்.சி.— | | |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உள்பட.) | 1,53,625 | 3,87,000 |
| பள்ளியில் பயின்று முடித்து விட்டு எழுதுபவர்கள். | .. | .. |
| ஆங்கிலோ-இந்தியன் .. .. | 425 | 3,500 |
| மெட்ரிக்குலேசன் .. .. | 475 | 5,800 |
| மேல்நிலைப் பள்ளித் தேர்வு : | | |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட.) | 51,758 | 1,87,000 |
| பள்ளியில் பயின்று முடித்துவிட்டு எழுதுவோர். | .. | .. |
| தொழில் நுட்பத் தேர்வு (வணிக வியல் அல்லாதவை). | 15,000 | 16,000 |

*பகுதி முறைத் தேர்வு 1978 மார்ச் மாதத்திலிருந்து அமுலாக்கப்பட்டதன் காரணமாக மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) தேர்வு எழுதுபவர்களின் தேறியோர் விழுக்காடு கணக்கிட்டுத் தர இயலவில்லை.

தேர்வு மையங்கள்.

| | செப்டம்பர்/அக்டோபா 1984. | மார்ச்/ஏப்ரல் 1985. |
|---|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி. .. | 405 | 1,349 |
| மேல்நிலைப் பள்ளித் தேர்வு. | 174 | 758 |

3. மேல்நிலைப் பள்ளித் தேர்வை பொதுக் கல்வி பாடங்கள் 27-க்கும் தொழிற் கல்வி பாடங்கள் 70-க்கும் நடத்த வேண்டியிருக்கிறது. பல்வேறு பாடங்களின் தொகுப்புகள் 264 ஆகும். தொழிற் பாடத் தேர்வுகள் செயல் முறைக்குமுக்கியத்துவம் தரும் வகையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

4. எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைப் பள்ளித் தேர்வுகளை தனிப் பட்ட முறையில் எழுதுவதற்குக் கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்படு கிறது :—

| தேர்வு. | தனிப்பட்ட முறையில் எழுதுவதற்கான தகுதிகள்: கல்வித் தகுதி. | குறைந்த பட்ச வயது. |
|---|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி. | 8-வது வகுப்பில் தேறியிருத்தல். | 16 |
| மேல்நிலை பள்ளித் தேர்வு (தொழிற் சாராத பாடங்கள் அதுவும் செயல் மூறை இல்லாத பாடங்கள் மட்டும்). | 10-வது வகுப்பு தேறியிருத்தல். | 18 |

5. பதினான்கு வயது முடித்தவர்கள் தனிப்பட்ட முறையில் கலந்து கொள்ளும் வகையில் நடத்தப் பெறும் தொடக்கப் பள்ளி இறுதி பொதுத் தேர்வு (ஈ.எஸ்.எல்.சி.) ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப் பெறுகிறது. 1984 டிசம்பரில் இத் தேர்வில் 4,025 பேர் கலந்து கொண்டனர்.

6 தனிப்பட்ட முறையில் தேர்வு எழுதுபவர்களுக்கான நுழைவுச் சீட்டுகளும், அவர்களின் தேர்வுச் சான்றிதழ்களும் குறிப்பிட்ட தேர்வு மையங்கள் மூலம் விரைவாக வழங்கப்படுகின்றன.



7. 1984 ஆம் ஆண்டு அரசுத் தேர்வு இயக்குநர் அலுவலகத்தில் ஆய்வு நடத்திய முதுநிலை ஐ.ஏ.எஸ். அலுவலர். இவ்வியக்ககம் பல்வேறு அரசுத் தேர்வுகளை சுமுகமாகவும் திறமையாகவும் நடத்தி வருவதைப் பாராட்டி யுள்ளார்.

## V. வயது வந்தோர் கல்வியும் பள்ளி சாராக் கல்வியும்

வயது வந்தோர் கல்விக்கும் பள்ளி சாராக் கல்விக்கும் 1985—86 நிதி நிலை அறிக்கையில் ரூ. 4 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### வயது வந்தோர் கல்வி.

2. எழுத்தறிவு பெற்றவர்கள் சதவீதம் தமிழ் நாட்டிலும் அனைத்திந்தியா விலும் பின்வருமாறு இருந்து வருகிறது :—

| சென்சஸ் ஆண்டு. | ஆண். | பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| | தமிழ்நாடு. | | |
| 1971 .. .. .. | 51.78 | 26.36 | 39.46 |
| 1981 .. .. .. | 57.19 | 34.12 | 46.74 |
| | இந்தியா. | | |
| 1971 .. .. .. | 39.51 | 18.44 | 29.34 |
| 1981 .. .. .. | 45.78 | 24.88 | 36.17 |

3. தமிழ்நாட்டில் வயது வந்தோர் கல்வி கீழே விவரிக்கப்பட்டுள்ள பல் வேறு திட்டங்களின் கீழ் அளிக்கப்படுகிறது.

### ஊரக (தொழில் சார்ந்த) எழுத்தறிவிப்புப் பணி.

4. மைய அரசின் முழுப்பண உதவியுடன் நடைபெறும் இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் உள்ள 16 மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு 300 மையங்கள் வீதம் 4,800 மையங்கள் செயல்படுகின்றன. இத்திட்டத்திற்கு நிதி உதவித் தொகையை 1—2—84 முதல் மைய அரசு உயர்த்தியுள்ளது. அதன்படி ஒரு திட்டத்திற்கான (300 மையங்கள்) செலவு ரூ. 5.20 இலட்சத்தி லிருந்து ரூ. 8.54 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. சென்னை தவிர பிற மாவட்டங்களைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமப்

புற பகுதிகளில் அருகருகே உள்ள இரண்டு அல்லது மூன்று ஊராட்சி ஒன்றியங்களுக்குள்ளாக இந்த 300 மையங்களும் செயல்படுகின்றன. 30 மையங்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் உள்ளார். அந்தந்த வட்டாரத்திலுள்ள வேலைவாய்ப்பற்ற பட்டதாரி ஆசிரியர்கள், பட்டதாரிகள், இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்கள் ஆகியவர்களிடையேயிருந்து மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு மாதம் ரூ. 500 சம்பளமும் ரூ. 150 போக்குவரத்து செலவுக்கும் வழங்கப்படுகிறது. பயிற்சி பெற்று வேலைவாய்ப்பின்றியுள்ள ஆசிரியர்கள், எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்கள் போன்றவர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் வயது வந்தோர் கல்வி மையங்களில் "எழுத்தறிவு ஊக்குநர்கள்" ஆக நியமிக்கப் படுகிறார்கள். இதற்காக அவர்களுக்கு வயது வந்தோர் கல்வி பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. மாதம் 100 சிறப்பூதியம் மண்ணெண்ணெய் மற்றும் சில்லரைச் செலவுக்காக ரூ. 35-ம் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும் பின்வரும் முன்னுரிமைப்படி எழுத்தறிவு இல்லாதவர்கள் 30 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் :—

(1) ஆதி திராவிடர் மகளிர்.

(2) பெண்கள் (பொதுவாக).

(3) ஆதி திராவிடர் (ஆடவர்).

(4) பிற வகுப்பினர்.

அந்தந்த இடத்துக்கு வசதியான நேரங்களில் இவ்வயது வந்தோர் கல்வி வகுப்புகள் 10 மாத காலம் நடக்கின்றன. 12 மாவட்டங்களிலுள்ள மையங்கள் இத்தகைய 10 மாத வகுப்புகளை ஆண்டுக்கு ஒரு தொகுதியினர் வீதம் 5 தொகுதியினருக்கு நடத்தி முடித்துள்ளன. பெரியார் மாவட்டத்தில் இரண்டாவது தொகுதியினருக்கும். சென்னை; கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டத்தில் ஒரு தொகுதியினருக்கும் இப்பணி நடந்து முடிந்துள்ளது.

5. மேலும் 11 திட்டங்களை (ஒவ்வொன்றும் 300 மையங்களைக் கொண்டது) இத்திட்டத்தின் கீழ் தொடங்க மைய அரசு ஏற்பளித்துள்ளது. அவை விரைவில் செயல்படத் தொடங்கும் .



### மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டம்.

6. இம் மாநிலத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் 61-ல் 1980 பிப்ரவரி-மார்ச் மாதங்களில் மொத்தம் 6,100 வயது வந்தோர் கல்வி மையங்களை இவ்வரசு தன் நிதியிலிருந்து தொடங்கியது. இம்மையங்கள் ஐந்து தொகுதியினருக்கு எழுத்தறிவிக்கும் பணியை முடித்து, இவற்றின் மூலம் 11.7 இலட்சம் பேர் பயன் பெற்றனர். 1983 அக்டோபர் முதல் மேலும் 54 ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதலாக 5,400 மையங்கள் தொடங்கப் பட்டுள்ளன. இம்மையங்கள் ஒரு தொகுதியினருக்கு எழுத்தறிவித்துவிட்டு இரண்டாவது தொகுதியினருக்கு எழுத்தறிவித்து வருகின்றன. ஊரக (தொழிற் சார்ந்த) எழுத்தறிவுத் திட்ட மையங்களைப் போன்றே இம்மையங்களும் செயல்படுகின்றன. முப்பது மையங்களுக்கு ஒருவர் வீதம் மேற்பார்வையாளர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 500 சம்பளமும் போக்குவரத்துச் செலவுக்கு ரூ. 60-ம் தரப்படுகிறது. இந்த 11,500 மையங்களுக்கும் சேர்த்து 1985-86-ல் மொத்தம் ரூபாய் 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. 1985-86-ல் 6 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் 100 சதவீதம் வயது வந்தோர் கல்வி மையங்கள் 600 தொடங்கப்படும்.

8. வயது வந்தோர் கல்வித்திட்டத்தை பயனுள்ளதாக்கவும், கல்வியறிவற்றவர்களை எழுத்தறிவு மையங்களுக்கு ஈர்ப்பதற்கும் (எல்லா திட்டங்களின் கீழும் நடத்தப்படும்) எழுத்தறிவு மையங்களில் அந்தந்த வட்டார தேவைக்கேற்ப சிறு சிறு கைத்தொழில்களும் அவர்களுக்குக் கற்றுத்தரப் படுகின்றன. அத்தொழில்கள் மூலம் அவர்கள் தம் வருமானத்தையும் பெருக்கிக்கொள்ள முடியும். அவர்கள் கடன் வசதி பெறுதல், உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்தல் ஆகிய காரியங்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கும் அவர்களுக்கு உதவப்படுகிறது.

### பிற அமைப்புகளின் எழுத்தறிவுப் பணிகள்.

9. தனியார் அமைப்புகளும் வயது வந்தோர் கல்வி மையங்களை (1,379 மையங்கள்) நடத்தி வருகின்றன. நேரு இளைஞர் மையங்கள் 60 மையங்களையும், கல்லூரிகள் 626 மையங்களையும் நடத்தி வருகின்றன.

[1985 ஜூன் 10

10. வயது வந்தோர் கல்விக்கான பல்வேறு திட்டங்களிலும் சேர்த்து மொத்தம் இதுவரை எழுத்தறிவு பெற்றுள்ளவர்கள் விவரம் வருமாறு :—

| திட்டத்தின் பெயர். | ஆடவர். | மகளிர். | மொத்தம். | மொத்த எண்ணிக்கையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (இலட்சங்களில்) | | | |
| 1 ஊரக தொழில் சார்ந்த எழுத்தறிவுத் திட்டம். (1979 ஜூலை—1984 டிசம்பர்) | 3.18 | 5.03 | 8.21 | 4.07 |
| 2 மாநில அரசின் வயது வந்தோர் கல்வி திட்டம் 1980—81—1984—85). | 3.89 | 7.83 | 11.72 | 6.43 |
| 3 தொண்டு நிறுவனங்கள் (1979—80—1984—85). | 0.65 | 1.16 | 1.81 | 0.97 |
| 4 நேரு இளைஞர் மையங்கள் 1979—80—1984—85). | 0.18 | 0.13 | 0.31 | 0.15 |
| 5 கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் (1979—80—1984—85) | 0.45 | 0.38 | 0.83 | 0.40 |
| மொத்தம் .. | 8.35 | 14.53 | 22.88 | 12.02 |



1985 ஜூன் 10]

மகளிரும் ஆதிதிராவிடர், பழங்குடியினரும் பெரும் அளவில் பயன் பெற்றுள்ளது ஊக்கம் தருவதாகும்.

11. 1984-ம் ஆண்டின் இறுதியில் செயல்பட்டு வந்த வயது வந்தோர் கல்வி மையங்களின் மொத்த எண்ணிக்கை 18,365 ஆகும். அம் மையங்களில் பயின்று வந்தோரின் எண்ணிக்கை 5.85 லட்சம் பேர் ஆகும். இவர்களுள் பெரும்பாலோர் அதாவது 5.02 இலட்சம் பேர் மகளிர் ஆவர். மொத்த எண்ணிக்கையாகிய அந்த 5.85 இலட்சம் பேரில் 2.91 இலட்சம் பேர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்தவராவர்.

12. வயது வந்தோர் கல்வி மையங்களில் பெண்களைச் சேர்ப்பதில் சிறந்த பணியாற்றுவதற்கான விருதுகள் வழங்கும் திட்டம் ஒன்றை மைய அரசின் கல்வித் துறை 1983-84-லிருந்து செயல்படுத்தி வருகிறது. அனைத்து மாநிலங்களிலும் உள்ள அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் மாவட்டத்துக்கு 5 சிறந்த வயது வந்தோர் கல்வி மையங்களுக்கு, மையத்துக்கு ரூ. 5,000 வீதமும்; ஒவ்வொரு மாநிலத்திலும் மிகச் சிறந்த சாதனை செய்த வருவாய் மாவட்டம் ஒன்றுக்கு ரூ. 3 இலட்சமும்; சிறந்த சாதனைகள் செய்த மாநிலங்கள் நான்கிற்கு மாநிலத்திற்கு ரூபாய் 25 இலட்சம் வீதமும் இவ்விருதுத் தொகைகள் வழங்கப்படுகின்றன. 1982-83-ல் நிகழ்ந்த சாதனைக்கான விருதுகள் 1983-84-ல் வழங்கப்பட்டன. அவற்றில் தமிழ் நாட்டிற்கு ரூ. 31.75 இலட்சம் மதிப்புள்ள விருதுத் தொகைகள் கீழ்க்கண்டவாறு கிடைத்துள்ளது :—

| | ரூபாய். |
|---|---|
| 1 ஒரு மையத்திற்கு ரூ. 5,000 வீதம் 75 மையங்களுக்கு (மாவட்டத்திற்கு 5 மையங்கள் வீதம் சென்னையைத் தவிர 15 மாவட்டங்களுக்கு). | 3,75,000 |
| 2 சிறந்த மாவட்டம் (செங்கல்பட்டு) .. | 3,00,000 |
| 3 மாநில விருது .. .. .. | 25,00,000 |
| மொத்தம் .. | 31,75,000 |

13. 1983-84 ஆம் ஆண்டில் மாநில விருது பெற்ற நான்கு மாநிலங்களுக்குள்ளும் தமிழ்நாட்டின் சாதனையே முதலிடம் வகித்தது. சிறந்த மாநில விருதாகக் கிடைத்துள்ள ரூபாய் 25 இலட்சம் தொகையைக் கொண்டு வயது வந்தோர் கல்விப் பணி புரியும் மகளிருக்குப் பயிற்சி அளிப்பதற்கான விடுதி மற்றும் பயிற்சி நிலையம் ஒன்று பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலக வளாகத்தில் கட்டப்படும். செங்கற்பட்டு மாவட்டத்திற்கு கிடைத்துள்ள **விருதுத்**

தொகை ரூபாய் 3 இலட்சத்தைக் கொண்டு வலம்வரும் ஊர்திகள் இரண்டு வாங்கி அவற்றில் 16 மில்லி மீட்டர் படக்கருவி, கடச்சுருள் கருவி, டேப்ரிக்கார்டர், வானொலிப் பெட்டி போன்ற ஒலி-ஒளிக் காட்சிகளுக்கான தளவாடங்களும் பொருத்தி வயது வந்தோர் கல்வியை கிராமங்களில் பரப்புதற்கு அவ்வூர்திகள் பயன்படுத்தப்படும். மையத்துக்கு ரூபாய் 5,000 வீதம் 75 மையங்களுக்கு கிடைத்துள்ள தொகை அம் மையங்களுக்கு தையல் இயந்திரம், பின்னல் இயந்திரம், புத்தகங்கள் போன்றவை வாங்கப் பயன்படுத்தப்படும்.

14. 1983-84-ம் ஆண்டில் நிகழ்ந்த சாதனையின் அடிப்படையில் 1984-85 ஆம் ஆண்டில் விருதுகள் வழங்கப்படும். இவ்வாண்டும் மாநில விருதை தமிழ்நாடு பெற்றுள்ளது மகிழ்ச்சிக்குரியது.

### ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்கள்.

15. புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள்,, மீண்டும் பழையபடி எழுத்தறிவற்ற நிலைக்குப் போய்விடாமல் தடுப்பதற்காக அவர்களுக்குத் தக்க புத்தகங்களும், சஞ்சிகைகளும் அளிப்பது, ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்களின் நோக்கமாகும். 1983-84-ல் தொடங்கிய இத்தகைய மையங்கள் 426-ம் இப்பொழுது இரண்டாம் ஆண்டாக நடந்து வருகின்றன. 1984-85ல் தொடங்கிய 1,000 மையங்களும், செயல்பட்டு வருகின்றன. இவைபோக ஊரக தொழில் சார்ந்த எழுத்தறிவு திட்டத்தின்கீழ் சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி தவிர பிற 13 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 100 மையங்கள் வீதம் மொத்தம் 1,300 எட்டறிவுத் திட்ட மையங்கள் விரைவில் தொடங்கப்பட இருக்கின்றன.

### நகரப் பகுதிகளிலுள்ள வயது வந்தோருக்கான தொழில் சார்ந்த கல்வி.

16. நகரப் பகுதிகளிலுள்ள வயது வந்தோருக்கான 1984-85-ல் தொழில் சார்ந்த பள்ளி சாராக் கல்வி மையங்கள் 66 துவக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மையத்திலும் யாதாவும் ஒரு தொழில் பற்றிக் கற்பிக்க, பயிற்சியாளர் ஒருவர் மாதம் ரூ. 100 ஊதியத்தில் பணி புரிகிறார். ஒவ்வொரு மையத்திற்கும் ரூ. 1,000 செலவில் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கித் தரப்பட்டுள்ளன.

### தொழிலாளர் கல்வி நிலையங்கள்.

17. சென்னையில் தொழிலாளர் கல்வி நிலையம் ஒன்று 1982- ஜூலை மாதத்தில் அமைக்கப்பட்டது. அது, நகர்ப்புறங்களிலும் பிற தொழில் பகுதிகளிலும் உள்ள தொழிலாளர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்கிறது. இத்தகைய நிலையம் ஒன்று மதுரைக்கும் ஏற்பு அளிக்கப்பட்டுள்ளது. அது விரைவில் செயல்படத் துவங்கும். இவ்விரு நிலையங்களும் தனித்தனி அறுைகைக் குழுக்களின்கீழ் உள்ளன.



### பள்ளிசாராக் கல்வி.

18. பள்ளிக்கே செல்லாதவர்களும் சென்ற பின் இடையில் நின்றுவிட்டவர்களுமான 6—14 வயதுச் சிறுவர்களுக்குக் கல்வி புகட்ட பள்ளிசாராக் கல்வி மையங்கள் நடத்தப்படுகின்றன. 1984-85-ல் 150 மையங்கள் செயல்பட்டு வந்தன. இம் மையங்கள் ஒவ்வொன்றும் மூன்று ஆண்டுகள் வேலை செய்யும். வெவ்வேறு தொகுதியைச் சார்ந்த (பள்ளியிலிருந்து இடையில் நின்று விட்ட) மாணவர்களுக்கான பத்து மாத வகுப்புகளை இம் மையங்கள் நடத்துகின்றன. பள்ளிக் கட்டிடங்களில் இம் மையங்கள் நடைபெறுகின்றன. பள்ளி ஆசிரியர்களே பள்ளிசாராக் கல்வி வகுப்புகளை மாலையில் இரண்டு மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு மாத மதிப்பூதியமாக ரூ. 50 பெறுகின்றனர். ஒவ்வொரு மையத்திலும் ஏறத்தாழ 30 மாணவர்கள் பயிலுகின்றனர்.

19. மேலும் இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசிப் பகுதியிலுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக 30 பள்ளிசாராக் கல்வி மையங்கள் 1980-81-ல் தொடங்கப்பட்டன. இம் மையங்கள் ஒரு தொகுதியினருக்கு கல்வி புகட்டும் பணியை 1983-ல் நிறைவேற்றி முடித்துள்ளன. தற்பொழுது வேறு இடங்களில் இந்த 30 மையங்களும் செயல் பட்டு அப்புதிய இடங்களில் உள்ள அத்தகைய சிறுவர்களுக்குக் கல்வி புகட்டி வருகின்றன. வட ஆற்காடு மாவட்டம் குடியாத்தம் பகுதியிலுள்ள தீப்பெட்டி தொழிற்சாலைகளில் வேலை செய்து வரும் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக பள்ளிசாராக் கல்வி மையங்கள் 10 விரைவில் திறக்கப்பட விருக்கின்றன. மேலும் "யூனிசெப்" உதவியுடன் சாத்தூர், வெம்பக்கோட்டை பகுதிகளில் பள்ளிசாராக் கல்வி மையங்கள் மேலும் 70 திறக்கப்பட இருக்கின்றன.

20. இம்மையங்களில் சேருகின்ற மாணவர்களுக்கு 8-ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதுவதற்கான பயிற்சி மூன்றாண்டுகளுக்குள் அளிக்கப்படுகிறது. முழுநேர இடைநிலை ஆசிரியர்கள் அல்லது பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் (இடைநிலை ஆசிரியர் சம்பள விகிதத்தில்) இம் மையங்களை நடத்துகின்றனர். இம் மையங்களுக்கென தனியாக நியமிக்கப்பட்டுள்ள களப்பணி அலுவலர்கள் இம் மையங்களை நிருவகிக்கின்றனர்.

## VI. கல்லூரிக் கல்வி

1985–86 வரவு-செலவுத் திட்டத்தில் கல்லூரிக் கல்விக்கென ரூ. 48 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுக் கல்விக்கான பல்கலைக் கழகங்களுக்கு வழங்கும் மானியம், அரசுக் கல்லூரிக்கான கட்டிடச் செலவு மற்றும் மாணவர்களுக்கான கடனுதவித் தொகை ஆகியவையும் இத்தொகையில் அடங்கும்.

2. தற்பொழுது பின்வரும் விவரப்படி கலை, அறிவியல், வணிகவியில் கல்லூரிகள் 193 செயல்பட்டு வருகின்றன.

| கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகள். | கல்லூரிகளின் எண்ணிக்கை. | | மாணவர்களின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | |
| | | | முறையான வகுப்புகள்— | |
| அரசினர் கல்லூரிகள் .. | 53 | | பட்டப்படிப்பு .. .. | 1,76,426 |
| மானியம் பெறும் தனியார் கல்லூரிகள். | 134 | 193* | பட்ட மேற்படிப்பு .. | 15,635 |
| | | | | 1,92,061 |
| மானியம் பெறாத தனியார் கல்லூரிகள். | 6 | | மாலை நேர வகுப்புகள் | 14,000 |
| | | | | 2,06,061 |



| | | |
|---|---|---|
| பிற கல்லூரிகள்— | | |
| கல்வியியல் கல்லூரிகள் .. .. | 23 | 2,882 |
| இதர கல்லூரிகள் .. .. | 22 | 2,546 |
| மொத்தம் .. | | 5,428 |

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்கால தொடக்கத்திற்கு முன் (அதாவது 1979–80-ல்) கல்லூரிகளில் பயின்று வந்த மொத்த மாணவர் எண்ணிக்கை 1,36,000. அவ்வெண்ணிக்கை 1984-85ல் 1,92,000 ஆக அதிகரிப்பது தெரியவரும்.

* சுய ஆட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள் 13 இவற்றுள் அடங்கும்.

பக்கம்

[illegible] ஜூன் 10]

6. பாரதியார் பல்கலைக் கழகம் வகுத்துக்கொண்டுள்ள தொலை நோக்கு திட்டத்திற்கேற்ப அப்பல்கலைக் கழகத்தில் கீழ் இதுவரை பின்வரும் புது ஆய்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன :—

(1) மின்கணிப்புப் பொறி மையம்.
(2) நிருவாக மற்றும் தொழில்நுட்பத் திறன் வளர்ச்சிப் பள்ளி.
(3) மொழிகள் பள்ளி.
(4) கல்வி பயிற்றுவிப்பு ஆதாரங்கள் பள்ளி.
(5) சுற்றுப்புற சூழ்நிலை மையம்.
(6) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மையம்.

7. பாரதிதாசன் பல்கலைக் கழகம் குறிப்பிட்ட படிப்புகள் மற்றும் ஆய்வுக்கான சிறப்பு மையங்களைத் தொடங்கும் தன் கொள்கையின் அடிப்படையில் முக்கியமாக பாரத கன மின் தொழில் நிறுவனத்துடன் இணைந்த கூட்டு முயற்சியாகும் நெய்வேலி லிக்னைட் நிறுவனம், தமிழக மின்வாரியம் போன்றவற்றின் ஒத்துழைப்புடன் பின்வரும் இரு சிறப்புப் பிரிவுகளை, அதாவது

1. நிருவாகப் பயிற்சிக்கான பாரதிதாசன் நிறுவனம் ;
2. ஆற்றல் ( energy ) பற்றிய ஆய்வுக்கான பாரதிதாசன் பள்ளி,

ஆகியவற்றை நிறுவியுள்ளது. வருங்காலத்தில் இவை தலைசிறந்த போதனை மற்றும் ஆராய்ச்சி மையங்களாகத் திகழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பட்ட வகுப்புகள் அனைத்தையும் சீரமைத்து மேம்படுத்தி தனிப் படுத்துதல், செயல் முறைப் பாடங்கள் இரண்டை புகுத்துதல். மூன்றாண்டு பட்ட வகுப்பில் செயல் முறைப் பணியைச் சேர்த்தல் ஆகிய வளர்ச்சிப் பணிகளின் முதல் கட்டத்தை இப்பல்கலைக் கழகம் நிறைவேற்றியுள்ளது. இப்பல்கலைக் கழகத்தோடு இணைந்த கல்லூரிகள் அனைத்தும் 1982-83 முதல் சீரமைத்த பாடங்களையே நடத்தி வருகின்றன.

8. கொடைக்கானலில் தொடங்கப்பட்டுள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும் தனித்தன்மை வாய்ந்தவை. அதன் பணி மற்றைய பல்கலைக் கழகங்களுடைய பணியிலிருந்து மாறுபட்டது. மகளிர் பல்கலைக் கழகத்தின் முக்கியப் பணி மகளிரைப் பற்றியும் மகளிர் நலனைப் பற்றியும் ஆய்வுகளைச் செய்வதும், ஆய்வறிக்கைகளின் அடிப்படையில் அரசு மற்றும் தனியார் துறைகளில் அமைந்துள்ள மகளிர் நல நிறுவனங்களுக்கு அறிவுரைகளையும் பரிந்துரைகளையும் வழங்குவதும் ஆகும். (ஆண்களோடு பெண்கள்) "சரிநிகர் சமானம்" என்னும் குறிக்கோளை அடைவதற்கான சரியான வழிமுறைகளை வெளிக்கொணர்ந்து காட்டி அவர்கள் வளர்ச்சிக்கு உதவி செய்வதே மேற்சொன்ன ஆய்வுகள், அறிவுரைப்பணிகள் ஆகியவற்றின் முடிவான பயனாகும். ஆழ்ந்த

[1985 ஜூன் 10

ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய துறைகள், புலங்கள், ஆகியவற்றை அடையாளம் கண்டுகொள்ளும் நோக்குடன் தமிழகத்திலுள்ள மகளிர் கல்லூரிகள் அனைத்தின் முதல்வர்கள் மாநாடு, மகளிர் நல அமைப்புகளின் மாநாடு, மகளிர் கல்வி பற்றிய கருத்தரங்கு ஆகியவற்றை இப் பல்கலைக் கழகம் நடத்தியுள்ளது. இப் பல்கலைக் கழகம், தன்சிறந்த குறிக்கோளை நோக்கி நேரிய பாதையில் நடைபோடத் தொடங்கியுள்ளது.

9. ஏற்கெனவே அறிவித்துள்ள காரைக்குடி பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கான சட்ட முன்வடிவம் விரைவில் சட்டமன்றத்தின் முன் வைக்கப்படும். சேலத்தில் சென்னைப் பல்கலைக் கழகமும், திருநெல்வேலியில் மதுரை காமராசர் பல்கலைக் கழகமும் பட்ட மேற்படிப்பு மையங்களை ஏற்படுத்தியுள்ளன. உரிய காலத்தில் சேலத்திலும் திருநெல்வேலியிலும் தொடங்கவிருக்கும் பல்கலைக் கழகங்களுக்கு அப் பட்ட மேற்படிப்பு மையங்கள் நிலைக்களன்களாக இருக்கும். அவ்விரு மையங்களிலும் கூடுதல் வசதியை செய்ய 1985-86-ம் ஆண்டில் சிறப்பு மானியங்கள் வழங்கப்படும்.

**தமிழ்ப் பல்கலைக் கழகம்—**

10. தமிழ்மொழியின் தொன்மையையும் சிறப்பையும் கண்டறிந்து நிறுவவும், புதுமைக் கருத்துக்களும் பூத்துக் குலுங்கும் வளமிக்க மொழியாக அதனை வளர்க்கவும், உதவும் உயர்நிலை ஆய்வு மையமாக தஞ்சாவூரில் 1981 செப்டம்பரில் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. 1984-85-ஆம் ஆண்டில் அப் பல்கலைக் கழகத்தில் 50-க்கு மேற்பட்ட பேராசிரியர்களும் ஆராய்ச்சியாளர்களும் இருந்தனர். டி.லிட். பட்டத்திற்கான உயர் ஆய்வில் ஈடுபட்டிருந்தவர்கள் 12 பேர்களாவர். இப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு புலங்களும் மற்றும் நூலகம், அருங்காட்சியகம், மின் கனிப் பொறி மையம் ஆகியவையும் மேம்படுத்தப்பட்டு ஆராய்ச்சி வசதிகள் அதிகப்படுத்தப்படுகின்றன. இப் பல்கலைக் கழகம் பின்வரும் ஐந்து விரிவுப்பணி மையங்களையும்—அதாவது பழங்குடிகள் பண்பாட்டு ஆய்வு மையம், உதகமண்டலம்; தத்துவ ஆய்வு மையம், காஞ்சிபுரம்; தமிழ் கலைக் களஞ்சியம், மற்றும் தமிழ்ப் பேரகராதி மையம் (இரண்டும் தஞ்சாவூரில்); கடலடியில் தொல்பொருளாய்வு குறித்த மையம், மண்டபம் ஆகியவற்றை நடத்தி வருகிறது. சிறந்த புத்தகங்கள் பலவற்றை வெளியிட்டு வருவதுடன் இப்பல்கலைக் கழகம் "தமிழ் கலை" மற்றும் Tamil Civilization என்னும் இரண்டு முத்திங்கள் ஆராய்ச்சி இதழ்களையும் வெளியிட்டு வருகிறது.



1985 ஜூன் 10]

**அஞ்சல் வகுப்புகளும் தொடர் கல்வியும்—**

11. மதுரை காமராசர், அண்ணாமலை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள் நடத்தி வரும் அஞ்சல் முறை வகுப்புகளில் 1984-85-ல் பட்ட வகுப்புகளிலும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளிலும் 1.26 இலட்சம் பேர் பயின்று வந்தனர். மேலும் மதுரை காமராசர் பல்கலைக் கழகம் நடத்தி வந்த "அனைவரும் படிக்கத்தக்க பல்கலைக் கழக" வகுப்புகளில் ஏறத்தாழ 13,540 பேர் பயின்று வந்தனர். கடந்த மூன்று ஆண்டுகளில் அரசுக் கல்லூரிகள் 12-இல் பி.காம். மாலைநேர வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

**கல்வித் தரமேம்பாடு—**

12. கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசுக் கல்லூரிகளில் புதிதாக 65 பட்ட வகுப்புகளும் (பி.ஏ.—19, பி.எஸ்சி.—35, பி.காம்.—11); 30 பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் (எம்.ஏ.—14, எம்.எஸ்சி.—15, எம்.காம்.—1) தொடங்கப்பட்டுள்ளன. 1985-86-இல் புதிதாகப் பட்ட வகுப்புகள் தொடங்க ரூ. 3 இலட்சம், பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்க ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளன.

13. அரசுக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் 14 கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகளும், 3 கல்லூரிகளில் கூடுதல் ஆய்வுக் கூடங்களும், 5 கல்லூரிகளில் விடுதிக் கட்டடங்களும், 3 கல்லூரிகளில் சுற்றுச்சுவர்களும் கட்டித் தரப்பட்டன. சிதம்பரத்தில் புதிதாகத் தொடங்கியுள்ள அரசு கலைக் கல்லூரிக்கு மொத்தம் ரூ. 87 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அரசுக் கல்லூரிகளுக்குத் தேவையான கூடுதல் ஆய்வகக் கருவிகள், மரச்சாமான்கள் முதலிய வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

14. அனைத்துக் கல்லூரிகளில் நடக்கும் பல்வேறு பாடங்களையும் ஒரு சேர நோக்கி தேவையான வளர்ச்சிப் பணிகளைத் திட்டமிடுவதற்காக "கல்லூரி வளர்ச்சிப் பிரிவு" ஒன்று கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில் 1984-85-லிருந்து அமைக்கப்பட்டுள்ளது.

15. கல்லூரி ஆசிரியர்களுடைய பயிற்றுவிக்குந் தரஉயர்வுக்காக அவர்களை ஆராய்ச்சிப் படிப்புக்கு அனுப்புவதற்கான பல்கலைக்கழக மானியக் குழுத் திட்டத்தின்கீழ் 1984-85-இல் 360 ஆசிரியர்கள் எம்.பில். படிப்புக்கு அனுப்பப்பட்டனர். அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் உள்ள பட்டதாரி பயிற்றுநர்களும் விளக்குநர்களும் ஆண்டுதோறும் சிலர் வீதம் எம்.ஏ./எம்.எஸ்சி. படிப்பிற்கு மாநில அரசு செலவில் முகாமையில் அனுப்பும் திட்டத்தின்கீழ் 1984-85 முடிய 174 பேர் அனுப்பப்பட்டனர்.

மேலும் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் (பி.எச்.டி.) பட்டம் பெறுவதற்காக அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள் 12 பேர் கடந்த இரண்டு ஆண்டுகளில் முகாமையில் அனுப்பப்பட்டுள்ளனர்.

படிப்புதவித் தொகையும் பயிற்சி உதவிப்பணமும்—

16. கல்லூரிக் கல்வித்துறை நிருவகித்து வரும் படிப்புதவித் தொகைத் திட்டங்களுள் முக்கியமான சிலவற்றின்கீழ் பயன்பெறுவோர் விவரம் பின்வருமாறு :—

| திட்டம். | 1984-85-ல் புதிதாக தந்த படிப்புதவித் தொகைகள் எண்ணிக்கை (மேல்நிலைப் பள்ளிகளில் தரப்பட்டவை உட்பட). | 1984-85-ல் (புதியவை மற்றும் புதுப்பிக்கப் பட்டவை) மொத்த எண்ணிக்கை. | 1985-86-ல் வரவு-செலவு மதிப் பீட்டில் ஒதுக்கி யுள்ள தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| தேசிய படிப்புதவித்தொகைத் திட்டம் (ஓரளவு மைய அரசு நிதி உதவி பெறுவது). | 1,785 | 4,424 | 60 |
| தேசிய கடன் படிப்புதவித் திட்டம் (முழுவதும் மைய அரசு நிதியுதவி பெறுவது). | 1,392 | 6,352 | 32 |
| பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய மாநில அரசு படிப்புதவித் தொகை. | 70 | 91 | 3 |





17. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களைச் சார்ந்த மாணவ மாணவியர்களில் மேல்நிலைப்பள்ளித் தேர்வில் 60 விழுக்காடு அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கு அவர்கள் மேற்படிப்பில் சேர உதவுவதற்காக ஆளுக்கு ரூ. 300 உதவிப் பணம் (ஒரு தடவை மட்டும்) தரப்பட்டு வருகிறது.

கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்று மொழி—

18. தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில் பட்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவிப்பணமாக ஆண்டுக்கு ரூ. 180 தரப்பட்டு வருகிறது. இவ்வுதவிப்பணம் பெற்ற மாணவர் எண்ணிக்கை 1984-85-ல் 24,317 ஆகும். இத்திட்டத்திற்காக 1985-86-ல் ரூ. 44 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் தமிழைப் பாட மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இதுவரை 900-க்கு அதிகமான பாடப்புத்தகங்களை வெளியிட்டுள்ளது.

கல்லூரி ஆசிரியர், பிற பணியாளர்கள் நலன்—

19. கல்லூரி ஆசிரியர்களுக்கு அண்மை ஆண்டுகளில் செய்துள்ள நன்மைகளில் மிக முக்கியமானவை வருமாறு :—

பல்கலைக்கழக மானியக் குழு சம்பள விகிதங்களை அளித்தது ;

உரிய தகுதி பெற்ற பயிற்றுநர்களையும் விளக்குநர்களையும் உதவிப் பேராசிரியர்களாக உயர்த்தியது ;

பத்து ஆண்டு பணி முடித்த உதவிப் பேராசிரியர்களை பேராசிரியர் களாக உயர்த்தியது ;

உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் பணியாளருக்கு நேரடியாக சம்பளம் ;

பின்வருவன போன்ற விஷயங்களில் அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கிட்டும் அதே அளவு சலுகைகளை தனியார் கல்லூரி ஆசிரியர் மற்றும் பிற பணியாளர்களுக்கும் விரிவாக்கியது :—

ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் ;
விடுப்பு (ஈட்டிய விடுப்பு வசதி உட்பட) ;
குழு ஈட்டுறுதித் திட்டம் ;

பணியிலிருக்கும்போது ஆசிரியர், மற்றும் பிற பணியாளர் இறந்து விட்டால் அவர்களுடைய மகன் போன்ற நெருங்கிய உறவினருக்கு பணி நியமனம் செய்வதில் முன்னுரிமை.

1985 ஜூன் 10]

22. வேலையில் இருப்பவர்களுக்கென்று 1983-84 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டு மாலை நேர சட்ட வகுப்புகளும் நடத்தப்பெற்று வருகின்றன. இம்மாநிலத்தில் இருக்கின்ற நான்கு சட்டக் கல்லூரிகளிலும் 1984-85 இல் பயில்கின்ற மாணவர்கள் மொத்தம் 3,975 பேர்களில் 470 மாணவியர் ஆவர். கடந்த ஆண்டில் 261 மாணவியரே இருந்தனர். சென்னை மற்றும் மதுரை சட்டக் கல்லூரிகளில் மொத்தம் 141 மாணவர்கள் தமிழில் சட்டம் பயில்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூ. 180 உதவித் தொகை வழங்கப்படுகிறது. திருச்சி மற்றும் கோவை சட்டக் கல்லூரிகளிலும் தமிழில் பயிற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## VII விளையாட்டு உடற்பயிற்சி, மற்றும் இளைஞர் நலன்.

### ( i ) விளையாட்டும் இளைஞர் நலனும்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறைக்காக 1985-86 இல் மொத்தம் ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது இத்துறையின் கீழ் 19 மாவட்ட விளையாட்டு மன்றங்கள் உள்ளன. தஞ்சாவூர், திருநெல்வேலி, மதுரை ஆகிய மூன்று பெரிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் (1983-84 இல் அமைக்கப்பட்ட இரண்டாவது மாவட்ட விளையாட்டு மன்றம் உட்பட). மேலும் 1985-86-ல் காமராசர் மாவட்டம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களில் புதிய மாவட்ட விளையாட்டு மன்றங்கள் அமைக்கப்படும். மாவட்ட விளையாட்டு மன்றங்கள் அனைத்துக்கும் 1985-86-ல் மொத்தம் ரூ. 4.70 இலட்சம் செலவில் " மல்டி டிரெய்னர் " என்னும் உடற்பயிற்சிக்கருவி, பளுதூக்கும் பயிற்சிச் சாதனங்கள் ஜிம்னேஷிய கருவிகள் ஆகியவை தரப்படவிருக்கின்றன.

### விளையாட்டு வளர்ச்சிக்கழகம்.

2. தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம் திரு. வெற்றி ஆதித்தன் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் அங்கீகரிக்கப்பட்ட முதலீடு ரூ. 1 கோடியாகும். இக்கழகம் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 15—11—1984 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்தின் முக்கியமான நோக்கங்களும் குறிக்கோள்களும் பின்வருமாறு :—

(1) அரசு மானியங்களையும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு கடன் தரும் அமைப்புக்களிடமிருந்து கிட்டும் நிதியுதவிகளையும் கொண்டு மாநிலத்தில் விளையாட்டுக்களுக்கான அடிப்படை வசதிகளைப் பேணுதலும் மேம்படுத்தலும் ;

[1985 ஜூன் 10

(2) தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் தமிழக விளையாட்டு வீரர்கள் பெருமளவில் கலந்து கொள்ளச் செய்தலும் அவர்களை ஊக்குவித்தலும் ;

(3) தமிழக விளையாட்டு வீரர்களுக்கான பயிற்சிகளை மேம்படுத்துதல் ;

(4) மாநிலத்தில் வருங்காலத்தில் திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்கும் நோக்குடன், குறிப்பாக கல்வி நிலையங்களில் விளையாட்டு வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான நிதி சேர்த்தல் ;

(5) உலகப் போட்டிகளில் கலந்து கொள்ளும் இம் மாநில விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி மற்றும் வேலை வாய்ப்புக்களை அளித்தல் ;

(6) கட்டடங்கள் முதலியவற்றிற்கு ஆகும் செலவைச் சரிக் கட்டவும் கடனாகப் பெற்ற தொகைகளைத் திரும்பத் தரவும், புதியதாக அமைத்துள்ள விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றில் இலாபம் தரத்தக்க விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல் ;

(7) மாவட்டங்களிலுள்ள விளையாட்டரங்குகளையும், சென்னை நகரிலுள்ள விளையாட்டுத் தளங்களையும் பராமரித்தல் ;

(8) மாநில, மாவட்ட விளையாட்டு மன்றங்களுக்கும், விளையாட்டுக் கழகங்களுக்கும் மாநில அரசு மானியங்களை வழங்குதலும், வழங்கப்பட்ட மானியங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்றனவா என்று கண்காணித்தல்.

**விளையாட்டுப் பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்குத் தனி விடுதிகளும்.**

3. தற்போது பின் வரும் கல்வி நிறுவனங்களோடு இணைந்து விளையாட்டுப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

| | ஆண்டுதோறும் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) ஒய்.எம்.சி.ஏ. உடற் பயிற்சிக் கல்லூரி, சென்னை (8—12 வகுப்புகள்). | 115 |
| (2) மாருதி. உடற்பயிற்சிக் கல்லூரி, பெரியநாயக்கன் பாளையம் (8—12 வகுப்புகள்). | 90 |



1985 ஜூன் 10]

| | |
|---|---|
| (3) இராணி சீதை ஆச்சி மேல்நிலைப்பள்ளி, அண்ணாமலை நகர் (8—10 வகுப்புகள்). | 50 |
| (4) பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, பீளமேடு, கோயம்புத்தூர் (8—10 வகுப்புகள்). | 50 |
| மொத்தம் | 305 |

மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு விடுதிகள் ஒவ்வொன்றிலும் 30 பேருக்குத் தங்கும் இடவசதி உள்ளது.

4. விளையாட்டுக்களில் ஆற்றல் மிகுந்த சிறுவர், சிறுமியரை, விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்தெடுத்து அவர்களுக்குத் தீவிரமாக பயிற்சி அளித்து அவர்களுடைய திறனை மேம்படுத்தும் நோக்குடன் இத்துறை இளஞ்சிறாருக்கான "மிக இளமையில் தெரிந்தெடு" என்னும் திட்டத்தையும், தொடக்கநிலை, நடுநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளி அளவில் "இளமையில் தெரிந்தெடு" என்னும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. உயர்நிலைப்பள்ளிகளில் குடியரசு நாள் மற்றும் பொங்கல் நாளன்று நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற முதலாவது, இரண்டாவது இடத்தைப் பெறுவோருக்கு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கான "பாரதியார் விளையாட்டுப் போட்டி"களில் வெற்றி பெற்று முதலாவது, இரண்டாவது இடத்தைப் பெறுவோருக்கும் 1985-86 லிருந்து உதவித் தொகைகள் வழங்கப்படும்.

5. அந்தந்த விளையாட்டு மன்றப் பகுதிகளிலுள்ள உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஏறத்தாழ 30 உடற்பயிற்சி ஆசிரியர்/உடற்பயிற்சி இயக்குநர்களுக்கு இரண்டு அல்லது மூன்று விளையாட்டுக்களில் மாவட்ட விளையாட்டு மன்றப் பயிற்சியாளர்களைக் கொண்டு ஆறு நாள் புத்தறிவுப் பயிற்சி வகுப்புகள் நடத்தும் திட்டம் 1984-85-ல் செயலாக்கப்பட்டது. 1985-86-லும் இத்திட்டம் தொடரும்.

6. மனமகிழ் மன்றங்கள், விளையாட்டுக் குழுமங்கள், நுண்கலை மன்றங்கள் ஆகியவற்றை பரீட்சார்த்த அடிப்படையில் சில கல்லூரிகளில் (ஒவ்வொரு கல்லூரியிலும் "இளைஞர் நல அலுவலர்" எனக் குறிப்பிடப்பட்டு இருக்கும் பேராசிரியர் ஒருவர் வழி காட்டுதலின் கீழ்) நடத்தி வரும் பொருட்டு 8 கல்லூரிகளுக்கு ஒவ்வொன்றிற்கும் ரூ. 12,500 வீதம் 1984-85-இல்

தரப்பட்டது. கல்லூரி மாணவர்களுக்கு ஆரோக்கியமான பொழுது போக்கு நடவடிக்கைகளைத் தருவனவாக இம் மன்றங்கள் அமையும். இத் திட்டம் செயல்படும் அனுபவத்தின் அடிப்படையில் அதனை மேலும் விரி வாக்குவது பற்றி ஆலோசிக்கப்படும்.

7. மாணவர் அல்லாத இளைஞர்களிடம் விளையாட்டையும், உடற் பயிற்சியையும் ஊக்குவிக்கும் வண்ணம், ஊரக விளையாட்டு மையங்கள் நடத்துதல், தனியார் விளையாட்டு மன்றங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களையும் இத்துறை செயல் படுத்தி வருகின்றது. விளையாட்டு மற்றும் உடற் பயிற்சிக் கல்வி ஆராய்ச்சி மாணவப் பணியிடங்கள் 5 ஏற்படுத்தப்பட்டுள்ளன. உடற்பயிற்சிக் கல்வி பற்றிய புத்தகங்களைப் பிரசுரிப்பதற்கு நிதியுதவியும் அளிக்கப்படுகிறது.

**விளையாட்டு அரங்கங்கள் மற்றும் நீச்சல் குளங்கள் :**

8. தற்போது நீலகிரி தவிர பிற மாவட்டங்கள் அனைத்திலும் அந்தந்த மாவட்டத் தலைமையிடத்தில் திறந்தவெளி விளையாட்டு அரங்கங்கள் ஏற்கெனவே உள்ளன ; அல்லது அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சென்னை நேரு விளையாட்டு அரங்கில் ரூ. 25 இலட்சம் செலவில் ஒளி வெள்ளம் பாய்ச்சும் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. வட ஆற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம், தருமபுரி ஆகிய மாவட்டத் தலைமையிடங்களில் நீச்சல் குளங்கள் கட்டுவதற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

9. மாநில மற்றும் மாவட்ட விளையாட்டு மன்றப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம், குடும்ப காப்பூதியம் மற்றும் இறப்பு-ஓய்வுப் பணிக்கொடை முதலியன வழங்குவதற்கான திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

10. வறுமையில் வாடும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. 33 விளையாட்டு வீரர்கள் ஒவ்வொருவரும் மாதம் ரூ. 75 வீதம் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

11. இத்துறை நடத்தும் "தமிழர் விளையாட்டு மடல்" என்ற இதழ் மிகவும் பிரபலமாகியுள்ளது. விளையாட்டு வீரர்களுக்கும் விளையாட்டு மன்றங்களுக்கும் இலவசமாக ஆயிரம் பிரதிகள் வழங்கப்படுகின்றன. இவ் விதழின் விலை ஒரு ரூபாய். சந்தாத் தொகையை செலுத்தி இவ்விதழை வாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து 1985-86 ஆம் ஆண்டில் கூடுத லாக மேலும் ஒரு ஆயிரம் இதழ்கள் அச்சிடும் வாய்ப்பு ஏற்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.



## ( ii ) சாரண சாரணியர்.

12. தமிழ்நாட்டில் தற்பொழுது 1.42 இலட்சம் சாரண, சாரணியர் உள்ளனர். இவ்வெண்ணிக்கை இந்தியா அனைத்திலும் உள்ள சாரண, சாரணியர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்காகும். தமிழ்நாடு சாரண, சாரணியர் இயக்ககத்திற்கு மாநில அரசு மானியமாக ஆண்டுக்கு ரூ. 3 இலட்சம் வழங்கி வருகிறது. 1985-86 லிருந்து இம் மானியம் ரூ. 5 இலட்ச மாக உயர்த்தப்படும்.

## ( iii ) தேசிய மாணவர் படை.

13. தமிழ்நாடு தேசிய மாணவர்படை இயக்கத் தலைமையகம் சென்னை யில் உள்ளது. அதன் கட்டுப்பாட்டின்கீழ் சென்னையில் இரண்டும், கோயம் புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக வட்டாரத் தலைமை இடங்கள் 5 அமைந்துள்ளன. தமிழ் நாட்டில் தேசிய மாணவர் படையில் சேர்க்க அனுமதித்துள்ள மாணவர் எண்ணிக்கை வரு மாறு :—

| | பிரிவுகள் படைகள். | அலுவலர் கள். | மாணவர் கள். |
|---|---|---|---|
| முதுநிலைப் பிரிவு (மாணவர்) | 45 | 215 | 17,370 |
| முதுநிலைப் பிரிவு (மாணவியர்) | 5 | 38 | 3,680 |
| இளநிலைப் பிரிவு (மாணவர்) | 623 | 621 | 61,650 |
| இளநிலைப் பிரிவு (மாணவியர்) | 51 | 48 | 5,200 |
| மொத்தம் .. | 724 | 922 | 87,900 |

1985-86ல் தேசிய மாணவர் படைக்காக மாநில அரசு நிதியிலிருந்து ரூ. 217 இலட்சம் செலவிடப்படும். இத்துறையில் பணியாற்றும் மாநில அரசுப் பணியாளர்கள், ஓட்டுநர்கள் அடிப்படை ஊழியர்கள் முதலியோரின் எண்ணிக்கை 1,100 ஆகும்.

14. தேசிய மாணவர் படைக்கான செலவினை மத்திய அரசும் மாநில அரசும் ஏற்றுக் கொள்கின்றன. அப்படை மாணவ மாணவியருக்கான பல விதமான பயிற்சி முகாம்களுக்கான செலவில் பாதியை மைய அரசும், பாதியை மாநில அரசும் ஏற்றுக் கொள்கின்றன.

15. வானூர்தி/கப்பல் வடிவமைப்பு ; விமானம் ஓட்டுதலும் கிளைடரில் பறத்தலும் ; துடுப்புப் படகு, பாய்மரப் படகுகளை செலுத்துதல் ; நீர்மூழ்குதல், படகுவிடும் பந்தயம் போன்றவற்றில் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. சைக்கிளில் சென்று இடங்களைக் கண்டு வரவும்

ஏற்பாடு செய்யப்படுகிறது. பல்வேறு மாநிலங்களின் தேசிய மாணவர் படையினர்களுக்கு இடையிலான பல்வேறு போட்டிப்பந்தயங்களில் தமிழக மாணவ மாணவியர்களும் கலந்து கொள்கின்றனர். டெல்லியில் ஆண்டு தோறும் குடியரசு நாள் அணிவகுப்பில், சிறந்த மாநில விருது பெறுவதற்கு மாநிலங்களுக்கு இடையிலான பந்தய முடிவுகளும் கணக்கிற் கொள்ளப்படுகின்றன. போர்முறைப் பயிற்சிகளும் தரப்படுகின்றன. கனடா நாட்டில் நடைபெறும் இளைஞர் பரிவர்த்தனைத் திட்டத்திலும் தமிழக மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். சமுதாயப் பணிகளிலும் தேசிய மாணவ படையினர் ஈடுபடுகின்றனர்.

16. இராணுவத்தில் அதிகாரிகளாகச் சேர்ப்பவர்களைத் தெரிந்தெடுப்பதற்காக மைய அரசு தேர்வாணைக் குழு நடத்தும் தேர்வில் கலந்து கொள்ளும் தமிழக தேசிய மாணவர் படையினருக்கு சிறந்த பயிற்சி அளிப்பதற்காக 1985-86-ல் பயிற்சி அதிகாரி ஒருவர் தலைமையில் "இராணுவ அதிகாரித் தேர்வுக்கான முன்பயிற்சிப் பிரிவு" ஒன்று அமைக்கப்படும்.

## (iv) தேசிய பணித் திட்டம்.

17. தமிழ்நாட்டிலுள்ள தேசியப் பணித் திட்டத்தின் விவரங்கள் 1985-86 நிலவரப்படி பின்வருமாறு :—

| | பங்குபெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கை. | அம்மொத்த மாணவர்களில் சிறப்பு பயிற்சி முகாம்களில் பங்கு பெற்றவர்கள் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கல்லூரிகள் .. .. | 55,000 | 27,500 |
| மேல்நிலைப் பள்ளிகளில் (மேல்நிலை வகுப்புகள்—400 பள்ளிகள்). | 20,000 | 10,000 |
| மொத்தம் | 75,000 | 37,500 |

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தேசியப் பணித்திட்டம் மேல்நிலைப்ப பள்ளி நிலையிலும் செயல்பட்டு வருகிறது. தேசியப்பணித் திட்டத்தின்கீழ் ஒரு மாணவனுக்கு ஆண்டுதோறும் பொதுத் திட்டத்தின் கீழ் ரூ. 80-ம், சிறப்பு முகாம் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு முகாமிற்கும் ஒரு



நபருக்கு ரூ. 100-ம் செலவிடப்படுகிறது. இவ்விரண்டு இனங்களிலும் ஏற்படும் செலவினை மாநில அரசும், மைய அரசும் 5 : 7 என்ற விகிதத்தில் பகிர்ந்து ஏற்றுக்கொள்ளுகின்றன. இதற்காக 1985-86 மாநில அரசு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 92 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் 7/12 பங்கு மைய அரசிடமிருந்து மானியமாகப் பெறப்படும். 1985-86-இல் மேலும் 10,000 மாணவர்கள் தேசியப் பணித்திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

# VIII நூலகங்களும், ஆவணக் காப்பகங்களும்.

## ( i ) பொது நூலகங்கள்.

1985—86 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் பொது நூலகத் துறைக்கென ரூபாய் 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொது நூலகத் துறையின் நூலகப் பணிகள் பற்றிய முக்கிய விவரங்கள் வருமாறு :—

| | நூலகங்களின் எண்ணிக்கை. | இருப்பிலுள்ள நூல்களின் எண்ணிக்கை. | உறுப்பினர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (இலட்சத்தில்) | |
| மாநில மைய நூலகம் (கன்னிமரா நூலகம், சென்னை). | 1 | 3.82 | 0.25 |
| மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் கீழ் உள்ள நூலகங்கள் : | | | |
| மாவட்ட மைய நூலகங்கள் | 16 } | 97.00 | 10.79 |
| கிளை நூலகங்கள் .. | 1511 } | | |

### கன்னிமரா நூலகம்.

2. சென்னையிலுள்ள கன்னிமரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து நூல்கள் ஒவ்வொன்றிலும் இரு பிரதிகளை இந்நூலகம் இலவசமாகப் பெறுகிறது. வருடத்தில் மூன்று தேசிய விடுமுறை நாட்களைத் தவிர ஏனைய நாட்கள் அனைத்திலும் (காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை) இந்நூலகம் செயல்படுகிறது. வெளிநாட்டு நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் வாங்குவதற்கென இந்நூலகத்திற்கு 1983—84 மற்றும் 1984—85-ல் மொத்தம் ரூ. 22 இலட்சம் தரப்பட்டது. மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தனியாக பாடநூல் பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நூலகத்திற்கென புகைப்படப் பிரதி எடுக்கும் கருவி ஒன்றும் வாங்கப்பட்டுள்ளது.

[1985 ஜுன் 10

## மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள்.

3. தற்பொழுது மாவட்டத்திற்கு ஒன்றாக மொத்தம் 16 மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் கீழ் மொத்தம் 16 மாவட்ட மைய நூலகங்களும், 1511 கிளை நூலகங்களும் செயல்படுகின்றன. 20 கிளை நூலகங்கள் 1984—85-ல் புதியதாகத் தொடங்கியவையாகும். மாவட்ட நூலக ஆணைக்குழுக்களின் பணியாளர்கள் மொத்தம் 3279. அவர்கள் 1—4—1982 முதல் அரசுப் பணியாளர்களாக ஏற்கப்பட்டுள்ளனர். 1983—84-ல் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல்வரியாக ரூ. 1.12 கோடி பெற்றன. (சென்னை மாவட்டக்குழு பெற்ற ரூ. 56 இலட்சம் உட்பட). சில மாவட்ட ஆணைக்குழுக்களின் வருமானம், புத்தகங்கள் வாங்குவது போன்ற செலவினங்களுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, நிதி நிலைமை சரியில்லாத நூலக ஆணைக் குழுக்களுக்கு புத்தகங்கள் வாங்க வசதி செய்யும் பொருட்டு, 1984—85 லிருந்து ஆண்டு தோறும் ரூ. 11 இலட்சம் சிறப்பு மானியமாக அரசு வழங்கி வருகிறது.

4. பயிற்சி பெறாத மூன்றாம் நிலை நூலகர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக சென்னையில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாக நூலகவியல் நிலையங்கள் இரண்டு இயங்கி வருகின்றன.

## நூலகக் கட்டிடங்கள்.

5. சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கீழ், வட்டார நூலகங்கள் 6-க்கும், கிளை நூலகங்கள் 14-க்கும் கட்டிடங்கள் முடிக்கப்பட்டு உள்ளன. கிளை நூலகங்கள் மேலும் 14-க்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பிறமாவட்ட நூலக ஆணைக் குழுக்களும், அவற்றின் கீழ் இயங்கும் கிளை நூலகங்களுக்கு கட்டடம் கட்டும் பணியை படிப்படியாக நிறைவேற்றி வருகின்றன. திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட மைய நூலகங்களுக்காக பலமாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

## (ii) ஆவணக் காப்பகம்.

தென் ஆசியாவில் தலை சிறந்த ஆவணத் தொகுப்புகளைக் கொண்ட நிலையமாகத் திகழ்கிறது சென்னை எழும்பூரில் உள்ள தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகம். இது ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகத் திகழ்வதுடன், அரசு நிருவாகத்திற்கும் பயன்படுகிறது. கடந்த நான்கு நூற்றாண்டுகளுக்கான அரசு மற்றும் துறைத் தலைமையகங்களின் ஆவணங்களும் வேறு சில ஆவணங்களும் இங்கு உள்ளன. அவை வரலாற்றுச் சிறப்பு மிக்கவையும் நிருவாகத்திற்குப் பயன்படுபவையும் ஆகும். 1982-ல் நிறுவப்பட்ட நுண்



1985 ஜுன் 10]

நிழற்படக் கருவிப் பிரிவு நன்கு செயல்பட்டு வருகிறது. ஆராய்ச்சியாளர்கள் பழைய மூல ஆவணங்களை மீண்டும் மீண்டும் கையாளுவதைத் தவிர்க்கும் வகையில் அப்பழைய ஆவணங்களின் நுண் நிழற்படங்கள் எடுக்கப் படுகின்றன. ஆராய்ச்சி செய்வோருக்கு மூல ஆவணங்களைக் கொடுக்காமல், நுண் நிழற்படப் பிரதிகளை வழங்கினால், மூல ஆவணங்கள் மேலும் நீண்ட காலம் சிதிலமாகாமல் இருக்கும். இக்கருவியைக் கொண்டு இதுவரை 35 மில்லி மீட்டர் படங்கள் 1,11,000-ம் 16 மில்லி மீட்டர் படங்கள் 28,000-ம் எடுக்கப்பட்டுள்ளன. வாசிக்கத்தக்க அச்சுப்பிரதிகள் 8,500 எடுக்கப்பட்டு உள்ளன.

## மாவட்ட ஆவண மையங்கள்.

2. வரலாற்றுச் சிறப்பு மிக்கவையும், நிருவாகத்திற்குப் பயன்படுபவையுமான பல ஆவணங்கள் மாவட்டங்களிலுள்ள பல அரசு அலுவலகங்களிலும் உள்ளன. அவற்றையெல்லாம் சேகரித்து மாவட்டந்தோறும் பாதுகாத்து வரும் நோக்குடன் சிதம்பரம், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் முதற் கண் 1982 மார்ச் மாதம் மாவட்ட ஆவணமையங்கள் அமைக்கப் பட்டன. 1985—86-ம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியிலும் ஒரு மாவட்ட ஆவண மையம் தொடங்கப்படவிருக்கிறது.

## தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு.

3. கடந்த மூன்று நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் பல்வேறு வரலாற்று மற்றும் பிற வாழ்க்கைத் துறைகள் பற்றி ஆராய்ச்சினை மேற்கொள்ளும் ஆர்வமும் திறமையும் மிகுந்தவர்களை ஊக்குவிப்பதற்காக, 1973-ம் ஆண்டு தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு ஆண்டு தோறும் மாணவப் பணியிடங்கள் நான்கை வழங்கி வருகிறது. 1974-ம் ஆண்டிலிருந்து இதுவரை ஆராய்ச்சி மாணவர்கள் 10 பேர் இக்குழுவில் சேர்ந்து ஆராய்ச்சி செய்து ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர். திரு. எஸ். டி. பாஸ்கரன் என்ற ஆராய்ச்சி மாணவர் (1974—76) சமர்ப்பித்த "1919—1945 கால கட்டத்தில் சமுதாயத்திலும் அரசியலிலும் தமிழ் திரைப் படக்கலை மற்றும் நாடகக் கலைகளின் பங்கு" என்ற ஆராய்ச்சி அறிக்கை அச்சிட்டு வெளியிடுவதற்கு ஏற்றதென குழுவினால் ஏற்கப்பட்டுள்ளது.

மாவட்ட விவரச் சுவடிகள்.

4. புதுக்கோட்டை மாவட்ட விவரச் சுவடியின் ஆங்கிலப் பதிப்பு அண்மையில் வெளியிடப்பட்டு விற்பனைக்கு வந்தது. அதன் தமிழ் வடிவம் அச்சிடப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்ட விவரச் சுவடியின் தமிழ் வடிவத்தை அச்சிடுதல், தருமபுரி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்கு விவரச் சுவடிகள் தயாரித்தல் ஆகிய பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

வெளியீட்டுப் பிரிவு.

**5. கீழ்க்கண்ட தலைப்புகளில் தெரிந்தெடுத்த ஆவணத் தொகுப்புகளை அச்சிட்டு வெளியிட இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது :—**

1. சென்னை எஸ்டேட் நிலச் சட்டம் · 1908—1948
2. கூட்டுறவின் தோற்றமும் வளர்ச்சியும்
3. நகராட்சிகள்—தோற்றமும் வளர்ச்சியும்
4. 1920 ஆம் ஆண்டு முதல் ஆதிதிராவிட சட்ட மன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் ஆற்றிய பணி.

பயிற்சி.

6. அரசு அலுவலகம் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் ஆவண அறைப் பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்கான ஆவணப் பராமரிப்பு குறித்த பயிற்சி ஒன்றினை தமிழ்நாடு ஆவணக் காப்பகம் அளித்து வருகிறது. இது வரை இத்தகைய 15 நாள் பயிற்சிகள் 38 நடந்து 647 பேர் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டம் 1985—86 லும் தொடர்ந்து நடைபெறும். துறைத் தலைவர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகளால் கூர்ந்தாய்வுப் படிப்புத் திட்டம் ஒன்று (இரண்டு நாட்கள்) 1982 ஆம் ஆண்டு முதல் நடந்து வருகின்றது.

ஆவணக் காப்பகநூலகம்.

7. மிகப் பெரிய நூலகங்களுள் ஒன்றான தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகத்தில் 2½ இலட்சம் புத்தகங்கள் உள்ளன. பெரும்பாலானவை ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ளன. பிற மொழிகளிலும் சில புத்தகங்கள் உள்ளன. இந்நூலகத்தில் பொதுவான புத்தகங்களைத் தவிர தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் அச்சிடப்பட்ட வெளியீடுகளும் உள்ளன.



பழைய அரசிதழ்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கைகள், நாடாளுமன்ற சட்டமன்ற விவாதப் பதிவுகள், ஆவணப் பட்டியல்கள், பஞ்சாங்கங்கள், தகவல் தொகுதிகள், நீதி மன்றத் தீர்ப்பு அறிக்கைகள், விவரச் சுவடிகள், பழைய தாளிகைகள் முதலிய விலை மதிப்பற்ற நூற்தொகுப்புகள் இந்நூலகத்தில் உள்ளன.

## IX. தொழில் நுட்பக் கல்வி.

தொழில் நுட்பக் கல்விக்காக 1985—86-ல் சுமார் ரூ. 20 கோடி (கட்டிடங்கள், கடன்கள், அண்ணா பல்கலைக் கழகத்துக்கு மானியம் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கங்கள் உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பக் கல்வித் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் தொழிற் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் ஆண்டுதோறும் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை (1984-85-ல் இருந்தபடி) ஆகியவை வருமாறு :—

| கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை. | | ஆண்டுதோறும் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பொறியியல் கல்லூரிகள் | 24; மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள வட்டார பொறியியல் கல்லூரியில் தமிழ் நாட்டு மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு. | பட்ட வகுப்புகள் : முழு நேரம் .. | 4,495 |
| | | பகுதி நேரம் .. | 640 |
| | | பட்ட மேற்படிப்பு : முழு நேரம் .. | 276 |
| | | பகுதி நேரம் | 56 |
| | | பட்ட மேற்படிப்பு பட்டயம் : முழு நேரம் .. | 21 |
| | | பகுதி நேரம் .. | 5 |
| பல் தொழில் பயிலகங்கள் (பாலி டெக்னிக்) மற்றும் சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்கள். | 111 | பட்டய வகுப்புகள்: முழு நேரம் | 17,955 |
| | | பகுதி நேரம் | 885 |
| | | பட்டய மேற்படிப்பு முழு நேரம் .. | 299 |

வருகிறது. அந்த தனியார் தொழிற் கல்வி நிறுவனங்கள் நல்ல முறையில் நடப்பதற்கு ஏற்ற கண்டிப்பான நிபந்தனைகளின் பேரில்தான் அத்தகைய அனுமதி வழங்கப்படுகிறது. அந்நிபந்தனைகளில் முக்கியமான சில வருமாறு: போதுமான நிலத்தை தனியார் நிருவாகம் தர வேண்டும்; ரொக்க வைப்புத் தொகையாக பல்தொழில் பயிலகமானால் ரூபாய் 10 இலட்சமும் பொறியியற் கல்லூரியானால் ரூ. 30 இலட்சமும் ஏற்படுத்த வேண்டும். அரசாங்கம் வகுக்கும் விதி முறைகளுக்குட்பட்டு மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும். சேரும் மாணவர்களிடம் எத்தகைய தலைக் கட்டணமும் (Capitation Fee) வசூலிக்கக் கூடாது; நிபந்தனைகள் மீறப்பட்டால் தொழிற் கல்வி நிறுவனங்களை அரசே எடுத்துக் கொள்ளலாம் என்று முதலிலேயே தனியார் நிருவாகத்தினர் இசைவு தரவேண்டும். இந்த திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் தனியார் பாலிடெக்னிக்குகள் 53 தொடங்கப்பட்டுள்ளன. மேலும் 1981-85-ல் இத்திட்டத்தின் கீழ் 17 பொறியியற் கல்லூரிகளும் தொடங்கப்பட்டுள்ளன. (பல்கலைக் கழக இணைப்பு கிடைக்காததன் காரணமாக அந்த 17 பொறியியற் கல்லூரிகளில் 3-ல் 1984-85 மாணவர்கள் எவரும் சேர்க்கப்படவில்லை).

4. வரும் 1985-86 ஆம் ஆண்டில் கோயம்புத்தூரிலுள்ள பூ.சா.கோ. பல்தொழில் பயிலகத்தில் நெசவுத்தொழில் நுட்பவியலில் பட்டப் படிப்பு ஒன்றும்; திருநெல்வேலியிலுள்ள அரசுப் பொறியியல் கல்லூரியில் மின் மற்றும் மின்னணுவியலில் பி.ஈ. பட்டப்படிப்பு ஒன்றும், தொடங்கப்படவிருக்கின்றன. கோயம்புத்தூரிலுள்ள அரசுத் தொழில் நுட்பவியல் கல்லூரியில் மின் கணிப்புப் பொறியியல் துறையும் உபகரணப் பொறியியல் (Instrumentation Engineering) துறையும் 1985—86-ல் புதிதாகத் தொடங்கப்படவிருக்கின்றன.

5. ஸ்ரீலங்காவிலிருந்து தமிழகம் வந்துள்ள இலங்கைத் தமிழர்களும் மற்றும் தாயகம் திரும்பியவர்களுமான மாணவர்களுக்கு பொறியியல் கல்வி வசதியினைத் தருவதற்காக 1984—85-ல் இம்மாநிலத்திலுள்ள பல்தொழில் பயிலகங்கள் அனைத்திலும் மொத்தம் 70 இடங்கள் கூடுதலாக அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கென்றே ஒதுக்கப்பட்டன. மேலும் இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளிலும் அம்மாணவர்கள் மொத்தம் 40 பேர் வரை சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

[1985 ஜூன் 10

### கலை—கைத்தொழில் மற்றும் சிற்பக் கல்லூரிகள்.

சென்னையிலும், கும்பகோணத்திலும் உள்ள அரசு கலை-கைத்தொழில் கல்லூரிகளையும் மாமல்லபுரத்திலுள்ள அரசு கட்டடக் கலை-சிற்பக் கல்லூரியையும் தொழில் நுட்பக் கல்வி இயக்குநரே நிருவகித்து வருகிறார். 1984-85-ல் மாமல்லபுரம் கட்டடக் கலை-சிற்பக் கல்லூரியில் சிற்பக் கலையில் பி.எஸ்.சி. பட்டப் படிப்பு வகுப்பு ஒன்று தொடங்கப்பட்டது.

### வணிகவியல் பாடங்களில் தேர்வுகள்.

6. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டச்சு, சுருக்கெழுத்து, வணிகக் கணக்கு, வணிகப் புவியியல், வங்கியியல் முதலிய பாடங்களில் தேர்வுகளையும் நடத்தி வருகிறார். ஆண்டுதோறும் இரு தடவை அதாவது மே, நவம்பர் மாதங்களில் இத்தேர்வுகள் நடக்கின்றன. ஆண்டுக்கு சுமார் 2,10,000 மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர். இத்தேர்வுகள் அனைத்தும் 1984 நவம்பர் மாதம் எழுதிய 1,05,633 பேர்கள் ஆவர். தேறியவர்கள் எண்ணிக்கை 56,377 அதாவது 53 விழுக்காடு ஆக இருந்தது.

### அண்ணா பல்கலைக் கழகம்.

8. பொறியியல், தொழில் நுட்பவியல் மற்றும் இவை சார்பான அறிவியல் புலங்களின் வளர்ச்சிக்காகவும், அவற்றில் மேற்படிப்பு, ஆராய்ச்சி ஆகியவற்றை ஊக்குவிக்கவும் அண்ணா பல்கலைக் கழகம் 1978 செப்டம்பர் 4-ம் நாள் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் பொறியியல், தொழில் நுட்பவியல்; கட்டட அமைப்பும் வட்டார அமைப்புத் திட்டமும், செயல் முறைப் பொறியியல்; அறிவியலும் கலைப்பாடங்களும் ஆகியபுலங்களில் மொத்தம் பட்டப்படிப்புகள் 20-ம் பட்ட மேற்படிப்புக்கள் 29 ஆம் உள்ளன. இப் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளில் 1983-84-ல் படித்து வந்து மொத்த மாணவர் எண்ணிக்கை வருமாறு :

| கல்லூரி. | பட்டப் படிப்பு. | | பட்டமேற்படிப்பு. | | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| | முழுநேரம். | பகுதி நேரம். | முழுநேரம் | பகுதி நேரம். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| கிண்டி பொறியியற் கல்லூரி. | 1,757 | 566 | 510 | 194 | 3,027 |
| சென்னைத் தொழில் நுட்பவியல் நிறுவனம். | 493 | 28 | 85 | 83 | 689 |
| அழகப்பா தொழில் நுட்பவியல் கல்லூரி. | 570 | .. | 61 | 30 | 661 |
| கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புப் பள்ளி. | 106 | .. | 40 | 2 | 148 |
| | 2,926 | 594 | 696 | 309 | 4,525 |



1985 ஜூன் 10]

பெரும்பாலான புலங்களில் எம்.பி.-ல் மற்றும் டாக்டர் பட்ட ஆராய்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன. இப் பல்கலைக் கழகத்துக்கு மானியமாக ரூ. 239 இலட்சம் வழங்க 1985-86-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. (இதில் திட்ட மானியம் ரூ. 7 லட்சமாகும்.)

9. அண்ணா பல்கலைக் கழகத்தில் தொலையிலுணர்தல் (Remote Sensing) ; தொடரும் மற்றும் வளர்ச்சிக் கல்வி, ஆகியவற்றுக்கான ஆய்வு நிலையங்களும் புதிய மற்றும் புதுப்பித்துக்கொள்ளக்கூடிய ஆற்றல் ஆதாரங்கள் ; நீர்வள ஆதாரங்கள், சுற்றுப்புறச் சூழ்நிலை ; படிகவியல் ( Crystal growth) ) மானிடர் குடியமைப்பியல் (Human Settlements) உடலியல் சார்ந்த தொழில்நுட்பவியல் / (Bio technology) ஆகியவற்றுக்கான உயர் ஆய்வு மையங்களும் அமைந்துள்ளது தனிச் சிறப்பாகும். இவ்வாராய்ச்சி மையங்களில் வெளியாருக்காகவும் அவர்களுடைய கணிசமான நிதி உதவியைப் பயன்படுத்தி உயர்மட்ட ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

### இதர நிறுவனங்கள்.

10. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரிக்கு மானியமாக ரூ. 54 இலட்சமும், சென்னையிலுள்ள கணித அறிவியல் நிறுவனத்திற்கு மானியமாக ரூ. 5 இலட்சமும் வழங்க 1985-86-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

[1985 ஜூன் 10

## X. அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

அறிவியலும் தொழில் நுட்பவியலும் பலதரப்பட்ட மக்களின் அன்றாட வாழ்க்கையில் முக்கியமான அங்கம் வகிக்கவேண்டும் என்பதை உணர்ந்து அதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் மின்னணுவியல், அறிவியல், (மற்றும்) தொழில் நுட்பவியல் துறை என்ற பெயரில் புதிய துறை உருவாக்கப் பட்டுள்ளது. இது மின்னணுவியல் தொழில் வளர்ச்சிக்கு நன்கு ஊக்கம் கொடுக்கும். மேலும் இத்துறை அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலை நடைமுறைக்குப் பயன்படுத்தும் பணியில் ஈடுபடும்போது படிப்படியாக, பின், தங்கிய நிலையைப் போக்கவும், கிராமப்புற வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைக்கவும், வறுமையை அகற்றவும், பொருளாதார வளர்ச்சியை மேம் படுத்தவும், தொழிலில் ஈடுபடுபவர்களை ஊக்குவிக்கவும் உதவுவதுடன் மக்க ளிடையே அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தை அறிந்து கொள்ளும் ஆர்வத்தைத் தூண்டவும் வழி வகுக்கும்.

2. அரசு "தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மாநிலக் குழு" என்ற உயர்மட்ட ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இக்குழுவிடம் மாநிலத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கான பற்பல கூறுகளில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் பயன்படும் இனங்களைக் கண்டுபிடித்து அவை களுக்கான திட்டங்களைத் தீட்டும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. புகழ் பெற்ற சமூக விஞ்ஞானி ஒருவர் இக்குழுவிற்கு தலைமை ஏற்றுள்ளார். திறமையான பேராசிரியர்கள், தொழில் அதிபர்கள், அறிவியல் வல்லுனர்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளில் பொறுப்பு வகிக்கும் நிர்வாகஸ்தர்களை இக் குழு உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இக்குழு அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் திட்டங்கள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்குத் தேவை யான அறிவுரைகளை அரசுக்கு கொடுக்கும். மேலும் இக்குழு நல்ல முறையில் இயங்க மைய அரசின் நிபுணர் உதவிகளைப் பெறுகிறது.

3. அறிவியலைப் பற்றி மக்கள் அறிய, அரசு "தமிழ்நாடு அறிவியல் (மற்றும்) தொழில்நுட்ப மையம்" என்ற நிறுவனம் ஒன்றையும் ஏற்படுத்தி யுள்ளது. இந்த நிறுவனம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அருங்காட்சி யகம் மற்றும் கோள்நிலை இயக்க விளக்கக்கூடம் (பிளானெட்டேரியம்) ஆகியவற்றை சென்னையில் ஏற்படுத்த தற்போது முனைந்துள்ளது. கல்கத்தாவில் உள்ள தேசிய அறிவியல் அருங்காட்சியகக் குழுவின் ஒத்துழைப் புடன் அறிவியல் மையம் ஒன்று திருநெல்வேலியில் கட்டப்பட இருக்கிறது. நாளடைவில் அறிவியல் (மற்றும்) தொழில்நுட்ப மையம் சமுதாயத்தில் அதிக அளவில் அறிவியலைப் பரப்பி, வாழ்க்கை முறைகளை அறிவியல் மயமாக்கும் வகையில் தனது திட்டங்களைத் தீவிரப்படுத்தும்.



1985 ஜூன் 10]

4. ஓர் புதிய தலைமுறை தொழில் விற்பன்னர்களை, குறிப்பாக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பட்டதாரிகளிலிருந்து, தோற்றுவிப்பதற்காக அரசு பயிற்சித் திட்டங்களை ஆரம்பித்துள்ளது. இம் முயற்சியானது சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்துவதுடன், புதிய துறைகளில் வேலைவாய்ப்புகள் கிடைக்கவும் பெரிதும் வகை செய்யும். இத்திட்டத்தின் கீழ், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலில் பட்டம் பெற்றுள்ள இம் மாநிலத்தைச் சார்ந்த 30 பெண்களுக்கு பயிற்சி தர ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. "தொழில் விற்பன்னர்கள் மேம்பாட்டு நிலையம்" ஒன்றையும் "அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில் விற்பன்னர்கள் பண்ணை" களையும் மத்திய அரசின் நிதியுதவியுடன் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்புக்கள் அரசின் தீவிர ஆய்வில் உள்ளன.

5. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலுள்ள தாவர மற்றும் இயற்கைச் செல்வத்தை ஆராய்ந்து அறிந்து மிகுந்த அளவில் பயன்படுத்துவதற்கும், நிலத்தடி நீர் மற்றும் குளநீர்ப் பாசனத்தை நெருங்கி இணைத்து சிறந்த முறையில் மேலாண்மை செய்வதற்கும் தொலை உணர்வு (remote sensing) தொழில்நுட்ப முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அண்ணா பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள தொலை உணர்வு நிலையத்திற்கு (விண்வெளிக் கோள்களிலிருந்து) பெறப்படும் தகவல்களை படமாக்குவதற்கான நுண்ணிய கருவிகளும் மற்றும் விலையுயர்ந்த நவீனக் கருவிகளும் வாங்கப்படவிருக் கின்றன.

6. அறிவியலும் தொழில் நுட்பவியலும் சமுதாயத்தின் கடை கோடியி லுள்ள பகுதிகளுக்கும் ஊடுருவிச் செல்லத் துவங்கியுள்ளன. அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்திற்காக செய்யப்படும் செலவினங்கள், கல்வியறிவு பெற்றுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், முறையையும் மிக விரைந்து மாற்றி யமைப்பதற்குப் பெரிதும் உதவுகின்றன.

## XI. தமிழ் வளர்ச்சி—பண்பாடு.

நாட்டு மக்களின் வளர்ச்சியும் வாழ்வும் மொழியறிவோடும், மொழி வளர்ச்சியோடும் இரண்டற இணைந்தவையாகும். தமிழ்க் கருவூலங்களைக் காத்தல், கற்பித்தல், படைத்தல், பரப்புதல், முதலிய பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்க வேண்டும் என்னும் அடிப்படையில் தமிழ்த் தொடர்பான துறைகளெல்லாம் ஒருங்கிணைந்துள்ளன. அவ்விணையம் தமிழ் வளர்ச்சி— பண்பாட்டுத் துறை என்னும் புதிய துறையாகச் செயலகத்தில் மலர்ந் திருப்பது தமிழ் வளர்ச்சிக்கு அரசு வழங்கிய தனித் தகுதியாகும்.

2. தமிழ் வளர்ச்சிக்கும் கலை, மரபு, பண்பாட்டு வளர்ச்சிக்கும் கடந்த ஆண்டுகளில் சிறப்பான பணிகள் நடந்துள்ளன. மாநில அரசு அலுவலகங்களின் அனைத்து நிலைகளிலும் தமிழே ஆட்சி மொழியாக அமைதற்கேற்ற முயற்சிகள் புத்துணர்வு பெற்றுள்ளன. 1980 ஆம் ஆண்டு சனவரியில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடந்ததும், 1981 செப்டம்பரில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைந்ததும், பாவாணர் நெறியில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியின் முதன் மடலத்தின் முதற் பகுதி வெளியிடப் பெற்றதும் உலகத் தமிழ்ச் சங்கம் உருவாகவிருப்பதும் வளர்ச்சிப் பணிகளின் தலைமணிகளாகும்.

### (1) தமிழ் வளர்ச்சித் துறை.

2. அரசு அலுவல் நெறிகளிலும் கல்வி நிலையங்களிலும், தமிழ் மொழியின் பயன்பாட்டை மேம்படுத்தும் பணிகளை இத்துறை மேற்கொண்டுள்ளது.

**ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கம்.—**

3. அனைத்து நிலைகளிலும் ஆட்சி மொழித் திட்டத்தைச் செயலாக்குவது இத்துறையின் பெரும் பொறுப்பாகும். துறைத் தலைமை அலுவலகங்களைத் தமிழ்ப்படுத்தும் பணி முன்னேற்றம் குறித்து தமிழ் வளர்ச்சி இயக்குநரும், மாவட்ட அலுவலகங்களைத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களும் ஆய்வு செய்கின்றனர். ஆட்சி மொழித் திட்டத்தை முழு அளவில் அரசு அலுவலகங்கள் அனைத்திலும் செயற்படுத்துவதற்கென்று 1980 ஆம் ஆண்டில் முனைப்புத் திட்டம் ஒன்று தொடங்கப் பெற்றது. தலைமைச் செயலகம், தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனங்கள், மாநகராட்சிகள் முதலியவற்றில் ஆட்சி மொழிச் செயற்பாடு விரிவாக்கப்படவிருக்கிறது. அரசு அலுவலகங்களில் உள்ள ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகளுக்கு மாற்றாகத் தமிழ் தட்டச்சுப் பொறிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆங்கிலத்திலுள்ள விதிகள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள், படிவங்கள் ஆகியவை தமிழில் மொழியாக்கம் செய்யப்படுகின்றன. ஆட்சிச் சொல் அகராதி, சிறப்புச் சொல் துணையகராதிகள் உருவாக்கித் தரப் பெறுகின்றன.

**சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்புத் திட்டம்.—**

5. சிறந்த தமிழிலக்கியங்களைப் பிற மொழிகளிலும், பிற மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும் மொழி பெயர்த்து வெளியிடுவதற்கான திட்டத்தை இத் துறை தொடர்ந்து செயற்படுத்தும்.



**அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கு திட்டம்.—**

6. அகவை முதிர்ந்த தமிழறிஞர்க்கு நிதியுதவி வழங்கும் திட்டம் 1978 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் கூடுதலாகத் தமிழறிஞர் முப்பதின்மர் நிதியுதவி பெறுகின்றனர். திங்கள்தோறும் ரூ. 250 என்ற நிலையில் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. இதுவரை இத்திட்டத்தால் 212 தமிழறிஞர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**தமிழிற் சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி.—**

7. தமிழிற் சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின்படி 1983-84, 1984-85 ஆகிய ஈராண்டு நிலையில் 25 நூல்கள் வெளியிட நிதியுதவி வழங்கப்பட்டது. 1985-86-ல் இத்திட்டத்திற்கு ரூ. 60,000 ஒதுக்கீடு செய்யப் பெற்றுள்ளது.

**தமிழிற் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்.—**

8. தமிழிற் சிறந்த நூல்களை ஊக்குவிப்பதற்காகத் தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி ஆண்டுதோறும் 21 வகைப்பட்ட சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கப்படுகிறது. 1983 ஆம் ஆண்டில் வெளிவந்த சிறந்த தமிழ் நூல்களுக்குரிய பரிசுகள் 1985 திருவள்ளுவர் திருநாளன்று (சனவரி 15 ஆம் நாள்) வழங்கப்பட்டன.

**ஆராய்ச்சிப் பணிகளுக்காகவும், பிற மாநிலங்களில் தமிழ் வகுப்புகள் நடத்தவும் நிதியுதவி.—**

9. வெளி மாநிலங்களிலுள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ்த் துறைகளை நிறுவவும், தமிழில் பட்டய வகுப்புகளை நடத்தவும், இவ்வரசு தொடர்ந்து நிதியுதவி வழங்கி வருகிறது. தென் மொழிகள் புத்தக நிறுவனம், பன்னாட்டுத் திராவிட மொழியியல் ஆய்வுப் பள்ளி, ஆகிய ஆய்வு நிறுவனம் மைசூரில் உள்ள இந்திய மொழிகள் மைய நிறுவனம் முதலிய நிறுவனங்கள் தொடர் மானியங்கள் பெற்றுள்ளன.

**தமிழக வரலாற்று வரைவுத் திட்டம்.—**

10. தமிழக வரலாற்று நூற் கோவையின் முதல் இரண்டு தொகுதிகளை "தொல் பழங்காலம்", "சங்க காலம்" என்ற பெயரில் இத்துறை வெளியிட்டுள்ளது. மூன்றாம் தொகுதியான "பல்லவர் பாண்டியர் காலம்" அச்சிற்கு அணியமாயுள்ளது. எஞ்சிய மூன்று தொகுதிகள் ஆயத்தமாகின்றன. தமிழில் வெளியான தொகுதிகளின் ஆங்கில ஆக்கங்களை வெளியிடவும் இத் துறை கருதியுள்ளது.

தமிழ் நூல் விவர அட்டவணை வெளியீடு.—

11. 1867 முதல் 1936 வரை வெளியான அச்சிட்ட தமிழ் நூல்களைப் பற்றிய விளக்கக் குறிப்புரை கொண்ட தமிழ் நூல் விவர அட்டவணை 21 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது. 1936-40 ஆம் ஆண்டுகளில் வெளியான தமிழ் நூல்களின் விவர அட்டவணை உருப்பெற்று வருகிறது.

விருதுகளும் பாராட்டும்.—

12. அறிஞர்களையும் கலை இலக்கியப் படைப்பாளர்களையும் கவிஞர்களையும் பாராட்டிப் பெருமைப்படுத்தும் வகையில் பின்வரும் விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன :—

| விருதின் பெயர். | விருதின் மதிப்பு. ரூ. | |
|---|---|---|
| திரு. வி. கலியாணசுந்தரனார் விருது. | 10,000 | சிறந்த தமிழ் எழுத்தாளருக்கு. |
| பாவேந்தர் பாரதிதாசன் விருது. | 10,000* | சிறந்த தமிழ்க் கவிஞருக்கு. |

(*மேலும் 65 வயதைக் கடந்த சிறந்த புலவர் ஒருவருக்குத் திங்கள்தோறும் ரூ. 500 காணிக்கை நிதி வழங்கப்பட்டு வருகிறது.)

| | | |
|---|---|---|
| திருவள்ளுவர் விருது (1986 விருந்து வழங்கப்படவிருக்கிறது). | 10,000 | திருவள்ளுவர் குறித்துச் சிறந்த ஆய்வு நடத்துபவருக்கு. |
| அறிஞர் அண்ணா விருது (1985 விருந்து வழங்கப் படவிருக்கிறது) | 10,000 | அறிஞர் அண்ணாவின் வருத்துக்கள் குறித்து சிறந்த ஆய்வு நடத்துபவருக்கு. |

மொழிக் காவலர்களுக்கு நிதியுதவி.—

13. தமிழ் மொழியின் பாலும், தமிழ்ப் பண்பாட்டின்பாலும் கொண்ட தணியாத ஆர்வத்தினால் தங்களைத் தமிழ்த் தியாகிகளாக்கிக் கொண்டவர்களுக்கு திங்களொன்றுக்கு ரூ 150 நிதியுதவி அளிப்பது, மற்றும் தமிழ் மொழி பண்பாட்டு வரலாற்றுக் கருவூலங்களைக் கருத்துடன் காத்திட, வளர்த்திட தாம் எடுத்த முயற்சிகளுக்கு ஊக்குவிப்பதாக உதவித் தொகை, மானியம் முதலியவை சிறப்பு நல்கைகளாக அளித்தல் முதலியன இத்திட்டத்தில் அடங்கும். இத்திட்டம் இத்துறையில் சேர்க்கப்பட்டுள்ளது.



14. தமிழ்ப் புலவர் பெருமக்களின் விழாக்களை ஆண்டுதோறும் சிறந்த முறையில் இத்துறை கொண்டாடி வருகிறது. திருவள்ளுவர் திருநாள் போலவே இளங்கோவடிகள், கம்பர் விழா இவ்வாண்டு முதல் கொண்டாடப் படவுள்ளன.

15. சங்கச் சான்றோர் பிறந்த ஊர்களைக் கண்டறிந்து ஆங்காங்கு சான்றோர் நிலைக்கல் நிறுவு திட்டம் செயற்படவுள்ளது. இத்திட்டம் படிப்படியாக மாவட்டந்தோறும் விரிவுபடுத்தப்படும்.

நிலவியற் பெயர்கள்.—

16. "மாநில ஊர்ப்பெயர் ஆணைக்குழு" நிறுவப்பட்டுள்ளது. ஊர்ப் பெயர்களின் முறையான வடிவங்கள் குறித்து அறிவுரை கூறுவதும், இந்திய நில அளவைத்துறை, இருப்பூர்தி மற்றும் அஞ்சல் துறைகளுக்கு அறிவுரைகள் வழங்குதலும் இதன் பணியாகும். காலப்போக்கில் ஊர்ப் பெயர்களில் புகுந்துள்ள இலக்கணப் பிழைகள், வழுக்கள், பொருட்பிழைகள் போன்றவற்றைத் திருத்தி, சரியான பெயர்களைத் தர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வருவாய்த் துறையின் இசைவுடன் "ஊர்ப் பெயர் அகர வரிசைப் பட்டியலில்" மறு பதிப்பை வெளியிடவும் கருதப்பட்டுள்ளது.

உலக தமிழ்ச் சங்கம்.—

17. உலகத் தமிழ்ச்சங்கம் மதுரையில் நிறுவப்பட்டுள்ளது. தொடர்பாக நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) மொழிபெயர்ப்புத் துறை.

18. தலைமைச் செயலகத் துறைகள், மற்றும் துறைத் தலைவர் அலுவலகங்களிலிருந்து பெறப்படுகின்ற கோப்புகளைத் தமிழாக்கம் செய்து தருவது மொழிபெயர்ப்புப் பிரிவின் பணியாகும். அமைச்சகச் சுற்றோட்டக் பொதுக் கணக்குகள் குழு அறிக்கை குறிப்புகள், துறை குறிப்புகள், (P.A.C.) பொது நிறுவனங்கள் குழு அறிக்கை (P.U.C.) ஆகியவை வழக்கமாகப் பெறப்படும் கோப்புகளாகும். பொது (கடு மந்தனத்) துறை, பொது (சட்டம் ஒழுங்கு)த் துறை, பொது (சிறப்பு) த் துறை ஆகியவற்றிலிருந்து பெறப்படும் கடுமந்தனக் கோப்புகள் ஆண்டு முழுவதும் தொடர்ந்து வரும் பணியினமாகும். (COFEPOSA) காபிபோசா சட்டத்தின்கீழ் நடவடிக்கைகளுக்குரிய கடுமந்தனக் கோப்புகள் உடனுக்குடன் மொழி பெயர்த்தனுப்பப் படுகின்றன. மேலும், அரசு அறிக்கைகள், சட்டமன்றப் பேரவை வினாக்கள், சட்டமன்ற மேலவை வினாக்கள், அவசரச் சட்டங்கள், சட்ட முன்வடிவுகள், சட்டங்கள், விதிகள், விதிமுறைகள், மானியக் கோரிக்கைகள், துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்புகள், விசாரணைக் குழுவின் அறிக்கைகள், ஆகிய இனங்களும் இத்துறையால் மொழி பெயர்க்கப்படுகின்றன.

[1985 ஜூன் 10

### (3) உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

19. சிறப்பு நிலையில் தமிழாய்வுப் பணியை வளப்படுத்த பிரெஞ்சு அகாதமி போன்ற தனி நிறுவனம் தேவை எனக் கருதப்பட்டு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனத்திற்கு அரசு ஆண்டுக்கு ரூ. 6 இலட்சம் மானியம் வழங்கி வருகிறது. டாக்டர் பட்ட நிலையிலும் டாக்டர் பட்டத்திற்கு மேலான நிலையிலும், ஆராய்ச்சிகள் இங்கு நடைபெறுகின்றன. ஏறத்தாழ எண்பதின்மர் முழு நேர மற்றும் பகுதி நேர ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தமிழரல்லாதவர்களுக்கு ஒலிப்பதிவு முறையில் தமிழைக் கற்பிக்கும் எந்துகள் இந்நிறுவனத்தில் உள்ளன. 160-க்கும் மேற்பட்ட பிற நாட்டினர் இந்நிறுவன மொழிப் பயிற்சிக் கூடத்தில் நடத்தப்பெறும் தமிழ் வகுப்புகளால் பயனடைந்துள்ளனர். புதிதாகத் தமிழ் பயிலும் பிறமொழியினருக்கு ஏற்ற பாட நூலுடன் பதிவு செய்யப்பட்ட ஒலிச் சுருள்களைக் கொண்ட "தானே தமிழ் கற்றுக்கொள்ளும்" முறைமை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மொழி பெயர்ப்பியலிலும், கையெழுத்துப் படிப்பியலிலும் பட்ட மேற்படிப்புப் பட்டயப் படிப்புகளும் இந் நிறுவனத்தில் நடத்தப்படுகின்றன.

20. இந்நிறுவனம் 104 சிறந்த நூல்களை வெளியிட்டுள்ளது. தமிழ் இலக்கியம், மொழியியல், வரலாறு கலை மற்றும் பண்பாடு ஆகியவற்றைச் சார்ந்தவை பெரும்பாலானவாகும். சிறந்த ஏட்டுச் சுவடிகளும் ஆராயப் பெற்று அச்சிடப்பெற்றுள்ளன. நிறுவனத்தில் 12 அறக்கட்டளைகள் நிறுவப்பெற்று திங்கள் தோறும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நடத்தி அவை நூல் வடிவிலும் வெளியிடப்படுகின்றன. நாடெங்கணுமிருந்து மரபுச் செல்வங்கள் என்ற வரிசையில் "தமிழரின் கோயிற்கலைகள்" என்ற கருத்தரங்கு இவ்வாண்டு நடைபெற்றது.

### (4) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம்.

21. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியின் முதன் மடலத்தின் முதற் பகுதி அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. அகரத்தில் தொடங்கும் சொற்களைக் கொண்ட இப்பகுதி மொழியியல் அறிஞர் மறைந்த திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள் தொகுத்ததாகும். அவ்வகர முதலியின் ஏனைய பகுதிகளையும் வெளியிட இத்துறை விழைகிறது. இப்பணிக்குப் பயன்படும் கருவி நூலாகப் பாவாணர் நூல்களிலிருந்து திரட்டிய "பாவாணர் வேர்ச் சொல் வரிசை" என்னும் தொகுப்பு இத்துறையால் விரைவில் வெளியிடப்படும்.



1985 ஜூன் 10]

### (5) தொல்பொருள் ஆய்வுத்துறை.

22. காலத்தால் பழமை வாய்ந்த பொருள்களையும் கலைச் சின்னங்களையும், கண்டறிவதோடு வரலாற்றுச் செய்திகளையும் ஆராய்வதற்காகத் தொல்பொருள் ஆய்வுத்துறை தோற்றுவிக்கப்பட்டது. அகழ்வாய்வில் கிடைத்த பழங்கால காசுகள், மட்பாண்டங்கள், கட்டட இடிபாடுகள், நகரமைப்புச் சிதைவுகள், கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியன திரட்டப் பெற்று ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. களப்பணி செய்தல், பழம் பொருள்களைத் திரட்டல், பேணுதல், கல்வெட்டு வெளியீடு, அகழ்வாய்வு ஆகியவை இத்துறையின் பணிகளாகும். ஒரு நாட்டு வரலாற்றுண்மைகளுக்குத் தொல்பொருள்கள் ஆக்கமூட்டும் ஆவண மூலச்சான்றுகளாகும். இவ்வாறு தொல்பொருள்களைக் காப்பதும் பேணுவதும் இத்துறையின் தலையாய கடப்பாடுகளாம்.

23. தொல் பொருளாய்வுத் துறையின் பணிகளில் பின்வருவன முதன்மை பெறுகின்றன :—

தமிழக வரலாற்றுக்கு அரணாக அமைந்துள்ள கல்வெட்டுகளை ஊர் தோறும் கண்டறிந்து ஆராய்ந்து படியெடுத்து நூல்களாக வெளியிடுதல் ;

வரலாற்று முதன்மை வாய்ந்த இடங்களில் அகழ்வாய்வு செய்தல் ;

மலைப் பகுதிகளிலும் வனப் பகுதிகளிலும் கள ஆய்வு செய்து வரலாற்றுக்கு முந்தைய நினைவுச் சின்னங்களையும் ஓவியங்களையும் கண்டறிதல் ;

நூறாண்டுகளுக்கு முந்தைய தொன்மை வாய்ந்த அரண்மனைகள், கோட்டைகள், பழங்கோயில்கள் முதலியவற்றுள் மைய அரசுத் தொல்பொருளாய்வுத் துறையின் காப்பில் வராத வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல் ;

அகழ்வாய்ந்த இடங்களிலும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களிலும் காட்சியகங்களையும் அகழ் வைப்பகங்களையும் அமைத்தல் ;

நூறாண்டுக்கு முந்தைய பழங்கலைப் பொருள்களைப் பதிவு செய்தல் ;

ஊர்தோறும் ஆராய்ந்து கலைப் பொருள்கள், ஓலைச்சுவடிகள், செப்புப் படிவங்கள் ஆகியவற்றைத் தொகுத்தல் ; என அமைகின்றன.

இப்பணிகள் 1985-86 ஆண்டிலும் தொடர்ந்து நடைபெறும்.

24. இந்திய நாடெங்கும் பரவிக் கிடக்கும் கல்வெட்டுகளில் பாதிக்கு மேற்பட்டவை தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்டவையாகும். தமிழகத்திலுள்ள கல்வெட்டுகளில் பெரும்பாலானவை இன்னும் அச்சுருவம் பெறவில்லை. அச்சுப்பணியை விரைந்து முடிக்க இத்துறை முயன்று வருகிறது. தென் மாவட்டங்களிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து வெளியிடும் பணியைச் செய்வதற்காக 1985-86 இல் கல்வெட்டுப் பிரிவு ஒன்று திருநெல்வேலியில் அமைக்கப்படும்.

25. பிற்காலச் சோழர்களின் தலைநகராகத் திகழ்ந்த (தஞ்சாவூரிலுள்ள) பழையாறையில் அகழ்வாய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படும். உரோமானியர் குடியிருப்பாகக் கருதப்படும் (இராமநாதபுரம் மாவட்டம்) அழகன் குளத்திலும் அகழ்வாய்வு நடைபெறவுள்ளது.

26. ஒவ்வொரு மாவட்டத்துத் தொல் பொருட் சின்னங்களைப் பற்றிய கையேடுகளை எழுதி வெளியிட இத்துறை ஆவன செய்யும்.

27. சேரர் தலைநகரான கரூரில் அருகாட்சியகம் அமைப்பதற்காக இடம் தெரிவு செய்யப்பட்டுச் சிற்பங்கள் கலைப் பொருள்கள் கட்டப்பெற்று வருகின்றன.

28. தேசிய கடல் ஆய்வு நிறுவனத்தாரின் உதவியோடு 1981 ஆம் ஆண்டில் பூம்புகாரை ஒட்டிய கடற் பகுதியில் ஆய்வுக் கப்பலிலிருந்தவாறு ஆராய்ந்ததில் அப்பகுதியில் கடலுக்கடியில் சில மோடான பகுதிகள் உள்ளாழ்ந்திருப்பதை அறிய முடிகிறது. இத்துறையின் மூழ்குநர்களைக் கொண்டு இந்த ஆண்டில் ஆய்வு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

29. சோழ மாமன்னன் இராசராசனின் ஆயிரத்தாண்டு முடிசூட்டு விழாவை இத்துறை 1984 செப்டம்பரில் சிறப்பாகக் கொண்டாடியது. இவ்விழாவையொட்டித் தஞ்சாவூரில் இராசராசன் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

30. இராசராசன் விழாவையொட்டி தமிழ்ப் பல்கலைக் கழக வளாகத்தில் தொல்லியல்—வரலாற்றுக் கருத்தரங்கு நடத்தப்பெற்று நூல் வடிவம் பெறவுள்ளது.

31. திருமலை மன்னர் 400 ஆவது பிறந்த நாளைக் கொண்டாட அமைந்த குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், தக்க முறையில் விழாக் கொண்டாடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.



32. சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள "கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தையும்" தொல்பொருளாய்வுத் துறையே நிருவகித்து வருகிறது. அந்நூலகத்திலுள்ள சிறந்த கையெழுத்துப் படிகளில் பயனுள்ளவற்றை அச்சிட்டு வெளியிடவும் இத்துறை ஆவன செய்யும்.

**(6) அருங்காட்சியகங்கள் துறை :**

33. சென்னை, புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அருங்காட்சியக இயக்குநரின் கண்காணிப்பில், காட்சியகங்கள் செயற்படுகின்றன. வேலூர், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மாவட்ட அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வேலூர் அருங்காட்சியகம் அண்மையில் செயற்படத் தொடங்கும். கடலூர், உதகமண்டலம் ஆகிய இடங்களில் மாவட்ட அருங்காட்சியகங்களை அமைக்க அரசு 1985-86ல் ஏற்பளிக்கவிருக்கிறது.

34. சென்னை அருங்காட்சியகத்திலுள்ள பாலூட்டிகள் அரங்கம், அஞ்சல் தலைப் பிரிவு, தாவரவியல் பிரிவு ஆகிய காட்சிக்கூடங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. புதியதாக ஊரகக் கலைக் காட்சிக்கூடம் அமைக்கப்படவுள்ளது. தேசிய கலைக்கூட இணைப்புக் கட்டிடம் சென்னை அருங்காட்சியல் வளாகத்தில் அண்மையில் திறக்கப்பட்டது. குழந்தைகளைக் கவரும் விதத்திலும், சிறார்களின் அறிவைப் பெருக்கும் வகையிலும், காட்சிக் கூடங்களைக் கொண்ட "சிறுவர் அருங்காட்சியகம்" விரைவில் திறக்கப்படும். சென்னை அருங்காட்சியக அரங்கினை 2.43 இலட்சம் செலவில் புதுப்பிக்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது. புதியதாக அமைந்துள்ள "பண்பாட்டுப் பலகணி" என்னும் சிந்தனை அரங்கத்தில், தமிழ்க்கலை பற்றிய காட்சியுரைகள் திங்கள்தோறும் நடந்து வருகின்றன.

35. புதுக்கோட்டை மன்னராட்சிக் காலத்தில் 1910 ஆம் ஆண்டு பைரவத் தொண்டைமான் அவர்களால் புதுக்கோட்டையில் தொடங்கப்பட்ட அருங்காட்சியகம் சிறந்த முறையில் அமைந்த நல்லரங்கமாகும். இவ்வருங் காட்சியகத்தின் பவள விழா நடப்பாண்டில் நடைபெறவுள்ளது.

**(7) திருக்குறள் நெறிபரப்பு மையம்/தமிழ்ப் பழங்கலை இயக்ககம் :**

36. தமிழ்ப் பழங்கலை இயக்ககம் திருக்குறள் கருத்துக்களைப் பரப்பும் அமைப்பாகத் திருக்குறள் நெறிபரப்பு மையம் என்ற பெயரில் வள்ளுவர் கோட்டத்தில் இயங்குகிறது. இம்மையம், மாவட்டக் கல்வி அலுவலர்களின் துணையோடு, திருக்குறள் பரப்பும் பணியை மேற்கொள்ளும். மாணவர்கள் குறட்பாக்களை மனனம் செய்யும் வண்ணம் குறட்பாக்களைத் தேர்ந்தெடுத்து

40. இதுவரையில் மொத்தம் 1,616 கலைஞர்கள் திங்கள்தோறும் இத் திட்டத்தின்படி ரூ. 150 ஓய்வூதியமாக பெற்று வருகின்றனர். இந்த ஓய்வூதியம் முதற்கண் 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்பட்டு, மீண்டும், மூன்றாண்டு காலத்துக்கு ஒரு முறை ஓய்வூதியம் பெறுபவர்களின் பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு புதுப்பிக்கப்படுகின்றது. 1985-86 ஆம் ஆண்டில் இந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு மொத்தம் ரூ. 35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 200 கலைஞர்களுக்குப் புதிதாக ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

**(9) அரசு இசைக் கல்லூரிகள் :**

41. சென்னையிலும் மதுரையிலும் உள்ள அரசு இசைக் கல்லூரிகள் இசையையும் பரத நாட்டியத்தையும் தொடர்ந்து பயிற்றுவித்து வருகின்றன. மேளம், கடம், கஞ்சிரா, முகர்சங்கம் மற்றும் நட்டுவாங்கம் ஆகிய புதிய வகுப்புகள் இக்கல்லூரிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த வகுப்புகளில் சேர்ந்து பயிலும் மாணவ மாணவியர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. அரசு இசைக் கல்லூரிகள் இரண்டிலும் 54 பணியாளர்கள் பணி செய்கின்றனர் ; 520 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

**(10) தமிழ்நாடு ஓவிய, நுண்கலைக் குழு :**

42. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு தனது வழக்கமான செயற்பாட்டுத் திட்டங்களுடன் பின்வரும் இன்றியமையாத் திட்டங்களையும் 1984-85-ல் செயற்படுத்தியுள்ளது :—

(அ) தமிழ்நாட்டின் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டம் : இது தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் இதுவரை ஏறத்தாழ 280-க்கும் மேற்பட்ட ஓவிய ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

(ஆ) மாநிலங்களிடையே நுண்கலைக் காட்சி நடத்தும் திட்டம்: தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு இவ்வாண்டு இராசத்தானத்தைச் சேர்ந்த ஓவியக் காட்சியொன்றைச் சென்னையில் நடத்தியது.

(இ) 'நுண்கலை' என்னும் அரையாண்டு இதழ் வெளியிடுதல்: சிறந்த ஓவியக் கலைஞர்களின் திறமைமிக்க ஓவியங்களைக் கொண்ட அஞ்சலட்டைகள் வெளியிடுதல்.

(ஈ) ஓவியக் கலையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கும், வளர்ச்சி பெறும் ஓவியர்களுக்கும் உதவும் வண்ணம், நாடு முழுவதும் உள்ள தலைசிறந்த ஓவிய, சிற்பக்கலை வல்லுநர்களை அழைத்து விளக்கக் கூட்டங்களை அவ்வப்பொழுது நடத்துதல்.

**(11) சவகர் சிறுவர் இல்லம்:**

43. இந்நிறுவனம் 1979 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. மறைந்த பிரதமர் சவகர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து மைய அரசு அளித்த தொகை ரூ. 15.73 இலட்சத்தைக் கொண்டு இந்நிறுவனம் இயங்கி வருகிறது. இதுபோன்ற சிறுவர் இல்லங்களைத் தமிழ்நாட்டிலுள்ள 12 மாவட்டங்களில் ஏற்படுத்துவதற்கான கருத்துருக்கள் மாவட்டாட்சியர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

44. பள்ளிச் சிறுவர்களின் இயல்பை அறிந்து அவர்களது ஆற்றல்களை வளர்க்கும் நோக்கோடு அவர்களுக்குப் பல்வேறு வகையான செயல்முறைத் திட்டங்களையும் தொழிற் கல்வியுடன் கூடிய பயிற்சிகளையும் அளிக்கக் கருதியுள்ளது. எடுத்துக்காட்டாக படைப்புக் கலைகள், மரவேலைப்பாடுகள், தச்சுத் தொழில், சிற்பம் போன்றவற்றிலும், நடனம், நாடகம், இசை, ஓவியம் போன்ற நுண்கலைகளில் அவர்களிடம் இயல்பாக உள்ள திறன்களை வெளிக்கொணரவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவை தவிர, அறிவியல், இலக்கிய நடவடிக்கைகளை வளர்க்கவும், பொது அறிவை வளர்க்கவும், திட்டங்கள் தீட்டப் பெற்றுள்ளன.

45. தமிழ் வளர்ச்சி, கலை, பண்பாடு, மேம்பாடுகளைக் கருத்திற்கொண்டு இத்துறைகள் செயற்பட்டு வருகின்றன,



## இணைப்பு I.

### பள்ளிக் கல்வி பற்றிய விபரங்கள்.

(மாணவர்கள் இலட்சத்தில்)

| (1) | 1973-74 (2) | 1976-77 (3) | 1979-80 (4) | 1983-84 (5) | 1984-85 (6) |
|---|---|---|---|---|---|
| அ. வெவ்வேறு வயதுத் தொகுதி சிறார் மொத்த எண்ணிக்கை— | | | | | |
| வயதுத் தொகுதி 6—11— | | | | | |
| சிறுவர் | 30.45 | 31.93 | 33.27 | 35.49 | 36.11 |
| சிறுமியர் | 29.79 | 31.23 | 32.54 | 34.67 | 35.28 |
| மொத்தம் | 60.24 | 63.16 | 65.81 | 70.16 | 71.39 |
| வயதுத் தொகுதி 11—14— | | | | | |
| சிறுவர் | 13.71 | 14.37 | 14.97 | 15.97 | 16.25 |
| சிறுமியர் | 13.40 | 14.05 | 14.64 | 15.60 | 15.88 |
| மொத்தம் | 27.11 | 28.42 | 29.61 | 31.57 | 32.13 |
| வயது தொகுதி 14—17/14—16 (1979-80-லிருந்து)— | | | | | |
| சிறுவர் | 11.31 | 11.86 | 8.36 | 8.92 | 9.08 |
| சிறுமியர் | 11.07 | 11.60 | 8.15 | 8.72 | 8.87 |
| மொத்தம் | 22.38 | 23.46 | 16.51 | 17.64 | 17.95 |

1983-84-லும் 1984-85-லும் பல்வேறு வயதுத் தொகுதியினர் எண்ணிக்கை பின்வருமாறு கணக்கிடப்பட்டது—அதாவது 1981 சென்சஸ்படி தமிழக மொத்த மக்கள் தொகையை எடுத்துக் கொண்டு, அந்தந்த வயதுத் தொகுதியினர் 1971 சென்சஸ்-இல் எத்தனை சதவீதம் இருந்தனரோ அதே சதவீதம் 1981-லும் இருந்திருக்கலாம் என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதாகும்.

| (1) | 1973-74 (2) | 1976-77 (3) | 1979-80 (4) | 1983-84 (5) | 1984-85 (6) |
|---|---|---|---|---|---|
| | (மாணவர்கள் இலட்சத்தில்) | | | | |
| ஆ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை— | | | | | |
| வயதுத் தொகுதி 6—11— | | | | | |
| சிறுவர் .. .. | 30·64 | 32.02 | 34·34 | 37.24 | 38.11 |
| சிறுமியர் .. .. | 23.74 | 25.50 | 27.94 | 31.50 | 32.33 |
| மொத்தம் .. | 54.38 | 57.52 | 62.28 | 68.74 | 70.44 |
| வயதுத் தொகுதி 11—14— | | | | | |
| சிறுவர் .. .. | 9.10 | 9.74 | 11.02 | 13.29 | 13.95 |
| சிறுமியர் .. .. | 5.09 | 5.76 | 6.65 | 8.62 | 9.24 |
| மொத்தம் .. | 14.19 | 15.50 | 17.67 | 21.91 | 23.19 |
| வயதுத் தொகுதி 14—17/14—16 (1979-80—லிருந்து)— | | | | | |
| சிறுவர் .. .. | 4.97 | 5.34 | 4.20 | 5.06 | 5.42 |
| சிறுமியர் .. .. | 2.42 | 2.68 | 2.14 | 2.85 | 3.10 |
| மொத்தம் .. | 7.39 | 8.02 | 6.34 | 7.91 | 8.52 |



| (1) | 1973-74 (2) | 1976-77 (3) | 1979-80 (4) | 1983-84 (5) | 1984-85 (6) |
|---|---|---|---|---|---|
| | (மாணவர்கள் இலட்சத்தில்) | | | | |
| இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவீதம்— | | | | | |
| வயதுத் தொகுதி 6—11— | | | | | |
| | (விழுக்காடுகள்) | | | | |
| சிறுவர் .. | 100.6 | 100.3 | 103.21 | 104.92 | 105,53 |
| சிறுமியர் .. | 79.6 | 81.7 | 85.87 | 90.85 | 91.64 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 90.2 | 91.7 | 94.64 | 97.96 | 98.66 |
| வயதுத் தொகுதி 11—14— | | | | | |
| சிறுவர் .. | 66.3 | 67.3 | 73.60 | 83.18 | 85.82 |
| சிறுமியர் .. | 37.9 | 41,0 | 45.44 | 55.28 | 58.21 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 52.3 | 54.4 | 59.68 | 69.40 | 72.18 |
| வயதுத் தொகுதி 14—17/14—16 (1979-80—லிருந்து)— | | | | | |
| சிறுவர் .. | 43.0 | 44.9 | 50.2 | 56.78 | 59.69 |
| சிறுமியர் .. | 21.8 | 23.1 | 26.4 | 32.67 | 34.93 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 33.0 | 34.1 | 38.44 | 44.87 | 47.45 |
| ஈ. பள்ளிகளின் எண்ணிக்கை.— | | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் .. | 26,726 | 27,306 | 27,662 | 28,548 | 28,847 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 5,773 | 5,730 | 5,685 | 5,635 | 5,691 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 2,823 | 3,020 | 2,088 | 2,351 | 2,476 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | .. | 1,138 | 1,427 | 1,474 |
| மொத்தம் .. | 35,322 | 36,056 | 36,573 | 37,961 | 38,488 |

மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர்-மாணவர் விகிதம் போன்ற வகையில் பின்தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் (10-ஆம் வகுப்பும் கீழும்) அப்பள்ளிகளில் பயின்று வந்த மாணவர்கள் பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோரையும் உள்ளடக்கியவையாகும்.

| | 1973-74 | 1976-77 | 1979-80 | 1983-84 | 1984-85 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (மாணவர்கள் இலட்சத்தில்) | | | |
| உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை : | | | | | |
| முதல் நிலைப் பள்ளிகள் .. | 1,06,332 | 1,11,033 | 1,12,535 | 1,15,705 | 1,16,305 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 66,843 | 67,846 | 66,56[illegible] | 66,399 | 66,849 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 65,959 | 72,838 | 34,102 | 36,831 | 38,328 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | .. | 45,257 | 62,087 | 62,932 |
| மொத்தம் .. | 2,39,134 | 2,51,717 | 2,58,462 | 2,81,022 | 2,84,414 |
| ஊ சராசரி ஒரு ஆசிரியருக்கு மாணவர் எண்ணிக்கை: | | | | | |
| (1) பள்ளி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும், ஆசிரியர் தொகையில் சேர்த்து) | | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் .. | 35 | 36 | 39 | 41 | 42 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 33 | 33 | 37 | 40 | 42 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 24 | 24 | 23 | 27 | 28 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | .. | 28 | 26 | 28 |
| (2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும், ஆசிரியர் தொகுதியில் சேர்த்து)— | | | | | |
| முதல்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 37 | 36 | 38 | 40 | 41 |
| நடுநிலைப்பள்ளி வகுப்புத் தொகுதி. | 33 | 33 | 32 | 34 | 36 |
| உயர்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 29 | 30 | 26 | 24 | 26 |
| மேல்நிலைப்பள்ளி வகுப்புத் தொகுதி. | .. | .. | 22 | 20 | 21 |



1984-85-இல் (1984 அக்டோபர் மாதம் 1-ஆம் நாள் நிலவரப்படி) தமிழ்நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் குறித்த புள்ளி விவரங்கள்.

| பள்ளிகளின் வகைகள். | | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள். (இலட்சத்தில்) | ஆசிரியர்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| முதல் நிலைப் பள்ளிகள்— | | | | |
| அரசு .. .. | 1,442 | | | |
| நகராட்சி .. .. | 1,128 | 28,847 | 48.92 | 1,16,305 |
| ஊராட்சி ஒன்றியம் .. | 21,245 | | | |
| தனியார் | 5,032 | | | |
| நடுநிலைப் பள்ளிகள் — | | | | |
| அரசு | 246 | | | |
| நகராட்சி | 418 | 5,691 | 28,27 | 66,849 |
| ஊராட்சி ஒன்றியம் | 3,065 | | | |
| தனியார் | 1,962 | | | |
| மொத்தம் தொடக்கப் பள்ளிகள் | .. | 34,538 | 77.19 | 1,83,154 |
| உயர்நிலைப் பள்ளிகள்— சாதாரணம்— | | | | |
| அரசு .. .. | 1,686 | | | |
| நகராட்சி .. .. | 73 | 2,229 | 9,53 | 33,145 |
| தனியார் .. .. | 470 | | | |
| ஆங்கிலோ-இந்தியன் .. | | 14 | 0.11 | 281 |
| மெட்ரிகுலேசன் .. | | 144 | 0.67 | 2,412 |
| சி. பி. எஸ். ஈ. முதலியன | | 89 | 0.51 | 2,490 |
| மொத்த உயர் நிலைப் பள்ளிகள் .. | | 2,476 | 10.82 | 38,328 |

| பள்ளிகளின் வகைகள். (1) | (2) | பள்ளிகளின் எண்ணிக்கை. (3) | மாணவர்கள். (இலட்சத்தில்) (4) | ஆசிரியர்கள். (5) |
|---|---|---|---|---|
| மேல்நிலைப் பள்ளிகள்—சாதாரணம்— | | | | |
| அரசு .. .. .. | 675 | | | |
| அரசு (தொழில் நுட்பம்) .. | 14 | 1,331 | 15,70 | 56,533 |
| நகராட்சி .. .. .. | 60 | | | |
| தனியார் .. .. .. | 582 | | | |
| ஆங்கிலோ—இந்தியன் .. .. | | 27 | 0.32 | 777 |
| மெட்ரிகுலேசன் .. .. | .. | 63 | 0.69 | 2,722 |
| சி. பி. எஸ். ஈ. போன்ற பள்ளிகள் .. | .. | 53 | 0.74 | 2,900 |
| மொத்தம்—மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | 1,474 | 17.45 | 62,932 |
| மொத்தம்—உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | 3,950 | 28.27 | 1,01,260 |
| மொத்தம் (அனைத்துப் பள்ளிகளும் சேர்த்து) .. | .. | 38,488 | 105.46 | 2,84,414 |

மாணவர் 59.46 இலட்சம்
மாணவியர் 46.00 இலட்சம்.



நிருவாக வாரியாக 1984–85 ஆம் ஆண்டில் இருந்த பள்ளி ஆசிரியர்களின் விவரங்கள்.

| (1) | அரசுப்பணியிலுள்ள ஆசிரியர்கள்: அரசுப் பள்ளிகள் (2) | அரசுப்பணியிலுள்ள ஆசிரியர்கள்: ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள். (3) | நகராட்சி. (4) | தனியார். (5) | மொத்தம். (6) | ஆசிரியர் விவரங்கள்: ஆண். (7) | ஆசிரியர் விவரங்கள்: பெண். (8) |
|---|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 7,395 | 69,705 | 9,402 | 29,803 | 1,16,305 | 71,563 | 44,742 |
| நடுநிலைப் பள்ளிகள் | 3,385 | 27,804 | 6,983 | 28,677 | 66,849 | 34,301 | 32,548 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 23,895 | .. | 1,506 | 12,927 | 38,328 | 23,366 | 14,962 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 26,731 | .. | 3,336 | 32,865 | 62,932 | 39,018 | 23,914 |
| மொத்தம் .. | 61,406 | 97,509 | 21,227 | 1,04,272 | 2,84,414 | 1,68,248 | 1,16,166 |

## இணைப்பு II.

### கல்லூரிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

| விவரங்கள். (1) | 1973–74. (2) | 1976–77. (3) | 1979–80. (4) | 1983–84. (5) | 1984–85. (6) |
|---|---|---|---|---|---|
| 1. மொத்த மாணவர் எண்ணிக்கை— | | | | | |
| (1) புகுமுக வகுப்பு .. | 72,646 | 84,257 | .. | .. | .. |
| (2) பி. ஏ. .. .. | 51,698 | 44,697 | 47,872 | 62,894 | 61,802 |
| (3) பி. எஸ். சி. .. | 49,057 | 48,110 | 56,847 | 79,550 | 82,596 |
| (4) பி. காம். .. .. | 14,859 | 19,195 | 21,744 | 30,877 | 32,028 |
| (5) பட்ட மேற்படிப்பு .. | 6,993 | 7,043 | 9,263 | 14,708 | 15,635 |
| மொத்தம் .. | 1,95,253 | 2,03,302 | 1,35,726 | 1,88,029 | 1,92,061 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| ஆசிரியர்களின் எண்ணிக்கை — | | | | | |
| (1) அரசுக் கல்லூரிகள் .. | 2,969 | 3,733 | 3,752 | 4,272 | 4,347 |
| (2) தனியார் கல்லூரிகள் .. | 7,090 | 7,883 | 8,438 | 9,448 | 9,540 |
| மொத்தம் .. | 10,059 | 11,616 | 12,190 | 13,720 | 13,887 |
| கல்லூரிகள் எண்ணிக்கை— | | | | | |
| (1) அரசு .. .. | 51 | 51 | 51 | 53 | 53 |
| (2) தனியார் (மானியம் பெறுபவை). .. .. | 127 | 138 | 136 | 134 | 134 |
| (3) தனியார் (மானியம் பெறாதவை). .. .. | .. | .. | .. | .. | 6 |
| மொத்தம் .. | 178 | 189 | 187 | 187 | 193 |

பிற கல்லூரிகளுக்கான 1984–85-ஆம் ஆண்டு விவரங்கள்.

| வகை. | கல்லூரிகளின் எண்ணிக்கை. | | மாணவர் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| | அரசு. | தனியார். | | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (1) கல்வியியற் கல்லூரிகள் .. | 7 | 16 | 2,882 | 244 |
| (2) உடற்பயிற்சிக் கல்லூரிகள் .. | .. | 4 | 391 | 38 |
| (3) புலவர் கல்லூரிகள் .. .. | .. | 15 | 1,282 | 165 |
| (4) சமுதாயப் பணிப்பள்ளி .. | .. | 2 | 232 | 19 |
| (5) கிராமப்புற உயர் கல்வி நிலையம் | .. | 1 | 641 | 83 |
| மொத்தம் .. | 7 | 38 | 5,428 | 549 |



## இணைப்பு III.

### தொழில் நுட்பக் கல்வி.

| (1) | 1973–74. (2) | 1976–77. (3) | 1979–80. (4) | 1983–84. (5) | 1984–85. (6) |
|---|---|---|---|---|---|
| (அ) கல்வி நிலையங்களின் எண்ணிக்கை — | | | | | |
| 1. பொறியியல் கல்லூரிகள் — | | | | | |
| (1) அரசு .. .. .. | 4 | 4 | 3 | 4 | 4 |
| (2) தனியார் .. .. | 3 | 3 | 3 | 3 | 3 +17* |
| (3) தன்னுரிமையுள்ளவை | 5 | 5 | 7 | 7 | 7 |
| மொத்தம் .. | 12 | 12 | 13 | 14 | 31 |
| 2. பாலிடெக்னிக்குகளும், சிறப்புப் பட்டயப் படிப்பு நிலையங்களும் — | | | | | |
| (1) அரசு .. .. .. | 19 | 19 | 20 | 23 | 23 |
| (2) தனியார் .. .. | 18 | 19 | 19 | 36 +15* | 36 +53* |
| (3) தன்னுரிமையுள்ளவை | 1 | 1 | 1 | 1 | 1 |
| மொத்தம் .. | 38 | 39 | 40 | 75 | 113 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. தொழிற் பாட மேல் நிலைப் பள்ளிகள் — | | | | | |
| (1) அரசு .. .. .. | 11 | 11 | 11 | 11 | 11 |
| (2) தனியார் .. .. | 3 | 3 | 3 | 3 | 3 |
| மொத்தம் .. | 14 | 14 | 14 | 14 | 14 |

* தற்சார்பு (Self Financing) தொழிற் கல்வி நிலையங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) பயின்ற மொத்த மாணவர் எண்ணிக்கை — | | | | | |
| (1) பொறியியற் கல்லூரிகள் | 6,796 | 7,885 | 13,084 | 15,792 | 16,295 |
| (2) பாலிடெக்னிக்குகள் | 10,591 | 14,131 | 16,560 | 25,655 | 39,215 |
| (3) தொழிற்பாட மேல்நிலைப் பள்ளிகள். | 1,704 | 2,166 | 1,977 | 1,680 | 1,560 |
| மொத்தம் .. | 19,091 | 24,182 | 31,621 | 43,127 | 57,070 |

சென்னை-600 008

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras 3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhantha Works Publishing Society (Tirunelveli), Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFASSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Com pany, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavur District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Thanjavur District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jagannathan Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mari Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gur gaon, Haryana.
7 K. P. Bagchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

R.F. 303

TAMIL NADU LEGISLATIVE COUNCIL SECRETARIAT—PUBLISHED UNDER RULES 196 AND 199 OF THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே எண் : 143953 ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| 23/6/92 | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.